# அரிச்சந்திர விலாசம்

பரசிராமக் கவிராயர்

1873

O-,892M'
M73
120951

உ

கடவுள் துணை.

# அரிச்சந்திரவிலாசம்.

பரதநாட்டியநூதலியசங்கீதசாஹித்திய
வித்துவபுலவராகிய
குன்னையார்த்தண்டலம்
பசொலசீக்கவிராயரவர்கள்
இயற்றியது.

இதனை
பழையபிரதிகளிலுள்ளவிநோதருக்களும்,
விருத்தங்களுஞ்சேர்த்து
முத்தமிழ்த்திறந்தவராகிய
திருவண்ணாமலை
வெங்கடாசலமுதலியாரவர்களால்
பார்வையிடப்பட்டு.

காஞ்சீபுரம்
வீராசாமிமுதலியார்
குமாரராகிய
திருவேங்கடமுதலியாரது
இயற்றமிழ்விளக்க அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

ஆங்கிரச௵ - பங்குனி௴

Registered Copy right.

120951

உ

சிவமயம்.

# விளம்பரம்

இதனலியாவருக்குந்தெரிவிப்பதியாதெனில். பூனைத்தாங்கல் மா-ள-ள-ஸ்ரீ, பரசிராமக்கவிராயரால் இயற்றிய இவ்வரிச்சந்திர விலாசம்வேண்டுபவர்கள். சென்னப்பட்டணம் அடுத்த ஜூனா அவதானம்பாப்பையர்சந்துவீதியில் (௰௪) வது நெம்பர் அச்சாபீசு கா-திருவேங்கடமுதலியாரிடத்தில் இன்னப்பலவிதமாகியதமிழ் தெலுங்கு புத்தகங்களும்விலைசரசமாய்ப்பெற்றுக்கொள்ளலாம்



கடவுள் துணை.

# அரிச்சந்திரவிலாச

## சரித்திர அகவல்

இ-ம்-மத்தியமாவதி,

சீர்மலியயோத்தி திருச்சங்குமன்னன்
போர்மிகுகளத்திற் போர்படையாளித்த
மன்னர்கள்மன்னன் வணங்கொள்சம்பன்னன்
தன்னிகரில்லான் சகத்திற்பொய்சொல்லான்
அரியாசனமதை அனுதினந்துதிப்போன்
பெரியமாமுனிவோர் பேச்சினைமதிப்போன்
ஆயவிக்குணங்கொள் அரிச்சந்திரனென்போன்
தாயவாவிகளுஞ் சோலையுஞ்சூழ்ந்து
தவந்தானமிருந்து தழைத்தெங்கும்புகழக்
கவரவமிருந்த கன்னமாபுரியை
மகிழ்வுடன்காக்கு மதிநயமன்னன்
தகைபெறுசிவபிரான் தன்னருளாலே
அளித்தருந்செல்வி யாஞ்சந்திரவதியைக்
களித்துமாமணமுங் கனம்பெறச்செய்து
அயோத்திவந்தடைந்து அன்புடன்மருவி.
தயாபரனருளால் தவியிற்றன்றனில்
கோலத்தில்யிருந்த குலதுக்குதிகராய்ச்
சீலத்தில்மிகுமோர் சிறுவனைப்பயின்று
மிக்கவுமகிழ்ந்து வேடிக்கையாகச்
சக்கோசனென்ற சத்தியவாசக
மருவரிச்சந்திர மன்னனுமவர்தன்
திருமனையாளுஞ் செல்வனையெடுத்து
முத்தங்கொடுத்துமுகத்திலணைத்து

பத்தரைமாத்துப் பசும்பொனேயென்றும்
கொஞ்சிக்கொஞ்சி குலாவிவளர்த்து
அஞ்சுகம்போல அன்பாய்ச்செட்க்கு
நல்லநாள்பார்த்து நன்னியதங்கள்
சொல்லருங்குலக்குரு சுவாமியாயுதித்த
மாதவவசிஷ்ட மாமுனிவாக்கால்
வேதபாராயண வேள்விகள்செய்து
தேவர்கள்மகிழத் தேவதாசனென்
றுவலாய்த்திருப்பே ரமைத்தச்சபைக்கு
வந்தயாவர்க்கும் வஸ்திரங்கனகம்
தந்துடன்னவனுஞ் சத்திரவதியும்
ஆசையுமன்பும் அதிகமாய்ப்பெருகி
வாசநேசத்துடன் வாழ்ந்திருக்கையினில்
பொன்னுலகாளும் புரந்தரன்சபையில்
றன்னயவசிஷ்டர் நாரதருடனே
மேவவும்விஸ்வா மித்திரர்வரவும்
மாவல்லமைசேர் மாதவர்பலரும்
வந்தமர்ந்திருக்க வானவர்கோனும்
அந்தநல்வேளை அச்சபையோரை
நோக்கிமாநிலத்தில் நால்வழியதிறம்
யோக்கியனறத்தி ரேனுண்பினைக்காக்கும்
சத்தியவாக்கியன் றன்மனையாளலால்
மற்றமாதர்களை வளர்தங்கைதாயாய்
எண்ணிநல்லரசா ளிறையவருண்டோ
கண்ணியமிக்கண்டோர் கழறவீரனவே
அக்கணம்வசிஷ்டர் அமரர்கோனேகேள்
லக்ஷணவயோத்தி நகரினைக்காக்கும்
திரிச்சங்குவேந்தன் சேயதாயுதித்த
அரிச்சந்திரனென்போன் அன்பனென்னயன்
சொன்னசொல்வழுவான் றுதிநிலைபுன்மை
தன்னயவாக்கியன் றவிலறம்வளர்ப்போன்



தன்னுயிர்போல மன்னுயிரியாவும்
துன்னவேகாக்குஞ் சுத்தமமைந்தவன்
சூரியகுலத்தில் தோன்றியெனவசிஷ்டன்
மாரம்ப்பசனைவசிஷ்டருக்குநக்
கோசிகன்வெகுண்டு கொக்கரித்தெழுந்து
மாசியங்கொண்டு வசிஷ்டனைப்பார்த்து
எல்லைகண்டவசிஷ்டா யிச்சபைமுனம்நீ
சொன்னவையெல்லாஞ் சுத்தபொய்யே
திரிச்சங்குபெற்ற சேயனுமந்த
அரிச்சந்திரனை அறிவேன்யானும்
காதகன்பொய்யன் கபடன்மாய்க்கெட்ட
தோதகன்வீணன் சொல்நிலையில்லான்
பிறர்தாரசோரன் பெரியோரைவைவோன்
அறநெறியிலேதன் றவியர்ப்பாதகன்
அரனரிதுதியை அகத்தினில்நினையான்
விரதமென்பதனை விரும்பாமனத்தன்
அவ்வழிப்பட்ட அரிச்சந்திரன்றன்
ஒவ்வியநாவில் உத்தமாய்ச்சொலச்
செய்கிறேனென்று தேவேந்திரன்முன்
மெய்ச்சபதங்கள் மிகவும்பகன்று
வரக்கௌசிகன்பின் மன்னரிச்சந்திரன்
விரிமறையோர்க்கும் விற்பனருக்கும்
ஞானயாசகர்க்குந் தருகிறேனென்று
வானுயர்ந்தவைபிய வன்பெரியடிக்கக்
கண்டதைக்கௌசிகன் கருத்தினிற்றெய்தி
மண்டலத்தரசே வளர்யாகமொன்று
பண்ணிடக்கரிமேற் பலவாஸ்கலங்கள்
விண்ணிடவளவு மேவியவுயரத்
தானமதற்குவாய்த் தரணியாயெனவே
கனமுடனயோத்தி காவலனளிக்க
அப்பொன்னையவன்பா லார்த்தியேயின்னும்
வெப்பங்கொண்டுடனே விலங்குபட்சிகளால்
நாட்டினையழிக்க நாடியங்கேட்டு
வேட்டைகளாடி விடாய்கொண்டயர்ந்து
நித்திரைசெய்ய நிருபனுங்கனவு
அத்தநிகண்டு அயோத்திவந்திருக்க
நிச்சப்பெண்ணிருவர் நிருபன்முன்வந்து

ஆச்சரியப்பாடல் ஆடலைச்செப்ப
மணஞ்செய்தெம்மைநீர் மருவுமிரெனவக்
கணமதேதுறத்தக் கவுசிகன் கேட்டு
சினமதுகொண்டு சீக்கிரம்வந்து
மணமுவந்தனுப்பு மங்கையர்களை நீ
இப்படிசெய்வ திறைவனேயுனக்கும்
ஒப்புமோவென்ன வுடனரிச்சந்திரன்
ஐயனேபோற்றி அடியேனுளரசும்
வையகம்பணிபொன் வழங்கிறுந்தருவேன்
மறுமாதர்களை மணஞ்செய்வதில்லை
அறநெறிக்கதுவும் அடாதெனவிறைவன்
தடுக்கவகணமே தவமுனிவெந்தை
மடக்கிநீசொன்ன வாய்மையில்மாறே
தருவையோவென்ன சத்யவரிச்சந்திரன்
இருநிலமாகுபொன் எழிற்பணியாடை
எல்லாமுடனே யீய்ந்தனன்முனிக்கு
உல்லாசமுனிவன் உடன்கைக்கொண்டு
வாராயரசேமுன் வைத்திட்டநிதியைத்
தாராய்நீயென்று தடுத்தனன்முனிவன்
மன்னவனப்போ மயங்கிமெய்வாடி
தன்னிகரில்லா தவமுனியேகேள்
நல்கியநிதியைநாள்நாற்பத்தெட்டில்
வல்லியமாக வழங்குவேனென்றுன்
தாபதர்சுக்ராச் சாரியையழைத்து
கோபமாயிவனைக் கொடுமைகள்செய்து
வாக்கிலேசொல்பொய்மை வருவிக்கிலுமக்கும்
பாக்கியமுண்டாம் பன்னுநும்மறவேன்
என்றக்கௌசிக ரியம்பவுமறையோன்
நன்றந்தப்படியே நான்செய்வேனென்று
அப்போதயோத்தி யானதைவிட்டு
அரிச்சந்திரனும் அவர்பெண்டிதனைச்
சரிச்சொலுந்தேவ தாசனைப்போலும்
காவிக்கலையைக் கட்டியேவரவே
கூவியேமந்திரி கூடவுநெருங்க
ஐவரும்வருக அப்போதுகௌசிகன்
மெய்தவத்தாலே வெருண்டுமேவிடுத்து
அரவந்தேள்குளவி அடர்நண்டுதேக்க



விரவுடன்கடிக்க வெருண்டுபேயோட்ட
பெரும்பூதங்கள் பேய்கள்வேதாளம்
கரும்புலிசிங்கம் கரடிகள்துரத்த
அடவியில்வெண அவஸ்தைகள்பட்டு
நடந்துமேமாறி சிந்தையுமழிந்து
பரமனுட்பதத்தைப் பத்தியாய்த்துதித்து
வருமக்ஷியாற்றை வருந்தியேகடந்து
காசிசேர்ந்தந்தக் கடவுளைப்பணிந்து
மாசில்லாத்தன் மனைவியைமகனை
வேதியர்க்குவிற்று விஸ்வாமித்திரர்கடனை
நீதியாயளிக்க நிகழ்சுக்ராச்சாரி
தரகினைக்கேட்கத் தருகிறேனென்று
பறையனுக்கடிமைப் பட்டவர்தனைத்
தந்துடன்சுக்ராச்சாரியையனுப்பி
சுத்தமில்லாச்சுடு காடினைக்காக்க
காளையையரவங் காட்டிலேதீக்கடிக்க
வாளேநேர்விழியை வனசந்த்ரவதியாள்
கேட்டுடன்சுதன்மேற் கிலேசமாய்க்காட்டில்
வாட்டமாய்த்தேடி வந்துடன்பார்த்து
அழுதுமேபுரண்டு அகமிகமெலிந்து
பழுதுசெய்கௌசிகப் பாபிஷ்டிசெய்த
மோசமேயென்று முந்துமேயறிந்து
பாசமாஞ்சுதனைப் பரிவேயெடுத்து
சுடலையிற்கொடுபோய் சுடவேண்டியந்த
இடமதிற்கிடக்கும் எரிமுட்டைக்கட்டையைக்
கொண்டுவந்தடுக்கிக் குழந்தையைவளர்த்தி
அண்டியேயிருண்ட அர்த்தராத்திரியில்
எரியிடுந்தருணம் இறைவெட்டியானுந்
துரிதமாய்வந்தவ சுதன்றனையுணர்ந்துத்
தன்னிலேயுணரா தாயிவளிற்றுக்
சன்னியேயிந்தக் காஷ்டக்கூலியைத்

நீதாயின்கதைதனைத் தகவுஞ்செய்யெனச்
சந்திரமதியுந் தன்மணவாளனென்
றறிந்தத்தவாறே யாகட்டுமென்று
மறையவன்வீடு வரும்போதுவழியில்
காசிராஜன்சேயைக் கவர்ந்துமேவரைந்து
கோசிகன்போடக் கோதிலாச்சந்திர
மதியுந்தன்னுடைய மகனென்றெடுக்க
விதியிதோகாசி வேந்தன்சேவகர்கள்
கண்டுடன்பிடித்துக் கள்ளியென்றோட்டிக்
கொண்டுபோய்காசிக் கொற்றவன்முன்
விடுக்கவம்மன்னன் வெட்டியானைக்கூவி
யுடுக்குசெய்விவள்தலை தொப்பெனவீழ
வெட்டெனக்கட்டளை விதிக்கவப்பறையன்
சட்டெனக்கொடுபோய் சந்திரமதியை
மன்னரிச்சந்திர மகிபன்கைக்கொடுத்து
சென்னியைவெட்டெனச் சித்ரவாளளிக்க
வாங்கியம்மன்னன் மாதினற்கழுத்தை
ஓங்கியேவெட்ட ஒளிர்மலர்மாலையாய்
வீழவப்போது விண்ணவர்மூவர்
வேழமாமுகனுர் விசாகனிந்திரனும்
வந்துடன்மதுத்து வாழ்த்தியயோத்தி
நந்தாசாண்ட தனியிலாக்கதையைக்
குண்டையார்த்தண்டலங் குலவும்வேளாள
தண்டமிழ்ப்பரசி ராமசன்மார்க்க
விற்பனனெனும்போன் விலாசமதாகக்
கற்பனையமையக் கழறினன்மாதோ

சரித்திரவகவல்-முற்றிற்று.



கடவுள்துணை.

# அரிச்சந்திரவிலாசம்.

## காப்பு.

வெண்பா - இராகம் - சங்கராபரணம்.

சீராரிச்சந்திர சிரன்றமிழ்க்கதையை
போர்நடத்தமிழாற்பேசவே - பேராரும்
வேழ்விநாயகனுடனே விக்னேருமேதநிக்க
வாழ்விநாயகனைப்பணிகுவாம்.

விநாயகக்கடவுள்முதல் - சர்வதெய்வவணக்கம்.

வெண்பா.

நந்திமுகவைங்கரனைத் தற்பரனைச்சண்முகனை
நந்திகேசுரனைசபா நாயகனை-சுந்தரனை
மலைமகளைநெடுமாலை மலர்மகளைமாதரியை
கலைமகளையும்பணிவாங் காண்.

## அவையடக்கம்.

விருத்தம்-இராகம்-தோடி.

வண்டிசைபயிலுஞ்சோலை வளநெய்த்தாங்கன்மேவுஞ்
சண்டிகையெனுமாகாளி சாமுண்டிபாதம்போற்றி
குண்டிகைநகர்வேளாள குலகவிபரசிராமன்
பண்டிகைதமிழ்வல்லோரைப் பணிந்திந்நாடகஞ்செய்தானே

இ-ம்-நாட்டை - தாளம் - திரிபுடை.

புவனபோகவையோகசுந்தரபுண்யனுமரிச்சந்திரன்சரிதையை
நவநிலவுமவ்விலாசமதா வேதமிழிலுலாசெய்யவே ஆ-ஜ

பவளமால்வரைபோலுமேனியர்பரமனருளாலுதித்திடுஞ்
சிவகணேசருஞ்சரணூர்பொற்பதந்தினமுந்துணைசெய்தாகக்கவே
[செய-செயா

சீலமினியகிருபாலன்திரமுஞ்செங்கோலினுயர்சிலைவீரனாகிய
கோலவரிச்சந்திரன்கதைவிலாசமாய்க்குறித்துநாமுரைசெய்யவே
[ஜெ-ஜெ

சூலிசாகபாலிஅன்பர்கள்புகழ்வேளர்மறைநாவின்முடிவிலும்
வலவளர்மயில்விசாலன்குகன்வடிவேலனுந்துணைசெய்யவே- செ
ய-செயா

சொல்லும்புவனங்களென்றும் துதிசெய்யும்தூயவரிச்சந்திரன்
மாசரிதையை, வல்லபைந்தமிழால்விலாசமாய்வகுத்துரைத்ததை
[பாடவே-ஜெ-ஜெ

கல்விநிறைதருவாணிநாவிலும் கருதுமூவர்கள்பாடுந்தமிழிலு
ம், எல்லையெங்கினும் வளருங்கலைமகளி னியபதந்துணையாகவே-
[செய-செயா

சீர்பெறும்புகழரிச்சந்திரன்கதைதிகழ்விலாசமதாய்விளங்கவே
பாரின்மிசைச்செந்தமிழ்நாவினை பரிந்துமகிழ்வுடன் பாடவே
[ஜெ-ஜெ

வார்பெறுந்தனமாதுசங்கரிவளருந்திருமகள்மலைமுனிமுதல்
பாரளந்தநாராயணன்பாதமுந்துணைசெய்யவே-செய- செ

ஐம்பை,

கதிர்குலத்தில்வந்துதித்தகாதலரிச்சந்திரமன்னன்
விதிமுறைநடந்தகதை விலாசமெனச்சொல்லவே ஜெ-ஜெ

மதிபுனைந்தவேணியான் மாமகிழ்விநாலளித்த
கதிதருமைங்கரனார்பதக்கமலமித்துணையே செய-செயா

சந்திரகுசூரியகுலத்தன்னிலரிச்சந்திரன்கதை
துதிபெறுவிலாசமெனச்சுயம்நிலைக்கச்சொல்லவே ஜெ-ஜெ

புதியமதிவதனவள்ளிபோகம்நிறைவாகிமகிழ்
பதியெனுஞ்சண்முகக்குமரன்பாதமலர்த்துணையே-செய-செயா

திருபர்புகழரிச்சந்திரநிருபன்கதையைத்தமிழால்
அருமைதல்விலாசமதாய்ஆவலுடன்சொல்லவே ஜெ-ஜெ

திருமகளுமலைமகளுந்திறமிகுந்தகலைமகளும்
புருவணையிற்குறுமுனிவன்பதமலருந்துணையே செய-செயா

தருநிறைபொன்னூலருபுகழ்நாமனரிச்சந்திரன்கதை
விருதுளவிலாசமெனமேதினியிற்சொல்லவே ஜெ-ஜெ

கருமுகிலின்மேனியன்பொற்கவுஸ்துவமணிபூண்டலங்க
வருதிகிரிசங்கமலனிமாயன்பதந்துணையே செய-செயா



மங்களம்-இ-ம் பந்துவராளி-தாளம்-ஆதி,

பல்லவி

மங்களம் செய- மங்களம்

மலையைச்சிலையென வளைதருசிவசுதன்
மருவளர்மலர்நிகர் திருவடிதனக்கினம்
மங்களம்-செய-மங்களம்

சரணங்கள்

எங்கும்நிறைபரமறைபுகழ்நிலையமெஞ்சுடரொளிதிகழ்சுந்தரி
யுமையொருதவமுனிவர்கள்புகழ்மங்கையினிசைபெறுமதிசுபசெயமு
லலிதநவயினிந்தசங்கரசுபசதாசிவ மிகுபொருளமதினி யென
பொருளெனவணி நித்திராதியர்கள் துதிசெய்திசமுறைசந்திர சே
கரனுமொருபரமற்கும் (மங்களம்)

சிவகாமிநேசருக்குமங்களம் அலைகடலினிலொரு சிலையைப்
புணையென அப்பர்க்கன்றருள் புரிதருபரமெனும் (சிவகாமிநேச
ருக்குமங்களம்) அடல் கொண்டொருசிலையடியுண் டருளியவமிரா
மிக்குளமகிழ்வுறவிசையனையங்கைகொடுத்திஅனைத்துநிலத்திலெ
முத்தித்திகழ்மச்சசையைஅற்புதமுடன்அகமகிழ்ந்து கண்களையெ
ன்தருளியதகைமிகுந்தபிரணவாதிகிருபாகரசிவகாமிநேசருக்கும்
(மங்களம்)

அத்திபுரித்தவர் நித்தமடித்தவர் அற்புத சிற்பதவித்தகர்மத்த
மெருக்கலர்வைத்ததிருச்சடை பொற்புறுமத்தரவைத்திடும் நற்று
திபெற்றவர் அரியவனைவரும் உரியமாதவரும் அரகரசிவசிவ வெ
னவுரைசெயவளர் (சிவகாமிநேசருக்கும்) சித்தப்பிரகாசருக்கும் நவமாக்கரு
தவரிவிலாசருக்கும் தழைக்குமெய்ப்பாசருக்கும் நாடிடதிருமகள் கலைமகள்
நேசருக்கும் நான்முகவிலாசருக்கும் நாடிடதிருமகள் பங்குறைமுருகற்கும் (மங்களம்
முதலாம் நங்கையர்புகழ்வள்ளி பங்குறைமுருகற்கும் (மங்களம்
செயமங்களம்)

விநாயகர்-வருகிற

சந்தவிருத்தம்-இ-ம்-பந்துவராளி.

பங்கயமலர்மகள்பயிலெழிற்குண்டிகைபதியினிதமேவும்
கங்கையுங்கொன்றையுந்திங்களும்புனைசடைகடவுடனிடமடமான்
அங்கயற்கண்ணிமலைமகளெனவுலவியவம்பிகைகெளரியருள்
வெங்கயமாமுகவைங்கரசெல்வ விநாயகர்வந்தாரே.

தமியி தகிட தததெய்தரி தகிட தாம் தாம் தாம் தரி
தாகுகு சேகுகு செய்தரி தகுகுதெய் தெய் தெய்
கிடதக ததணசெய்தரி தமியிதகிடதக
தளாங்குதக திகுதக ததிங்கணத்தோம்

பல்லவி

மத்தகஜவதனபங்கஜமித்ரபதயுமை
சுதகணபதி வந்தார்-சத

அனுபல்லவி

நித்யமலங்கிர்தசத்ரப்புசபாசாங்குச
நிசதரிசனந் தந்தார்
சுதபகணசுர முனிவரனவாசமுந்
சதுமுகன்முதலெவர் களுந்துதிநிதமும் (மத)

சரணங்கள்

மாதகாம்புஜமுனைவையதிகர்க்குங்குச
வல்லபைப்பெண் லோச அதி
மதுரிதவடைபாத திரசங்குடமிர்
வளரவுஞ்னுங்க லோச
கோகநகயிதையமகிழமருவுங்கய
கோடிசூர்யப்ரகாச கிந்த
குவலயமெங்கும்புகழ்தேவாலயங்கள்திகழ்
குன்றுடைநகர்வாச சிறு
வாகனகங்கண வடசுடர்நவமணி
மகுடபுசகிரீட விகடசக்கிரமணி
சேகநக்கனுந் திகமொளிகிங்கிணி
திருவடியிணைக்கவி பாசிராமல்பணி

மதகசவதபங்கசயித்ர

பொது-விருத்தம்-இ-ம்-இரெகுபதி,

மட்டில்லாப்புகழ்பெற்றோங்கி வளமிகுமயோத்திவாழும்
கிட்டியசத்தியசொற்கத்தித் திரிசங்குமைந்தன்
ஒட்டியவினைகடந்த வரிச்சந்திரன்வாசற்
கட்டியக்காரன்வந்து களிமித்ரேன்றிருவே

வசனம்

கேளுங்கள் சபையார்களே அயோத்தியாபுரி - ஆளப்பட்ட திரிசங்குமைந்தனுகிய சத்தியபாஷி அரிச்சந்திரமகாராஜன்வாசற் கட்டியக்காரன் வருகிறவிதக்காண்க,



கட்டியக்காரன்-தரு இ-ம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி

திறதகதாம்-தகிக்குந்தக்கணக- தக்கஜேய்தரிகு-தாம்-தரிஜேம் தாரிஜேம் தரித்தணந்தண-தத்திணதில்த்தா-திமிதிமி-கிடதக, தத்தெய்தெய்ய-தாத்தெய்-தெய்ய-தகுணதெய்-தெய்ய-தகு தத்தி குணுதிகுணதாகுகந்தரி குணுதரி குதரிதித்தில்லானு தில்லில்லானு தாகுகந்தரி திம்தாக தாகுதரிதந்தரி தித்தில்லான-திரிகுதரிகுதரி.

பல்லவி

கட்டியக்காரன்வந்தான் - ராசராசனரிச்
சந்திரமகாராசன்வாசல் கட்டியக்காரன்வந்தான்,

அனுபல்லவி

அஷ்டதிசைகளெங்கெங்கு மிகுதவ
திஷ்டைபுரிபவர் முதலோர் புகழ்தவ
அரசகிளையொடு திகளேவவுசெய
அரசான்சபகரன் சமுகத்திலேய

கட்டியக்காரன்வந்தான்,

சரணம்

திருவெண்ணீறணி நுதல்மேல்னிந்து
சித்திரையில்னுதினம் அரப்பதம்பணிந்து
சிரசிற்பொன்னுருமாலை புனைந்து
செப்புருவத்தர்சனே வாட்டநினைந்து
தரிகைவலக்கையினிற் திகழப்பொலிவுறவிலக்
கொழுவிற்பிரதக்கல பெருகச்சசையிறுக்கியிடிக்கி
நிவர்க்குறவிட்டமிரட்டிய சட்டியுமெதிர்வருங்
கண்டகாஞ்சு சபைக்குள் சபாசெனக்கண்டவர்
நின்றபடுக்கி யொதுங்கவே கீழநிறைந்த சமுகாதிபர்
புகழ்ந்திடவுலகமெங்கு பிவல்போசொல்லி மகிழ்ந்திட
கட்டியக்காரன்வந்தான்,

அரிச்சந்திரமகாராசன் வருகிற-பொது-விருத்தம்

இராகம்-தோடி,

மகிமைமேர்விஸ்வாமித்திரன் வயிறெரிந்தரத்திந்
புகழுறச்சொத்தமேவும் புனிதனுந்திரிசங்கின்ற
மகிபதிபுகைமெல்லாம்வாழ்த்துறவயோத்திவாழும்
தனுமரிச்சந்திரபூபன் றன்கொலுவினில்வந்தானே

## இராசன்-வருகிற தரு

### இ-ம்-தோடி-தாளம்-ஆதி.

தத்திமிதிமித்-தகதஜுத்தசேஜுர்மிமி-தாகசெம் தரித்ரு... ஜுஜு ந்தரி-தக்கிடகிட தரிகிடகிடதக தாகிடகிடசேகிடசெம்தரிதா தாகி டசெம்தரிகிடதக திரித்தில்லானு திரிதில்லானு திரிதில்லானு.

பல்லவி

வாசவன்புகழ்திவ்விய புல்லாசனரிச்சந்திர
மகாராசனிதோவந்தானே

அநுபல்லவி

வீசுபுகழ்சேர்நல்லசூரியகுலந்தன்னில் விளங்குஞ்சோதிப்
பிரகாசன்-மெய்யனெவர்க்குநேசன்- (வாசவன்புகழ்)

சரணங்கள்

ரத்தினகிரீடமின்ன கோடிசூரியரென்ன ,ரஞ்சிதமிருகர்ண குண்டலங்களுந்தன்னமுத்தாஞ் செயசுருதிமுழங்கும்புசகிரிதிமோ லித்துநித்தியமிலங்க பதக்கங்கள் முத்துவடங்கள் அலங்க வெற்றி வாளிதட மார்பினில் விசையமின்னொளுடன் முப்புரிநூலசைய பற் றுதசவுபாக்கிய மிசையபசைவருள்ளமலைசய்யகைகளோடி மிசைய அன்புகசியசகலவிசைய சுகுணராசிக- (வாசவன்புகழ்திவ்விய)

வட்டவெண்குடைதாங்க வானவர்கண்டேங்க-கட்டியமகுடபோ டகனைநயவிதம்பாட-கிட்டியரசர்வந்து கிலிபிடித்தேயார்த்து ஒட் டியெச்சரிக்கைசொல்வே-மந்திரிகள் இஷ்டமாய்தொடர்ந்துமெச வீவே-மட்டிலாதவல்ல துஷ்டனைவெல்ல மறையுணர்வோர்கள் நல் லமனத்தோடாசிசொல்ல-இஷ்டகாமியப்பிரதிஷ்டை நிறைபட் டவர்த்தனுதி மிகுந்தசோதி-அரசரோதிவரும்பிரக்கியாதி-பிரப லநீதி, (வாசவன்புகழ்திவ்விய)

மின்னுமிடைவாள்கட்டி-அன்னலாயகட்டி-கன்னியர்கள்பக ட்டி-அன்பியிசைபுகட்டி-முன்னேசாட்டைவீச மன்னர்தங்கள் பேச-நன்னயங்கள்பெருக-அரம்பையர்-குலுங்கிநெஞ்சமுருக- சொன்னமொழிதவறுதவிரான்-கன்னல்மதனைவென்றவீரன்- பன்னகாதிபதிதுதிசெழிப்பேற-பகருஞ்சிலவீற-அஷ்டதீர-கவ டொற-சுகுணமிற-தருமந்தேற (வாசவன்புகழ்திவ்விய)



(இராசன்-போற்றிகவி இ-ம்-மத்தியமாவதி)

அருமறைவிளங்கநான்கு லாகமவிதிகளோங்கத்
தருவளஞ்செழிக்கநீதி தழைக்கமும்மாரிபெய்ய
திருபர்களுலகையாள நிறைந்துநாற்குலங்கள்வாழ்க
திருவளர்மார்பனெங்கள்செங்கண்மால்பாதம்போற்றி

(முதல் மந்திரி-போற்றிகவி-இ-ம்-ஆனந்தபைரவி.)

மெய்யனேயுலகையாளும் விறல்மிகுவீராபோற்றி
பொய்யொருக்காலுஞ் சொல்லாப்புண்ணியவிதராபோற்றி
செய்யநல்லபோதநிதாட்டைத் திருத்தியாண்டரசுசெய்யும்
ஐயனேபோற்றியெங்க ளரிச்சந்திரபூபாபோற்றி

(இரண்டாவதுமந்திரி-போற்றிகவி-இ-ம்-ஆனந்தபைரவி)

கதிர்குலத்தரசேபோற்றி கருதியசரையுவென்னும்
நதிவளஞ்சூழும்நாட்டை நடத்துநல்லரசேபோற்றி
அதிபெருமொருகுடைக்கீழ்ச் சொல்லுமிவ்வுலகுக்கெல்லாம்
அதிபதியாகவந்த அரிச்சந்திரதீராபோற்றி

(கட்டியங்கூறல்-இ-ம் ஆனந்தபைரவி)

அலைகடலொலியென-அடர்மறைமுழங்கிலென அமரருலகதனில் வரு ந்திரருமுரசென-அணிமணிமுடிநிரை-அரசர்கள்துதிசெய-வரு புலிகைசெகுப்பலொடு குடை... மோகை-நிலவெழுநவமணி-நிறைதருபுவிமிசை-நெடுவேளமிகுமலகு டிகள்வந்தடிதொழ-நெடுமறையவர்நிதம் பரிவுடனெதிர்வாழ்த்துமொழி பேசி-மிலகிடவிரதர்-சமரதீர்பரிகரி-யெழிலுறுதிரனொ யிசைகொடுவரவர விளமயிலெனமட-வனிதயர்சுரத-நடன மாட-வலயமொடடர்தரு படைகளணிந்துயர்-வளர்கதிர்குலதிதி பதிகாரியதியதி பதியெனவளரரிச் சந்திரமகிபதி-யிவரென அ திவீரோ,

கட்டியக்காரன்-போற்றி கவி-இ-ம்-ஆனந்தபைரவி,

சூரியுக்தண்டமார்த்தாண்டப்பிரசண்டகண்டதுஷ்ட
நிக்கிரகமிண்டதுராபோற்றி
பாரிலகண்டாண்ட பிரம்மாண்டநாத்தண்ட
கிரண்டநாதாபோற்றி

நீருண்டபுயல்கொண்டதளா முண்டரவகண்டு
நிருபர்கள்கண்டாபோற்றி
தாருண்டபுசகீர்த்திதிகழரிச்சந்த்ரமா
சந்திரபதிநின்றாள்போற்றி.

இராசன்-வினு-தேசவிசாரணை-இரட்டை ஆசிரியவிருத்தம்,

இ-ம்-தோடி.

சீர்கொண்டபுவிமீதுமாதமும்மாரியுஞ் செழிக்கவேபொழிகின்ற
மந்திரி-விடை, [தா
சித்ரத்திலெல்லா நன்னீதிவழுவாதுகலைமு திரட்சியாய்ப்பொழிகி
இராசன் - வினு [ன்றது
பேர்கொண்டமன்னவர் செலுத்திவருபகுதியும் பிரியமாய்ச்செல
மந்திரி விடை. [வின்றதா
நேரதிசயமதாக்கியநெறிதப்பாது செலுத்தியேவருகிறார்கள்
இராசன் - வினு.
ஏர்கொண்டதேவாலயங்களிர்பிரியமாலய மெங்குந்தழைக்கின்றதா
மந்திரி-விடை,
இறைவனேயுனதுகட் டளைப்பொருள் விளங்கப்போ லெங்குந்த
இராசன் - வினு. [ழைக்கின்றது
போர்கொண்டதெவ்வுயிர்க்குடிகளுக் கெட்டிலொரு பொன்கட
மந்திரி - விடை. [மைசெல்கின்றதா
பூபதியெட்டிலோர்கடமைநீர் கொள்வதால்பூமியுஞ்சுபக்ஷமமே

நாடகசாலைப்-பொதுவிருத்தம்.

இ-ம்-தோடி,

ஆடகவுலகுபோற்று மபோத்திநாடரசுசெய்யும்
நீடகவரிச்சந்திரனெறைன் நிறைகொலுவதனைநாடிச்
சூடகமலர்க்கைமின்னைத்துவன் னூற்றன்னைனிடைகள்வாய்ந்த
நாடகசாலைமாதர் நடனஞ்செய்திடவந்தாரே

வசனம்

அகோதெப்படியென்றால்,ராசாதிராசன்ராசமார்த்தாண்டன்ராசகு
திலகன் ராசபரமேஸ்வரனுகிய சத்தியபாஷி அரிச்சந்திரமகாரா
சாவின் கொலுவுக்கு நாடகசாலைப்பெண்கள் வருகிறவிதங்காண்க,



நாடகசாலைப்பெண்கள் - வருகிற - தரு,

இ-ம்-புந்நாகவராளி-தாளம்ஆதி

பல்லவி

நடனமாதர்வந்தார் - இதோ - நடனமாதர்வந்தார்
நறைதிகழ்கமலமென் மலர்முகமொளிர்தர
நிறைகுணவபிநய நியமம்வகுவுசித (நடனமாதர்)

அநுபல்லவி

நடைபடாதமோக தாபவலைச்சூட்சிக்கித்
தயங்கிமயங்கிமிக முயங்கமனமுகந்து. (நடனமாதர்வந்)

சரணம்.

சொல்லுங்கொக்கோகமெனுஞ் சாஸ்திரம்-நிறை
சங்கப்பிரவாகமுள்ள பாத்திரம்
வெல்வோம்மதன்படைகையெயம் மாத்திரம்-என்று
மிரட்டுங்கூர்வாளெனும் நேத்திரம்
வல்லமுனிவர்களுமெமருள்கொளச் செய்யுஞ்சூத்திரம்
வருந்துணைசெய்தும்முகப் பாடமாகியதோத்திரம்
வானவருலகுனுபேனைகமுதலிவர்வடிவழகினைக்கண்டு
மறைதரவொளி கொண்டு

நடனமாதர்வந்தார்-இதோ-நடனமாதர்வந்தார்.

பெண்கள்-சொச்சகம்-இ-ம்-புந்நாகவராளி

ஓங்குயிர்த்தப்புவனமெலா மொருகுடைக்கீழ்சாட்சி
பாங்குடனேநடத்துகின்ற பராக்கிரமவரோதையனே
தீங்கொழித்துநலமேவுந் திரிசங்குமகாராசன்
ஈங்களித்தவரிச்சந்திர விறைவனேசரண்சரணே

அபிநயபதம்-இ-ம்பிலஹரி-தாளம்-ஆதி.

பல்லவி

சமயமீதேசோமொழி சாமியாரும்
சமராடல்கொண்டவீரா தாரரிச்சந்திரதீரா (சமய)

சரணங்கள்

மன்மதன் கைவில்லம்பாலே வாடுமெந்தன்கொங்கைமேலே
அல்புவைப்பாயொருக்காலே ஆசைதீருமதனாலே (சமயமீ)

தென்றலைப்போல்சாடத் திகைத்தென்மனதுவாட
என்னுமுன்மேல்மையல்நீட இக்குமெய்மைச்சேர்த்துகூட்(சப

கோவைபிடித்தேனாறதே குயிலுபிதோசிறதே
ஆவலுமிகமீறுதே அதிசமோகந்தலைக்கேறுதே (சமயமீ)

இராசன்-விருத்தம் இ-ம்-தோடி,

தருமநன்னெறியின் மிக்கச் சத்தியகீர்த்தியென்னும்
பொருவில்லாமந்திரியிந்தப் புவிதனில்நடனஞ்செய்த
மருமலர்க்குழலாரான மகிழ்பிரியங்கள்செய்யும்
விரைசெறிமார்தருக்கு வெகுமதிதரச்செய்வாயே

வசனம்,

கேளுஞ்சத்திய கீர்த்தியானமந்திரி இதோநம்முடையராச சமுகத்திலே நடனஞ்செய்தநாடகசாலைஸ்திரீகளுக்குச்சகலவெகுமதியுங்கொடுத்தனுப்பச் சொல்லுமந்திரி.

மந்திரி-விருத்தம் இ-ம்-தோடி,

மன்னவர்மன்னனாகவளரிச்சந்திரதிரன்
பொன்னிறைசமூகங்காக்கும் புகழ்பெருகட்டியக்காரா
அன்னமென்னடையாரிங்கே யனிநடப்புரிந்ததாலே
சொர்ன்னநற்பணியும்வஸ்திரந் தலங்கரித்தனுப்புவாயே

வசனம்,,

கேளும்பிள்ளாய் ஆசாரவாசற்காக்கும் கட்டியக்காரா நம்முடைய சக்கிரேஸ்வரனான அரிச்சந்திர மகாராசாவினுடைய சந்நிதானத்திலே இப்போது நடனஞ்செய்தார்களே நாடகசாலைஸ்திரீகள் அவர்களுக்கு நவரத்தினங்கள் வைத்திழைத்த ஆபரணங்களும் நல்லபட்டு பட்டாவளியும் வெகுமதி கொடுத்தனுப்பும் பிள்ளாய்

யாத்திரைப்பிராமணன்-பொதுவிருத்தம்-இ-ம்-மத்தியமாவதி

சாத்திரவிதிகளெல்லாந் தழைத்தறம்விளங்கச்செய்யுஞ்
சூத்திரதாரியென்னத் துதியரிச்சந்திரன்வாழ்நாள்
கீர்த்திசேருலகமெங்கும் கீர்த்தித்தலங்கள்கண்டே
யாத்திரைசெய்யும்வேத யாகவந்தணர்வந்தரோ



வசனம்.

அக்காலத்திலப்படி யென்றால் மகாராசராச மார்த்தாண்டராச கெம்பீர சூரியவம்சவுத்தாரகரான அரிச்சந்திரமகாராசா வானவரீ இவ்விதமாயரசாட்சி செலுத்திக்கொண்டிருக்குங்காலத்தில் அநேக புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து அநேகதிவ்வியஸ்தலங்களெல்லாங் கண்டுதெரிசித்து யாத்திரைசெய்து வரும்படியாகிய பிராமணன் வருகிறவிதங்காண்க.

யாத்திரைப்பிராமணன் - வருகிற - தரு,
இ-ம்-சௌராஷ்டி - ஆதி - தாளம் - ஆதி,

பல்லவி

அரிநாராயணகோவிந்தாஹரே-அரிநாராயணகோவிந்தா

அனுபல்லவி

திருநாராயணபுரமேவியஅரி-ஸ்ரீ காமாதவனேமதுசூதனா (அரி)

சரணங்கள்

உடையதாவேரிமத்தியவாசா-உம்பர்கள்பரவியகெருடேசா-ஓ அடியரைபரிவுமாதவர்விசுவாசா-வேத சிரத்தினில்நடமிடுந்திவ்வியதேசா (அரிநாராயண)

பவவினைகெடவரந்தருவாயே-நாங்கள்பன்னும்புண்ணியத்தால் முன்வருவாயே தவறில்லாதிருக்கவன்புரிவாயே-உத்தமன்-சரணம் நினைத்திடவருவாயே (அரிநாராயண)

மஞ்சாரொளிதிகழ்வெகுதூயா-கமலமகளை மகிழ்ந்தவளர் செயா,பஞ்சாயுதகரதரனேயா - சொல்லும்பவழபுரிவாழ்சகலசகேவியா,அரிநாராயணகோவிந்தா-ஹரே- (அரிநாராயணகோவி)

இராசன்-விருத்தம்-இ-ம்-சாவேரி,

சதுமறையவரேபோற்றித் தக்கநல்வேள்வியெல்லாம்
விதிமுறைக்கண்டுநீதி மெய்த்தவத்தோரேபோற்றி
முதிருநற்புண்ணியதீர்த்த முக்கியமாய்த்தோய்ந்தங் குள்ள
பதியெல்லாங்கண்டுவந்த பாக்கியவந்தனேபோற்றி

யாத்திரைப்பிராமணன்-விருத்தம்-இ-ம்-மோகனம்

சூரியன்மரபில்வந்த செயகரா ஆசீர்வாதம்
பாரினிலறம்வளர்க்கும் பார்த்திபா ஆசீர்வாதம்
தாரணிவேந்தர்போற்றுஞ் சக்ரேசா ஆசீர்வாதம்
சீருறுமரிச்சந்திர தீரனே ஆசீர்வாதம்

(இதுவும்பிராமணன்-விருத்தம்-இ-ம்-மந்தவாவி)

சகலசௌபாக்கியசாம்பிராச்சியப்சித்திரஸ்து
சகம்புகழ்செங்கோலோங்கத் தநதான்யசித்திரஸ்து
திகைசதுரங்கசேனைத் தளமெலாஞ்சித்திரஸ்து
மகிழ்மறையோர்க்குச்சுவர்ண்ணவழங்குதல்சித்திரஸ்து

ஸ்திதாஸ்து

(இதுவும்பிராமணன்-விருத்தம்-இ-ம்-சௌராஷ்டகம்)

பசுபதிவாழிவாழி மநுநெறிதழைக்கவந்த
சுகநிதிவாழிவாழி துலங்குடிவ்வுலகையாளுந்
திருநிறையவிளங்கவோங்குந் தருகிரிச்சருமைந்தா
அகிலமீதறம்வளர்க்கும் அரிச்சந்திராவாழிவாழி

இராசன்-வசனம்

தேவரீர்-ஆசனத்திலெழுந்தருளுங்கள்சுவாமிகளே,

பிராமணன்-வசனம்,

அப்படியேயிருக்கக்கூடுமோமகாராசனே,

இராசன்விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

துங்கவந்தனையோயெந்தன் துரைபெருகுலத்துக்கோர் செல்வம்
பொங்கமாய்ச்செய்தபுண்ணியம் பூர்த்தியாய்ப்பலித்ததாமே
இங்குவந்தெய்தினீர்கள் நல்சொல்மேவனை கூடுபுண்ணியம்
எங்குநின்றிங்கேவந்தீரெனக்கெடுத்துரைசெய்வீரோ

வசனம்

கேளுங்கள் சுவாமிகளேயுங்கள் வமிசத்தார்செய்தபூசாபலத்தினாலேயுங்கள்தரிசனமெனக்குக்கிடைத்தது அதனாலென்னுடையபுண்ணியவசம்நீங்களிருக்கிறஸ்தலம் எதுவோ இப்போதுயெங்கேயிருந்துயெனக்குக்காட்சிதரத்தக்கதாகவந்தீர்கள்சொல்லுங்கள்சுவாமிகளே

பிராமணன்விருத்தம்-இ-ம்-மோகனம்

இலகவேகீர்த்திபெற்றவிசையரிச்சந்திரபூபா
தலமெல்லாம்வென்றுகேட்டாய்தழைத்தகாம்பீரதீர



நலமுடனிருப்போர்தீர்த்தயாத்திரையாகவந்தோம்
உலகினுன்புகழைக்கேட்டோமுனைக்காணவந்தோமே

வசனம்

கேளும்அரிச்சந்திரமகாராசனேநாங்களெப்போதும்வாசஞ்செய்வது காசிக்ஷேத்திரம் திவ்யதேசதீர்த்தயாத்திரையாகவந்தோம்அநேகதீர்த்தங்களில்ஸ்நானஞ்செய்தோம்வெகுதிவ்யதேசங்களையுங்கண்டுவந்தோம்உலகில் எங்குபார்த்தாலும் உமதுகீர்த்தியைப் பிரக்கியாதியாய்க்கேட்டோம் ஆனதால் இதுவழியாகவந்தநாங்களுமுமைக்கண்டுபோகலாமென்றுவந்தோம்மகாராசனே

(இராசன்-விருத்தம்-இ-ம்-தோடி)

மண்மிசையுள்ளமுக்கியஸ்தலமெல்லாங்கண்டே
யெண்ணருநதிகளாடி யிங்குவந்தெய்தினீரோ
வண்ணநல்லதிசயங்கள் மகிழ்ச்சிகள்விளைவதாகக்
கண்ணினாற்கண்டிருந்தாற் கருதிநீருரைசெய்வீரோ

வசனம்,

கேளுங்கள்சுவாமிகளே பூமியிலேயுண்டாகிய அநேகதிவ்யதலங்கள் விஷ்ணுஸ்தலங்களெல்லாங்கண்டுதரிசித்து அங்கங்கேயுள்ளபுண்ணியதீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்திங்கேவந்தீர்கள்நீங்கள் வருகிறவழிகளில்அங்கங்கேகண்டஅதிசயங்களிலேவிசித்திரங்களாகியதைகளைக்கண்ணினாற்கண்டிருந்தால்நமதுமனஞ்செருக்கடையும்படிசொல்லுங்கள்சுவாமிகளே

(பிராமணன்-விருத்தம் இ-ம்-மத்தியமாவதி,)

கங்கைதொட்டிதற்குத்தெற்கேகன்னியாகுமரிமட்டும்
பொங்கியதீர்த்தமாடிப்புனிதநற்றலஞ்சேவித்தோம்
அங்கவன்றுசிநாட்டைத்துவாரத்தனுஞ்செய்யும்வேந்தன்
மங்கையைக்கண்டோமந்தவடிவழகெங்குங்காணோம்

வசனம்

கேளாய்மகாராசனே வடக்கேகங்காநதிமுதல்தெற்கேகன்னியாகுமரிமட்டும் அங்கங்கேயுள்ளதிவ்ய தீர்த்தங்களிலேஸ்நானஞ்செய்துஅந்தந்ததிவ்யஸ்தலங்களையுந்தெரிசித்தோம் அவ்விடங்களிலேயுள்ள அதிசயங்களையுங்கண்டோம்கன்னமாபுரியை ஆளாநின்ற இராசாவினுடையமகளைக்கண்டோம் அவளழகைப்போல் நாங்களெங்குங்கண்டதில்லைமகாராசனே

இராசன் விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி,

கண்டோமென்றுரைத்தீரந்தக்கன்னியாரவள்பேரென்ன
தெண்டிலாரும்புவிக்குட்டிருமணமிலையோவுண்டோ
ஒண்டொடிதனக்குந்தாயாருற்றதோர்தந்தையாரோ
அண்டியெவ்வாறுகண்டீரவளழகையுஞ்சொல்வீரோ

வசனம்.

நல்லகாரியம்சுவாமிகளே அந்தப்பெண்ணுக்கு விவாகமுண்டோ இல்லையோ அவளைப்பெற்றதாய்தந்தையாரை நீங்களெப்படிகண்டீர்கள் அவளழகெப்படிப்பட்டதோ தெரியச்சொல்லுங்கள் சுவாமிகளே

பிராமணன் விருத்தம்-இ-ம்-மோகனம்.

காசியைவிட்டகன்றுகன்னமாபுரிக்குவந்தோம்
மாசிலந்நகராயாள்வோன் மதிதயனென்பவன்செய்த
புநிததவத்தால்வந்தபொற்கொடிகன்னிகண்டாய்
ஆசைகூரழகைநாங்களிந்தமட்டுரைசெய்வோமே

வசனம்

கேளாய்மகாராசனே காசியைவிட்டு கன்னமாபுரிக்குப்போனோம் அங்கே கன்னிகாமேடையிற்கன்னியி னழகைக்கண்டோம் இன்னம்விவாகமில்லை மதிதயராசன்தவஞ்செய்துபெற்றான் அவளழகையுங்களுக்குத்தெரிந்தமாத்திரஞ் சொல்லுகிறோம்கேளாய் மகாராசனே

பிராமணன்விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி

சந்திரவதியாமந்தத் தையல்பேர்விளங்குபூர்ண
சந்திரன்கண்டுநாணித் தனக்குள்ளகிரணமெல்லாம்
சிந்தனைவருமென்றெண்ணி நிசிதனின்மறைத்துக்காட்டி
நொந்திடலுற்றான்வேறே நுவலுதற்குவமையுண்டோ

வசனம்.

கேளுஞ்சக்கிரேசுவரா அந்த மதிதயராசனுடையகுமாரத்தியாகியகன்னிகைக்குச்சந்திரவதியென்றுபேரிட்டார்கள் அவளழகுக்கிந்தகுமானபோலவாச ஒருகோடிசந்திரனையொப்பிட்டுச்சொன்னாலும் இந்தகுமாரிக்கீடோ பூரணச்சந்திரனென்றுபெயரிட்டுக்கொண்டு ஆகாசவீதியிற்றிரிகிறானே இந்தச்சந்திரனந்தச்சந்திரவதியினுடையமுகத்தைக்கண்டுதானே வெட்கப்பட்டுத்தனக்குள்ளகிரணங்களைக்காட்டுகிறதும்மறைக்கிறதுமாயிராத்திரிகாலங்களிலே கண்டுங்காணாமலுந்திரிகிறான், ஆனதால் அந்தச்சுந்தரத்துக்கு நாங்களொன்றையொப்பென்றுசொல்லப்போகிறோம் மகாராசனே



இராசன்-வசனம்

ஆம்-ஆம்-நீங்கள்சொல்லுகிறது உண்மையே ஆகிலும்நன்றாய்விசிதமாய்த் தெரியச்சொல்லுங்கள் சுவாமிகளே

பிராமணன்விருத்தம்-இ-ம்-மோகனம்

மணிமுடிதன்னைவிட்டிவளர்த்தெழுமுலைக்கொப்பாக
அணிதருநூலோர்சொல்வாராதலால்மதனன்கண்டு
தனிவிலாப்புகழ்சேர்கிரீடந் தையல்முன்காட்டநாணி
அனுகவேமனஞ்செல்லாமலருவியாயொழிந்திட்டானே

வசனம்

கேளுஞ்சக்கிரேசுவரா அந்தச்சந்திரவதிக்குப்பொருந்திய அவயவங்களிலுண்டாயிருக்கிற அழகுகளில் இன்னதுமுக்கியமென்றெதை நினைத்தால்யாங்களெடுத்துச்சொல்லப்போகிறோம் ஒன்றிற்கொன்றுகுறைச்சலுண்டா அதெல்லாமப்படியிருக்கட்டும் ஸ்திரீகளுடைய ஸ்தனங்களுக்குஒப்புச்சொல்லவேணுமேயானால்அநேகஉவமானங்களுண்டு அதிலேமன்மதனுடையகிரீடத்தைமுக்கியமாய்ச்சொல்லுவார்கள் நூல்வல்லோர்கள் ஆனதால்ஒருவருமிணையில்லாதவழகு பொருந்தியமன்மதன்தான்தரித்துக் கொண்டிருக்கிறகிரீடம் அவளுடையஸ்தனத்துக்குநிகரல்லவென்று வெட்கமடைந்துதானே ஒளித்துக்கொண்டருவியாய்த்திரிகிறான் அப்படிக்கிருக்கவேறேயுவமானமெப்படிச்சொல்லப்போகிறோம்சொல்லவேணுமேயானால் வேண்டியதிருக்குமதிலேதெரிந்துக்கொள்ளலாம்மகாராசனே

இராசன்-வசனம்,

அப்படியாவிசிதமாய்ச்சொல்லிக்கொண்டுவாருங்கள் சுவாமிகளே

பிராமணன்-விருத்தம்-இ-ம்-அடாணா

சொருகியகொண்டையழகுகண்டாலிந்த சுரர்முதல் முனிவர்களெல்லாம்புரிதவமிழந்துபுனைநிலைகுலைந்தப்பூவைக்கேயடிமையென்றுரைப்பார், வருமினதகையாளழகுக்குநீயே மனமுறுகாதலனுவாய்,இருநிலமீதிலவட்குநீயல்லால் மேற்றதோர் புருஷரிங்கிலையே

வசனம்

கேளுஞ்சக்கிரேசுவரா அந்தரூபசௌந்தரிய முள்ளகன்னிகையானசந்திரவதியினுடையநவரத்தினக்கொப்புக்குச்சமுத்துச்சுட்டிச்சந்திரப்பிறை சூரியப்பிறைவைத்தலங்கரித்திருக்கின்ற திவ்வி

யபரிமள நிறைந்த புஷ்பங்களை அடுக்கடுக்காகக் கட்டியசொரூ
கொண்டையழகைமாத்திரங் கண்டார்களேயானால் தேவர்களும்ரி
ஷிகளும்தங்கள் தங்கள் தவங்களைவிட்டு மனதுகலங்கித்தடுமாறி அ
வளழகின் இன்பமேயேரின்பமாகநினைத்து அடிமையாவார்களே
யொழியவேறில்லை-ஆகையால்-அவளழகுக்கு இராச-சக்கிரேஸ்வர
னுனவும்முடைய அழகுக்கும்சரிஅவளுக்கு நீர்புருஷனுமக்
குமவளேஸ்திரியாகவேணுமேயல்லது அவளுக்குத்தகுமானபுரு
ஷின் உம்மையல்லாமலுலகத்திலேயாரிருக்கிறார்கள் மகாராஜனே

இராசன்-விருத்தம்-இ-ம்-கண்டை

இந்தநல்லழகுவாய்ந்தபெண்ணிழையாளையெத்தன்
சிந்தையில் நினைந்துவிம்மிதமெழுகாகச்செய்தி
சந்தமின் மாசைநானேயவளைவதற்கும்மையன்றித்
தந்திரமறியாருண்டோசகிய துக்குரைசெய்வீரே

வசனம்,

கேளுங்கள்சுவாமிகளே இப்போது நீங்கள்சொல்லிக்கொண்டு வந்தசந்திரவதியினுடைய அழகென்றஅக்கினியைமூட்டிவிட்டீர்க ளதிலே மனமென்றுசொல்லப்பட்ட மெழுகானதுருகுதே ஆனா லப்படிப்பட்டஸ்திரீஎனக்குக்கிடைக்கும்படியாகியவுபாயதந்திர ங்கள் உங்களையல்லாமல் ஆர்செய்யப்போகிறார்கள் சுவாமிகளே.

பிராமணர்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி,

அங்கமாபுகலேமாங்கத்துரைத்தனஞ்செய்யுமன்னு
மங்கைமேலுனக்குக்காதல்வளர்ந்ததுநிசமேயானால்
சங்கைமேன்மனமுனக்குத்தருந்தருமாதலாலே
எங்களாலாகவெல்லாநிறையப்புவாயிப்புவாயே

வசனம்,

கேளுஞ்சக்கிரேஸ்வரா அந்தமதிதயன்மகளானசந்திரவதியின் பேரிலுமக்கு ஆசைவிளைந்தது நிசமேயானால்-சங்கையென்னவி ருக்குது நீரவளைக்கலியாணஞ் செய்யத்தகும் உமக்கவளேசரிசக் கராவாக வேண்டியகாரியமேதாகிலு மிருக்குமேயானாற் சீக்கிர மாகத்தெரியச் சொல்லும்மகாராசனே,

இராசன்-விருத்தம்-இ-ம்-காம்போதி,

சொல்லுமென்றுரைத்திர்வேதச் சுருதிநூல்களைக்கண்டோரே
முல்லைமென்னகையாளந்தமாதிற்குமல்லினங்குமேனி
மல்லிபெண் அரிச்சந்திரவதிதனைப்பெற்றேனுன்பால் நீர்
இல்லைநீர்சென்றெனக்கேவுயர்மணமுடிக்கச்செய்வீர்



வசனம்.

கேளுங்கள்சுவாமிகளே நீங்களெனக்குச்சகாயப்படுகிறதுமெ ய்யேயாகிலந்த சந்திரவதியைப்பெற்ற மதிதயராசனிடத்திற்குப் போய்வெகுவிதமாயவது உபாயதந்திரங்களைப்பேசியெனக்கவளை க்கலியாணஞ்செய்து கொடுக்கும்படியாகத் திட்டப்படுத்திக்கொ ண்டுவரவேண்டும் இதுதானீங்களெனக்குச்செய்கிறசகாயஞ்சுவாமிக [ளே

பிராமணர்-விருத்தம் இ-ம்-சாவேரி,

அவனியையாளவந்தவரிச்சந்திரபூபாலனேகேளாய்
தவறில்லாமதிதயன்றன்றவத்திலுதித்தமாதை
எவர்களுமறியநாளையெழில்மணம்புரியச்செய்வோம்
கவலைதீர்ந்திருப்பாய்நாங்கள்சடிதிப்போய்வருகுவோமே

வசனம்,

கேளுஞ்சக்கிரேஸ்வரா அந்தமதிதயராசனுடைய குமாரத்தி யானசந்திரவதியைநாளையதினமே உமக்கவளைமணமாலைசூட்டத்த க்கதாகச்செய்கிறோம் நீர்வியசனப்படவேண்டியதில்லைநாங்கள்சீக் கிரமாய்ப்போய்வருகிறோம் நாங்களிவ்வளவு பிரயாசைப்பட்டாலு மக்கு அந்தவிசுவாசந் தெரியாமற்போகிறதா யெங்களுக்குச்செ லவு கொடும்மகாராசனே

இராசன்-விருத்தம் இ-ம்-மத்தியமாவதி

ஒப்பேதுமில்லாவேதவுசிதவத்தனரேபோற்றி
முப்போதும்ஸ்நானசந்திமுடித்துயர்ந்தோரேபோற்றி
தப்பாதுமனத்தில்ஞானத்தனையுடையோரேபோற்றி
எப்போதுவருவீரென்றேயெதிர்பார்த்திங்கிருப்பேனுனே

வசனம்,

கேளுங்கள் சுவாமிகளே நீங்களெப்போதுவருவீர்களென்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன் திரிகாலங்களும் ஸ்நானசெப தபமுதலாகியயாகாதிகிருத்தியங்கள்சகலவேதசாஸ்திரக்கிரமபண்டி தர்களாகியசுவாமிகளே போய்வாருங்கள்

பிராமணன்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி,

மகாராசராசராச மகிபதி ஆசீர்வாதம்
சுகாதிபத்தியங்களோங்குந்துரையனே ஆசீர்வாதம்
தகாதவர்க்கடங்காதீர்க்கசார்த்தால ஆசீர்வாதம்
விகாதமில்லாமல்நாளைவிவாகமும்முடியுந்தானே

வசனம்,

ஆசிர்வாதம் ஆசிர்வாதம் அநேகமங்களவுசிதாலங்கிர்த சப்தபிரசங்கதுங்கதுரங்க அகளங்கராசராச மகாராசனே ஆசிர்வாதம்

பொ-ரு-விருத்தம் இ-ம்-தோடி.

தரணிமேற்புகழ்மனிய திரித்தர்த்தன்னிலேவுமுதியன்பால்
விரதயாத்திரைகள்செய்யும் வேதியர்போனபின்பு
சுரகுலவன்கணையிருதுஞ் சுடர்மதியாதுர்தாவி
அரிதிற்பெய்தென்றலாது யரிச்சந்திரன்மெலிகின்றானே

வசனம்

அகோஇப்படியென்றால் யாத்திரைப்பிராமணன் சந்திரவதியினுடைய அதிரூபலாவண்யசௌந்தரியங்களையெல்லாம் அரிச்சந்திரமகாராசாவுக்குச்சொல்லி அவருக்கு அவளைக்கலியாணஞ்செய்துவைக்கிறதற்காக மதிதயராசனிடத்திற்குப் போனபின்பு இங்கே அரிச்சந்திரமகாராசன் விரகவேதனையடைகிறவிதங்காண்க.

இராசன்-தரு-இ-ம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி,

பல்லவி

காமவிடாய்தீர்க்க வாராயோ—எந்தன்
கருத்தையுருக்குமாசை தீராயோ

அநுபல்லவி

தாமசஞ் செய்யாதே } தாவியணைப்போர்த்தித்
சுந்திரனிதோ யிப்போதே } தகிக்கிறான் பழிநாறி (காம)

சரணங்கள்

மாரன்கொடுவிருக்கும் மதிலோசம்-நான்
வந்தங்காயாசந்திரவே ளின்னேரம்
ஆபாரக்குயில்செய்யும் கோரம்-கண்டு
அலகிறன்வேதிங்கென்ன உபசாரம்
சேரவா லாகாதோ } ஆரதிர்பார்னெஞ்சஞ்
சேர்ந்துகூடப் போகாதோ } சுழலுதிதென்ன வஞ்சம் (காம)

சந்தனமும்பன்னீருஞ் சுடுதையோ-வேத
சாத்திரர்சொன்னசொல் லதுபொய்யோ
சிந்தைதிலக்குமென் பதுமெய்யோ-என்னைச்
சேர்த்தணைப்ப அவுந்தன் மலர்க்கையோ
தந்திரவார்த்தைகள்சொல்லித் தன்னிவிடுவாயோ
சந்ததம்விரகத்தாலே தவிக்கச்செய்திடுவாயோ (காம



மதிதயன்பெற்றெடுத்த யினமாதே-இட்ட
வருவாய்நீயென்னெதிரே யிப்போதே
சதிசெய்வாயோயென்னமோதெரியாதே-மோக
தாபமுன்னைவிட்டினிப் பிரியாதே
சந்திரயலைவேறே கதிப்பதுவேகாலம்
மப்பமயங்குதேநகண்ணே மருவுதற்கென்னசாலம். (காம)

இராசன்-விருத்தம் இ-ம்-கண்டா.

மன்னியவுலகையாளு மதிதயன்பெற்றெடுத்த
கன்னிநல்லமுதேமாசிலாப் பசும்பொன்னே கனியத்தேனே
உன்னழகதனைக்கேட்டே யுரத்திலைகத்துருகின்றேனே
என்னைவந்தாளாயாகி லெப்படிசகிப்பேன்மானே

வசனம்

ஆஹா - ஆஹா - அதிரூபசௌந்தரமுள்ள பெண்ணேமின்னே காமரசமே, மதிதயராசன் பெற்றெடுத்த அலங்கிர்தாமிர்தமே முன்புனை யாத்திரைப்பிராமணன் சொன்னநாள்முதல் நினைந்து நினைந்துருகிவிர காக்கினியிலே வருந்தப்படுகிறேனே நீயுந்தெய்வீனச்சோதிரூபசுந்தரமா அரி அரி

இராசன்-விருத்தம்-இ-ம்-முகாரி

தந்திரமெலாமிக்கச்செய்துசிக்கநல்லறிவேர்பிரிக்கச்
சுந்தரமீதீதியென்னும் சதிருளமந்திரிகனாய்சூழ்
முந்திமேற்படிக்குபடியலாமுழுமனைவாயதனை
மத்தகத்தனைச்சுந்தர வதிமுகமேன் மாகாணும்

வசனம்.

கேளும்எப்படிநீக்கினவசந்தசத்தியகீர்த்தியென்னுந்தகத்தரியாகியமந்திரிகேட்கக்கேட்கச் செவிகளுக்கமாலைவிரகபரசவசமாயிய சந்திரவதியினுடைய அதிரூப சௌந்தரியங்கள் சோதிப்பிரகாச முகவிம்பத்தைனவறைக்குக்காணப்போகிறேன்மந்திரி

இராசன்-தரு-இ-ம்-சங்கராபரணம்,

பல்லவி

என்றுசேர்க்கவசமா-பிரீதமோகம்- என்றுசேர்க்கவசமா

அநுபல்லவி

மின்னற்கொடியிடை அன்னநடையெனுங்
கன்னிச்சந்திரவதி கட்டழகிமேலெழுந்த [என்
கலந்துகிப்பிரமைகொளுஞ் சித்திரமுமலைத்துச்செயலழிந்திட்டமன்

சாணங்கள்

சித்தசப்பயவிதோ — வருகிறான் - எல்மேல்
சிறிச்சண்டைசெய்யத் — திரிகிறான்
புத்தம்புதுமலர்க — ளரிகிறான் - ஏதோ
போர்க்களம்போலமர் — புரிகிறான்
சற்றும்பயமில்லாமற் — கையிற்கருப்புவில்லைத்
தாவிவளைக்கிறான் — சரமாரிவிளைக்கிறான்
தளர்ந்திப்படி வருந்தத்தொடு சரந்தைத்திடவிலாந்திட்டயின் (எ)

மலர்க்கணையாலுளம் — வாடுதே - அந்த
மாருதமனல்போலே — சாடுதே
நிலைக்குமோமனதுதன் — னாடுதே - இதோ
நெருங்கிக்குயில்கள்போ — ராடுதே
சொலச்சொலபிரமைகொண்டு அடிக்கும்கயென்றாவி
தலைக்கேறியதிமோக — தாபமீறுதே தாவி
தரிக்குந்தரமெனக்கிப்படி வருந்தும்மயல் பெருத்திட்டயிக் (அ)

அவளுக்கார்சொல்வாரோன் — மோகத்தை சொன்னு
லணைந்துதீர்ப்பாளோயெச் — சாகத்தை
கவலைச்சஞ்சலமாம்பிர — வாகத்தை நீங்கிக்
கலந்துசேர்வேனோஅவன் — போகத்தைத்
தவறில்லாத்தழல்போல் சந்திரனுருமிச்கிறான்
சிவசிவாவிரகத்திற்சிக்கவே — கொதிக்கிறான்
இளைத்தன்கடலொலிக்கின்றதுகருத்துசூழ்திறபடக்கண்டயிலி (க)

சத்தியகீர்த்தி விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

வேதத்தின்சொல்லேயென்ன விளக்குமெய்வசனங்கொண்ட
போதத்தின்மிகுதிரிச்சந்து புத்ரமோபினிநீர்கேளுஞ்
சேதச்சந்திரனும்வீசு தென்றலுங்கொடிதே
போதித்தமறையோர்சொல்லைப்பொய்மெய்யெவ்வாறுகண்டீர்

வசனம்,

கேளும்ராசசக்ரேஸ்வரா வேதவசனத்தைப் போலுஞ் சத்தியத்தையும் ஞானத்தையுங்காகண்டநீரொன்றுந்தெரியாதவரைப்போலயாத்திரைபோய் வருகிற பிராமணன்வார்த்தையைக்கேட்டுத் இப்படி மயங்கலாமா அந்த மதியராசனுடைய குமாரத்திசந்திரவதி இன்னரூபமா யிருப்பாளென் றவ் வந்தணனுமேல கண்டதைச்சொல்லிக்கொண்டுபோனுர்கள்யாத்திரைவந்தபிராமணு வது



வுமுள்ளபடியே நிச்சயப்பட்டால் நீகலியாணஞ்செய்துக்கொள்ளுகிறதற்குத் தடையுமுண்டோ, சும்மாய் வீணிலே சந்திரனுலேயுந் தென்றலாலேயும் வருத்தப்படுகிறபேர்களுமுண்டோ யோசித்துவிடும் மகாராஜனே,

இராசன்-விருத்தம்-இ-ம்-பைரவி,

என்மனக்குறிப்பறிந்தே யிதமெடுத்துரைக்கவல்ல
தன்மைபுணர்ந்தமந்திரி சத்தியகீர்த்திநீகேள்
சொன்னதோர்மறையோர்வார்த்தை சூதாகவிருக்குமாகில்
என்றுயிருருக்குமாசை விளையுமோவென்னசெய்வேன்

வசனம்,

கேளும் எனதுமதிமந்திரியாகிய சத்திய கீர்த்தியேபோது நீசொல்லுகிறதிலே அந்தப்பிராமணன் சொன்னவார்த்தையெல்லாம் பொய்யாகவும் நானேதோ விரகப்படுகிறதாயுஞ் சொல்லுகிறாய் அதுபொய்யாயிருக்குமேயாகில் மனதுக்குமனதே சாட்சியென்கிறது பொய்யா அவளழகைக்கேட்ட ஆசையானது என்மனதையுருக்குதே நானென்னசெய்வேன் மந்திரி.

மந்திரி-விருத்தம்-இ-ம்-தோடி,

மனதுக்குமனதேசாட்சியென்பதுமெய்யேயாய்த்த
மனநிலைப்படியேசந்திர வதியைநீர்மணமேசெய்வீர்
கனமறையவர்போயந்தக் கன்னமாபுரியான்மன்னன்
மனதறிந்துற்றசேதி வருமட்டும்பொறுத்திடமோ

வசனம்,

கேளும்சக்கிரேஸ்வராமனதுக்குமனதேசாட்சியென்பதுசரியே அப்படிக்கிருந்தாலும் மந்தகன்ன மாபுரிக்குப்போய்மதியராசனுடைய மனதையறிந்து அந்தப்பிராமணன் வருமளவுக்கும்நீர்பொறுத்துக்கொண்டிருக்கவேணும்மகாராசனே

பொது-கொச்சகம்-இ-ம்-புந்நாகவராளி,

மந்திரிசொற்கேட்டு மாங்கியரிச்சந்திரவள்ளல்
சிந்தைதளர்ந்திருக்கவப்பால் செழுமறையோர் போனதொரு
சுந்தமலர்ப்பொழில்சூழ் கன்னமாபுரிதனையாள்
அந்தமதியன்செய்கை யறியவுரை செய்வேனே

வசனம்,

அகோதெப்படியென்றால் அயோத்தியாபுரியையரசாட்சிசெய்யாநின்ற இராசாதிராசனுன அரிச்சந்திரமகாராசன் இவ்விதமாய்ச் சந்திரவதியிநுடையருபலாவண்ணியங்களைச் சொல்லக் கேட்டநான் முதற்கொண்டு காமாந்தகாரனாயென்னவென்னவெனவித்துக்கொண்டிருக்கவப்பால் கன்னமாபுரியைத்தேடிப்போன பிராமணர்கள் கன்னமாபுரிக்குவருமுகமாக அங்கேயரசாட்சிசெய்யாநின்ற மதிதயமகாராசன் பட்டணத்தில் நடக்கிறவிதங்காண்க,

கட்டியக்காரன்-பொதுவிருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி,

பட்டிடையிடையிற்சாத்திப்பணியுடன்வத்திரசைகட்டி
யொட்டிமிக்கெங்குமோங்கவிலச்செபுறசெங்கோல்வேந்தன்
வட்டவாருலகையாளுமதிதயராசனென்போன்
கட்டளைப்படியேசொல்லுங்கட்டியக்காரன்வந்தானே

வசனம்,

அகோதெப்படியென்றால் கன்னமாபுரியையாளும் மதிதயமகாராசாவினுடைய வாசல் காக்குங் கட்டியக்காரன் வருகிற விதங்காண்க,

கட்டியக்காரன்வருகிற-தரு-இ-ம்-மத்தியமாவதி-ஆதிதாளம்,

பல்லவி

வந்தான்கட்டியக்காரன்மாசிலாததேர்ச்-சபருணைமதிதய
ராசன்வாசல்தோரணிபெருவனாசைய (வந்தான்)

அநுபல்லவி

செந்தாமரைகள்வாசஞ்செய்யும்வுக்கிரதிரணதீபுத விராசர்குணமாரவிந்பனைஞாரித்திகழ் விரஞ்செய்ய பதிவருகிற தமிழ்தமிழ்குசைபதனிஇன பிரசைகளேபெயவந்தோ (வந்தான்)

சரணம்

மின்னும்பொற்குச்சுருமாலே டுனோந்து தாங்கவீபுதி நுதலிலிலங்காத்
அம் நூஞ்சரப்பளிகுளலத்துடன் அரிவைகயொருகைவிளங்க
பலர் நுபிடையிற்கச்சைவரிந்துமீசைமுறுக்கி
வரவராசசபைதனி
லரசர்களோயுநக்கி
மருவல் குளமதுபொடிபட விடமொனி
விரிதர லொளிநிறைவிதரண னொதனி
வீதிப்புனித மீதிக்கசடரை
சிதித்தலைப்புகழ்கூறிச்சபைதனில் (வந்தான்)



வசனம்

பேசாதிருங்கள்பேசாதிருங்கள்சபையோர்களே கன்னமாபுரியை அரசாட்சிசெய்யாநின்ற மதிதயமகாராசன்வருகிறார்ச்சனிக்கைவச்சரிக்கை.

(பொதுவிருத்தம்-இ-ம்-தோடி)

விதிமுறைதவருநீதி விளங்குகன்றேசிநாட்டைத்
துதிபெறவொருகுடைக்கீழ்சுபகரமுடனேயாளுஞ்
சதிருளமந்திரிமார்கள் சூழும்பாடிகுழ்வதாக
மதிதயராசதிரன் மனிகொலுவிருக்கின்றானே

வசனம்.

அகோதெப்படியென்றால் கன்னமாபுரியை யரசாட்சிசெய்யாநின்றமதிதயராசன் கொலுவுக்குவருகிறவிதங்காண்க

மதிதயராசன் வருகிற - தரு - இ - ம் - பந்துவராளி - ஆதிதாளம்

பல்லவி

மதிதயராசன்வந்தான்-வளமிகுமுலகினிலுளபலமகிபர்கள்
வரிசையுடனே துதி
மதிகுல வதிபதி (மதிதய)

அநுபல்லவி

விதிருன்டோலிவதிக்கினையிந்தவுலகிலெல்லனைத்
அதியர சர்கள்புகழ்
சுபசெயமுடன்மகிழ் (மதிதய)

சரணம்.

வெற்றிவெண்குடை பிடிக்க அரசொல்லாம்
விருதுகட்டியம் படிக்க
சிற்றிடைமாதர் நடிக்க தமிறுமிகித்
திசைத்துப்பகைவர் துடிக்கச்
சற்றுமிணைவிடாமல்மந்திரிமார்கள்சூழத்
தழைத்தவுலகமெங்குந்தர்மமிகுத்துவாழச்
சதிர்தங்கிய வெண்சாமரை போடத்
தவமுனிவர்களிவன்புகழ் கொண்டாட
மதனிவனெவடிவைக்கண் டுளம்வாட
வருகாரிகளிதையர் மயல்கொண்டுநாட
வலிகடலொலியெனமணிமுரசதிர்தர
ஒளிதிகழ்நவமணி பணியணிசுபகரன் (மதிதய)

மதிதயராசன் - கடவுள் - வணக்கம்

விருத்தம் மத்தியமாவதி

அகிலமீதறம்விளங்க வருமறைவிளங்கவோங்க
வுலகெலாமுலகமெங்கு மாதரும்பாரிபெய்யத்
தொகைபெறுமுயிர்களாழ்கத்தப்பசெங்கால்தழைக்க
திருபஞ்சாயுதமாமாயன்றுமாைச்சரணம்போற்றி

(முதல்மந்திரி-போற்றி கவி-இ-ம்-ஆனந்தபைரவி)

உலகாளரசர்புகழ்வேந்தே யோதம்புகழ்சேர்மதிகுலத்தில்
சிறந்தவேவொளவேவந்துதித்ததிரவீரபராக்கிரமனே
விலகாமெதிர்க்குந்தரியலனைவெல்லும்வலியபுயத்தோனே
நலஞ்சேர்ங்கள்மதிதயமாநராதிபதிநின்றாள் போற்றி

(இரண்டாவதுமந்திரி-போற்றி-கவி- இ-ம்-ஆனந்தபைரவி)

தீரர்கள்திராபோற்றிச்செப்புநற்புகழைக்கொண்ட
வீரரில்வீராபோற்றி விளங்குநன்னீதியோங்கும்
கார்திகழ்மதில்களோங்குங்கன்னமாபுரியையாளும்
மாரவேளொவுதித்த மதிதயதிராபோற்றி

(கட்டியன்-போற்றிகவி-இ ம்-சாவேரி)

அதட்டிவெட்புலியெனக்குமுறு நல்லோலைசயுடையார்வென்றவீராபோற்றி வுதட்டியாயெதிர்வாக்கண்டஞ்சுதின ர்களையுகந்தானவல்லாய்போற்றி,மதட்டிருதிலச்சிகாமேலாஃமேடைளுழ்கன்னமா புரிக்கரசேபோற்றி,பதட்டமாய்நல்லோர்கள்புகழைப்பழிக்கின்ற பலகைவர்சிங்கேறேபோற்றி,

(மதிதயராசன்-விருத்தம்-இ-ம்-தோடி.)

என்னருமந்திரிமாரே யான்செய்ததவத்தால்வந்த
கன்னிசந்திரவதிக்குக் கதித்தவெவ்வணந்தான்வாய்த்தும்
இன்னமும்விவாகமில்லாதிருப்பதுதருமந்தானோ
என்னவாறுமோவீச ரெப்படிநடத்துவாரோ

வசனம்,

கேளும் எனதருமையான மந்திரிமார்களே நான் பரமசிவனை நோக்கித் தவஞ்செய்து பெற்ற என்மகளாகிய சந்திரவதிக்கெவ்வனகாலம்வந்தும் இன்னம்விவாகமில்லாம லிருப்பது தருமமாசுவ ரெத்தனமெப்படி முடியுமோதெரியாதே என்னசெய்வேன் மந்திரிமார்களே,



மந்திரி-சொல்-விருத்தம்-இ ம்-சாவேரி,

புவிபுகழ்மதிகுலத்தில் புனிதமாய்வந்துதித்த
தனிநிறையரசரேறே தழைக்கநீர்பெற்றபுத்திரி
எவ்வனகாலங்கண்டா ளெழில்மணக்காணுளென்றுங்
கவலைகொண்டிருகலாமோ கடிதியேமுடியுமையா,

வசனம்

கேளும்மகாராஜனே நீர்தவஞ்செய்துபெற்ற வுமதுசிரேஷ்டபுத்திரியாகியசந்திரவதிக்கு இன்னங்கலியாணமாகவில்லையென்றும் எவ்வனகாலமான பக்குவதியானுளென்றும் விசனப்படலாகா நீர்நினைத்தால் கலியாணமுடிப்பிக்கிறதற்குத் தடையுமுண்டா மகாராஜனே

மதிதயராஜன்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

மந்திரிநீதான்சொன்ன வார்த்தைக்ம்மகிழ்ச்சியானேன்
விந்தையொன்றுண்டுகேளொன் மிகுதவப்புத்திரிக்கேற்ற
சுந்தரபுருஷன்வேணுஞ் சூத்திரம்விளைவொன்றுண்டு
அந்தசங்கடத்துக்கல்லோ வலைகின்றேனென்னசெய்வேன்

வசனம்.

கேளும்மதிமந்திரி எனது தவபுத்திரியாகிய சந்திரவதிக்குத் திருக்கலியாணஞ்செய்யவேணுமேயானால் அவளழகுக்குத்தகுமானசுந்தரமுள்ளபுருஷன்சுந்தர லபிக்கவேணுமல்லது,ஒருவேளைவித்தாலும் ஈஸ்வரனெனக்குச்சொல்லியிருக்கிறசங்கையொன்றுண்டு அந்தசங்கடத்தினுலல்லவா கலியாணமாகிறதற்குத்தடையாயிருக்குது நானென்னசெய்வேன்மந்திரி

மந்திரி-விருத்தம்-இ-ம்-கலியாணி

சங்கையுந்திருநீர்செய் தவத்தினால்வந்துதித்த
மங்கைக்கும்விவாகமாகு மகிழ்ச்சியுமடைவீர்பொங்கு
கங்கையைச்சடையில்வைத்த கடவுடன்னருளினாலே
சங்கடமொழியுமுள்ளந் தயங்காமலிருந்திடீரே

வசனம்

கேளும்மகாராஜனே நீர் நினைத்திருக்கிற சங்கையுந்தீரவேபோகுது நீர்செய்ததவத்துக்கிரங்கியனுக்கிரகஞ்செய்த பரமசிவனுடைய கிருபையினாலே உம்முடையமனோவிடாகூலமொழியத்தக்கதாக நம்முடைய சந்திரவதியம்மனுக்குத் திருக்கலியாணமும் நிறைவேறவேபோகுது சஞ்சலப்படாமலிரும் மகாராசனே

பொதுவிருத்தம்-இ-ம்-சௌராஷ்டிகம்

மதிதயராஜனிந்தவகைமனதினிலேயெண்ணி
மதிமந்திரியுடனேசொல்லி மனத்துயராற்றுநாளில்
புதியபொன்மதிலயோத்திப் புரவலன்றனக்குத்துதாய்
அதிசயமுடனேசொல்லும் யாத்திரைவேதியர்வந்தாரே.

வசனம்.

அகோதெய்பயடியென்றால் இவ்விதமாகமதிதயராஜனானவர்த மதுகுமாரத்தியாகிய சந்திரவதிக்கு திருக்கலியாணமாகவில்லையெ ன்று மந்திரிகளுடனேவியசனப்பட்டுக்கொண்டிருக்கிற தருணத் தில் முன்யாத்திரைபோனபிராமணருன் அரிச்சந்திரமகாராசாவுக்கு ச்சந்திரவதியைத் திருக்கலியாணம்-பண்ணிவைக்கத்தக்கதாகக் கன் னமாபுரியைநாடி பிராமணருன்வருகிறவிதங்காண்க

கன்னமாபுரிக்குப் பிராமணருன்வருகிற-தரு
இ-ம்-சௌராஷ்டிரம்-தாளம்-ஆதி.

பல்லவி

நியானப்பிரம்மானந்த கோவிந்த கோவிந்த
சிதாநந்தவைகுந்த முகுந்த (நியா)

அநுபல்லவி

மோனுநியர்துதி } முக்கியபவழபுரி
ஞானகுண நிதி } சக்கிரதரஹரி (நியா)

சரணங்கள்

கங்கையில்மூழ்கிக்காசியைக் கண்டோம்
கதிதருதிருப்பதிதலம்வலம் வந்தோம்
துங்கபத்திரிகோதாவரி முதலாறு
சுகந்தநதியில்மூழ்கி வந்தோம்வந்தோம் (நியா)

சந்தியாவந்தன செபதப ஹோமம்
தப்பாமலேநடத்தி தரித்தோஞ்சிரேஷ்ட நாமம்
சந்திராதித்தரையும்வரச்செய்வோ மந்திர தேமம்
தயங்காமலேநிலத்துத் தடுத்தோம் குறாகாமம் (நியா)

யாகாதிகள்செய்யுந் திராணியெங்களுக் குண்டு
யாவருந்தொழுநாராயணனருள் கொண்டு
வாகாகவேபண்டு மயக்கொழித்தது முண்டு (நியா)

மதிதயராஜன்-போற்றிவிருத்தம்-இ-ம்-காம்போதி

உரைக்கின்றவேதநான்கு மோதவல்லவரேபோற்றி
தரிக்கின்றதீர்த்தியபூமி தங்குமந்தணரேபோற்றி



பெருமைகண்டவரேபோற்றி
பெருக்குமெய்ப்புகழ்சேரியாகம் பெருமைகண்டவரேபோற்றி
திருத்தமாம்புராணசாஸ்திர ஙிலரேபோற்றிபோற்றி

பிராமணன்-விருத்தம்-இ-ம்-மோகனம்

தரணியையாளவல்ல தாவிஷ்டகா ஆசிர்வாதம்
தருமநல்னெறிகடோர்த்த தவத்தோனே ஆசிர்வாதம்
பொருவிலாத்திரஞ்சேர்வெற்றி புஜபல ஆசிர்வாதம்
அருமறையோர்க்குத்தானமளிப்போனே ஆசிர்வாதம்

வசனம்,

சிரஞ்சீவிசிரஞ்சீவி சுபீபவா சுபீபவா மதிதயமகாராஜனே ஆ சீர்வாதம்

இராஜன்-வசனம்,

வாரும்வாரும் சுவாமிகளே இந்ததிவ்விய ஆசனத்தில் எழுந்த ருளியிருங்கள் சுவாமிகளே

மதிதயராஜன்-விருத்தம் இ-ம்-மோகனம்

மதிதயராஜன்-விருத்தம் இ-ம்-மோகனம் பிறந்தே
என்னருங்குலத்தோரெல்லா மிசையுறக்கதியிற்சேர
நன்மையமிருந்தகால நான்செய்ததவத்தாலுங்கள்
பொன்னடிகாணப்பெற்றேன் புனிதநற்றலங்கள்யாதோ
என்னகாரியமாய்வந்த திவடத்துக்கியம்புவீரே

வசனம்,

கேளுங்கள்சுவாமிகளே எங்கள்வமிசத்தாரெல்லாரும் நற்கதி யைச்சேரத்தக்கதாக நல்லகாலம்வந்துநேரிட்டதாகையால்தங்கள் தரிசனமெனக்குக்கிடைக்கலாச்சுது தங்களிருப்பிடமெதுவோ இ ப்போதெனக்குக்கிடைக்கலாச்சுது தாங்கள் தெரியச்சொல்லவேணும் சுவாமிக [வே டம்வந்தகாரியமென்னமோ.

பிராமணன்-விருத்தம்-இ-ம்-அடாணு

அரியதன்னீதிதேர்ந்த வரசர்களேறெனா
வான்முடிநெறிகளோங்கு மன்னவர்மன்னுகோனாய்
இந்நிலமீனகாசி யெழிற்கன்னியாகுமரிதொட்டு
பொருநதியாடியாத்திரை புகுந்திங்கேவந்தோம்யாங்கள்

வசனம்,

கேளும்ராஜராஜனான மதிதயமகாராஜனே நாங்கள் தீர்த்தயா த்திரைபோய் காசிமுதல் கன்னியாகுமரிவரைக்குமுள்ள ஸ்தலங்க ளையெல்லாந்தரிசித்துக்கொண்டு வருகிறவழியாகையால்உம்மையு ங்கண்டுபோக வந்தோம் மகாராசனே

மதிதயராசன்-விருத்தம்-இ-ம்-தன்னியாசி

வந்தநெல்பாக்கியஞ்செய்த வல்வினையொழிந்தேனிங்கு
செந்தமிர்பாதநோக்கு திவ்வியமாத்தலங்களெல்லாம்

விந்தையாய்க்கண்டவாறு மிகமகிழ்வாகச்சென்றே
எந்தெந்தநதிகள்கண்டீர் யாதிசயங்கள்சொல்வீர்

வசனம்.

கேளுங்கள்சுவாமிகளே உங்களுடையதரிசனங்கண்டமாத்திரத்திலே நான்சென்மசாபல்லியமானேன் உங்கள்திருவடி வருத்தந்தக்கதாகஎந்தெந்தஸ்தலங்களைப்போய்க் கண்டீர்களோ எந்தெந்த நதிகளில் ஸ்நானஞ்செய்தீர்களோ அங்கங்கேயுள்ள அதிசயங்களையெனக்குத் தெரியச்சொல்லவேண்டுஞ் சுவாமிகளே

பிராமணன் தரு-இ-ம் நாதநாமக்கிரியை-அட-தாளம்

பல்லவி

சொல்லுவோங்கேளீர் - அதிசயங்கள்
சொல்லுவோங் கேளீர்

அநுபல்லவி

வல்லவிவ்வுலகத்தில் மகிமையிலகிய
வளருந்தல முழுதும்பல நதியுங்கண்டுமகிழ்கொண்டதைச் (சொ)

சரணங்கள்

கங்கையமுனைசரஸ்வதிகாளிந்தியுங்
கருதுந்துங்கபத்திரி கோதாவிரியென்றும்
பொன்றுங்கிருஷ்ணைதிரஞ் சரயுசோணநதி
புனிததீர்த்தங்களாடியதின்பின்னும்
பங்கயநிறைவேக வதிசிந்து நதியென்றும்
பலநன்னதி தனிலும்விரி யலைசித்துணி விலைகண்டதைச் (சொல்)

பேசுமல்லிகார்ச்சுனங் காசிவளநதி
பேதமில்லாஜெகந்நாதம்பிரகாவநம்
மாசிலாவேங்கடங் காளஸ்திரிகாஞ்சியும்
வளருங்காவிரிமத்ய வாசரீவாழ்தலமும்
வீசும்புகழ்மதுரை யழகர்சோலைமலை
விளங்குஞ்சிவதலங்கள்திரு விளங்கும்அரிதலங்கள்முதல் (சொல்)

பாபநாசகத் திசாடிபாவிப்
பகரும்பூமியிலுள்ள மகிமைப்பதிகளுடன்
ஆவல்மிகுமயோத்தி யரிச்சந்திரமகாராசன்
அழகுஞ்சத்தியதர்ம மதிபராக்கிரம
மேவுமவனைக்கண்டோம் விளங்குமகளுக்கென்று
விரியுந்தட வரையுஞ்சுடு காடுங்கடந் திவண்வந்தனம் (சொல்)



மதிதயாராசன்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி,

இயம்பியவேதநாலுமெண்ணருங்கலைகளாறும்
நயம்பெறவோதிகண்டநற்றவத்தோரேசெயீர்
பயனுறுமென்மகட்குப்பதிகிடைத்திட்டதோவென்று
வடவரையுறைவோர்போந்தவகையெலாந்தெரியச்சொல்வீர்

வசனம்,

கேளுங்கள் சகலசாஸ்திர பண்டிதர்களாகிய ஸ்வாமிகளே என்றருமையாகிய மகள் சந்திரவதிக்குத் தகுமானபுருஷன் கிடைத்தானென்று சொன்னீர்களே அந்தப்புருஷனெங்கே அவனிருக்கிற ஸ்தலமெதுவோ அவர்பெயரென்னமோ அவனென்மகளுக்குப் புருஷனாவானென் றெதெப்படி நிச்சயித்தீர்களோ அந்தவயணமெல்லாஞ்சொல்ல வேண்டும் ஸ்வாமிகளே

பிராமணன்-விருத்தம்-இ-ம் சுருட்டி,

தாவியவுலகையாளுந்தகைமதிதயமன்னகேள்
தேவர்கள்மகிழுங்கீர்த்தித்திகழ்மகத்துவங்கள்வாய்ந்தே
மேவியபுகழயோத்திவிரதிரிசங்குமைந்தன்
பூவைசந்திரவதிக்கேபொருந்தியகணவனாவான்

வசனம்

கேளும்மகாராசனே அயோத்தியாபுரியரசாட்சிசெய்யாநின்ற சூரியவம்சாதிபதியாகிய திரிசங்கு மகாராசாவினுடைய புத்திரனான சத்தியவாசகனாகிய அரிச்சந்திர மகாராசனென்பவர் அழகினுந்தாமத்தினும் பராக்கிரமத்தினும் தெய்வபக்தியினும் அவனுக்கு நிகரில்லாதவன் அப்படிப்பட்ட அரிச்சந்திர மகாராசனே உன்மகள் சந்திரவதிக்குப்புருஷனாகவேண்டும் அதற்கு சந்தேகமில்லை மதிதயமகாராசனே

மதிதயன்-விருத்தம்-இ-ம்-பியாகடை

சூரியகுலத்தானென்னுந்திறல்பெறுபராக்கிரமத்தின்
மாரனிகருவனென்றும்வளர்ச்சந்திரவதிக்கே
தாரணிவிவாகஞ்செய்யத்தக்குமென்றேயுரைக்கவந்தீர்
பாரிவயதாகச்சொன்னபடியுறவாக்கிடவல்லதே

வசனம்.

கேளுங்கள் சுவாமிகளே அந்த அரிச்சந்திர மகாராசன் சூரியவம்சத்தானென்றும் அதிகபுஜபலபராக்கிரமுள்ளகீர்த்திசாலியென்றும் அவனென்மகளுக்குமாலையிட்டுவிவாகஞ்செய்யத்தக்கபுருஷனென்றுஞ் சொல்லவந்தீர்கள்மெய்யே அதுயில்லையாமவனுடைய சொல்லப்பட்டிருக்கிற ஒருதேவதாசியபுறம்பிஅதுதெரிந்துசொ

க்லவல்லவரு சொன்னலல்லவோ என்மகளுக்குப்புருஷனுவான்சுவாமிகளே,

பிராமணன்-விருத்தம்-இ-ம்-மோகனம்

சகம்புகழ்மதிதயேந்திராதற்பரசிவனுர்சொன்ன
மகிமையுமுலாக்கவல்லோன்மகிழ்சந்திரவதியாமுந்தன்
மகளையும்விவாகஞ்செய்யடணவாளனவனையாவான்
அகமகிழ்சுயமரஞ்செய்தாசரைவரச்செய்வாயே

வசனம்.

கேளுமதிதய மகாராசனே அந்த அரிச்சந்திர மகாராசனே உன்மகள் சந்திரவதிக்குப் புருஷனுகிறதற்குச்சந்தேகமில்லை பரிமசிவனுலே சொல்லி யிருக்கப்பட்ட தேவரகசியத்தையுஞ் சொல்லுவான் உன்மகள் சந்திரவதியவளுக்கே பாரியாளாவாள் நீ கையால் சுயமரஞ் சாட்டிவைத்தைம்பத்தாறுதேசத்திராசாக்களையும் வரவழைத்தால் அதிலே அரிச்சந்திரமகாராசாவும்வருவார் அதற்குச் சந்தேகமில்லை மகாராசனே

மதிதயராசன்-விருத்தம்-இ-ம்-தோடி

உத்தமமறையோரே நீருரைத்தசொற்படியேசெய்வேன்
மெய்த்தவப்புத்திரியானமெல்லிசந்திரவதிக்கு
சத்தியவரிச்சந்தேந்த்ரசக்ரோசன்புருஷனுக
எத்தனஞ்செய்தேயெந்தனெண்ணமீடேறச்செய்வீர்

வசனம்

கேளுங்கள் சுவாமிகளே என்னருமைமகளாகிய சந்திரவதிக்குச் சக்ரேஸ்வரனை அரிச்சந்திர மகாராசன்புருஷனுகத்தக்கதாகப்பிரயத்தினஞ்செய் வீர்களானல் அதைமுழுதும்நிறை வேறும்படியாய நுக்கிரகஞ் செய்யவேணும் சுவாமிகளே

பிராமணன்-விருத்தம்-இ-ம்-சுருட்டி,

பூதலம்புரக்கவந்தபுண்ணியமதிதயேந்திரா
நீதனருளினுஅன்சித்தத்தின்படியேயாகும்
ஓதரிச்சந்த்ரன்சிந்தையுருகமால்லூப்பிவைப்போம்
நீதனாதேநாங்கள்நிலைக்குப்போய்வருகுவோமே

வசனம்,

கேளும்மகாராசனே ஸ்ரீமந்நாராயணருடைய அனுக்ரகத்தினலேநீர் நினைத்தபடியே கைகூடிவரும் நீர்வியசனப்படவேண்டியதில்லை அந்த அரிச்சந்திர மகாராசாவுக்கு உன்மகளாகிய சந்திரவதியின்பேரில் அதிமோகாந்தகாரம் விளையத்தக்கதாக வேண்டிய பக்குவங்களைச்செய்து உம்மிடத்திற்கே அனுப்பிவிடுகிறோம் அ



தற்குமுல்லையே,வருகிறோம்வேண்டியசாக்கிரதை செய்துக்கொள்ளுமதிதயமகாராஜனே நாங்கள்போய்வருகிறோம்.

இராஜன்வசனம்

அப்படியே போய்வாருங்கள்சுவாமிகளே,

பிராமணன் - தரு-இ-ம்-சங்கராபரணம்அடதாளம்

பல்லவி

பூப்ரதட்சணயாத்திரைசெய்யப்போவோம்வாருங்கள்

அனுபல்லவி

மாப்பிளையையங்காரேநல்லவரதவேங்கடசால்திரிகளே (பூப்)

சரணங்கள்

பேய்ப்பிள்ளாய்சுப்பாசாஸ்த்ரியேநீபேசாமல்வாடா
ஆப்பிட்டதைச்சுருட்டிக்கொண்டாய்நீயதிற்பாதிதாடா (பூப்)

சண்டிப்பயலேசேஷா சாஸ்த்ரிசத்தியவாரேடா
மண்டலீகனரிச்சந்த்ரன்தந்தவஸ்திரத்திற்பாதிதாடா (பூப்)

ஒற்றைக்கண்ணுளகுப்பாசாஸ்த்ரியோடிநீர்வாரும்
உப்பட்டுசோமாசிபட்டரேநீருமோடியேவாரும் (பூப்ரதட்சண)

பொது-விருத்தம்-இ-ம்-தோடி

மதிதயனிடத்திவ்வந்தமறையவர்போனபின்பு
அதிபெருமவர்சபைக்குட்சுட்சியாய்க்கேட்டிருந்த
மதுரவாய்த்தோழியோடிமங்கைசந்திரவதிக்கு
விதம்பெலாஞ்சொல்வேனென்றுமிகமகிழுட்ன்வந்தாளே.

வசனம்

அகோதெப்படியென்றால்மதிதயராசனிடத்திற்குவந்திருந்தயாத்திரைப்பிராமணன்போனபின்பஅந்தச்சபையிலேநடந்தவிருத்தாந்தங்களெல்லா மறைவாகக்கேட்டுக்கொண்டிருந்த சந்திரவதியினுடையதோழியானவளதை யெல்லாஞ்சந்திரவதிக்குத் தெரியப்படுத்தவேணுமென்று சவுந்தரவதிவருகிறவிதங்காண்க

தோழி-சவுந்தரவதி-தரு-இ-ம்-புந்நாகவராளி-தாளம்ஆதி,

பல்லவி

சரசவுசிதசுபநயமிலகியகுணசவுந்தரவதிவந்தாள்

அநுபல்லவி.

பரிமளமிகுநறைவிரிமுகமலர்நிறை
யைத்தொடிசந்திரவதியாங்கியெனவிளங்கும் (சரச)

சரணம்

சேலைமுந்தானியி லிட்டச்சரிகை வர்ணச்சிங்காரமது நன்ன
மாலைக்குழலிலங்கமெஞ்சுளமுகத்தில் மன்ன வினோதங்கலகலென்ன
ஆலித்தெழுந்துநல்ல அதிசயமது சொல்ல
வாலைப்பருவம்நல்ல மங்கைக்குவந்ததுமெல்ல
மகியதிசைதனில்மறையவர் சொல்லிக்கொண்ட
வகைதனிலெட்டு வசந்தமதை வாவென்றுகண்ட (சரச)

தோழிவிருத்தம்-இ-ம் ஆனந்தபைரவி,

மெல்லியார்க்கரசியாகவிளங்குமயிலேபோற்றி
வல்லதோர்மதிதேவேந்திரன் மகளெனவுதித்தாய்போற்றி
சொல்லிராம்தவமுனிவர் துதித்திடமருவாயிந்த
மல்லிகைப்பூங்குழலாய்சந்திரவதியெனுந்தாயேபோற்றி

சந்திரவதிவிருத்தம்-இ-ம்-சாவேரி

இனக்குமென்மனதிலேதோ இதுவரைதெரிந்துணர்க்கவல்ல
தனத்திற்குடையநல்லசவுந்தரவதிதோழி
எனைத்தனியாகவிட்டேயெங்குபோய்வந்தாயுந்தன்
மனக்குறைபேதோசொல்வாய்மற்றொன்றுமப்பயப்படாதே

வசனம்

வாழியாழிசவுந்தரவதியே இதுவுண்டாகிய தோழிமார்களிலே யென்மனதிற்குகந்த தோழியெனதுயிர் உன்னை நான் நினைந்திருக்கத் தன்னைத்தனியேவிட்டு எங்கேபோனாய் உன்மனக்குறையேதோ தெரியச்சொல்லடி சவுந்தரவதி

தோழி-விருத்தம்-இ-ம் தோடி.

அன்னமே கேளாயுந்தனமுகுதற்குணத்திற்கேற்ற
மன்னவர்மன்னவந்துமணமாலைசூட்டுங்காலம்
தன்னிச்சையாகவந்ததனக்குத்தானேலபித்த
நன்மையதிதேசொல்லநானிங்கேயோடிவந்தேன்

வசனம்

கேளுமம்மா சந்திரவதித்தாயே உன்ருபலாவண்ணியசவுந்தர்ய சந்திரகுணமுனக்குடைய சத்தியத்திற்குத் தகுமான புருஷருடைய இராசாதிராசன் வந்து மணமாலைசூட்டுங்காலம் வந்து லபித்ததெல்லாம் சந்தோஷத்தை என்னென்னவென்று அடங்காதபடிக்குச்சொல்லவுனக்குத் தெரியப்படுத்தவேண்டுமென்று ஓடிவந்தேனடியம்மா



சந்திரவதி-விருத்தம்-இ-ம்-மோகனம்.

என்னடியம்மாதோழியெனக்கொருநல்லகாலந்
தன்னிலேவருமோதெய்வந்தனக்குமேதயையுண்டாச்சோ
பொன்னவர்மேனியாயெண்பொங்கியபருவமெல்லாம்
இன்னிலமாதர்போலுமென்னைநான்பலன்கண்டேனே

வசனம்

ஆஹா, ஆஹா, கேளாயென்பிராணபதமான சகியேயெனக்கு மொரு நல்லகாலமும்வருமா அந்தப்படியிருந்தால் தெய்வத்திற்குமென் மேலிலே தயவுமுண்டாகுமா இவ்வுலகிலுண்டாகிய ஸ்திரீசாதிகளை ப்போலே சௌந்தர்யமிருந்துண்டாகிய சுகங்களையநுபவிப்பேனு என்னுடைய வயசெல்லாம் வீணில் கழிக்கும்படியாகிய என்மனதிற்கு நம்பிக்கையான சேதிகளைதாகிலுமுண்டானால் தெரியச் சொல்லடி சகியே

தோழிசவுந்தரவதி-அகவல்-இ-ம்-எதுகுலகாம்போதி.

சொல்லுவேன்கேளாய் தோகையந்தனசே
வல்லவுன்பிதாவும் வளமிகுகொலுவில்
மந்திரியார்கள் மருங்கினிலிருந்தே
தந்திரமுறைக்குத் தகுங்கொலுவிருந்தார்
அந்தவேளையிலே யாத்திரைபோன
மந்திரவேதியர்கள் வந்தாங்கண்டார்கள்
கண்டவர்தம்மைக் கழிவேயடைந்தே
அண்டர்கள் மகிழ்கும் மகியவேதியரே
எங்கிருந்திங்கே வந்ததீரென்றார்
கங்கைதொட்டுலகில் கதநதியாடி
உலகினிலுள்ள வும்பர்கள்பரவுந்
தலமெலாங்கண்டோஞ் சதிருடனென்றார்
கண்டனமென்றீர் கதித்ததற்றலங்கள்
கண்டதிலதிசயங் கழறுவீரென்றார்
அம்மொழிகேட்ட அருமறையோருஞ்
செம்மைசேரயோத்தித் திரிசங்குமைந்தன்
தலமிகுராச ராசமன்னிய
விலகியகீர்த்தி யேழுலகெங்கும்
நிறைதருபுசபல நிபுணகெம்பீரன்
அறைதருகதிர்குலத் தரிச்சந்திரன்
வழுவழகதனைக் கண்டமகிழ்ந்துவந்தோம்

படியிசையுன்மகள் பருவத்தில்யிருந்த
சரசவுல்லாசச் சந்த்ரமதிதன்
சாதசல்லாப சுந்தரமிருந்த
பொற்கொடிதனக்கவன் புருஷனேயாவான்
மைப்பொருபுயத்தின் மகிபதியென்றார்
அவ்வுரைகேட்ட அரசனுமகிழ்ந்தே
யெவ்வகையென்மகட் கிசைந்ததோர்கணவன்
அவனெனவுரைத்திரரன்றந்தவரத்தின்
கவலைதீர்ப்பானே கருத்தறிவானே
எப்படிமுடியு மென்றுரைத்திடவே
தப்பிதம்வரா தசட்டமாய்முடியும்
சுயமரஞ்செய்யெனுங் கொள்கையுமறையோர்
நயமிகுமயோத்தி நாடியேயந்த
அரிச்சந்திரற்குன்மக வடிவெலாமுரைத்தே
வரச்செய்வோமென் றுமகிழ்வுடன்போனார்

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-தோடி

கருணைதற்பாங்கியே நீ சொன்னதோர்மன்னர்மன்னன்
மகிழ்குணவானென்றோதி மறையவர்போனதென்றாய்த்
தகைபெறும்வீரந்தீதி சவுந்தர்யபராக்ரமங்கள்
மகிமையெவ்வாறுள்ளனோ மனக்குறைதீரச்சொல்வாய்

வசனம்

கேளடியெனதன்புக்கிசைந்தசகியே அந்தமகாராசன் எனக்
குப்புருஷனுவானென்று யாத்திரைபோன பிராமணன் சொல்லிப்
போனார்களென்றுசொல்லவந்தாய் அந்தமகாராசனழகெப்படிப்ப
ட்டதோ அவர்பராக்கிரமமெப்படிப்பட்டதோ அவர்மகிமையெப்
படிப்பட்டதோ என்மனக்குறைதீரத் தக்கதாகத்தெரியச்சொல்ல
டிசகியே

தோழி சவுந்தரவதி-தரு-இ-ம்-தோடி-தாளம்-ஆதி

பல்லவி

அந்தமகாராசன்வடிவழகைச்சொல்ல ஆராலுமுடியுமம்மா
அதிற்றமிசொல்ல ஆராலுமுடியுமம்மா

அநுபல்லவி

சுந்தரக்கதிர்குல தோன்றலயோத்திவளர்
சுகநிதிஅரிச்சந்த்ரமகிபதியாகிய (அந்த)



சரணங்கள்

சதகோடிசந்த்ரபிம்ப மென்றுஞ்மலர்முகத் கூடுமோ-நாளுந்
தருக்குக்கிணைசொல்லத்
தரைநகருக்கருணாசர விழிக்குச்செந்தாமரை நாடுமோ
தன்னிலேயொப்பிடவெண்ணை
மதுரசனைக்கனி வாயிற்புன்சிரிப்பதற் வாடுமோ சொல்லு
வர்ணயிவ்வளவிக்கண்டு
மலையெனத்திரண்டுயர் புயவழகைக்கண்டோர்க்கு தேடுமோ
மத்றோரியங்கவனாதி இரதி
புகழ்மணிவைத்திழைத்த கிரீடப்புக ரதி
பூட்டிக்குண்டலங்களாக் கண்டிராதும் சமான
கதியென்றுயிர்தவனாக் காக்குமொரு ரன (அந்த)
கனகசாத்திரிகழ் கற்பகவிலாச
பாருக்கிணையெனல மார்பின்விசாலமதில் தின்று
பதித்தகவசாரன ஆரமும்
பளபளென்னவொளி மின்னுமகலங்கித காரமும் - நல்ல
பருவமணிமுத்தவிசித்
அடா நேக்கு கண்கெண்ணுந்தெரியாது நோக்குக்கண் குருடெனாடாவென்னப்படி சொல்லுகிறீர்களோ அப்படியே நாமுதான் நேக்கே கிடைக்கவேணும்

நந்தி வாசையங்கார்-வசனம்

நேக்கில்லாசுதந்திரம் நோக்கெல்லாமெப்படியுண்டாச்சுது

வசிஷ்டர்-வசனம்

ஓ பிராமணுளே மகாராஜன் வுங்களுக்கெல்லாங்குறைவில்லா மல் நடப்பிப்பார் சண்டைபோடாமலிருங்கள் சுவாமிகளே

பிராமணுள்-வசனம்,

அப்படியே யிருக்கக்கடவோம் சுவாமிவசிஷ்டமகாரிஷியே,

வசிஷ்டர்-வசனம்.

சகல மேளவாத்திய முழங்கச்செய்யு மந்திரியமகாராசனே

மந்திரியன்-வசனம்

அப்படியேசகலவாத்தியங்களுமுழங்கச்செய்விக்கிறேஞ்சுவாமி.

வசிஷ்டர் ஆசிர்விருத்தம்-இ-ம்-தோடி,

அருந்ததிக்கவமிராவில் வருஞ்சந்திரவதியைக்கூடிப்
பெருந்தகைடரிச்சந்தேந்ரா பிரியமாய்வாழிவாழி
திருந்தியவுலகந்தன்னில் திகழுமெய்வசனங்கொண்டே
பொருந்தியபுத்ரரோடுப்புகழெலாம்பெற்றுவாழி

பிராமணுள்-வசனம்,

சுதாஸ்து சகலபாக்கியமுஞ்சித்திரஸ்து தீர்க்காயசுஞ்சகல சிநேகாகவஸ்துவாகண வெகுபுத்ரலாபஞ் சித்திரஸ்து சுபமஸ்து

மந்திரியராஜன்-கட்டியனுக்குச்சொல்-விருத்தம்

இ-ம் நாட்டை

புவிதநற்சபையிற்காக்கும் புகழ்பெறுகட்டியக்காரா
வலிதையாமெயனதுபுத்ரி மணக்கோலமிட்டுக்கொண்டே
முனிவர்கள்முதலாய்மற்ற முழுமன்றவேதியர்க்கும்
சுதகதம்மாரிபெய்துக்களிப்புறச்செய்குவாயே

வசனம்

கேளடா ஆசாரவாசற்கட்டியக்காராநான் செய்தபூர்வபுண்ணி யத்தினுல் எனதுதவபுத்ரியாகியசந்திரவதியம்மனுக்குத்திருக்கலி யாணஞ் சம்பூர்ணமாகவேநிறைவேறியாச்சுதேதுனிருவறையென்ன யிருக்குது யிங்கேயிதோவந்திருக்கிறமகாரிஷிகள் பிராமணுள்பெ ரியோர்கள்சர்வத்திராளுக்கும் அவாவாளுடைய அபேட்சைநி றைவேறத்தக்கதாகசொர்ணவருஷமாசைருஷித்துவேண்டியதெல் லாம் வதேஷ்டமாகக்கொடுத்தனுப்பிவையும்பிள்ளாய்

கட்டியக்காரன்-வசனம்

அப்படியேசெய்கிறேன் சுவாமி



பொது-கொச்சகம்-இ-ம்-புன்னுகவராளி

சந்திரவதிதன்னையரிச் சந்திரமன்னன்மணஞ்செய்து
சிந்தைமகிழ்வானபின்பு திருந்தமிர்தபோசனங்கள்
விந்தையுடனுண்டிருக்க விறல்மறையோர்போனபின்பு
அந்தவசிஷ்டமுனி யகமகிழ்ந்தேயுரைப்பார்

வசிஷ்டர்-மந்திரியனுக்குச்சொல்விருத்தம் இ-ம்-மோகனம்

மலையெனத்திரண்டதோளாய் மந்திரியமன்னுனோய்
நிலையெறுமுமதெண்ணந்தான் நிறைவேறிடவிட்சிகண்டாய்
தலமிகுமரிச்சந்தேந்த்ர நாதனுன்புத்ரியோடுங்
கலைநிறைவயோத்திக்கேக களிவுடனனுப்புவாயே

(வ-ம்) கேளுமந்திரியமகாராஜனே வுமுடைய யெண்ணத்தின்படி யேயுமதுதவப்புத்திரியாகிய இந்தசந்திரவதியம்மனுக்குத்திருக்க லியாணம்நிறைவேறிமுடிந்ததே இனியுமக்குமருமகனுகவந்தஇந் தஅரிச்சந்திரமகாராஜனையும் உம்முடையகுமாரத்தியையுமந்நமு ள்ளாராசவரிக்கங்களையும் பிரயாணசந்நாகம்பண்ணி அயோத்திக்கு வெகுநா ட்போய்ச்சேர வுத்தரவுகொடுமந்திரியமகாராசனேவந்து [ளாச்சதே

மந்திரியராசன்-வசனம்

அப்படியேபோய்வரலாஞ் சம்பூர்ணமாகக்கிருபையிருக்க ட்டும் ஸ்வாமி வசிஷ்டமகாமுனியே

சந்திரவதி-மந்திரியனுக்குச்சொல்-கொச்சகம்-இ-ம்-புந்நாகவராளி,

எந்தையேயெனையளித்த யினியதவத்தால்மிகுந்த
மந்திரஞ்சேரம்புயமே வளர்மணிநின்றுன்போற்றி
இந்தவயதளவுமெனை வளர்த்தேயிவர்க்கீந்தீர்
சொந்தமனைக்கெய்திட நான்தொழுதேன்விடைதாவே

(வ-ம்) கேளும் எனதருமையாகியபிதாவே சுவ்வாராநுக்கிரகத்தினு லே என்னைப்பெற்று இதுவரைக்கும்வளர்த்து இந்தமகாராசனுக் கு என்னைவிவாகஞ்செய்துகொடுத்தீர் நான் எத்தனைகாலமிங்கேயி ருந்தாலும் புருஷன்வீடுசொந்தமேயல்லது வேறில்லையாகையால் உத்திரவுகொடும் போய்வருகிறேன் எனதுபிதாவே

மந்திரியராசன்-வசனம்.

நல்லது அப்படியே போய்வரலாமம்மா எனதுதவப்புத்திரி யாகிய சந்திரவதித்தாயே

அரிச்சந்திரன் வசனம்

நானும்போய்வருகிறேன்செலவுகொடும் மந்திரியமகாராசனே

(வசனம்) அப்படியேபோய்வரலாம் அரிச்சந்திரமகாராசனே

அரிச்சந்திரன்-தரு-இ-ட-பத்ராகவராளி-ஆதிதாளம்

தருக்குன்றைப்புவிபுகழரிச்சந்திரமகாராசன்-தனை நிருதகர்க்குவந்தக
செருக்குன்றைமந்திரியாருஞ்சேனைத்திரளோரும் [சேனை
சேதுபடத்துயருந் தேவிசந்திரமதியும் (தருக்குன்)
மதியராசனைப்போய் வாழ்த்தியிடைவெளிக்க
மங்கையானாரைத்திரானவிக்கத்ராலெரிக்கத்
பொங்கிபெருவிமச்சரிக்கைச் சொல்மயிலைசெதாக்கத்
எழுந்துயிவெயர்துயிலி செரலிசனெக்குறைக்க
கயமறையோர்களுந் தவிழுவிட்டருந்
சருதப்பார்த்தநல்லசமயமிதென்றுசொல்ல (தருக்கு)

பொது-விருத்தம்-இ-ம் தோடி

நிகருங்கவிசேனைகொட்டைத் திரளுடவரசசெய்யு
மகிழ்நதுபமதியக்ஷமண் மகனைத்தனமன்னுஞ்செய்கசதப்
புகழ்பெறுதகனைந்தில் பதிதநல்லயாத்திறாடித்
தகைபெறவரிலுஞ்சேர்ந்து சதிருடனவாழ்ந்திட்டாரே

(வ-ம்) இந்தப்பிரகாரமகாவிருபராசன் ராமசாந்தியாமியசந்திரமதி
யம்மையோடு அயோத்தியாபுரியில் பத்தாறு தேசத்திராசாக்களு மதிய
ந்தகதாகமணமாலை சூட்டிவிவாகஞ்செய்துக்கொண்டு அரிச்சந்தி
ரமகாராசனவனைப்போத்தியாபுரிக்கு வந்துசேர்ந்தாரென்றதிக,

பொது-கொச்சகம்-இ-ம் பத்ராகவராளி

அங்கதிருநதிய கருணையரிச்சந்திரனைச்
சங்கையின்திப்பஞ்சனேமேற் றழுவிமிகவாழ்நாளில்
இங்கிதமாஞ்சந்திரமதிக் கிலைசந்தசெந்பந்தரித்தவள்
திங்களொருபத்துஞ் செழிக்கநிறைந்ததுவே

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-பியாகடை

அன்பினியுயர்ந்தமெய்ந்த வழருள்ளசகியேளாய்
இன்பமெல்லாந்தகெர்ப்ப மெனக்கதநிலைந்ததாலே
வம்பதிக்குளாப்பார்வைகதேர்ந் திமருத்துவச்சியையும்
பின்பொருவலிகண்டாலதான் பேதைநீயென்செய்வேனே

(வ-ம்) கேளாயேனது பிராணபதமானசகியேனைக்காருப்போது
காலநிறைந்துவருகுது கெற்பவேதனையுமதிக்கு முன்னமே எனது பி
ராணபதமான அரிச்சந்திரமகாராசாவுக்குச்சொல்லிஒருமருத்து
வச்சிமுவியைஅதிசீக்கிரத்தில் அழைத்துவாடிசகியே

தோடி-விருத்தம்-இ-ம்-காம்போதி

வாரணிதனத்தாய்சந்திர வதியெனுத்தாயேகேளாய்
பாரினைப்பெண்பெண்மக்கள் படைத்துவிதவர்கட்கெல்லாஞ்
சீர்பெறுகளைவதோடே சேதமுஞ்செர்ப்பமாய்
ஏர்பெறுவழிந்தர்த்தமைமை யின்றிடவகடமைதானே



(வ-ம்) கேளுமம்மாசந்திரமதித்தாயே பூமியிலேயெவ்வளவு நல்லோர
ப்பிறந்தோர்களெல்லாம் புருஷனைக்கூடி இன்பசவுக்கியங்களை
யடைகிறதும் அதினாலேபின்னைகளைப்பெறுகிறதும் சவுக்கியமாயி
ருக்கிறதுதானே அதற்குரித்து விபசனைப்படவேண்டியதில்லை நீ
ரப்போய் நம்முடைய இராசாவுக்குச் சொல்லி மருத்துவச்சிமுவி
யை அழைத்துக்கொண்டுவருகிறேனம்மா

சகி-இராஜாவுக்குச்சொல் - விருத்தம்-இ-ம் மோகனம்.

தேடி - இராஜாவுக்குச்சொல் யரிச்சந்திரமன்னே
உலகெல்லாமதிக்குங்கீர்த்தி புயாரிச்சந்திரமன்ன
மலர்நிறைமாலைதாங்கச் சந்திர மதியென்னுந்தேவி
நலனுடையகெர்ப்பமாகி நாளுநாந்திரக்கமுற்றான்
வலனுடையமருத்துவச்சி வரச்சொல்லவேணுமையா

(வ-ம்) கேளும் மகாராசசக்கிரவர்த்தியுடைய பிராணபதமானசந்திரமதி
யம்மையாருக்கு பூரணமாகிய கெர்ப்பவேதனை காணுகிறதினாலே இப்பொழுதே
மருத்துவச்சிமுவியை வரவழைத்தனுப்பவேணுமென
என்மேல ஒருமருத்துவச்சிமுவியை [வரடி

இராசன்-வசனம்

மகாசந்தோஷம் மகாசந்தோஷம் இதோ அழைப்பிக்கிறேன்

இராசன்-விருத்தம்-இ-ம்-குடும்பகாம்போதி

ஆசாரவாசல்காக்கு மரியகட்டியக்காரனே
தேசாருமென்னுடைய தேவிகெர்ப்பவேதனையானாள்
கூசாமல்மருத்துவச்சி குதிசெரியுமிவதனை,
நீசொப்பனமாக்கெடு தியைத்திருக்கழைத்துவாடா

(வ-ம்) ஆமடா ஆசாரவாசற் கட்டியக்காரா எனது பிராணபதமான
சந்திரமதிதேவி கெர்ப்பவேதனை படுகிறாளாம் அதிசீக்கிரத்திலே
போயொரு மருத்துவச்சிமுவியை அழைத்துவாடா

(கட்டியகா-வ-ம்) அப்படியேபோயழைத்துவருகிறேனையா

பொது-விருத்தம்-இ-ம் பந்துவராளி

மாதருமனைவியாஞ்சந்திர வதிகெர்ப்பவேதனைதீர்க்க
கோசலமக்கரசந்திர குதிரேறியானைக்குந்தர்ந்த
சாதகமிருந்துவித்தை தன்னில்வல்லிவாக்கியமான
மூதுயர்மருத்துவச்சி முறையைக்கொண்டுதோத்தானே

(வ-ம்) ஆகோதெப்படியெல்லாமருத்துவச்சிமுவிவருகிறவிதங்கா

மருத்துவச்சிவருகிற தரு இ-ம்-பந்துவராளி ஆதிதாளம் [ண்க
வந்தனமாகவேதன்னாடிதனொடு மருத்துவச்சிமுவிவந்தாள்
கூவிநிமிர்ந்து-மருத்துவச்சிமுவிவந்தாள்
சங்கையில்லாமலோராய் கைதொட்டவிடமெல்லாந்
தழைத்துப்பின்னைபெற்றுப் பிழைத்துநன்றாய்நிலைத்து
சதிருடன்வாழ்வதொன்று சார்பார்த்துப்பேசுகன்று (வந்தன)

எடுத்தடிவைக்குமுன்னே யிறைத்திறைத்தேறடுங்கி
யெத்தனை தூரமொன்றே யெண்ணிக்கொண்டேயொடுங்கிக்
கடுத்தமாகவேபேசி கோலையுமூன்றிக்கொண்டு
கண்ணைமூழித்துப்பார்த்து-அவிழும்பீத்தக்
கலையையிடையிற்சேர்த்து-குடுக்கைபோல்வயிற்பொங்கி
கோடுவாய்வழித்தொழுக்க் கொறட்டையிழுக்கநிலை
அரித்திப்போல்மூலைநழுக்குத்தியிருந்து-யெழுந்திருந்துக்
குணகிகுணகிமன்ள முணமுணவென்றுகன்னக்
கொழுத்தசிறிக்கிளைன்னைப் பிழைக்கவொட்டார்களென்ன (வ)

(வ-ம்) என்டிசக்களத்திமகளே என்னையேன்டி அலட்டுகிறாய் என
க்கென்னகண்ணுதெரியுதா மண்ணுதெரியுதா நடக்கக்கூடுதா அடிசு
ம்மாயிருந்தாலுமிருக்கவொட்டவில்லையே நீயேநல்ல ஆண்பிள்ளை
யைப்பெறுவாய் பயப்படாதே பயப்படாதேயம்மா,

சந்திரவதி விருத்தம்-இ-ம்-கண்டா,

மந்த்ரதந்திரத்தின்மிக்க மருத்துவமாதேகேளாய்
இந்தவேதனையின்கோர மென்மனஞ்சோக்வேனம்மா
மைந்தனைப்பெறுதல்வேண்டி மாதவஞ்செய்குவார்கள்
சிந்தைதான்கலங்குதென்ன செய்குவேனிட்டவாடி

(வ-ம்) கேளாயம்மா மருத்துவச்சி புத்திரவாஞ்சையினாலே தபசு
பண்ணிப் பிள்ளைகளைப்பெறநினைப்பார்கள் அதைநினைக்கும்போ
தென்மனது கலங்குதே என்னசெய்வேனென்னசெய்வேன் இப்
படி சற்றே என்கிட்டவாடியம்மா

மருத்துவச்சி-வசனம்

பயப்படாதேபயப்படாதேநான்கிட்டவேயிருக்கிறேனடியம்மா

சந்திரவதி-விருத்தம்-இ-ம்-கண்டா

நாணமேவிடுதேசொல்ல நானென்னசொல்வேனம்மா
சாணல்லோவயிறென்பார்கள் சதுர்முகன்விதித்தவாறே
காணுமிப்பிண்டம்நின்று கலங்குதேயடிவயிற்றை
வீணல்லோபெண்ணென்மைந்தா மேதினிக்கடுத்திடாதே

வசனம்

ஐயையோ பிர்ம்மதேவர் கட்டளைப்படியே எண்சாணுடம்
புள்ளமனிதருக்கு ஒருசாண்வயிறென்றுசொல்லுவார்கள் அதிலே
நான் படுகிறகோரத்தை யென்னென்றுசொல்லுவேன் ஆ அதோ
அடிவயிற்றிலேநின்று அத்தப்பிண்டங்கலங்குதே அதிலுள்ளவரு
த்தத்தை யெல்லாஞ் சொல்லவென்றாலும் வெட்கமாயிருக்குதே
பூமியிலே பெண்சென்மம் எடுக்கிறது விருதாவேயல்லவா இதுக்கு
க்குமா என்ன செய்வேனடி மருத்துவச்சி,



மருத்துவச்சி-வசனம்

அம்மா வுன்னைப்பார்த்தால் மகாசவுந்தரவதியாயிருக்கிறாயே
உனக்கு யிந்த யிள்ளமையில்தானே புத்திரபாக்கியங் கிடைத்ததே
மகாசந்தோஷம் மகாசந்தோஷம்உன்னைப்பெற்ற தாய்தந்தையா
ர் இவருக்கு நீ எப்படிபாரியாளாகினாய் இந்தப்பின்னை யெப்படி
வந்தது இந்தவரலாறெல்லாம் எனக்குத்தெரியச்சொல்லடியம்மா

சந்திரவதி-விருத்தம்-இ-ம்-முகாரி

மன்னுமென்னுயிர்போல்வந்த மருத்துவமாதேகேளாய்
கன்னமாபுரியையாள்வோன் காதல்சேரொண்ணுதந்தை
அன்னிலையகலைவாச ரருட்படியமாத்தில்
நன்னெறிமெய்மையோனை நான்மணமாலையிட்டேன்

(வ-ம்) கேளாயம்மாமருத்துவமாதேகன்னமாபுரியையாளுமதிசய
மகாராஜன்என்னைப்பெற்ற தகப்பனார் அவருக்கு அதியிலேயிலா
சவாசர்கொடுத்தவரத்தின்படியேஎன்கழுத்தி லிருக்கின்ற ஸ்வயஜி
ருமங்கிலி யத்தைத்தக்கண்டவரே எனக்குப்புருஷனாவாரென் றருளியா
தால் என்தகப்பனார் உன்பெண்ணின் சுயமரச்சாலையிலே நானே
இந்த அரிச்சந்திரமகாராஜன்கழுத்தில் மாலையிட்டுபாரியாளானே
ன் இதுதான் என்னிடவரலாறம்மா

மருத்துவச்சி வசனம்

அப்படியா அப்படியாமகாபாக்யம் ஆனால்பயப்படாமலிருந்தா [லே

சந்திரவதி-விருத்தம்-இ-ம்-கண்டா

எப்படிபயப்படாமலிருப்பதென்செய்வேனம்மா
குப்புறக்கவிழொண்ணாது குனிந்துமேநிமிரொண்ணாது
தப்பிலாக்கைகால்சோர்ந்து நாவுமேதானுலர்ந்து
செப்பமாய்நிற்கொண்ணா திரண்டுதோளுருதேயம்மா

(வ-ம்) ஆ-ஆ கேளடியம்மாமருத்துவமாதே எப்படிதான்பொறு
த்திருப்பேன் கைகால்சோருது நாவுலர்ந்துபோகுதுகுனியவுங்கூ
டாது நிமிரவுங்கூடாது நிற்கவுங்கூடாது அதோதிரண்டுதோ
ருவிதமாய்வருகுதே எப்படி செய்வேன் என்னசெய்வேனடியம்மா

சந்திரவதி-தரு-இ-ம்-கண்டா-ஆதிதாளம்

ஈதென்னவேதனை - அம்மா-அம்மா-அம்மா
சோதிக்குதேதெய்வம்பொறுக்கவொண்ணாதம்மா
தோகையேயெனக்கொரு தேறுதல்சொல்லடி
அம்மாயிதுக்குள்புத்திர-சேயபத்திலுமிதுதாபதமாகுதே
ஆபத்தென்றாலும் அவனவர்க்குமேபோதும்
ஜென்மங்கள்பலகோடி பெண்ஜென்மமுமதைநாடியே
முன்சென்மத்தனில்செய்த பூசாபலமுடையமோ

இவரியென்றுஞ்சக்கமொழுயைபோமேயாகமே-அறவெருகாபமே
இந்தமுனிர்த்தவலிபெரிக்கயிந்த்தென்னுவைந்தபிக்க
னைத்தியுயிர்கபிக்க-நிரோகத்தனேயொபிக்கச்-செய்யுமோபங்கம்
திலேகுலேத்துறையுதென்னகம்-போடும்-போடும்-கம்தனே

பொருள்-சொச்சகம் இ-ம் புன்னாகவராளி

மன்னரிச்சந்திரன்றன்மனைவிசந்திரவதிநானோரு
தன்வயற்றுஞ்சேர்மலர்க்கொடிபோல் கயத்தகோப் புத்திரன்றிக்கப்
போனுலகோர்மகிழ்வாகப் புவனியுள்ளோர்கதைந்தங்க
அன்னிலைபான்புதல்வனைப்பெறவைப்பாய்ப்பயிர்ந்தனோ

(வ-ம்) அம்மாவெப்படியொத்துஞ்சொம்யாதுயிராப்புரியையரசாளும் அரிச்சந்திரமகாராசாவின் பத்தினியாமெசந்திரவதியாமென் மெய்ய வேதனையை நீங்கி ஒருபிள்ளைப்பயிற்றுக்கொண்டிருக்க

தோழி-விருத்தம்-இ-ம்-சங்கராபரணம்

மன்னர்கள்மகிழ்பொற்றிமன்னவியாயுவக்குவாய்த்த
மன்னுடேதமொழியாளே சந்திரவதிகேட்பத்துயரந்தீர்ப்
போனுலகாருமித்தன் புகழ்த்திப்பேபுத்திரன்றன்னை
இன்னிலம்புகழப்பெற்று வியைப்போற்றிபோற்றி

(வ-ம்) கேளும் இராசதிக்கோல்லவா உமது பத்தினியாமேசந்திரா திருமகள் கெற்பவேதனைநீங்கி இப்பூலோகமெல்லாம் ஒருகுடையின்கீழாளத்தக்கதாக ஒருபிள்ளையைப்பெற்றாள் சுவாமி

இராசன்-வசனம்

அப்படியாமகாசந்தோஷம் மகாசந்திரனைப்போலுண்டிருக்கத்தைப் போல் நமக்கொருபிள்ளையுப்பிறந்ததுமகாபாக்கியம் பாக்கியம்.

இராசன்-விருத்தம்-இ-ம்-கும்பகாம்போதி

வீரர்கள்புகழுமெய்மை மிகுசத்தியகீர்த்திமந்திரி
தாரணிபெருமையைக்கப்புத்திரசந்தானமுண்டாச்செய்து
சீருடன்சென்றுநீர்த்தசேயிருக்கும்கைகாரத்த
ஆரமும்பணிகள்சேர்த மடையுடன்தரச்செய்வாயே

(வ-ம்) கேளுஞ்சத்தியகீர்த்தியாகியமந்திரி பகலக்கட்டக்குயிருமெ சாதம் புத்திரோச்சவமுண்டாகிறபடியால் சொல்லுகிறேன் நீர் போய் இவருக்கு அவ்வேகாத்தரமாயிருகள் பட்டுப்பட்டாவைகள் முதலாகியதுகளும் கொடுக்கச்சொல்லுகிறேம [ம்புமி

சத்தியகீர்த்தி-வசனம்

மகாபாக்கியம் அப்படியேகொடுக்கும்படிசொல்லுகிறேன் சுவா

மந்திரி-விருத்தம் இ-ம்-தோடி [மி

திக்கெலாம்புகழுங்கீர்த்தி திராணிச்சந்திரமகோனே
மூக்கமாம்வாசற்காக்கு முன்னே பெருங்கட்டியக்காரா



தக்கணம்மேமாசனுக்கே தனேயன்வந்துதித்ததாலே
மிக்கமாமணியாடைப்போன் மெருமதியிட்டிவாயே

(வ-ம்) கேளுமயின்னாய் ஆசாரவாசற்காக்கும் கட்டியக்காரா நம்முடைய அன்மையாகிய இராஜசக்ரேவர்வாளுக்குப்புத்ரோச்சவமுண்டானதால் அந்தசெய்திசொல்லவந்தஇந்தத்தோழிப்பெண்ணுக்குநூதாபரணங்கள் சொர்ணங்கள்பட்டுப்பட்டாவைகள்முதலாகியதுகளை மதிகொடுத்தனுப்புமயின்னாய் கட்டியக்காரா

கட்டியன்-வசனம்

அப்படியேகொடுத்தனுப்புகிறேன் சுவாமி

இராசன்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

சேனையுபர்த்தசத்ய கீர்த்தியாமெயநேமந்திரி
அறுமெய்யரசாங்கம் ஆய்பின்னோமிறந்ததாலே
தீன்புவிமறையோர்க்கும் பிறையுதலப்பாசகர்க்கும்
தானிட்டுமணக்கும்பின்வர்நதப்பமுமைபொழிவிப்பாயே

(வ-ம்) கேளுஞ்சத்தியகீர்த்தியமந்திரியேப்புத்ரோச்சவமானசந்தோஷத்திற்காக இந்தப்பூமியிலேயுள்ள வேதப்பிராமணாள் யாசகாள்சந்யந்திராருக்கும் சுட்டிதான்வைக்கும் வந்தவர்களுக்கெல்லாம் அவேண்டியவர்தவரைக் கொடுக்கச்செய்யுமந்திரி

மந்திரி-வசனம்

அப்படியே கொடுக்கச்செய்கிறேன் சுவாமி

இராசன்-விருத்தம்-இ-ம்-காம்போதி

நானிலம்புகழ்ந்துசொல்லும் நலமிகுசத்தியகீர்த்தி
ஆன்றோர்மறையோருக்குமரியமாமுனிவோருக்கும்
தானதிதுயர்த்திப்பூ தானங்கோதானமெல்லாம்
யானைபொற்குதிரைமெத்தியஎலாங்கொடுப்பாயே

(வ-ம்) கேளுஞ்சத்தியகீர்த்தியாகியமந்திரி யாசகர்களுக்குஞ்செய்யும் பழையாவியரிஷிகள்முதலாகியபிராமணர்பெரியோர்களெல்லோருக்கும்பூதானங்கோதானம்அன்னதானம்வஸ்திரதானமுதலாகியதுகளும்யானையின்மேல்முத்திரைவித்து அவாளவாளுக்கு வேண்டியபடியேசந்தோஷமாகக்கொடுக்கும்படிசொல்லுமந்திரி

மந்திரி-வசனம்

அப்படியேசெய்கிறேன் மகாராசனே

சத்தியகீர்த்தி-விருத்தம்-இ-ம்-நாட்டை

புவிதனிலதிபன்மக்கப் புளகிக்கட்டியக்காரா
கவமிகும்மறையோர்யாசகர்முதலோருக்கும்
மணமிகுபூதானங்கள் மற்றுங்கோதானமெல்லாந்
தனியான்மாளிகைசாற்றித் தக்கபெறத்தருவாயே-

(வசனம்) கேளுமப்பிள்ளாய் கட்டியக்காரா நம்முடைய அண்ணையானது நாளைப்படியே யானையின்மேரில் முரசறைவித்து பிராமணர் முதலாயோர் காரிய இருதுகள் செய்யத்தக்கவர்களாகிய ரிஷிகளுக்கும் மற்றுமுள்ள பெரியோர்களுக்கும் வேண்டியபடியே கோதானம் பூதானம் வஸ்திரதானம் முதலானதும் கொடுத்தனுப்பும் பிள்ளாய்

கட்டியன் வசனம்

அப்படியே செய்கிறேன் சுவாமி

பொது - விருத்தம் - இ - ம் - சாவேரி

பொன்மணி வஸ்திரமற்றும் பூதானங் கோதானங்கள்
நன்மையமுடனே ஈந்து நாளுமரிச்சந்திரோத்தியன்
றன்னிலே மகிழ்ச்சியாகுள் தையலார் தம்மிராட்டிப்
பொன்மணித் தொட்டில் மேல் திப்புதல்வனைக் கொண்டுவந்தாரே

(வசனம்) இந்தப்பிரகாரமாக அரிச்சந்திரமஹாராசா புத்திரன் பிறந்த சந்தோஷத்தினால் சகலதானங்களும் வழங்கிமட்சியடைந்திருக்க அப்பால் அந்தப்புரத்து ஸ்திரீப்பெண்கள் அந்தப்பிள்ளைக்கு சகலருஞ்சமயமாட்டி சர்வாலங்காரத்துடனே நவரத்தின சித்திரமான தொட்டில் மேல் தாலாட்டுகிற விதங்காண்க

தாலாட்டு-தரு-இ-ம் நீலாம்புரி-ஆதிதாளம்

ஆராரோ ஆராரோ ஆராரோ ஆராரோ
தாரார் கதிர்குலத்தோன் தவமே நயமுமே (ஆராரோ)
தேனுறல்பாயுஞ் செழுமாங்கனியமுதே
வான் கூர்புகழ் உயர்ந்த வன்மை மேல் கண்வளரீர் (ஆராரோ)
செங்கரும்பின் பாகுஞ் செழுமாமலர்த்தேனும்
பொங்குபசும் பாலின் ஊம்புத்த முதே கண்வளரீர் (ஆராரோ)
பத்தரை மாற்றுள்ள தங்கப் பதுமை மிக நிறைத்த
சித்திரப் பொற்றொட்டிலிலே சிங்கக் கண்வளரீர் (ஆராரோ)
திங்களணிஞ்சர் திருவடியைத் தான்தொழுதே
கங்கை குணர்ந்தோங்கு குலத்தின் கண்மணியே (ஆராரோ)
இகத்திற்சுகம் வாய்ந்தே இவ்வுலகோர் கொண்டாட
மிகுத்த பாக்கியமும் வேல் மன்னர் பேரேறே (ஆராரோ)
அங்கதிரிச்சந்திரமன்னன் சுதனாக விளங்க வந்த
எங்களரிச்சந்திரற்கே இசையுந்தலைப் பாலனே (ஆராரோ)

அரிச்சந்திரமஹாராஜன்
கலியாணம் முற்றிற்று.



கடவுள் துணை.

# தேவேந்திரன் சபை.

தேவேந்திரன் சபைக்கு கட்டியக்காரன் வருகிற,

விருத்தம், இ-ம்-சங்கராபரணம்,

நெட்டிய திருக்கொன்று நேரலர் குலத்தை நன்றாய்க்
கொட்டிய பஞ்சாக்செய்து குலகிரிச் சிறகையெல்லாம்
வெட்டிய வச்சிரபாணி விளங்கிய கொலுவின் வாசல்
கட்டியக்காரன் வந்து களரியில் தோன்றினானே

தரு இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்,

தச்செனுதந்திரி நாதரி நில்லானு செம்சரிதச்செனுதகசெனு
தத்திமிக்கிட்டதகதீங்கு தகதிருகதீங்கணத்தோம்

பல்லவி

எச்சரிக்குங்கட்டியக்காரன் இதோவந்தானே
எச்சரிக்குங்கட்டியக்காரனிதோவந்தானே

அநுபல்லவி

வச்சிரமாகிய பொன்
வச்சிரபாணிகொலு
இலகெங்குமார்ப்பரிக்க
வாசலலங்கரிக்க (எச்சரிக்கும்)

சரணம்,

பொற்சரிகைப்பாகையலங்க வாகுவலயம்
புசக்கிரீடமு மிலங்க
கெற்சிக்குமேகங்கள் விலங்க திருக்கொல்லாம்
கேசரியென்றகங் கலங்க
உலகதிர
நன்றாய்
மேதிருவோலாயதட்டி
மெச்சிக்கதேவரை நெட்டி
கட்டிகன்களையுருட்டி,
லச்சையையிறக்கித்தட்டி
கடித்துமீசை முறுக்கி
கனியிசைமதுக்கியும்
முடித்துவேசையறுக்கி
தொனியெழும்படிதுடி
விடவுளவறிமறி
கடவுளர்களையன
வடல்தன்படிதுதி (எச்சரிக்)
திடவுள முனைவன

கட்டியங்கூறல் ஆசிரியவிருத்தம்,

தேவருமவுணருஞ்சித்தர்வித்யாதரருந்
இநகரருஞ்சந்திரருடன்

செவ்வாய்புதன்வியாழம்வெள்ளிசனிராகுவுந்
தீமைசெய்யுங்கேது
மாவருமீசான்யனக்கினியெமனிருதி
வருணன்வாயுவருகுபேரன்
மகரவிருகஸ்பதியகத்தியன்புலத்தியன்
வசிட்டன்விசுவாமித்திரன்
மேவருபராசன்தூர்வாசன்பாரத்வாசன்
வேதவியாசனாரதன்
மிக்கஜமதக்கினிதனிசனற்குமாரன்முதல்
மேலோர்களாகிகூற
பூவருங்கற்பகபொலஞ்சுருகலிபுவிற்
புலோமசைமெனங்கொண்டும்
புரந்தரன்கொலுவிற்குவருகிறானவனோரும்
போற்றிசெய்தெச்சரிக்கை

வசனம்

அஃதெப்படியென்றால் முப்பத்துமுக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் அஷ்டதிக்குப்பாலகரும் நவக்கிரகங்களும் நக்ஷத்திரக்கூட்டங்களும் புடைசூழ இந்திராணி சமேதராகிய தேவேந்திரமகாராஜன் கொலுவிற்கு வருகிற விதங்காண்க

தேவேந்திரன்-வருகிற-தரு இ-ம்-பைரவி-ஆதிதாளம்

தந்தரிதாதிரிதில்லானாசெய்தரிதந்தத்தரி தாதிரி
தந்தரிதாதிரிதில்லானாததிரிதகுத்தரி
குகுந்தரிசெகுந்தரிசெய்தரிததில்லானா
தில்லானாசெம்தரிதளங்குதகதிகுதகதிங்கணத்தோம்

பல்லவி

இந்திரமகாராசன்-கொலுவிலிலவந்-திருந்தானெங்கும்ப்ரகாசம்,

அநுபல்லவி

ஐந்தருநீழலி லரம்பையூர்வசியாட
சுந்தருவரியந்தி சலத்தவில்லிசைபாட (இந்திர)

சரணங்கள்

சிந்தாமணிகாம தேனுசிதியுலாவ
மந்தாரமருமலர் மாரியதும்போல்தூவ(இந்திர)
மேனகைமுதல்பெண்கள் வெண்கவரிகள்வீச
தானைபுரிந்துதன் சபையிற்சிலசொற்பேச(இந்திர)
தவிகளனைத்தம்பேர் தலித்தனியாசிகூற
கவுசிகன்வசிஷ்டனும் [illegible] (இந்திர)



தேவேந்திரன்கடவுளைப்போற்றுதல்
விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

சீர்கொண்டசெழுங்கமலத்திலாசமுகனுநெடுமாலுஞ்
சிவனுமெனப்
பேர்கொண்டமூவுருவுமிருருவுமோருருவாய்ப்
பிறக்குந்தொலைவில
நீர்கொண்டவண்டமீதுதந்தாவரத்திருச்சங்கமத்து
நிறைந்துநிற்குஞ்
சூர்கொண்டதொல்வினைகடைமுடிகொண்டவன்மிறைஞ்சி
தலைமேற்கொள்வாம்

முதல்மந்திரிதேவேந்திரனைப்போற்றுதல்
விருத்தம் இ-ம்-ஆனந்தபைரவி

வெள்ளையானையின்மேற்கொண்டே விண்ணுலகாளவந்த
கிள்ளைமென்மொழியிந்திராணிகேள்வனேபோற்றிபோற்றி
எள்ளரும்புகழ்கொண்டேயெங்களையாளவந்த
வள்ளலேமகிழ்தேவேந்திர மகிபனேபோற்றிபோற்றி

இரண்டாவது-மந்திரி போற்றுதல்
விருத்தம் இ-ம் கலியாணம்

ஐந்தருநிழற்கீழ்நின்றே யமரர்தாமாளவந்த
சுந்தரகிரீடதாரா சுபகரா போற்றிபோற்றி
சுந்தரமரகதர்தம்மை சமரில்வென்றிட்டவீரா
எந்தைதேவேந்திரமன்னா விணையடிபோற்றிபோற்றி

கட்டியக்காரன் தேவேந்திரனைப் போற்றுதல்
விருத்தம்

ஐராவதங்காமதேனுசிந்தாமணியு
மழமணைமந்தருவுந்திதியும்
அயிராணியிம்பமெழில்மேனகைதிலோத்தமை
யரம்பையூர்வசியோடும்
அயிராசோக்கியமுமகிமையைஸ்வரியமும்
மாயிரமுமதிசௌரியமும்
வயிராயுதங்கொண்டுவளர்கின்ற [illegible]
மகாராஜவெகுபராக்கு

பொது-விருத்தம் இ-ம்-சாவேரி

இந்திரன்கொலுவிற்கூடி யிருக்குமாதவத்தோரெல்லாம்,
வந்தங்கேதிரம்பிவேத வாய்மைகள்புகன்றதத்தம்
சிந்தையில்மகிட்சியாகிச் செழிப்புடனிருக்கஆங்கே
மந்திரமூர்த்தியான வசிஷ்டர்தாம்வருகின்றார்.

வசனம்

இந்தப்பிரகாரமாக தேவேந்திரமகாராசனுடைய சபையில் ரிஷிகளுந் தேவர்களுங்கூடி கொலுவாயிருக்க அந்தச்சபையில் வசிஷ்டமகாமுனி வருகிறவிதங்காண்க

வசிஷ்டர்-வருகிற-தரு-இ-ம்-புந்நாகவராளி ஆதிதாளம்

பல்லவி

வசிஷ்டமுனிவர்வந்தார்-மகாதவ-வசிஷ்டமுனிவர்வந்தார்

அநுபல்லவி.

கசட்டுகுணமொழித்துக் கன்மத்தினைப்பழித்துக்
கருதியபிரம்மநிஷ்டைக் கைவல்யமாம்பிரதிஷ்டை
கனாகன்றுமேவ நெறிதனில் மனமுறு
கதிகொண்டுயர்பரமிதுவென நிலைபெறு (வசிஷ்ட)

சரணம்

பசும்பொற்குண்டலந்துலங்க
பளபளென்னவொளி திகழவலங்கிர்த
வளமிகுந்தநவமணியிழைத்தவுசித (பசும்)
பதுமமலரினிரு புயமிருகதிமென
பருவமதியினிரு புயமிருகட்டமென
பகருமருமறை நூல்புகருஞ்சவிகளின்
மகிழுமொருபரமிருவடியேவலவனர் (பசும்)
பவளக்கொடியைச்சொலுமந்த புகழுடை
திவளச்செழுந்தகனியெய்ப் பொருள்நடை
பகர்த்தினைரியமுறம்மகிழ் பெற
மிகுபொற்பிலகிய மங்கைப் புகழுற (பசும்)
பிரணவாகார பரத்துவமாயினிலங்க
விகம்பித்தபுடைபசவும் விண்ணவரும் பரவும்
மெய்த்தவத்தோர்களெல்லாம் விரும்பும் அருள் திறம்பும் (வசிஷ்)

போற்றி - விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

விசிட்டதல்லதிவின்மிக்க மெய்ப்பொருளதீத்துகாமக்
கசட்டினையறுத்தோர்வாழ்த்துங் கருணையங்கடலோருஞ்
அசட்டினைத்தவறுமென்னை யாதரித்திடும்பொருட்டும்
வசிஷ்டமாமுனியேயுன்றன் மருமலர்ப்பதங்கள்போற்றி

வாழ்த்து-விருத்தம்-இ-ம்-மோகனம்

சங்கநிதிபதுமநிதி தம்மைக்குஞ்சிந்தாமணியுடனே
தங்குபுகழ்சேர்கற்பகமும் தருவுந்தழைத்தமிகவாழி



எங்கள்மனமுக்கிடர்வராநிருங்கவனாந்தமையெல்லாமே
ங்கருப்பன்வாழ்தேவேந்திரசகுணரானுமிகவாழி

வசிஷ்டர்கடவுளைப்போற்றுதல்

விருத்தம் - இ-ம் - ஆனந்தபைரவி

புகலரியசதுமறையாய் மறைப்பொருளாயுபநிடத்தாய்
பூதமைந்தாய்
அகிலமுமாய் மன்னுயிராயனுவினுவாயவற்றி
னகமாய்மேலாய்
பகலிரவென்றறியாத பராபரமாயதுசலையைப்
பகுதியாகி
சகலமுமாய் நிஷ்களமாய் நின்றோன்றன்செழுங்கமலச்
சரண்புக்கேமால்

பொது-விருத்தம்-இ-ம்-தோடி

இத்தனைமுனிவசொல்லாமிசையெறவசிஷ்டரோடும்
உத்தமவித்திரல்வாழுமுயர்ந்தநற்சபையிற்கூடி
சித்தநற்பிருக்கவாங்கே திரிச்சங்குவர்க்குஞ்செய்த
வித்தகவிஸ்வாமித்திரன் விரைவுடன்வருகின்றான்

வசனம்,

இந்தப்பிரகாரமாகசகலரிஷிகளுந் தேவர்களுங்கூடியிருக்கிறதேவேந்திரன்சபையிலே விஸ்வாமித்திரரிஷிவருகிறவிதங்காண்க

விஸ்வாமித்திரர்வருகிற-தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்

பல்லவி

மகாதவங்கள்திறை கொருகுவனுமாரும்விஸ்வாமித்திரருமே
சோதியமயமாய்-வளரும்விஸ்வாமித்திரருமே

சரணங்கள்

1 தகாவழிசென்றுழுஞ் சாதிக்கவே த்தேன்
தற்பரமானதொரு சித்தப்பிரம்மதபபலித்தேன்
விகாதமெனக்கெதிர் செய்வாருண்டோ மெச்சாள்
மேவுமெனதுசாபம் லோகமனைத்துவும் வெல்லும்
விரிகடல்புடைபரவியபல குலகிலும்
விறல்மிகுகார்முனி வசருவையுமிலு
மிகுதவநெறிமுறை மெனையலதெவருள்ர்
வினையுதல்லதிசய வினையானுமடைபெற
விரதத்தையமெழுதலாய்தரு திரநிதியமாகிரம்மாய்வரு (மகா)

அஷ்டதிசையுமந்தவண்டபகிரமண்டமு
மனைத்துமப்பொடியாகச் சாடுவேன் - மேலும்
அரியயன்சிவனென்று சொல்லுமூவர்களையு
மசையாமலேநிறுத்திப் போடுவேன்
நிஷ்டூரக்கோபம்வந்தால் சண்டப்ரசண்டமாக
நிமைக்குள்ளே லோகங்களை மூடுவேன் - எல்லா
நித்தியத்துவர்களோரால் விழித்துச்சாபப்பிரயோகஞ்
நிக்ரகஞ்செய்துவிடப் பாடுவேன்

இஷ்டமொருவர்மேலிங் கைத்தால் வருமோ தீங்கு
எந்நாளுமவர்களைக் காப்பார்முவர்க்க பாங்கு
துஷ்டர்களாலுமே மேன் சிஷ்டர்களாகவந்தால்
கஷ்டங்களையகற்றிக் காட்டுவேன்பெருட்சப்ரசித்தி
கலக்கமுண்டோவஷிஷ்டர்க்கென்போல் துலக்கமுண்டோ
கணமுதலகில புவனஅசாசர [மேதிக்கம்
மகிமைபெலையுமொரு வகையுநிகரில்லன
முனிவிலினிய சிற முறுவலொடிவெறுவ
புகையிறியிருமனல் புகயுமகிமைபுரி
பூதலகபுராரியுமஞ்சுந் திலாதமனோகதியிஞ்சார் ([illegible])

தேவேந்திரன்போற்றிவிருத்தம்-இ-ம்-மத்தியமாவதி

மூவுலகுக்குமிடைநீக்கி முப்பாம்பொருளோதாடி
இம்மையைவெறுத்துமேலா மின்பத்தைக்கண்டோய்போற்றிச்
செம்மைசேர்தவங்கள்செய்யுந் திறத்துளோர்புகழ்போற்பொங்கி
விர்முதல்ஸ்ருஷ்டிவிஸ்வா மித்ரமாமுனியேவாராய்

வசனம்

வாரும்வாரும் விஸ்வாமித்திரமாமுனியே யாசனத்திலெழுந்
தருளியிரும்

விஸ்வாமித்திரர்-ஆசிரியவிருத்தம்-இ-ம்-நாட்டை

அயிராவதத்தின்மிசையிருந்தே அமராபுரியையரசாளும்
மயில்போற்சாயலிந்திராணி மகிழுந்தாளுமிகவாழி
செயிர்சேராத்தமைவைன்றேமிருந்திலயிருந்தோர் முநிவர்புகழும்
பயிர்போலோங்குமகிமைதியே பரிவாயமைந்தேதமும்வாழி



விஸ்வாமித்திர்-கடவுளைப்போற்றுதல்

விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

ஆதிராயண்டபகிரண்டத்தாயப்புறத்துமடங்காதற
நீதியாய்மணியொளியும் பாற்சுவையுமனவனைத்து நிறைந்தநின்
பாதியாயொன்றுமுருவாகியுருவாகிப்பரத்துமேல்குஞ் [மாயோ
சோதியான்முடிசூட்டத்தனது திருவடிசூட்டத்துணிந்தமாயோன்
பொருவிருத்தம்

ஆசையாய்க்கொலுவில்வாழ்ந்த அழகுள்ளதேவரேகேள்
ஈசனைத்தியானஞ்செய்யும் இருடிமாமுனிவரேகேள்
பாசமதாய்ரட்சிக்கும் பரிதிகுலவிந்தவேந்தர
ராசன்றன்கொலுவுக்கிப்போ நாரதமுனிவாராரே

நாரதர் தேவேந்திரன்கொலுவுக்குவருகிற-தரு

இராகம் பரிசு-ஆதிதாளம்

தாதரி தில்தில்லில்லானா-தா-தாதரிதில்லில்லானா
தில் லில்லானா - திரி-தில்லானா-தீத்-தில்லானா - திரி-தில்லானா - தத்
செணு-ததிமி-உதனித்-தஜனி-ததிஞ்ஜ-தத்தெய்ய - தத்தொங்க
தொங்க-தாம்-தாம்-தாம்-தகசெணு - திம் - திம் - திம்-திம்ததிஞ்ஜ
உசனித-தஜனி-தகதிமிதச-செணு-தரிகத்-தக - தகத்-திகு - திகுதக
திகிடதோம்-ததிகிடதோம்

பல்லவி

நாரதர்வந்தாரே - இவர்
நாரதர்வந்தாரே

சரணம்

நாரதர்வந்தனர்-சாரதமானபொன் - வீரதம்பருடன் பூரிதமாகவே
தமினாமான-நடைநடத்திநேரோடமிசடவிலை-பாதச்சுருடனைய
மாணிலத்தோர்-மகிழ்-பெரான-முத்திரை தொடுக்க
நாதகீத-வேத-மோதி-நாதர்ரூபி-செய்கின்ற
வேதமறைதம்பெய்கின்ற-நாதரி-தீத்தில்லில்லானும் (நாரதர்)

நாரதர்விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

வெருவிரோதங்களாக விண்ணவர்மார்போயும்
சுகமதாய்வாழுந்தேவ சமூகமேவாழியென்றும்
பகைபெலாய்வென்றமேவாய் பாவனைத்தியானஞ்செய்து
வலையுடனிகயோக வாழ்வெய்துவாழ்குவாயே

தேவேந்திரன்சொல்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

செம்மையாய்த்தவத்தைச்செய்து திரிகாலந்தன்னைக்கண்டு
தம்மதிபெற்றநல்வசிஷ்டமுனிவரே வாரீர்
எம்மதிக்குரித்தாயேதும் வியப்பிருந்தவகைமேலோ
உம்மைநான்வழுத்தச்சேர்ந்து புகழ்க்கிறேனிருந்திடமோ

நாரதர்கடவுளைப்போற்றுதல்

விருத்தம் இ-ம்-புன்னாகவராளி

உலகியாவையுந் தாமுளவாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலுநீங்கலா
அலகிலாவிளையாட்டுடையாரவர்
தலைவரன்னவர்க்கே சரணங்களே

லோகவிசாரணை-இராஜன்வினா

ஆண்டோருமறைகோதுமண்டபந்தேடி யிங்கேவரும்வந்தார்களா

மந்திரி-விடை

ஆசாரவமரர் முதல்ராஜராஜாதிபர்க ளனைவரும்வந்தார்களையா

இராஜன்வினா,

மண்டலமதெங்கணுங்கொண்டல்மழைபெய்யுதா
மனிதரெல்லாம் க்ஷேமமா

மந்திரி-விடை

காதமும்மாரியும்விளைதமாய்ப்பெய்யுதுமனிதரும்க்ஷேமமையா

இராசன்-வினா,

பண்டுவெச்சாயுதங்கொண்டுசிறகரிந்தபின் பர்வதமெலாம்பறக்குதா

மந்திரி-விடை

பாரதனிலங்கங்கு வேர்விழுந்தாற்போல் படிந்தது கிடக்குதையா

இராசன்-வினா

மூண்டகனைப்போலேமருண்டகணக் கிளைதேடி
முனிவார்கள்வந்தார்களா

மந்திரி-விடை,

மூவர்புகழும்வசிஷ்டருடனேவரும் விஸ்வாமித்திரர்
முதலோரும்வந்தார்களே



இந்திரன்சொல்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

ஐயகர்த்திவ்யஞானஸ்வரூபமாதவரேவாரீர்
ஐயகற்பகநன்னிழ லாசனத்திருங்களிந்த
வையகத்தரசர்தம்மில் வாய்மையுள்ளவரார்நல்ல
மெய்யகத்திருத்துமேன்மை மிக்காருளைசெய்வீரே.

வசனம்

பரிசுத்த கர்த்திவ்ய மெஞ்ஞான பரப்பிரம்மஸ்வரூபமாய் விளங்கும் ரிஷீஸ்வரர்களே சரணம்சரணம் வாருங்கள் நீங்களனைவரும் இந்த அலங்கார வாசனத்தி லெழுந்தருளுங்கள் பூலோகத்திலேசற்குணசம்பன்னமும் தர்மசிந்தையும் பொய்சொல்லாமையும் பொறுமையும்பெற்று மனுநெறிதவறாமல் அரசாளப்பட்ட இராசாக்கள் யாராகிலுமிருக்கிறார்களா இருந்தால் இன்னாரென்றறிருவாய்மலர்ந்தருளிச்செய்யவேணும்தபோதனர்களே

வசிஷ்டர்சொல்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

விரவியதேவர்யார்க்கும் வேந்தனேஅயோத்திநாடன்
திரவியன்பொறையன்தர்ம சிந்தையன்திருச்சங்கென்னும்
இரவியின்குலத்துமன்னன் ஈன்றருள்பாலனன்மை
பரவியசிஷ்யன்சத்ய பாஷிரிச்சந்திரன்றானே.

வசனம்.

சுவர்க்கமத்திய பாதாளமென்னும் திரிபுவனேஸ்பரனும் அகண்ட ஐசுவரியனும் அயிராணிசமேதனுமாய்விளங்கா நின்ற தேவேந்திரமகாராஜனே கேளும் பூலோகத்திலே பொய் சொல்லாமையும் தயைதாக்ஷிண்ணியமும் தருமசிந்தையும் பொறுமையும் பரராசபயங்கரமும் பரதாரசகோதரமும்தேவபிராமணகுருவிசுவாசமும் பெற்றுமனுநெறி வழுவாமல் அரசாட்சி செய்பவன் யாரென்றால் சூரியகுலத்திலே பிறந்த திருச்சங்குமகாராசன் புத்திரனும் எனதுசிஷ்யனுமாகிய சத்தியபாஷி அரிச்சந்திரமகாராசனொருவனேயல்லாமல் மற்றொருவருமில்லைமகாராசனே.

விஸ்வாமித்திரர்சொல்-விருத்தம்-இ-ம்-நாட்டை.

வையமன்னவன்பேர்சொன்ன வசிஷ்டனேயுன்றன்சிஷ்யன்
வெய்யவன்பாதாரத்தைவிரும்பும்புல்லனிவனென

பொய்யன்றன்பொறையில்லானைப்பொலக்குருநீழல்வைகும்
ஐயன்முன்மெய்யனென்றதபத்தம் நீரப்புறம்போம்.

வசனம்

ஆர்காணும் ஓய் வசிஷ்டா என்னகாலும் இந்த தெய்வசபை
யிலே தத்தப்பித்தென்று வாயில்வந்தபடி யிதற்றுகிறாய் பூலோ
கத்திலே பொய்சொல்லாதவனுமிருக்கிறானா மேலும் உன்சிஷ்
யனான அரிச்சந்திரன் பேசுவதெல்லாம் பொய் செய்வதெல்லா
ந்திமைசற்றும்பொறுமையில்லாதவன் மெத்தவும் வறுமையுள்ளவ
ன் பரஸ்திரீகளையிச்சிக்கும் யமகாதகபாமலோபி இவனை சத்யசம்
பன்னனென்று இந்த தேவேந்திரமகாராசன் சமூகத்தில் சுத்த அ
பத்தவார்த்தையைச்சொல்லலாமா அப்புறம்போங்காண்வசிஷ்டா.

வசிஷ்டருக்கும் விஸ்வாமித்திரருக்குந்தர்க்கம்

திரு இராகம்-சங்கராபரணம்- ஆதிதாளம்,

வசிஷ்டர்சொல்லுதல்.

என்னகாண்விஸ்வாமித்திர    வென்றன்சிஷ்யன்பொய்யனென்று
சொன்னவாய்வெந்துபோமுன்னே    சுடுங்காணுந்துஷ்டா

விஸ்வாமித்திரர்சொல்லுதல்.

வெந்துபோவதில்லைகாணும்    வேகமுடனென்னெதிரோ
வந்துட்போகாதேயிங்கேநீ    வாருங்காண்வசிஷ்டா

வசிஷ்டர்சொல்லுதல்.

வாருங்காணென்றுவலிய    வந்தாயுன்கையிலானதைப்
பாருங்காணீசொல்வதுவீண்    பழிவிஸ்வாமித்ரா

விஸ்வாமித்திரர்சொல்லுதல்

பழியென்னபாவங்களென்ன    பார்க்கிறேயென்னவென்னையுன்
விழியென்னசெய்யுங்காண்போபோ    வேசிபார்புத்ரா

வசிஷ்டர்சொல்லுதல்

வேசிவயிற்றில்பிரமன்    வித்துக்குப்பிறந்தேன்காணும்
கௌசிகாவுனதுக்ஷத்ரிய    குலங்குறியபோடா



விஸ்வாமித்திரர்சொல்லுதல்

க்ஷத்ரியனானுமென்றன்    சாபத்தினாலேநீபெற்ற
புத்ரர்கள்வெந்துசாம்பலாய்ப்    போனதறியாயோடா

வசிஷ்டர்சொல்லுதல்

சாம்பலாய்ப்போகச்சபித்து    தப்பித்துக்கொண்டாலிப்போது
வீம்பெல்லாம்பேசிவெல்வாயோ    விண்ணிந்திரனையும்

விஸ்வாமித்திரர்சொல்லுதல்

வெல்லுமுலகெங்கண்டு    விரலுக்குப்போதுமோவது
வல்லாமலறிவேனுனையு    மரிச்சந்திரனையும்

இந்திரன்சொல்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி-

ஏதுகாரணையுந்தேர்ந்த விருடிகளீங்கள்செய்யும்
வாதுகாந்தம்போல்வானும் வையமுநடுங்குகிந்த
பேதுகாரணமீதென்னப் பொறுங்களிக்கோபம்பொய்மெய்
சூதுகாரியமிரண்டுஞ் சோதிப்போமுறைசெய்வீரோ;

வசனம்.

ஏதுகாணும் வசிஷ்டரோ விஸ்வாமித்திரரோ நீங்களிருவரு மொருவ
ருக்கொருவர் இளைத்தவர்களல்லவே உங்களுக்குவந்த கோபாக்கி
னியினாலே அண்டபகிரண்ட பிரமாண்டகடாகங்களுந்திரிலோகங்
களுந்தத்தளிக்குதேயுகாந்தகால உருத்திரருமுங்களுக் கிணையல்ல
வே எல்மனமுந்திடுக் கிட்டுப்போகுது யிருவருஞ்சற்றேபொறு
ங்கள் இந்தக் கோபத்தை எனக்காக மன்னியுங்கள் அந்த அரிச்சந்
திரன் வார்த்தை பொய்மெய்யென்றறிய எதாவது ஒரு ஏர்ப்பாடு
செய்யுங்கள் பின்னாலேசோதித்து தோற்றவர்கள் பிராய்ச்சித்தமு
ம் ஜெயித்தவர்கள் சிலாக்கியமு மடையவேண்டுமே யல்லது இனி
நீங்கள் வீண்சண்டைசெய்யவேண்டாம் பெரியோர்களே.

வசிஷ்டர்சொல்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

வெள்ளைவாரணமேல்விண்ணோர்வேந்தனேதிருச்சங்கின்ற
பிள்ளைவாயினிலோர்பொய்யைப்பேசிமெய்ப்பிசகினால்தான்
கள்ளைவாய்கண்மூக்குள்ள கனதலையோட்டிலேந்தி
சடிலைவார்சடையினமீது சுமந்துதென்றிசைசெல்வேனே,

வசனம்.

அயிராவதமும் அமராபதியும் அஷ்டஐஸ்வரியமும் பெற்ற தேவேந்திர மகாராஜனே கேளும் உம்மைப்பற்றி இந்த விஸ்வாமித்திரன்மேல்வந்த கோபத்தை யாற்றினேன் இனி திரிசங்குமகாராஜனது சிஷ்யனுமாகிய அரிச்சந்திரன் வாயில்லாம்பொய்யைப் பிறப்பிப்பானேயானால் நான் செய்யுந்தவத்தைவிட்டு இழிவானகள்ளோ மனுஷன் தலையோட்டிலேந்திக்கொண்டு தென்றிசைக்குப்போய் விடுகிறேன் இதை நீரறிந்திரும் தேவேந்திரமகாராஜனே.

நாரதர்சொல்-விருத்தம் இ-ம்-ஆனந்தபைரவி,

ஆமுனிவர்களேவிண்ணோர்க் கரசனேயிருவருக்கும்
மாமுனிவாறச்சொன்ன நடுக்கண்டபேச்சிலொன்று
மாமுனிவசிஷ்டன்கூற மவுனம்விட்டெதிர்பேச்சொன்றங்
கோமுனிவிஸ்வாமித்திரன் கூறாமலிருப்பதேனோ.

வசனம்

ஆம் ஆம் ரிஷிபீஸ்வரர்களே தேவேந்திரமகாராஜனே இந்தவசிஷ்டன் விஸ்வாமித்திரன் இருவருக்கும் வந்த கோபமாறும்படியாய் நாம்சொன்ன மத்தியஸ்தவார்த்தைக்குப்பிரமரிஷியாகிய வசிஷ்டனொருசபதம்பண்ணினான் அதைக்கேட்டிருந்த ரோஷத்துவேஷமுள்ள ராஜரிஷியாகிய விஸ்வாமித்திரன் எதிர்சபதம் பண்ணாமல் என்மவுனமாய் வாயைமூடிக்கொண்டிருக்கிறான் நீங்களாவது சொல்லுங்கள் பெரியோர்களே-

விஸ்வாமித்திரன்சொல்-விருத்தம்-இ-ம்-நாட்டை.

ஆதித்தன்குலத்துவேந்த னரிச்சந்திரன்வாயிலுண்மை
சாதித்தனென்னவனைவென்று சபதத்தைமுடித்தானென்று
சோதித்தன்பாகயாருஞ் சொல்வீரேலென்றவத்தில்
பாதித்தன்கையில்தத்தம்பண்ணுவேனறிந்திடீரே

வசனம்.

கேளும் தேவேந்திரமகாராஜனே இந்ததெய்வசபையிலே நிதுப்பித்தென்றுவாயில்வந்ததைப்பிதற்றுகின்றவசிஷ்டனைப்போல் நான் பதட்டமாகப்பிதற்றமாட்டேன் அப்படி இந்த வசிஷ்டன் சொன்ன சபதம் உங்களனைவருக்குஞ் சம்மதியாயிறைவேறினான்



தோற்றுப்போனால் அருமையாயிதுவரைக்குந்நான்செய்ததவத்திற் பாதி அந்த அரிச்சந்திரனுக்கு தத்தம்பண்ணிப்போடுகிறேன் இதையும் நீரறிந்திரும் மகாராஜனே

நாரதர்சொல்-விருத்தம்-இ-ம் ஆனந்தபைரவி.

மதுசிரங்கொளவசிஷ்ட மாமுனிசம்மதித்தான்
அதுதெரிவிஸ்வாமித்திர னருந்தவமளிப்பேனென்றான்
இதுசரிநன்றாய்ச்சொன்னா ரிந்திரனேயவர்க்குந்தெய்வம்
பொதுவரிச்சந்திரன்வார்த்தை பொய்மெய்யென்றறியலாமே

வசனம்,

கேளும் தேவேந்திரமகாராஜனே மதுமாமிசங்களை மனுஷன் தலையோட்டில் சுமந்துக்கொண்டு தென்றிசைக்குப்போய்விடுகிறேனென்று வசிஷ்டமாகமுனி சபதம்பண்ணினான் அதைக்கேட்டிருந்த விஸ்வாமித்திரனும் தானிதுவரைக்குஞ்செய்ததவத்திற் பாதி தத்தம்பண்ணிப்போடுகிறேனென்று எதிர்சபதம்பண்ணினான் இவர்களிருவருக்கும் நடுவுபொதுவாகவும் தெய்வமொன்றிருக்குதல்லவா ஆகையால் அந்த அரிச்சந்திரன்வார்த்தை பொய்மெய்யென்று சில நாளில் தெரியப்போகுது இனியெழுந்திருங்கள் போகலாம் மகாராஜனே மாதவர்களே,

தேவேந்திரன்சொல்-விருத்தம் இ-ம்-ஆனந்தபைரவி

நாரதமுனியேவாரீர் நம்மிடரகசியவார்த்தை
பார்தனிலொருவர்கேட்டாற் பலரறிவார்களல்ல
வார்தருகற்பகப்பூ வனத்தினிலிருந்திரானால்
ஆர்தருசபதமுற்று மறியலாமெழுந்துவாரீர்,

வசனம்

வாரும் நாரதமகாமுனியே இந்த வசிஷ்டர் விஸ்வாமித்திரரிருவரும் நம்மிடத்தில் சபதம்பண்ணிக்கொண்ட ரகசியங்களை மேலோகத்திலுள்ளவர்களிலொருவரறிந்தால் அனேகம்பேரறிவார்கள் ஆகையால் இம்முனிவர்கள்செய்த கொடியசபதம் கெட்டுப்போம் இது பொய்மெய்யாகிறபரியந்தம் நீயெங்கும்போகாமல் நாரதமகாமுனியே. நமதுகற்பகவனத்திலிருக்கவேணும்

நாரதர்சொல்-கவி-இ-ம்-ஆனந்தபைரவி

அப்படியேநான் இந்திரவனத்தில்
இப்படியேயிருக்கிறேன்வாரீர்.

வசனம்

கேளும் தேவேந்திரமகாராஜனே அப்படியே உமதுசொற் பிரகாரம் அரிச்சந்திரன் வார்த்தையை பொய்மெய்யென்றறிகிற வரைக்கும் பூலோகத்துக்குப்போகாமல்இந்திரவனத்தில்வாசஞ்செய்துக்கொண்டிருக்கிறேன் வாரும் மகாராசனே.

அரிச்சந்திரன்வாசற்காக்குங் - கட்டியக்காரன்-வருகிற

பொருசந்த விருத்தம் - இ-ம்-சங்கராபரணம்

எட்டுத்திசைகளுமெய்ச்சிப்புகழ்பெறுமேர்புயவல்லமையா
யெத்தலமெட்புவியெழுகடல்களுங்கடற் திசைபெறுவிஜயகன
ஒட்டலர்தங்களாரத்தையடக்கிய வுக்ரமட்டங்களென
வுத்தமமெய்க்குணசத்யரிச்சந்திர னுத்திரவென்றுமுனை
கட்டளையிட்டபடிக்குநடக்குங் கருத்துளவெட்புலிபோல்
கந்தச்சரிமீசைமுறுக்கியுறுக்கிகண் கனற்பொரிகளுமுதிர
கட்டியசட்டிகளொடுகுலடைகட்டியுங் கச்சுநெருக்கிவிடக்
கைதலமெத்தியகட்டியகட்டியக் காரனும்வந்தானே.

பொதுவசனம்

இந்தப்பிரகாரம் தேவேந்திரன் சபையில் வசிஷ்டரும் விசுவாமித்திரரும்சபதஞ்செய்துக்கொண்டபின் சபைகலைந்துதேவர்களும் முனிவர்களும் அவரவரிருப்பிடம்போய்ச்சேரவிசுவாமித்திரர் அரிச்சந்திரனைப்பொய்யனாக்குவதெப்படியென்றுயோசித்துதேவசபையைவிட்டு அயோத்தியாபுரிக்குவருகிற தருணத்தில் அயோத்திமாநகரையாளும் அரிச்சந்திர மகாராஜன் வாசலைக்காக்கும் கட்டியக்காரன் வருகிறவிதங்காண்க.

கட்டியக்காரன்வருகிற-ஓரடி-தரு-இ-ம்-சங்கராபரணம்

ஆதிதாளம்-

கிறதகதாம் ததிக்குத்தக்கணக-தக்கஜேம்தரிகு-தாம்-தரிஜேம்-தாரிம்ஜம்-தாரித்கணத்தன-ததிங்ணதத்தா-திமிதமி டிடதக - தத்தெய்தெய்ய-தாத்தெய்-தெய்ய-தளாங்கு தெய்தெய்ய-தளாங்குதத்தி ரு



ஜதிஜணுதாஜணுதத்தரி ஜணுதரி ஜணுதரிதித்தில்லாஜணு - தில்லில்லாஜணு-
த்தாஜணுதத்தரி திம்தாரதாஜணுதரிதத்தரி தித்தில்லாஜணு - திரிஜணுதரிஜணுதரி-

பல்லவி,

கட்டியக்காரன் வந்தான் - ராஜராஜனரிச்சந்திரமகாராஜன் வாசல்
கட்டியக்காரன்வந்தான்.

அநுபல்லவி,

அஷ்டதிசைகளெங் | கெங்குமிகுதவ
திஷ்டைபுரியவர் | முதலோர்புகழ்தவ
அரசுக்கிணையெது | திகரொவுமாசெய
அரசாள்சபைகாவ | சமுகத்ததிசைய (கட்டியக்)

சரணம்.

திருவெண்ணீறது | நுதல்மேலணிந்து
சிந்தையிலனுதினம் | அரன்பதம்பணிந்து
ஜரசித்பொன்னுரு | மாலைபுனைந்து
செப்பருமுத்தாரங்களை | வாட்டமறவணிந்து
சரிகைவலக்கையி னிற்றிகழப்பொலிவுற
கரமிலகக்கொளுவிற் புனைதற்கலைபெற
கச்சைமிறுக்கியிடுக்கிநிகர்க்கு
விட்டுவிரட்டியதட்டியுமெதிர்வரு
கண்டவர்க்கு சபைக்குள்சபாசென
கண்டவர் நின்றுபடுங்கி யொதுங்கவே
கலைநிறைந்த சமுகாதிபர்புகழ்ந்திட
வுலகமொழிகுயிலன்போர்சொல்லிமகிழ்ந்திட (கட்டிய)

கட்டியக்காரன்சொல்-சந்த விருத்தம்-இ-ம்-மோகனம்.

கதிர்குலமன்னரி லெதிரிலையெனச்சொலுங் கனதிரிச்சங்குமகன்
அதிர்முரசோமுழுப்பதினெட்டுமைய மயோத்யாபுரிவாசன்
மதியமன்மகன்சதுதிபெருவிபபுயன் மந்திரிமார்களுடன்
சதிர்பெறுகொலுவினி லதிபதியாயரிச் சந்திரன்வந்தானே.

வசனம்

அகோதெப்படியென்றால் ராசாதிராசனுன சத்தியவானாகிய அரிச்சந்திரமகாராசன் இருபுறங்களிலும் மந்திரிபிரதானிமார்கள்புடைசூழ்ந்துவரதனது சிங்காசனத்தில் அமர்ந்திருக்கவருகிறவிதங்காண்க.

அரிச்சந்திரமகாராஜன்வருகிற-ஓரடி-தரு-இ-ம்-மோகனம்

திரிபுடைதாளம்

தத்தின்னுதின்னுகிரிகுடு தில்லானுதானுதந்தரி தாம்தனுத்தத கதீங
தார ததிமிதகிடதக ததத்தகதகதத்தக திகிதத்திகிடிகிதத்திமிதிகி த
கிடதக தரிகிடகிடதக திரிகுடுதகததிங்கணத்தோம்

பல்லவி.

மன்னர்மன்னர்கள்மன்னரிச்சந்திர மகிபன்வந்தானே.

அநுபல்லவி.

பொன்னன்னகொன்னை புகழுமெழில்திகழு மயோத்யா
புரியாள் குடைகவிய விரதகொ
பரியாள்படைபுவி யெங்குநிறைதர (மன்)

சரணம்.

சொரதவாமணிமகுடமொருகோடி தினகரன்போ லுதிக்க - நல்ல
சீர்த்திபெறும்புயகிரீ திவிலையிந்தச் செகமெங்கனுமதிக்க
மகரகுண்டலங்கள்தகதகவென மேருமலையினிலுங் கதிக்க - மலி
மார்பிலணிசந்த்ராஹாரமிலங்கிட மனிதர்களுந்துதிக்க
பகரும்வஸ்திரங்கள் திகதிகென வொளி
பரம்பாரசர்மழை நிரப்பவான வொளி
திகரில்வெண்குடை நிழற்றவுலா தெளி
நீடுமந்திரிக் கோதிவரக் களி
நெஞ்சமுறவிருத்திப்புன் கொலைகள்பொய்
வஞ்சமறவிருத்தி தன் நிலைகொள்மெய்
நித்யமனுநெறிமுறை செல்ல
சத்யமெனுங்குடியுள நல்ல (மன்னர்)

இராசன்போற்றிவிருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி,

சத்யமேதுணையும்மாரி தரணியிற்பெய்யவேணுஞ்
சத்யமேதுணைநற்றுண தருமங்கள்செய்யவேணுஞ்
சத்யமேதுணையென்செங்கோல் தாழ்விலாதிருக்கவேணுஞ்
சத்யமேதுணையெந்நாளுஞ் சங்கராபோற்றிபோற்றி,



மந்திரிபோற்றிவிருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

வரிச்சங்குதவழுஞ்செந்நெல் வயல்கள்சூழயோத்தியாளுந்
திரிச்சங்குமைந்தாபோற்றி திகழுங்கவுசியென்னும்
புரிச்சந்த்ரமயன்றன்பாவை புல்லுந்திண்புயனேபோற்றி
அரிச்சந்த்ரகோவேயுன்ற னடியிணைபோற்றிபோற்றி,

கட்டியக்காரன்- போற்றி சந்த-விருத்தம்.

அத்திபரிபிரதபடை சத்திநிறையயோத்திக்
கரசனேயெச்சரிக்கை
வெற்றிபெறுமன்னவர்க ணித்யந்துதிசெய்கின்ற
வேந்தனேயெச்சரிக்கை
சுத்தியொடுகட்டாரி பற்றியிருக்கின்றமலர்க்
கையனேயெச்சரிக்கை
தத்திவருதண்பர்களை ரக்ஷியரிச்சந்த்ரமக
ராசனேவெகுபராக்கு.

இராஜன்-தேசவிசாரணை

இராசன். மண்டலமதெங்கனுங் கொண்டல்மழைபெய்யுதா
மனிதரெல்லாஞ்க்ஷேமமா,
மந்திரி. மாதமும்மாரியும் பெய்யுதிவ்வுலகில்வாழ்
மனிதருஞ்க்ஷேமமையா.
இராசன். அண்டர்புகழ்தேவா லயங்கள்திருப்பணிபூசை
யன்பாய்நடந்துவருதா.
மந்திரி. ஐந்துபிரம்மோச்சவமு மறுகாலபூசையு
மனுதினமுநடக்குதையா.
இராசன். கண்டவர்கள்கைகூப்பி தெண்டனிடும்பிராமணர்
கருமமிருமூன்றுமுண்டா.
மந்திரி. காலமூன்றுஸ்நானஞ் சிலசெபதபமாறு
கருமமுமுண்டையனே.
இராசன். அண்டபுவியும்பசவு மண்டையினில்நின்றொரு
துறைநீர்குடித்துலவுதா.
மந்திரி. அனாராச அரிச்சந்த்ர மகாராசவிரண்டுமோர்
துறைநீர்குடித்துலவுதே.

இராசன்-விருத்தம்-இ-ம்-கேதாரகௌளம்

ஏவல்கட்டியனேமந்திரி யெனுஞ்சத்தியகீர்த்திகேளீர்
பாவலர்மறையோர்பஞ்சை பாரினிலெவர்களுக்கும்
ஆவல்தீர்சொர்னதான மளிக்கிறோமென்றேயிந்த
மூவுலகறியநன்றாய் முரசறைந்திடச்சொல்வீரே.

வசனம்

வாராய் கட்டியக்காரா நாம் சொர்னதானஞ் செய்யவேணு மாகையால் பூலோகத்திலுள்ள பிராமணாள் வித்துவாமிசாள் ஏழை பஞ்சை பரதேசிகளெவர்களும் அறியும்படியாய் பேரிகை அறையச்சொல்லுங்கள் மந்திரி பிரதானிகளே.

சேர்வைக்காரன் சொல்வசனம்.

அப்படியே செய்கிறேன் மகாராசனே.

சேர்வைக்காரன் யாசகர் வரும்படி முரசறைதல்

விருத்தம்-இ-ம்-தோடி.

அரிகுந்தவயோத்திமா நகரிலோவும்
ஆரியரோயாசகரோ யறையக்கேளீர்
பெருமையுள வரிச்சந்திர மகாராஜேந்திரன்
பிரபலமாய்த்தானதர்மம் பெருகவேதான்
ஒருமையுடனின்றுசெய்ய வுத்தேசித்தே
யுரைத்திட்டாரதனை யிவ்வூரிலுள்ள
வருமையுள்ளோரோடிவந்தே தானதர்மம்
வாங்குவீர்தாரித்திரம் நீங்குவீரே.

சேர்வைக்காரன்சொல் வசனம்

அகோதெப்படி யென்றால் எங்களண்ணலாகிய அரிச்சந்திர மகாராசன் இன்றையத்தினம் பிராமணாள்முதலாகியபஞ்சைபரதேசிகளுக்குத் தானதருமஞ் செய்யும்படியாய் நினைத்திருக்கிறார் ஆகையால் தானதர்மம் வாங்கப்பட்டவர்கள் யாவரோ அவர்கள் சீக்கிரம் புறப்படலாம் (திமிம்- திமிம்-திமிம்-திமிம்.)

பிராமணாள் வருகிற பொழுது விருத்தம்-இ-ம்-தோடி.

திருமணிநுதலிலங்கச்சிறந்தநலயோத்திநாட்டில்
பெருமையாயாசகஞ்செய் பிராமணாளோர்கூடி
அரியதாந்தானதர்மம் அரிச்சந்திரராசனிட்ட
பரிவுடன்வாங்குதற்குப் பக்ஷமாய்வருகின்றாரே.



கட்டியக்காரன் சொல்வசனம்.

அகோதெப்படி யென்றால் அரிச்சந்திர மகாராசனிடத்தில் தானதர்மம் வாங்கும்படியாய் யாசகப்பிராமணாள் வருகிற விதங் காண்க.

யாசகப்பிராமணாள்வருகிற. ஓரடி-தரு-இ-ம்.

சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

மறையவர்வந்தாரே அரிச்சந்திர
மன்னனேபுகழைப்பாடி அன்னுஞ்சபையைநாடி (மறைய)

அநுபல்லவி.

நிறைதானம்வாங்கியெண்ணும்
குறையாமலிருந் தன்னும். (மறைய)

சரணம்.

கந்தைவஸ்திர முடுத்து சிக்குமுக
கானநூலரைத் தொடுத்து
மந்திரஞ்செபத் தொடுத்து மன்னர்கள்
வாசன்முறைதன்னையடுத்து
சுந்தரமாகவேநாவைக் கழித்துமே
சுத்தமானமெய்பதனையொழித்துமே
தொடர்ந்திடுமனைமக்களைப்பலவைகற்றவும்
அடர்ந்திடுந்தாரித்ரமெப்படி பற்றவும்
சொற்பெறு மச்சனைநபதமுற்றுநி
இர்சைகொடுத்திடுலக்ஷணை மொய்த்திட
தூயதானதிவ்யகாயத்திரியைச்செபித்து
நேயபிரணவமந்திரத்தையுச்சரித்து (மறைய)

பிராமணர்சொல் வசனம்.

ஆசீர்வாதம் ஆசீர்வாதம் அரிச்சந்திரமகாராசனே.

கட்டியக்காரன் சொல்வசனம்

வாரும்வாரும் பிராமணர்களே கூச்சற்போடாதிருங்கள்

சந்நியாசி, சங்கமர், யாசகர் முதலானவர்கள் வருகிற
பொதுவிருத்தம்-இ-ம்-வசந்தபைரவி

திக்கெட்டுமொளியற்றும்ஜெயவரிச்சந்திரராஜன்
தக்கவித்துராபணத்தைச்சதிருடன்செவியிற்கேட்ட
மிக்கசங்கமர்சந்நியாசிவிளம்பும்யாசகருமொன்றாய்த்
தக்கவேகூடிராஜன்சபைக்கிதோவருகின்றாரே.

கட்டியக்காரன்-சொல்-வசனம்.

அகோதெப்படியென்றால் - அரிச்சந்திரமகாராஜ விடத்தில தானம்வாங்கும் படியாய் - சங்கமர்-சந்நியாசி- யாசகர் முதலானவர்கள் வருகிறவிதங்காண்க,

யாசகர் - வருகிற - ஓரடிதரு -இ-ம்-
புந்நாகவராளி-அடதாளம்-
பல்லவி.

யாசகர்வந்தார்திரளாக - யாசகர் வந்தார்
அநுபல்லவி.

நேசவரிச்சந்திர-ராஜனைக் கொண்டாடி (யாசகர்)
சரணம்.

சந்நியாசிகள் கூட சிவதேச
சங்கமரும் நாட
அன்னியரும் பாட யாசகவிர்த்தி
யானவர்கொண்டாட
நன்னயவயோத்திமா நகரினைத்தேடியே
நான்மறையானதை நாவினிற்பாடியே
நற்றுதி யிற்கதி யுற்றிடு மற்புத
விற்பனசற்சன நிற்குண பற்பல
நாடுதிதனை யாவரும் வாங்கவே
நீடுந்தாரித்திர-மென்பது நீங்கவே (யாசகர்)

யாசகர் -வசனம்.

சரணஞ் சரணம் அரிச்சந்திரமகாராஜனே
கட்டியக்காரன்சொல்- வசனம்.

கூப்பிடாதிருங்கள் கூப்பிடாதிருங்கள் இதோமகாராஜர் தானங்கொடுக்கிறார் வாங்கிக்கொள்ளுங்கள்,



இராசன்-தானங்கொடுக்கிற
தரு-இ-ம்-புந்நாகவராளி-ஆதிதாளம்,
பல்லவி

தானங்கொடுக்கிறோம் வாரீர் உங்கள்
தாரித்ரந்தீர்த்திடுவோம் வாரீர்
அநுபல்லவி.

வானமாநிலந்தன்னில் வாங்கி புண்யத்திற்கென்ன
யீனமானபிச்சையென் றிரப்பவர்களுக்கன்ன (தான)
சரணங்கள்.

கோதானங்களுங்கூடக் கொடுக்கிறோம் அதைக்
கொடுபோயுங்கள்வீட்டில் விடுக்கிறோம் இன்னம்
பூதானமுதலாகப் புஷ்பஞ்சந்தனஞ்சத்ர
மாதானந்தாம்பூல மஞ்சள்குங்குமம்வஸ்த்ர (தானங்)

மறுமையிலுதவுவோம் நில்லுங்கள் உங்கள்
மனதிலெண்ணிவந்ததைச் சொல்லுங்கள் நல்ல
பொறுமையுத்தமர்முதல் புகலுநாலுவர்க்கென
வறுமைதீரும்படிக்கு வழங்குவதிலுஞ்சொர்ன (தான)

மூடுசு நெடுந்
துகளெங்கனுமெழும்பி கூடுசு யினி
தாரமட்டுங்கும்பு
திகளாமலொருபுறம் நிறுத்திக்கொடுப்போம்கன்யா
திகளானவர்களுக்குந் திருமணஞ்செயக்கன்யா (தா)

பொதுவிருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

சூரியகுலத்தில்வந்த அரையரிச்சந்திரன்பொய்சொல்
காரியமுடிக்கவேண்டிக் கபடங்கள்மனதிலெண்ணி
வாரியம்புவிகலங்க மனிதருநடுக்கங்கொள்ள
வீரியவிஸ்வாமித்ரன் வேகமாய்வருகின்றானே,

வசனம்

இவ்விதமாய் பூலோகத்திலே அரிச்சந்திரமகாராசன் சொர்ணதானம்பண்ணுகின்ற ஜெயப்பிரதாபத்தைத் தேவலோகத்திற்கேட்டு விஸ்வாமித்திரரிஷி வருகிறவிதங்காண்க.

தரு இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்

தக்கதிமி தக்கஜெனு தந்திரிகுகிரி தந்தோந்தோங்கதிமி தாகிரிகிரி தாதரிக்கில்லாகு தகணகஜெம்தரிததியிடத்த தளங்குதகதிமிதக தரிங்கிணதோம்.

பல்லவி.

விண்ணிற்பிரதாப விஸ்வாமித்ரனேதானே

அநுபல்லவி.

மண்ணிற்பிரதாபசுந்த்ர வள்ளலரிச்சந்த்ர
மயிபதியோனே நிஜமேயானே
மதிமேடானே அதிதானே
மாதவமுனிவசிஷ்டனே வாகைதெரிபவனே புகைபுரிபவனே
தாம்தனுத்தங்க திம்ஜெனுத்ககதிமி தகதகபுகதகதிமிகிடகிமிதிமி
தளங்குதகதிமிதக தரிங்கணத்தோம் (விண்ணிற்)

சரணங்கள்.

யொன்றுலகத்திவ்வாறு புகல்சபதந்தப்பாறு
பூபாலனுக்கூதிது பொருந்துப்படிக்கிப்போது
பொய்யறிவிப்பேன் குறிவைப்பேன்
நெறிவிற்பேன் மெய்ப்பிப்பேன்
பேரர்புரிவசிஷ்டனிடபுத்தியைக்கெடுப்பேன்
வெற்றியைத் தொடுப்பேன்
தனுகுதக்ஜெனுதச்செம் தகதிமிதகிடதத் தரிகிட தகதகதரிகிட் டகதளங்குதகதிமிதகதிங்கணதோம் (விண்ணிற்பிர)

இந்திரன்தேவர்முனிவரெவரும் வெருவவேடவே
பேறுலகுமிங்கு டெம்பிகைக்கொண்டாடவே
இராசனைத்தடுப்பேன் மந்தொடுப்பேன்
புகழ்கொடுப்பேன் நிசக்கெடுப்பேன்
வலிதங்கள்வாராமல்லவனைமுடிப்பேன் வல்லமைபடிப்பேன்
தத்திமிதிமிதக்கதனுத்தத்திமிதகிடதகதக்கிடகிடதகதக
தரிகிடதகதளங்குதகதிமிதக தரிங்கணத்தோம் (விண்ணிற்)

பட்சம்வைத்தேனேயாகில் பாரிந்துடனகலிப்பேன்
பாதந்தப்பினாப்போக்குப் பாதியுமளிப்பேன்



பாரினிலுண்டோ போருண்டோ
நேருண்டோ பேரெண்டோ
யாரும்பாரும்பேயா படைத்தவனுமொரு சடைத்தலையன்வரு
தச்செம்செம் தக தக நகசெம் செம் திகிதிகி தச்செம்
தச்செம் நகசெம்குகசெம் தளங்குதகதிமிதகதிங்கணதோம்
விண்ணிற்

விஸ்வாமித்திரர் சிஷ்யர்களுக்குச்சொல்

விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

அகடவிகடங்கள்செய்யு மாச்சரியசிஷ்யாகேளீர்
நகடுபேசாமல்நீங்கள் ரகசியமாய்ப்போயண்ட
புகழுறைவிஸ்வாமித்ர முனிவந்தாரென்றரத்ன
மகுடரிச்சந்த்ரனென்று மன்னனுக்குரைத்துவாரீர்

வசனம்.

ஆடடா அடா அகடவிகட அலங்கிருத ஆச்சரிய சூடாமணி. அடா அதிவிதரகசியசிகாமணி-நீங்களிரண்டுபேரு முன்னே போடி அரிச்சந்திரவிடத்திற்குப்போய் விஸ்வாமித்ரரிஷி வருகிறாரென்று ஒருவார்த்தைச்சொல்லி வாருங்களடா பசகள்.

சிஷ்யர்கள்சொல் வசனம்

அப்படியே அரைநொடியிற்சொல்லிவருகிறோம் சுவாமி

சிஷ்யர்கள்சொல்-கவி.

சத்தியரிச் சந்த்ரமன்னு பத்தியாயுன் றன்பக்கல்
வெற்றியில்மிகுந்தவிஸ்வா மித்ரமாமுனிவாரூரே.

வசனம்

கேளுஞ்சத்தியபாஷ அரிச்சந்திரமகாராசனே உம்மிடத்திற்கு விஸ்வாமித்ரமகாரிஷிவருகிறாரையா.

இராசன்சொல்விருத்தம்-இ-ம்-கேதாரகௌளம்.

மந்திரிசத்தியகீர்த்தி மனமகிழ்ந்திங்குவாராய்
மந்திரவிஸ்வாமித்ரமாமுனிவரைச்சேவிக்க
சந்திரதயன்புயில்ற தனையனென்மனைவியென் றுஞ்
சந்திரவதியைமித்த சுணம்வரச்சொல்லுவீரே

வசனம்

வாராய் மந்திரி சத்தியகீர்த்தி நம்மிடத்திலிருந்த விசுவாமித்திர மகாரிஷி வருகின்றாராம் நாம்போய் அவரைத்தரிசித்து அழைத்துவர வேணும் ஆகையால் சந்திரமதியையுந் தேவதாசனையும் அழைத்துவரச்சொல்லுவாயப்பா சத்தியகீர்த்தி

சத்தியகீர்த்திசொல்-வசனம்

அப்படியே அழைத்துவரச்செய்கிறேன் மகாராசனே

சத்தியகீர்த்திசொல்விருத்தம்-இ-ம்-பைரவி.

வெற்றிசேர்சேர்வைக்கார வியமுற்றநமதிராசன்
நற்றுணைதேவியாரும் நல்லவியகுதனையுந்நீ
பொற்புறுங்கொலுவுக்கிப்போ புகழ்பெறவழைத்துக்கொண்டு
அற்புதமாகவேயா னதிசீக்கிரம்வருகுவாயே

வசனம்.

கேளாய்சேர்வைக்காரா நீ நமதுமகாராசன் அரமனைக்குப்போய் சந்திரவதியம்மனையும் தேவதாசனையும் அழைத்துவருவாய் சேர்வைக்காரா.

வசனம்

அப்படியே அழைத்துவருகிறேனையா

சேர்வைக்காரன்-தாதிக்குச்சொல்-விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

ஆடியமயிலைப்போலு மசையுமன்னத்தைப்போலும்
பாடியகிளியைப்போலும் பகர்ந்திடும்பாங்கிகேளாய்
நீடியகொலுவினுக்கு நிறைசந்திரவதியம்மாளும்
நாடியசுதனையுந்தம் ராசன்முன்வரச்சொல்வாயே

வசனம்.

கேளாய்பாங்கி சந்திரவதியம்மாளையும் தேவதாசனையும் நமது மகாராசன் கொலுவுக்கு அழைத்துவரச்சொன்னாரென்று சொல்லுவாய் பாங்கி.



பாங்கிசொல் வசனம்

அப்படியே நமது அரசிக்குத்தெரிவிக்கிறேனையா

பாங்கிசொல்-விருத்தம்-இ-ம்-கும்பகாம்போதி

சீர்மிகுந்தாயேயுன்றன் றிகழ்மணவாளராஜேசர்
ஏர்மிகுங்கொலுவினுக்கு யிசுடனஞ்சுதனோடுன்னைப்
பார்புகழ்சிவிகையேறிப் பாங்குடன்றுதிசூழ
சார்புறவரவேசொன்னார், சடுதியில்வருகுவாயே.

வசனம்

கேளுந்தாயே உன்னையும் நம்மிடதேவதாசனையும் மகாராசன் கொலுவுக்குவரச்சொன்னாராம் சீக்கிரம்போகலாம்வாருமம்மா

சந்திரவதிசொல் வசனம்

அப்படியேபோய் வருவோம் பாங்கி

பொது-சந்தவிருத்தம்

இ-ம்-கல்யாணி

சந்திரதரனையுமந்திரியையுமனந்தனி லிணைதலங்கள்புரி
சந்திரதயன்மகள் மந்திரகோசிகன்றுளிணைபணியவரிச்
சந்திரனழையெனமந்திரிமொழியதன்றுதியிவ்வுரைதந்தாள்
சந்திரனெனுமுகசந்திரவதிசுகசந்திரவதிவந்தாள்

தரு-இ-ம்-கல்யாணி-ஆதிதாளம்

பல்லவி.

செந்திருவருந்ததி-சுந்திரவிரதிநுதி
சந்திரவதிவந்தாள்.

அனுபல்லவி.

இந்திரப்பதியென்ன விலகுமயோத்தியாபுரி
யினியசெங்கோல்செலுத்திதனியரசாளுமரிச்
சந்திரனழைத்த சொல் தாதிமார்களால்தெரி
சரதசிந்தை மகிழ் தரவெழுந்துமுதற்பதி
விரதமுந்தனமு மிகுந்த வற்புதமதி (செந்திரு)

ச

மஞ்சளகத்தைக்கொண்டு நஞ்சமென்றகல் வீரிய
பஞ்சமெங்கணும்பெய்ய எழில்
மாரன்விற்புருவத்திலேனிறில்லாமலால
வாயிறுமைத்துமைய
மிஞ்சிளர்திங்களுகற் கஞ்சிநிமனங்களுநல்
செஞ்சடையினி துய்ய வுயர்
பெருமதிமுகங்கண்டு கருமதிதொமூந்தொலடு
பிறந்து பிறந்து செய்ய இன்னம்
அஞ்சனக்கண்ணூற்றே கண்டை சஞ்சலத்திற்குளிக்க
அதரசெங்கனிவாயில் மதுரமெசர்ந்துமிக்க
கஞ்சமலரைக்கைக எஞ்சலைய்நயனிக்க
காந்தள்மலருடன்றே மார்தனிருமொவிக்க
கமையணித்தோள்வளை குடையணிகளுமிலை
இமைநடமார்பினில் நுமையிடமிலையென
கனத்துக்குவித்துநங்க கலசங்களேப்பகைக்குந்
தனத்துக்குவமைசொல்ல தாமரைமுகையொக்கும்
கமுகிளங்கமுத்துக்குத் தோற்கும் பொற்
குமிழியனக்கடிந்தமென் மூக்கும் இரு
கன்னத்தைக்கண்ணடிவந்து பார்க்கும் நடைக்
கன்னத்தையுன்னூட்டிடலது வேர்க்குந் திவ்ய
கலைடணியிடையுன் மடிலையெனலாமே
கலையணிதுடையினங் கதலித்தண்டெனக்கனுக்
கால்களின்குமின வரால்களைச்செய்யு நங்கம்
ஆலினத்தளிரினைப்போலொளிர்வயி ரங்கம்.
கதிரவனுதையமுமெதிரிலையெனச்சொல்ல
அதிரபரிபுரபதசதிரலங்கிருத நல்லச் (செந்திரு)

சந்திரமதிசொல் சேபத்தியம்

இ-ம்-புந்நாகவராளி.

மருவனேயதிநயகருணனே மதிநய
மகராசன்மருகனேவந்தனங்காண்
மன்னனேசத்யசம்பன்னனேஹரிச்சந்த்ரு
மைந்தனேயுன்பாதவந்தனங்காண்



தேசனேயென்றன்பிராணனேசனேயயோத்திபுரி
வாசனேயுன்பாதவந்தனங்காண்
தீரனேயிரவிகுலவீரனேயுருவினில்
மாரனேயுன்பாதவந்தனங்காண்
உந்தைஹரிச்சந்த்ரவிக் குயர்ந்தசொற்கந்
தந்தவிஸ்வாமித்ர சுவாமியவரே
சிந்தைமகிழ்வாய் நம்மைத்தேடியிங்கே
வந்ததேமகாபாக்கியம்வாரீர் பணிவோம்.

வசனம்.

சரணஞ்சரணமென்பிராணநாதா உமதுதந்தையாகிய ஹரிச்சந்த்ர மகாராசாவுக்குச் சொர்க்கமளித்த விஸ்வாமித்ரசுவாமியார் நம்மைத்தேடியிங்கேவரத்தக்கபாக்கியம் பெற்றோமா இப்போதே நாம் அவருக்குச் சென்று அவர்பாதத்தைமிகுந்த வணக்கத்துடனே தரிசித்தழைத்துவருவோம்வாருஞ்சுவாமி.

தரு இ-ம்-கல்யாணி-அடதாளம்

பல்லவி,

தரிசனஞ்செய்வோமே இதுநல்ல
வரிசைநாமுய்வோமே

அநுபல்லவி.

சல்ய
இருவினையெனுஞ் துல்ய
விருளைவிலக்குந் பல்ய
வருசல்மசா வல்ய
வாழ்வளிக்குங்கை வேதமாமுனி
மாதவஞ்செயும் பாதமேயினி (தரிசனஞ்)
நாதனைப்புய

சரணங்கள்

சுத்தர்களிலுஞ்சிவன்
சித்தர்பரவும்பரி மித்ரமகாமுபாவன்
முத்தர்மகிழும்விஸ்வா ஒளிருமடியினில்
முனிமலரென குளிரடியினில் (தரிசன)
விளரிவண்டென

போத
புத்தசமித வேத
புனிதவாகம

விந்தைமுனி — நாத
விஸ்வாமித்திரர் — பாத
விசையமிகுவிசயை — பசைபதனிவருந்
திசையதனில்மன — மிசையவனைவருந் (தரிசனஞ்)

புண்ணியமுந் — தவம்
பொருந்துமேமுந் — பவர்
என்னுவதே — பவம்
இதுவேயுந் — பவம்
இந்தமாமுனி — வந்தனனதம்
சுந்தமுந்தவர — விந்தமாம்பதம் (தரிசனஞ்)

இராசன்சொல் விருத்தம்-தேவாரம்.

அய்யனேபோற்றிபோற்றி அருந்தவக்கனியேபோற்றி
மெய்யனேபோற்றிவிஸ்வா மித்ராமுனியேபோற்றி
செய்யனேயுமதுபாதஞ் சிவப்புறநடந்தேயிந்த
வையமீதென்னைத்தேடி வந்தகாரியஞ்சொல்வீரோ,

வசனம்.

சரணஞ்சரணம் சடாமகுடம் புனைந்த உத்தம விஸ்வாமித்திர ஐயனே சரணந் தேவரீர்பாதம் பூமியிலே நடந்து சிவப்பேற அடியேனைத்தேடி வந்தகாரியந்திருவாய்மலர்ந்தருளிச்செய்ய வேணுங்கர்த்தனே,

விஸ்வாமித்திரர் சொல் விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி.

அவனிக்குமன்னவாசீர்வாதந்திர்காயசிங்காசனமேற்பலவான்
கவனித்கல்லெறிந்தகணம்போமளவுகனகமென்னையிற்றீதந்தால்
தவத்திற்கும்யாகதக்ஷிணைக்குந்தவுந்தருமமேஜெயந்தனைநடந்தோன்குஞ்
சிவனுக்குமரிக்குந்திசைமுகம்றனக்குந் தேவர்க்கும்பிரியாமனே.

வசனம்.

ஆசீர்வாதந்தீர்க்காயசு ஓ அரிச்சந்திர மகாராசனே நானொரு வேள்விசெய்யவேணும் அதற்குவேண்டியதிரவியம் ஒருகல் லைப்



பொருளாயிருக்கவேணும் அது யெவ்வள வென்றால் உயர்ந்தயனை யின்மேல் பலவத்தனின்றெறிந்தகல்லானது போனவுயரம் வரை யாகதக்ஷிணைதந்தீரானால் நானினந்த யாகம்நிறைவேறும் திரிமூர்த் திகளுக்குந்தேவர்களுக்கும் பிரியமாயிருக்கும் மகாராசனே.

இராசன்சொல் விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

எக்கியஞ்செய்யவேண்டியெனை யொருபொருட்டாயெண்ணி
புக்கியமும்மைக்காணப் புண்ணியமென்செய்தேனோ
முக்கியமதற்குவேண்டு முதலெல்லாந்தந்தேன்கையில்
சிக்கியப்பொருளையின்றே சீக்கிரங்கொடுபோய்வாரீர்.

வசனம்.

தேவரீரடியேனை யொருபொருட்டாயெண்ணி இங்குவரத் தக்க பாக்கியம்பெற்றேனு, அந்தவேள்விக்கு உமக்கு வேண்டிய திரவியந்தந்துவிட்டேனதை சீக்கிரமாய்க்கொண்டுபோய்ச்சேர்க் கவேணுஞ் சுவாமி.

விஸ்வாமித்திரர் சொல்-விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

நிசமகராசனென்றுன்னை நீயேயிந்நிலத்தில்வெற்றி
புசமகமேருவெனப் புகல்லாமன்னமத்த
கசமதின்மேனின்றுன்கை கவண்கல்போமளவுபொன்னுனக்
வசமகஞ்செய்தோர் நன்றுனைவைத்தும்பின்வருகியேனே

வசனம்

தர்மமென்றுமொன்றுதே தருமம், சத்தியமென்று மொன்று தேசத்தியம் தயிரியமென்று மொன்றேதயிரியம், நான் செய்ய வேண்டியவேள்வி யாகதக்ஷிணைக்குத்தகுந்தபொன் னென்னவென வேண்டியவெருந்தாயல்லவா, சபாகாசந்தோஷம் இட்டவுயரத்தைப் பொன் உம்மிடத்தி லிருக்கட்டும் நானந்தவேள்விக்கு முகூர்த்தம் பார்த்துப்பின்வந்து யெடுத்துக் கொண்டு போய்ச்சேர வேண்டியதை சிலவுதரவேணும் மகாராசனே.

மந்திரிசொல்- விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

மாபாக்கியராம்றாதென்று மகிழ்ந்திடவேண்டாமன்று
பூபாக்கியமும்பொருளு பூசவலரபகரிப்பார்
சாபானுக்கிரகமிருந்த சாமர்த்தியவிஸ்வாமித்ரர்
கோபாக்கினியுங்கோர்பொல்லாக்கொடியபோகச்சொல்லுமையா

வசனம்.

கேளும் இராசபரமேஸ்வரா இந்த மண்ணும்வாழ்வுஞ்சம்பத்தும் ஒருவர்பங்கல்ல யாராகிலுஞ் சத்துராதிகளிருந் தபகரித்துக் கொள்ளுவார்கள் மேலுமந்த விஸ்வாமித்ரமகாரிஷி சாபானுக்கிரகசாமர்த்தியமு மிருந்த கோபாக்கினியுமுள்ளவ அவர்பொருள் தம்மிடத்திலாகாது சும்மாகொடுத்துப்போகச்சொல்லுஞ்சுவாமி.

விஸ்வாமித்ரர்சொல் விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி

அரசனையடக்கிப்பேசு மமைச்சர்போல்நீயுமிங்கே
சாசவெனப்பேசாதே சத்யகீர்த்திநீயிப்பொன்னை
சிரசதிற்சுமக்கவேண்டாந் சீக்கிரமதாகத்தானே
முராசனைவேள்விசெய்யு முகூர்த்தநாள்வருமிப்போதே.

வசனம்

கேளுமையா மந்திரி சத்தியகீர்த்தி மகாராசனையடக்கி மந்திரி அதனைப்பிரசங்கம் பண்ணுவதுபோல நீ யொன்றுஞ்சொல்லவேண்டாமேலும்பொனக்குருத்திரதும்பொன்னை நீ சுமோமல் வைத்துக்கொண்டுகவும்வேண்டாம் வண்டிபாரம்பூமியில், அந்தப்பொருளுங்கள் வசத்திலிருக்கட்டும் நானந்த வேள்விக்குச் சீக்கிரமாய் முகூர்த்தம் வைத்துக்கொண்டுவருகிறேன் மந்திரி.

இராஜன்சொல்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

உத்தமவென்னசொன்னடோ உனக்கெதிருண்டோவிஸ்வா
மித்திரர்பொன்னையிப்ப மித்தமைத்தருந்தீராகு
முத்திரைப்போட்டுவேதியில் [illegible]



வசனம்

சுவாமி விஸ்வாமித்திரரே தேவரீர்திருவாக்குக்கெதிர்வாக்குண்டா, அப்படியே அந்தப்பொன் னடியேன்வசத்திலிருக்கட்டும் உமது ருத்திராக்ஷமுத்திரையும் போட்டுவிட்டு நீர் போய்வாரும் தானும்பத்திரமாய் பார்த்திருக்கின்றேன் சுவாமி.

விஸ்வாமித்திரர்சொல்-வசனம்

இராசரி-நல்லநெறி-இப்படியல்லவோ சொல்லவேணும் - இப்போது மெய்ச்சிக்கொண்டேன்.மகாபாக்கியம்-மகாபாக்கியம், அரிச்சந்திரமகாராசனே.

விஸ்வாமித்திரர்சொல் வசனம்

ஆரடா அடா அகடவிகட அலங்கிருத ஆச்சரிய சூடாமணி, அடா அதிரகசிய சிகாமணி- அந்த அரிச்சந்திரன் என்கையில் சிக்கிக்கொண்டானென்பார்த்தீர்களா, இனிநான்தேவேந்திரன் சபையில் பண்ணின பிரதிக்கினை இன்றேமுடித்தேன் வாருங்கள் சீக்கிரமாய்ப்போகலாம்.

சீஷர்கள்சொல்வசனம்

அப்படியாகசுவாமி அரிச்சந்திரன் சிக்கிக்கொண்டானுமெத்த சந்தோஷம்மெத்தசந்தோஷம்.

தரு இ-ம்-பந்துவராளி-ஏகதாளம்

பல்லவி.

சிக்கிக்கொண்டானரிச்சந்திரஜெகபதி
அனேகடனைத்திலென்கையில்
சிக்கிக்கொண்டானரிச்சந்திரஜெகபதி

அநுபல்லவி

ஒதுக்கிக்கிடென்றும் பக்கிக்கன்வித்துள்ள
சக்கினங்கள்வந்து புக்கிருந்போம்மென்னச்
சிக்கிக்கொண்டான்

சரணங்கள்

இனியென்னிஷ்டத்தி லெல்லாமுடிப்பேன்
தேவேந்திரன் சபையில்

சித்ரசபைதனில் தொந்திமிதியென்றிடும் பாதனருக்கு
முனிசிரேஷ்டனை சோமசுந்தரமெய்த்தா
சனியனேநீடடா சந்தானநீக்கவிடுதே
சிக்கிக்கொண்டாய்

தானனதாகுந் நான்வசத்திலிருந்தேனே
வேண்டாமொருபந்தி
சத்தியகீர்த்திசொல் புத்திரனையும்பெண்டு-தேடிக்
கானகமேவினார் கட்டிவிடலையாலே
யானைமயமில் மாட்டிக்கொண்டாப்போலே
சிக்கிக்கொண்டா

மகமேருகிரி சாய்ந்திடக்கூடுவேன்
அயோத்திநாட்டை
வனமிருகங்களா லழிக்கச்சொல்லுவேன் - பக்ஷ
அடைமயமதி யானைபால்குழியில்
வலைமோசம்போய் வந்தாற்போலேவழியில்
சிக்கிக்கொண்டா

விஸ்வாமித்திரர்சொல்-கவி.

சிஷியர்களே நீங்க ளிட்சணம்வாரீர்
பக்ஷிமிருகங்களைச் சிருட்டிப்பேன்பாரீர்

வசனம்.

அடா அடா சிஷியர்களே அந்த அரிச்சந்திரன் தேசங்களிலுள்ள உபயபயிர்பலன்களையழிக்க வஞ்சமாகத் தீயத்துஷ்டபக்ஷிசாதிகளையும் மிருகசாதிகளையுஞ் சிருஷ்டித்தனுப்புகிறேன் பாருங்கடா.

சிஷியர்கள் சொல்வசனம்.

அப்படியேசெய்யலாமையா உம்மையாரே வெல்லவல்லவர் சுவாமி.

விஸ்வாமித்திரர்சொல் விருத்தம்-இ-ம்-காம்போதி.

கரிபுலிகரடியேனும் மான்களேதிரளதாக
நரியெலிக்குடத்திக்கூட்டம் காண்டாமிருகங்கள்செந்நாய்
நரிவெருகுசிவிங்கி அன்னமேவிலங்கினமாவும்
திரளெழுந்தடம்பொருக்கும்பாய்ச் சீக்கிரம்வருகுவீரே



வசனம்.

ஆ ஆ சீறிக்குதிக்கின்ற புலிக்கூட்டங்களே - கரடிக்கூட்டங்களே-யானைக்கூட்டங்களே - கலைமான்திரள்களே-குடத்தி- கோரப்-செந்நாய்- சிங்கங்களே - நரிக்கூட்டங்களே இன்னம்பலவித மிருகங்களும் கூட்டமாக வாருங்கள் வாருங்கள்.

இதுவும்-விஸ்வாமித்திரர்சொல் விருத்தம்.

இ-ம்-பைரவி.

அளிகளேகுயில்களேநின் றாடிடுமயில்களேமா
கிளிகளேகாடைசிட்டே கிரிகவுதாரிமற்றக்
களிகொளும்பட்சிசாதி களேநீங்களெல்லாங்கூடி
தளிருளபயிரழிக்கச் சடுதியில்வருகுவீரே.

வசனம்,

ஆ ஆ வல்லடிவனங்களே குயிற்கூட்டங்களே - மயிலினங்களே-கிளிகளே-காடை-கவுதாரி-சிட்டுப்பட்சிகளே இன்னம்வனத்தில் வாழும்பட்சிசாதிகளே-நீங்களெல்லாம் ஏகிரளாய்ச் சேர்ந்து சீக்கிரம்வாருங்கள், வாருங்கள்.

சிஷியர்கள்-சொல்வசனம்.

சுவாமி சுவாமி உலகத்திலுள்ளவர்கள் சிலர்கள் கோழிகொக்கு ஆடு மகஷம் இவைகளைக்கொன்று பிடுங்கித்தின்பார்கள் அதுவுமல்லாமல்காட்டில் வாழ்கின்ற கிராதகராகிய வில்லியர்களைப்பார்க்கிலும் சிறந்தவராய்க்காணுதே உம்மைப்பார்த்தால்சுவாமி.

விஸ்வாமித்திரர்சொல்-வசனம்

அதுவென்னடா அப்படிசொல்லுகிறது துஷ்டப்பயல்களே.

சிஷியர்கள் வசனம்.

சுவாமி சுவாமி கழுதை-செந்நாய் -கரடி-புலி-இப்படிகெட்ட மிருகங்களையெல்லாம் பிடுங்கித்தின்பவராநீர் அது எங்களுக்குத் தெரியாமற்கேட்டோம் மன்னிக்கவேண்டுஞ் சுவாமி.

# அரிச்சந்திரவிலாசம்.

விஸ்வாமித்திரர்-வசனம்.

அல்லடா அல்ல அதிஷ்டப்பசங்களே அரிச்சந்திரனுடைய அயோத்தி நாட்டிலிட்ட பயிர்களையெல்லாம் அதம்பண்ணும்படியாய் அனுப்பவேணுமடா.

சிஷியர்கள்-வசனம்.

சுவாமி சுவாமி சரிதான் சரிதான் இந்தகிருத்தியங்களெல்லாம் உண்டாயிட்டிருந்தாலெண்டைக்கும் செய்கிறவர்கள்நாமே, ஆனால் நடக்கட்டும் நடக்கட்டும் சுவாமி.

விஸ்வாமித்திரர்சொல் விருத்தம்

காட்டினில்மதத்துவாழுங் கனவிலங்கினங்களெலாந்
தேட்டமாம்பட்சிசாதித் திரள்களே நீங்களெல்லாம்
கூட்டமாய்க்கூடிக்கொண்டு கூறிடாயோத்தி
நாட்டினிலிடும்பயிர்கள் நலமெலாமழித்துவாரீர்

வசனம்,

கேளுங்கள் மிருகக்கூட்டங்களா பட்சிக்கூட்டங்களா நீங்கள் இந்தக்ஷணமே அந்த அரிச்சந்திரனுடைய நாட்டைப்போய் சுத்திவளைந்துக்கொண்டு அவ்விடத்தி லுண்டாகிய பயிர்பச்சைகள் சோலைகள் குளங்கள் வரிகள் இவைகளெல்லாவற்றையும் அதாகதங்க ளாகும்படியாய்ச் சேதப்படுத்துங்கள் என்மேல் ஆணைப்படிக்கு நடவுங்கள் சீக்கிரம் போய் வாருங்கள்.

ஓரடிதரு-இ ம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

மிருகக்கூட்டங்களும் பட்சியினங்களும்
வெகுவாய்த்திரண்டுவந்ததே

அநுபல்லவி.

நறுமலர்ச்சூடயோத்தி நாட்டின்பயிரழிக்க (மிரு)

சரணம்.

கரடிபுலிகள் கூட்டமும் துள்ளிக்குதிக்கும்
கலைமான்கள்வரு நாட்டமும்



நரிகள்நரிக ளாட்டமும்-சிவிங்கிசெந்நாய்
கடம்பைபேனங்கள் கேட்டமும்
அரியசார்த்தூலம்யாளி ஆனையிர்க்கங்களும்
அன்றில்குயில்மயில்கள் அன்னங்கவுதாரிகளும்
அளிகள்கிளிகள்பல அமையுஞ்சிட்டுகள்சில
அன்றில்காடைகள்பல அடர்வான்குருவிசில
அடுக்கடுக்காய் வந்ததே திணைக்கதிரை
மடக்கிவாயினுற்கொத்தவே இன்னரும்பல
வானபட்சிகளோடி வளர்பயிர்களைத்தேடி
வாகையுடனேதப்பண்ணுவதைச்சொல
நாகராஜனுஞ் சொல்லவொண்ணாப்பல (மிருகக்)

பொதுவிருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி-

ஆவலாய்விஸ்வாமித்ர னனந்தமாயிரமயிர்கத்தை
மேவலாலயோத்திநாட்டையெங்குமழங்கள்செய்ய
மேவலாகாதென்றெண்ணிமேதினிக்குடிகளெல்லாம்
காவலாமரிச்சந்த்ரன்பாற்கனமுறையிடவந்தாரே.

வசனம்.

இவ்விதமாக விஸ்வாமித்ரரிஷி சிருஷ்டித்தனுப்பிவைத்தபலவிதபட்சிகள் மிருகங்கள் அயோத்தி நாட்டிலுண்டான பயிர்பலன்களையழித்ததப்பண்ணை அந்நாட்டிலுண்டாகிய பயிர்குடிகளெல்லாமரிச்சந்திர மகாராசனிடத்திற்கு வருகின்றவிதங்காண்க.

தரு-இ-ம்-நாதநமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

குடிகள்வந்தாரே-ஓடிவந்தவ-ரடிகள்தொழுதாரே,

அநுபல்லவி.

படிகளில்கடுமென்ன பத்துநாள்செனுமுயிர்
பட்சிக்குதித்தப்பயி குட்சிக்குதவும்பயிர்க் (குடிகள்)

சரணங்கள்.

சிங்கக்கரடிமா தங்கம்பெருங்புலி
செடிக்கனந்தமிருந்து கடிக்கவெவர்க்குங்கிலி

நங்குடிகட்கொரு — மெய்த்துமகிழ்ந்தருநதி
நல்செயகேயினி — மெய்ச்செய்வோமயைச்சாமி

குடிகள்

பாரையுமண்ணுலக்கும் — வரியையுருங்குடி
பருவத்திற்பயிர்செய்யும் — விளைவித்துக்கொடாமற்குடி
போரையுமவையை — ஒரையுங்கொடுத்தேகுடி
எங்கேயரிச்சந்திரன் — நமக்குமேலத்தேகுடி

குடிகள்

அரிசிப்படிக்கிசையும்பயிர் — ரிட்டதையுமேதேகம்
அழிக்கவருமிருதத்தை — பொழிகவுமதப்போகம்
தஞ்சிட்டத்தையுந்தப்பன் — கட்டத்தையுமிராகம்
மாதாமக்கிர்ரையயா — லோதமனப்பேசம்

குடிகள்வந்தார்கள்

குடிகள்சொல்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

செயிரறவுலகங்காக்குந் திரிசங்குமைந்தாவெங்கள்
பயிர்ப்பலசேதஞ்செய்து பல்மிருகம்பறவைசாதி
யெயிறுமவேங்கைகளின மெத்தவுமடிக்குதிங்கே
யுயிர்பிழைப்பதரிது மாட்டோம் முறைகுறையசெய்தோமே

வசனம்

சரணஞ்சரண மகாராஜேஸ்வரா காட்டிலிருக்கின்ற பலவித மிருகஜாதிகளும் பக்ஷிஜாதிகளும் வந்து நம்முடைய நாட்டிலுண்டாகிய பயிர்பலன்களை யழித்து நம்மனைப் போலவுமிருந்து மற்றுமுயி ரிச்சேத முதலாகிய வுபத்திரவங்களுஞ் செய்யப்போகிறது அதனாயால் நாங்களெங்கேபோவது மன்னிக்கவேண்டுமென்று முறையிடப் போகலாமென்றெண்ணித்தோமையா.

இராகம்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி,

எங்களாலொருதீங்கில்லை யெந்நெஞ்சுமெலிக்குமுறையிற்றே
தங்களாலொருதீங்கில்லைத் தானியப்பயிர்கள்செய்யும்
உங்களாலொருதீங்கில்லை யுண்மையேயுணயிருக்கள்
நீங்களார்வெளியாகி நம்மிலிருளைச்செயசிதாமணி.



வசனம்.

வாருங்கள்பயிர்க்குடிகளே இந்தவனையிலெங்களாலேயாவது மந்திரிகளாலாவது முறைகளாலாவது யொருதீங்கு நடந்ததில்லையே நீர் போதித்த விபரீதம் தெரிந்ததை யோசித்தால் திருவுளச்சொப்பனமல்லவு மென்றிலை, இப்பவும் நான்வேட்டைக்குப்போய் அந்தமிருகங்களைச் சங்கரித்து உங்களை யாதரிக்கின்றேன் நீங்கள் பயப்படவேண்டாம் குடிகளே.

இராகம்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

எப்படிசத்தியகீர்த்தி யிப்பயிர்க்குடிகளெல்லாம்
இப்படிபாதிக்கு மிடர்தக்கென்னசெய்வோம்
நற்படியவர்களுக்குநயஞ்சொல்லியனுப்பிவிட்டு
சொற்படிவேட்டைக்கு அருக்காகவரச்சொல்வீர்.

வசனம்

வாராய் மந்திரி சத்தியகீர்த்தி நம்முடைய பயிர்க்குடிகளுக்குத் தீங்கு பிரயோசன முதலாகிய சந்தனபுஷ்ப தாம்பூலம் கொடுத்தனுப்பிவிட்டு வேட்டைக்காரனை வரச்சொல் மந்திரி.

மந்திரிசொல்-வசனம்

அப்படியே அனுப்பிவிட்டேன்மகாராஜனே.

மந்திரி விருத்தம்-இ-ம்-தோடி.

விரிபுவிபோவிருமேவியசேர்வைக்காரா
பரிவுடன்பாதுகைக்கும் பார்த்திபனழைத்தாரென்று
சாரமனைவில்லாளருஞ் சௌரியவேடர்தம்மைச்
சேரணிமுன்னிப்போய் சீக்கிரம்வரச்செய்வாய்.

வசனம்.

சோராய் சேர்வைக்காரா, நம்முடையமகாராஜர் உத்தாரப்படி மலையுடையாந்திலிருக்கும் வேடாவில்லியர்களை சூழ்ந்துகொண்டு படையை வரச்செய்வாய் சேர்வைக்காரா.

சேர்வைக்காரன்விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

வியமுளகாட்டில்வாழும் வேடர்வில்லியரேநீங்கள்
ஜெயவலைசிக்கம்வில்லு செறியட்டநாய்களோடு
நயமுடனெடுத்துக்கொண்டு நமதிராஜன்சபைக்கு
வயமுடன்சீக்கிரமாக வருகுவீர்நொடியிற்றானே.

வசனம்

ஆரடா அடா வேடர் வில்லியர்களே பறிவலை-கண்ணிவலை-ஈட்டி-வளைதடி-வில்-அம்பு இவைகளை யெடுத்துக்கொண்டு நாய்களையுங் கூட்டிக்கொண்டு நம்முடைய மகாராசன் சபைக்குச் சீக்கிரம் ஓடி வாருங்கள் வேடர்வில்லியர்களே.

வில்லியர்-வசனம்.

இதோவொருநொடியிலோடிவருகிறோஞ்சுவாமி

பொது-விருத்தம்-இ-ம்-தோடி.

காடுறைமிருகத்தாலே கலங்கியேமனமுநொந்து
நாடுறைகுடிகளெல்லா நடுங்கவந்தபையபெண்ண
கோடுறைமாவிலையோத்திக் கொற்றவனழைத்தானென்று
வேடுவருடனேகூடி வில்லியர்வருகின்றார்.

கட்டியக்காரன் வசனம்.

அகோ தெப்படி யென்றால் இவ்விதமாக அரிச்சந்திர மகாராசனிடத்திற்கு வேடர்வில்லியர்வருகின்ற விதங்காண்க.

வேடர்கள்,வருகிற தரு இ-ம்-கல்யாணி - ஏகதாளம்.

தாம்தாம் தகம்தாம்திர்தாம் தகதோதித்
தாம் தகம்தாதிர்தகதிந்தகம்தாதகதகுத
திகுதிகுதிதகதிகுததகததிமிதங்கணதிமிதாம்

பல்லவி.

வேடுவர்நாங்களே வனவேட்டை
யாடுவர்நாங்களே

அநுபல்லவி.

நாடுமேயோக்கியன் நாட்டிற்பயிர்களை
நகிடஞ்செய்யுமிருக அழிவுபயிர்களை
காடுதேடிக்கொண்டு நீடுவெயிர்களை
நட்டிகக்கரி குட்டிகளை
வெட்டித்தருந் • வெட்டித்தரும் (வேடு)



சரணங்கள்

தேடிப்புலியொரு நூறினைப்பற்றியங்
கூறித்தங்கடிப்போம் மலை
யேறிசிங்கங்களைத் நூறிவயிற்றினைக்
கீறித்தங்குடிப் போம் மத
மீறிவருகியானையைப் பிடித்துவட்ட
மேதினியிலடித் தாதவனைக் கிட்ட
மாறிச்சுழட்டியெறிந்துமகிழ்ந்திட்ட
மனமிக்கவெகுசினவுக்கிர
கனக்கமும் புனைவிற்கர (வேடுவர்)

மானைத்துரத்தியக் கானத்தினில்வலை
மாட்டியதைமொத்துவோம் தனி
யேனத்தைக்கண்டு நிதானித்துக்கழுத்தை
யிட்டியினாற்குத்துவோம் நெடுங்
கானப்புறாகவுதாரிகாடைகள்வக்
கன்னிக்குள்ளாக்காலைப்பின்னிக்கொண்டுதன்னை
வானப்பறவையைமண்ணில் விழுத்தவள
வலைகொண்டெறிபுங் கைகவள
• கலைகண்டறி சிலையப்புள (வேடுவர்)

பொன்னைப்புனைத்தலைவத் தன்னயிட்டுன்றைப்
புல்லரிகளைத்திட்டு வோம் பெற்ற
அன்னைபிதாகுருதெய்வங்களையிக
ழலசகையை வெட்டுவோம் நாளுந்
தன்னைப்புகழ்ந்தா தமிழ்ப்புலவர்சொலை
தள்ளிவிடும்வல்வாயக்கொள்ளி மக்கள்
சின்னபின்னப்படசிதைப்போம் கைவலை
சிக்கங்களைக் கங்கங்களில்
வைக்குப்புகழ் மிக்குமலை (வேடுவர்)

வேடுவர்சொல்-கவி.

நித்யபோஷகத்தியாக நிர்வாக சொர்க்க
மத்யபாதலமும்புகழ் மன்னனேசரணம்
வித்யபூஷணகருண விதானசரணம்
சத்யபாலஅரிச்சந்திரனேசரணம்

வசனம்.

சரணஞ்சரணஞ் சத்தியபாரதிரிச்சந்திரமகாராசனே சரணம்.

இராசன் சொல் கவி.

வேட்டைக்காரர்களே வேகமாய்நீங்கள்
கூட்டக்காரர்களாய் கொக்கரித்தோடி
காட்டைச்சுற்றிலாய் கட்டுங்கள்வலையை
நாட்டைக்காப்பாற்றி நாம்வருவோமே

வசனம்.

வாருங்கள் வேட்டைக்காரர்களேநம்முடைநாட்டில் துஷ்டமானப் பிராணிகளே யதிக்கிரமஞ்செய்யுதாம் ஆனதால் மிருகவேட்டை யாடவேணும் உங்களாயுத மூஸ்திப்புடனே வாருங்கள் போகலாம்.

வேடர்கள்-வசனம்.

அப்படியே தயாராய் வந்திருக்கிறோம் சுவாமி.

தரு-இ-ம் யமுனாகல்யாணி-திரிபுடைதாளம்.

பல்லவி,

வேட்டையாடுவோம் வாரீர்வெற்றிவீர
வீரமாரணசூரரே

அநுபல்லவி.

வேட்டையாடியேநாட்டைநாசஞ்செய்யும்
கொடியமிருகங்கள் மடியப்பிடித்துவிடும் (வேட்டையாடு)

சரணங்கள்

மாதினம்வில்லை யாட்டலாம்-சந்திர
வதிக்குமைந்தர்க்கும் காட்டலாம்
கூடினமதிகளை கூட்டலாம்-வருங்
குட்டிகளையுமீர் வாட்டலாம்-நெடுங்
காலினமயில்களைக் காடுபுலிகளை
கட்டுமைகளைமலை உதிர்புலிகளைக் கண
ஊதினமிருகமாயானைகளித்திங்கால்
ஒன்றும்பாதமெனவென்றிப்போதவன (வேட்டையாடு)



பன்றிக்கூட்டங்கள் சாயுதே-அதோ
பாரீர்பறவைகள் மேயுதே
குன்றிற்கோரணி பாயுதே-யானைக்
கூட்டமதனைக்கண்டோயுதே இளங்
கன்றிக்காட்டிலிருந் ததறிவெதிர்வர
காராம்பசுக்கள்மட் கனைத்துப்பார்த்தர
நன்றிக்காலங்கள் நமக்கல்லாமற்பா
நர்மேடங்கனும்பெருகக்கேடொன்றில்லைமிருக (வேட்டை

இருப்புவலைகளை நெய்யுங்கள் சின்ன
பெரும்புசட்டுங்களிலைவையுங்கள்
பொருப்புமதிற்றெருணிசெய்யுங்கள் - ஓடிப்
போகுமிருகங்களை யெய்யுங்கள் - பெரு
நெருப்புங்காற்றும்போல் நெடிபவனங்களை
நெருக்குவனைநுழை நரிக்கிளியினங்களை
செருப்புக்கால்களாற் றேய்த்துமனங்களை
தேத்திவருவோ மயோத்திசனங்களை (வேட்)

சந்திரவதிசொல்கொச்சகம்-இ-ம்-புந்நாகவராளி

வள்ளிமான்வயிற்றுதித்த வாறுசொல்லக்கேட்டதல்லால்
துள்ளிமான்வரும்வேகந் தொல்லுலகில்நானறியேன்
வெள்ளிமால்கொண்டுதினம் விளையாடுமகனுக்கிந்த
புள்ளிமான்குட்டியைநீர்போய்பிடித்துத்தருவீரோ.

வசனம்.

கேளுமென் பிராணநாதா வள்ளியம்மன்மான்வயிற்றிலே பிறந்தாளென்ற கதைமாத்திரம் பெரியோர் சொல்லக்காதிலே கேட்டிருப்பேனேயல்லது மான்கூட்டங்களை அடியாளிதுவரைக்கும் கண்ணாற்கண்டதில்லையே ஆ ஆ இந்த மான்கள் துள்ளிக்குதித்தோடுகிற வேகமேவேகமதோ முன்னே யோடுகிறதே யொரு மான்குட்டி அதினழகே அழகு நமது செல்வமகனாகியதேவதாசன் விளையாட அந்தபுள்ளிமான் குட்டியைப்பிடித்துத் தாரும்சுவாமி.

இராசன் சொல் - கவி.

வென்றிவீரர்களே வேகமதாயோர்
பன்றிதம்மெதிரே பாயுதுபாரீர்.

சு

வசனம்

வாருங்கள் வீராதிவீரர்களே சூராதிசூரர்களே படைவீரர்களே இதோ மைநாகபர்வதம்போல் அதிவேகமாய் நமக்கெதிரில் பாய்ந்துவருகிற பன்றியை ஒருகணையிலே கொன்றுபோடுகிறேன் பாருங்கள் மந்திரி பிரதானிகளே.

இராசன்-தரு-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

பல்லவி.

விடுவேனோ-பன்றியைநான்-விடுவேனோ

அநுபல்லவி.

இடமாயென்முன் னடமாணதைப்பின்
சிரத்தைச்சுடுசரத்தைக்கொடு
உரத்தைப்பிளந் திரத்தத்துளி
சிந்திட நைந்திட நொந்திட வுந்திடாமல்நான் (விடுவே)

சரணங்கள்.

காடுவிலங்கிட நாடுகலங்கிடவரு
காலனோவிது கோலமோபெரு
நீலமால்கிரி போலவுறுதனைக்
கட்டுவேன் ஒட்டுவேன்-இட்டுவேன்-வெட்டுவேன்நான் (விடு)

விண்ணுமுதிர்ந்திட மண்ணுமதிர்ந்திட மனோ
வேகமும் வாய்வேகமும் எழு
மேகமும் அதிசீதளமும் மனம்
வீறிட பாரிடம் நேரிய போரிடாமல்நான் (விடு)

சேனைநடுங்கவே யானையொடுங்கவே எதிர்
சென்றுவருகிற பன்றியினுயிர்
பொன்றுமிருகங்களை வென்றுவருகிறேன்
தீரரே வீரரே சூரரே பாரினிநான் (விடு)

இராசன்சொல்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

பத்தினைக்கொடுத்தவாளால் பன்றியைவென்றுவந்தோர்
சித்தினைக்கமலம்போலுந் திருமுகமலர்ந்தெல்லோரும்
பத்தினைக்கொளும்நல்லாவி புட்கரணியிற்குளித்து
நித்திரைக்கொளுவீர்நாம்பின் நேசத்திற்செல்வோம்வாரீர்



வசனம்.

வாராய்மந்திரி சத்தியகீர்த்தி நமக்கு முன்பாக மாகாளியம்மன் கொடுத்த மந்திரவாளினாலே நமக்கெதிரில் மைநாகபர்வதம் போல்வந்த மாயப்பன்றியை வென்றோமே இனி அயோத்திக்குப் போய்ச்சேருவோமென்றால் இருட்டுகாலமாய்விட்டது வழியைக் கண்டுபிடித்துப்போகமாட்டோம் ஆகையால் இந்நிரவில் இந்தபுட்கரணியென்னும் திவ்யநதியில்குளித்து நித்திரைசெய்து வெடிய காலத்திலெழுந்துபோகலாம் நித்திரைசெய்யுங்கள் ஜனங்களே,

இராசன்சொல்-கட்டளைக்கலிப்பா.

அரகரசிவசம்போ திகம்பர ஆதியார்திருக்காசிவிஸ்வேஸ்வர
புரகரபவகரதிருபாகர புகழுந்தொம்பாதபிரக்கியாதவ
புரகவாபரணபரிபூரண வுமையோர்பாகவிமையோர்புகழுஞ்செங்
கரதபாலதிருவதீலகரை கண்டநான்கனவுகண்டதென்கடவுளே.

வசனம்

அரகரா சிவசிவா காசிவிஸ்வேஸ்வரா என்னையனே நின்திருவிளையாட்டையாரறிவார்கள், என்னுடைய சொப்பனம் இன்று கண்டேனே இதென்ன ஆச்சரியம் மந்திரிசத்தியகீர்த்தி பெண்ணே சந்திரவதி.

மந்திரிசொல்-கவி

சொற்பனங்கண்ட கற்பனைநீரோ
விற்பனமாகச் சொற்பகர்வீரோ.

வசனம்.

சுவாமி தேவரீர்கண்ட வித்தையானகனவை அடியேங்களுக்குத்தெரிவிக்கவேணுமையா.

சந்திரவதிசொல்-வெண்பா-இ-ம்-சங்கராபரணம்

மோனகவுசிகமா முனிவனுக்குநாமளித்த
தானகனகத்தால் நாமுமன்றோ-கானகத்தில்
வினவும்பலமிருக வேட்டையாடினப்பவமோ
கனவுகண்டதெனச்சொல்லுங் காண்.

வசனம்

மிகுந்ததபோமகிமைபொருந்திய விஸ்வாமித்திரருக்கு நாம ளித்தசொர்ணதானக்குறைவோ, காட்டிலிருக்கின்றபலவிதமிருகங் களையும் பட்சிகளையும் வேட்டையாடிக்கொன்ற பாவமோ, தேவரீ ர் என்றுங்காணுக் கனவு இன்றுகண்டதென்னமோ அதைத் தெரிய ச்சொல்லவேணும் பிராணநாதா.

இராகம்-கனவு-ரு-இம்-மத்தியமாவதி-அடதாளம்.

பல்லவி

கண்டகனவு இதென்னமோ காரணமேதினையு

அநுபல்லவி.

விண்டகமலர்த்தீர்த்தான் விளம்புமெவ்வேலை யித்தரையில்
மூண்டகமலமொடு முகமதிரிந்தாயில் (கண்ட)

சரணங்கள்.

என்னையீன்றெடுத்த தந்தைசொற்கம்
யாக்கையோடடுத்த
பின்னைநான்செங்கோற்கை பிடிக்கவாழ்மெய்நாக்க
பேதையாமவர்கள் பிரியாமலிருக்க (கண்ட)

தவமுனிக் கொருத்தி யவளோநாமே
தர்மதன்மற்றொருத்தி
சிவனுடல்செய்துரு [illegible] றொருத்தி
அறிவில்லாதமலர் விழிபுத்திரனொருத்தி (கண்ட)

நானுமெய்யாருகருக்கும் நடந்திருக்கிறப்படி
நாவின்நங்கையரும்
காலையிலேயேவிட்டோருக் காட்டிப் பிரியேனென்று
கைதந்தவொருத்தியைக் காணகந்தவிப்பது (கண்ட)

மந்திரிசொல் விருத்தம் இ-ம்-ஆனந்தபைரவி.

கண்டுசொல்கனவைப்பெண்ணுக்கடிநகர்நாடிழந்து
பெண்டுபிள்ளையைப்பிரிந்துப் பின்னொருவருக்கடிமையுங்
கொண்டுசெய்யவும்வந்தாற்போல்காண்டுதல் காமையினுலெல்லா
மின்புவாழ்வுண்டாம்தாயேயிவைவருமறியவாளா.



வசனம்.

சுவாமிதேவரீர் கண்டகனவைப்போலத்தான் நாடுநகரம் நகரா ராசபதாதிகளையுமிழந்துபாழ்சையோ பெண்டுபிள்ளையைப் பிரிந்து பிறரொருவருக்கடிமையாய்வேலைசெய்து பெட்போதும்போ லே சகலசம்பத்தையும் பெறுவதாயிருக்கின்றது நானோ விளைவதறி யவோர்கள்மகாராசனே.

சந்திரமதிசொல்-விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி.

பெண்ணுவெல்லாம்போல் வேணாப்பொன்னேபெறலாயிருந்த
மண்ணுவிங்கணந்துஞ்சொத்தமாநகர்கிடைக்கும்போதும்மெய
பெண்ணுவும்பிள்ளையக்கேளெங்கேபோனாலுமென்னாணும்
வுன்னுவினாக்குமுன்னமையோதெறைக்காப்பாற்றுமையா.

வசனம்.

கேளுமென் பிராணநாதா பூலோகத்திலே பெண்டாப்போனா ளை நீர்பெண்ணுமுண்டு பிள்ளைகளும் பெறலாமிந்த மண்ணுமனைத்தும் கிடைக்கும்ஒருபோதும்மெய்மை [illegible] இடைக்கும் [illegible] சென்மம் எடுப்போனாலும் கிட்டாது உலக [illegible] மாத்திரத்தை டாதல் காப்பாற்றவேணுஞ்சுவாமி.

பத்தி-விருத்தம்-இ-ம்-மோகனம்.

நாதனேயையமெண்ணைநாட்டில்விற்றுவ் பெண்ணை
வேதனேயைய மெத்தவும் மெய்பெலாம்கொடுக்கையா
போதுமேவேறு ஆங்காரனே புதுபுரிச்சந்திரா விட்ட
சாத்தியத்தைப்பட்டுக்கலங்குதென்று விசுவாமி.

வசனம்.

ஐயயம் ஐயம் விஸ்வாமித்திரமகாரிஷியே, தேவரீரிருவர் க்கின்படி சென்ற பெண்ணை இந்த அரிச்சந்திரமகாராசன் விட்டானை [illegible] தென்னும் சீவம் தொடுத்து [illegible] இனி [illegible] விஸ்வாமித்திர மகாரிஷியே. [illegible]

விஸ்வாமித்திரர் வசனம்,

ஸ்ரீ-ஆ - மலைபோலன்றோ பண்ணியே, உன்னை அந்த அரிச்சந்திர ன் கையம்பினால் அடித்தானோ, நல்லதாகட்டும் உன் நீங்க வேதனை யெல்லாந் தீர்த்தது நீபோய்விடு, அந்த அரிச்சந்திரன் பலத்தை நானறிகிறேன் நல்லதாகட்டும்.

பொதுவிருத்தம்-இ-ம் தோடி.

வென்றிவேல் மன்னனவிட்ட வெங்கணையொன்றால் நொந்த பன்றிபோய்விஸ்வாமித்ரன் பாதத்தில்விழுந்தபோது நன்றிது நமக்கென்றெண்ணி நகைத்துமுகச்செறித்தெழுந்து நின்றிருந்தாலிரண்டுதீச்சயங்கையர்வந்தார்.

வசனம்

இவ்விதமாக அரிச்சந்திர மகாராஜன் கையம்பு தைத்தோடிப் போனமாயப்பன்றி விஸ்வாமித்திரரிஷிபாதத்தில் விழுந்து நட ந்த விர்த்தாந்தங்களைச் சொல்லக்கேட்டு நலசத்ததிம்காயங்கா ண்டெழுந்து நெடுமைச்செறிந்தபோது அந்த தவாசத்திலிரண்டு தீச்சமோகனிகள் பிறந்துவருகின்ற விதங்காண்க.

சரு-இ-ம்-அசாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

மஞ்சளகவுந்தன - மஞ்சளமதன
வாசயார்களென்னைகர்ந்தார் - விஸ்வாமித்ரமுனி
வாசம்யோகமின்கள்வந்தார்

அநுபல்லவி

கொஞ்சமெல்லவர்களுங் - கொஞ்சவிரதிரான
சலோசனிபோல்லாரு - சிவ்வியன்றாகநிகானை
தாம்சனுசத்தக்க - திம்ஜெனுசத்தம்
தந்திரிமாதரிவில்லாருந்திரிசருந்தரிகுருத்தரி
ஜெனுந்தரிஜெட்டாரிச நிதிநிதி நிர்ணயித்த
திகிதகதிந்தனைத்தோம் - தகதிமிதகதிந்தனைக்கெசாம்
தகதிமி தந்தினைத்தோம் (மஞ்சளா...)



மோகனபெண்களின்சொல் விருத்தம்
இ-ம் ஆனந்தபைரவி.

சித்ரப்ரதமைபோலெம்மைச் சிருஷ்டித்திங்கழைத்தவிஸ்வா
மித்ரமோபோந்திபோகமிருமுனிவராயன்மால்
ருத்ரனையக்கியெந்த லோகத்தைவெல்லச்சொல்லும்
உத்ரவின்படிக்குச்செய்வோ மொருநொடிகிலவுதாரீர்

வசனம்.

விச்சித்திரப்பிரதமைபோலெங்களைச் சிருஷ்டித்தழைப்பித்த திருப்பணிவிடையென்ன விஸ்வாமித்ரசுவாமிசரணந்தபோகங்க ளிலமிகுந்த ரிஷிகள்முதலாகியபிரமா-விஷ்ணுருத்திரர்களை பயக் கவோதிரிலோகங்களையும் வெல்லவோஉத்திரவானாலொரு நொடிக் குள்ளேவென்று வருகின்றோம் கிலவுதரவேணுமையா.

விஸ்வாமித்திர்சொல் விருத்தம்.
இ-ம்-ஆனந்தபைரவி.

அரம்பையர்களைப்பழிக்கு மழகியபெண்கள் நீங்கள்
மரம்பையின்வனத்தில்வேட்டைமார்க்கஞ்செய்யரிச்சந்த்ரன்பால்
சுரம்பையின்கீதம்பாடி தமனுபவிக்கச்செய்து
கரம்பையிலெழில்பூச்சக்ரக் குடைதனைவாங்கிவாரீர்.

வசனம்.

தெய்வரம்பைகளைப்பழிக்கும்ஜெகன் மோகனப்பெண்களே உங்களுக்கழகும் வித்தையு மிகவுமுண்டாகக்கடவது நீங்களிரண் டுபேரும் நம்மிடவனத்தில் வேட்டையாட வந்திருக்கிற அரிச்ச ந்திர னிடத்திற்குப்போய் சங்கீதசாசலிதவழி நயசாமர்த்தியங்க ளாலே மெய்ப்பித்து உங்களை விவாகம்பண்ணிக் கொள்ளச்சொல் லி அவனுடைய பூச்சக்கரக்குடையாவது வாங்கிக்கொண்டு வாருங்களடிபெண்களே.

இராஜனிடத்திற்கு மோகனப்பெண்கள் போகிற ஓரடி சரு இ-ம்-புந்நாகவராளி-ஆதிதாளம்.

பல்லவி,

மோகனப்பெண்கள்வந்தார் தவ
முனிவருணிர்க்க வாவென்று வந்தார் ஜெக (மோகன)

அருடபல்லவி.

தோகைநாகனைக்கை போகச்சொன்னா நகரின்
தியாகமன்னாராயையோத்தி வாசகன்றாமேயோதி
யாருமெச்சுகினுக் காரூர்த்திக்கோ
தெருபுகங்களோப் பாருஞ்ராசங்களோத்
சாருவிசுநல்லைச் சடைபாருஞ்செயமருமை
செருமெட்டு சொல்லைந்ங்கபநபசுகுண (மோகனப்)

சரணங்கள்

கொண்டலைப்பழிக்குங் குழலார்-இந்தக்
குவலயர்சளிமேமைறு
தியலைப்பெபழியுங்கரர்க் (கொண்டலை) சரக்
கொம்மைக்கரையிருமேக் கூர்தர்ப்பினையை
வெல்லுகாரமனேச்சனோ-வண்டிணக்கலேக (கொண்) அந்தக்
கொலோமுகாரினைய புலமெமழுகப்பணிர்
குழப்பருக்குஞ் குழலார்
விண்டலவெவறெப்பறை நுதலார்
விளங்கினரீநிக்கரிந்
களங்கமில்லாமதியொரு (விண்டல) மதன்
வில்லையிருறம்புருவம் வெல்லுறிநடு
வில்லைபகலும் புருவம் மிகவுமுடையர் (விண்டல) இந்த
மேதினிதனிர்பூ மாதிறுக்குமபுழில்
வெளிநிக்குமுகச்சார் அழுகிடசெற்
கெண்டைபுரளுகும் விழியார்
கிஞ்சுகம்செஞ்சா மொழியார்
தொண்டைபிருப்போய் நகையார்
தோகையர்க்கெல்லாம் வகையார்
மண்டைதீர்ந்த கன்னங்காது-மூக்குருக்குமை
கண்டொண்ணுறைச் சொல்லந்தகாதி-முகமெழுகு
புண்டரீகநு லகாது சுரங்கட்கிணை
புண்டெண்முமென்னைப் போராமு-மாயனில்
கொண்டுவேரிமுமோன் சென்று இடையிலேயென்
தவமிருடைக்கநீத் தவய-சமும்ப



மாரனிருப்பிடங் காண-வரு
சிரவப்படம் நாண-கலை
யாருமும்பொற்பொமே பூண-மிகு
காரமதாய்வர வேண-பெண்கள்
மடவணங்குரும்பத நடப்கண்டுறுதிசெய
நடவணமுறைமன்ன னிடங்கண்டுவெதிசய (மோ)

மோகனப்பெண்கள்சொல் கவி.

முகாரசராசனே மலர்மகள்வாசனே
சகராசரிபுகழரிச் சந்திரனே சரணம்.

இராசன்சொல் விருத்தம் ஆனந்தபைரவி,

மோகமங்கயர்போலென்றன்முன்வந்துநின்றநீங்கள்
நாகமங்கயரோதெய்வநகரமங்கயரோமிக்க
யோகமங்கயரோயிந்தப்புவியின் மங்கயரோநல்வி
வேகமங்கயரேவந்த விதங்குலமிடஞ்சொல்வீரே.

வசனம்;

நீங்களோர் நல்ல அதிரூப சவுந்தரியவதிகளா யிங்கேவந்துநிற்
கிறவர்கள் நாகக்கன்னிகளோ தெய்வரம்பைகளோ அல்லது
பூதலமாதரோ நல்லவிவேகமங்கையராய்த்தோன்றுது நீங்களென்
ன குலமுங்கள்கோத்திரமெது நீங்களிங்கேயென்ன காரியமாய்வந்தீ
ர்கள் சொல்லுங்கள்மாதர்களே.

மோகனப்பெண்கள் சொல்-விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி

தனத்தினில்மிகுந்தமன்னகுலமுனிவிஸ்வாமித்ரர்
வனத்தினில்மலைச்சாரல் மேவும்புலச்சியர்கள்நாங்கள்
கனத்தினில்மிகுந்தவும்மைக்காண வித்தைகள்காண்பிக்கு
மனத்தினிலெண்ணிவந்தோ மகாயமாத்திரம்பாரீர்.

வசனம்.

கேளுமகாராஜேஸ்வரா நாங்கள்தபோமகிமைப் பொருந்திய
விஸ்வாமித்திரர்வாசஞ்செய்யும் வனமலைச்சாரலில்குடியிருப்பது

எங்கள்குலம் நீச்சகுலமாயிருந்த கன்னிகையாம் பொருந்திய வும்மது சமுகத்தைக்காணவும்நாங்கள் கற்றவித்தைகளைக்காண்பிக்கவும்வந்தோம்ஒருவீணையின்படிசிலையுடனத்திரப்பாருங்கள்ஐயா.

(மோகனப்பெண்கள் சுரசதிசாயித்தியம்அலாரிப்பு)

பபமகமபமமகரிகமகரிசநிசநிசநிசரிகமகமப
மபபநிதச அரிச்சந்திரமகாராசேஸ்வரசேகரா
வீர்கள்புகழ்மிகுதவ சந்திரகுலபராக்கு சலாம்

இராசன் சொல் விருத்தம் இ-ம்-ஆனந்தபைரவி.

புலைமகளிரொன்றிரீப் புறமைநானதியெவர்கள்
கலைமகளிரோஅந்தக் காந்தர்வமாதரோவின்
விலைமகளிரோவுங்கள் வித்தைக்கிங்கிணைபொலிதில்லை
மலைமகளிடத்தோன் விடுமாலயன்பதியேயீர்.

வசனம்

கேளுங்கள்மாதரே நீங்கள்நீச்சப்பெண்களென்றுசொன்ன தநிசமல்லவென்று தோன்றுது சரஸ்வதிதேவிகளோகாந்தர்வஸ்திரீகளோதெய்வரம்பைகளோ அதுசபாக உங்கள்வித்தைக்கிணையா யெதைச்சொல்லலாங்கயிலாசகிரியும் வைகுந்தமும்சத்தியலோக மும்மேயல்லாமல் வேறில்லைஉங்களுக்கு வேண்டியவைதிரம்இரத் தினந்தருகிறேன் வாங்கிக்கொள்ளுங்கயடிபெண்களே.

மோகனப்பெண்கள் சொல் விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

வஸ்திராபரணம்வேண்டிவந்தோமென்றெண்ணவேண்டாம்
விஸ்தாரமிருக்குதெங்கள் வீட்டிலேயபாரம்
அஸ்தாரம்பதினாலுமெத்த அந்தமேருமலையில்லாம்
வஸ்தாரப்புவியிலோடி வந்ததனமணஞ்செய்வீரே.

வசனம்.

கேளுமகாராசேஸ்வராநாங்களாசைப்பட்டு பாரணங்களை அபேட்சித்து வந்தவர்களல்ல மேலும்எங்கள் வீட்டில்வேண்டிய வஸ்திராபரணங்களு மிருக்கின்றது எங்கள்மேலில் மன்மதசேனாபதி,



மாசம்பித்தக்கொண்டான் அசந்திருப்பாத் நீலவல்லவளை மணந்தம் பூலோகத்திலெவர்களுமிக்கில்லையென்றேடிவந்தோம் யெங்களை மணஞ்செய்து பருவியணையலேறுங்களையா.

இராசன்சொல் விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

குட்டிநாய்களைவாவென்று கூப்பிட்டாலோடிவந்து
பெட்டிவாய்முகத்தைநக்கு மென்றுரைப்பதும்பொய்யன்றே
கட்டியக்காரா நீச்ச கன்னியர்களைப்பிடித்தே
அட்டியில்லாமலிட்டி அப்புறம் போகச்சொல்வாய்.

வசனம்.

வாராய் கட்டியக்காரா இட்டவாராயேயென்றால் எட்டிமுகத்தை நக்குமென்பது பொய்யல்ல, இந்தக்கன்னிகைகளைத்திட்டியிறட்டி அப்புறம்போகச் சொல்லுங்கள்,

மோகனப்பெண்கள்சொல் விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

கடையானசாதியென்றுங் கல்யாணங்கூடாதென்றுந்
தடையானதெல்லாஞ்சொல்லி தள்ளிவிட்டாலென்செய்வோம்
அடையானமுமதயோத்தி யராசாவும்பெற்றிபூச்சக்கர
கொடையாகவிங்கேகொடுத்தாற்கொண்டுபோய்வருகின்றோமே.

வசனம்.

கேளுமகாராசனே நாங்கள் நீச்சப்பெண்களானபடியினாலே தேவரீரெங்களைமருவியணைந்து மையல் தீராமற்போனாலும்நாங் கள் உமதுசமுகத்தில் ஆடிப்பாடி மெப்பித்ததற்கு நீராசசெ ங்கள் பூச்சக்கரக் கொடையாவது கொடுத்தால் வாங்கிக் கொ ண்டுபோய்வருகிறோம் உமக்குக்கீர்த்தி புண்டாயிருக்குதையா.

இராசன் வெண்பா-இ-ம்-சங்கராபரணம்

சாண்டாளருக்குமுடிகொடுவென்றுசொல்லு
வீண்பிறக்குமோமந்திரிகளிஷ்விக்கிறதிரம் காண்பெறுதற்கு
காலமல்லவிவர்களைநாங்கண்டதுண்டமதுக்
கூலமறுப்பமர்த்துனது

வசனம்.

வாருமப்பா மந்திரி சத்தியகீர்த்தி சாம்பலைபருக்கு முழுதடிவேறுமென்று சொல்லுமசரிப்ப ... நல்லவிபசாரமிது இவர்களை நாம்கண்டவுடனே தண்டனை செய்யாமலிருந்தது நம்மால் குறைவு இனியிவர்களை இங்கேவைத்திருக்கப்போகாது கருக்காயடித்துத் துரத்திவிடுங்கள்.

மந்திரி சொல்- கவி.

படைத்தலைவர்களே பறப்பெண்கடங்களை
கடைத்தலைவாசல் கடக்க வெளியேற்றீர்.

வசனம்.

ஆர்காணும் படைத்தலைவர்களே இந்தப்பறப்பெண்களை நமது கடைத்தலைவாசற்கடக்கத் தள்ளிக்கொண்டுபோய் விட்டுவிடுங்கள்.

மோகனப்பெண்கள்

தரு இ-ம்-புந்நாகவராளி-அட்டதாளம்.

பல்லவி,

ஐயையோ ஐயையோ-ஆதரவன்றல்-உபாயபதைப்புயம்.

அநுபல்லவி.

சபையிலெங்களையரிச் சந்திரனடித்தானே
சவுக்கெடுத்தடிப்பெங்களுக்கு மிகவும் அடித்தானே (ஐயைய)

சரணங்கள்

வேசிகளென்றும் விணிகளென்றும்
வெள்ளாட்டிக மென்றும்
மசிக்கள்ளோக்குடித் திருவந்திரிகளென்றும்
பேசிக்கள்ளிகளென்றும் பிரம்பாலடித்தானின்று
ஐயையம்

நீலிகளென்றும் நீட்டிகளென்றும்
நிர்மூடிக மென்றும்
கேலிகளென்றுங்குடி கேடிகளென்றும்வயதான
கட்டித்திரிவோரா நெட்டிப்பயசடிசெய்தான்
ஐயையம்



நீசிகளென்றும் நிந்திகளென்றும்
நீங்களாரடி பெயன்றும்
நீச்சிப்பட்டறப்போங்கள் சின்னசாதிகளென்றும்
நிட்டுயிறப்புறைய கொட்டிவிட்டானையா
ஐயையம்

மோகனப் பெண்கள் சொல்.

கட்டளைகலிப்பா-இ-ம்-புந்நாகவராளி.

உருவிசுவாசத்திறுதியிர் திருவோரும்போ
புலகையாளரிச்சந்திரன் முன்றடிக்கும்
மருவியவாயிடனை பெயப்பாடிக்கும்
மனைத்துக்குட்டபடமாட்டேனென்றுமினங்கள்
குருவிஸ்வாமித்திரரேயவன் பூச்சக்கர
கொடைகைகேட்டோம்கொடாமலேபெங்கள்மேல்
ஒருவிஸ்வாசமில்லையாமல்லைக்குத்தப்பா
போட்டபோங்களென்றுவாத்தடித்தானையா

வசனம்.

கேளுங்காவாமி விஸ்வாமித்திரரே நாங்கள் தேவரீருடைய கட்டளைப்படி அரிச்சந்திரனிடத்திற்குப்போய்சரசலலிதவிநயசங்கீதசாடிக்கு அரிச்சந்திரனிடத்திற்குப்போய் எங்களுக்கு வேண்டிய வஸ்துமார்த்தியங்களாலேமெப்பித்தோம் எங்களுக்கு வேண்டியவரங்களை கொடுத்துசெய்திரபூஷணங்கொடுக்கவந்தான் அதுவேண்டாமென்று சொன்னோம் பூச்சக்கரக்குடைகொள்ளச்சொல்லிக்கேட்டோம் அதற்கு கொடுக்கமாட்டேனென்றான் அதற்கு மேற்படிக்கொடையாவது கொடுமென்று கேட்டோம் அதற்கு நீச்சசாதிபுத்திரியைக் காட்டவந்திரென்று கோபித்து எங்களை நீச்சசாதிபுத்திரியைக் காட்டிவிட்டான்வாமி புறம்போங்களென்று அடித்துத்துரத்திவிட்டான்வாமி.

விஸ்வாமித்திரர் சொல்

தரு-இ-ம் பந்துவராளி-அடதாளம்.

பல்லவி.

அரிச்சந்திரனடித்தானோ உங்களை-நா
வந்தேன் தேனவர் நல்ல கோவத்தைகளை-நீங்க
வரும்வண்டார்ந்தலைபுங்கள் சங்கைகளை-சற்று
மஞ்சமயில்வாரீர் பெண்களை-ஆகும் (அரிச்ச)

அனுபல்லவி.

திரிச்சங்குசொற்கருந் தெரியுமேபோகட்டுந்
தீண்டாதவனுக்காளாய்ச் செய்கிறேனுகட்டும் (அரிச்ச)

சரணங்கள்

சபையிலவனை நீங்க ளடித்தனும்-ஒன்றுந்
தாராமலுங்களைத் தடுத்தனும் கையில்
சவுக்கெடுத்தடித்தோட்டி விடுத்தனும்-அவன்
சத்தியந்தனைதானே கெடுத்தனும்-இனி
உடையோகமெனக்காச்சு உங்கட்கெந்தவேபேச்சு
வுலகிலவனுக்கேச்சு வுண்டிருக்குமேபேச்சு

அரிச்சந்திர

வினைவணமாக்களைக் கொய்தனும்-பல
விதமாமிருகங்களை யெய்தனும்-வந்த
வித்யாமனுஷியாளை வைதனும்-அம்மா
வீண்பெருமோமுப்பிழை செய்தனும்-இந்த
வளைபுனைமாதரே வாருங்களொன்றிக்கினை
வட்டியுமுதலுமாய் கட்டிக்கொள்வேன்பொன்னை

அரிச்சந்திர

என்னினையென்னைநீயே பலிக்க-நா
வியப்பினைபத்தியந் கெலிக்க-அந்த
இருடிவசிட்டர்சஞ் சலிக்க அவனை
யிந்திரன்சமுகத்தில் வலிக்க-முன்னம்
பன்னினைவைத்தினிற் பாதிகொடுப்பேனென்று
பரவசத்துசொன்னதும் வரவசமேமைக்கின்று

அரிச்சந்திர

விஸ்வாமித்திரன்சொல் விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

மூச்சதிர்ப்பிறந்தவுங்கள் முகந்தோணவடித்தவன்றான்
பேச்சதிற்புறட்டிப்பெண்டுபிள்ளையைப்பிரித்தவன்றான்
நீச்சனுக்கடிமையாக்கி நிதியைக்கொண்டவன்றான்பெண்காள்
கூச்சமில்லாமற்சென்னிக் கொய்யவுஞ்செய்வேன்வாரீர்



வசனம்

அடிபெண்களே உங்களை அந்த அரிச்சந்திரனடித்தானுமெய்யா யடித்தானு கெட்டியாயடித்தானுதல்லவா ஆகட்டுமவன்பேச்சைக் கொண்டுபுறட்டிப்பேசி நாடுநகரத்தையும் பறித்துக்கொண்டு பெண்டு பிள்ளையைப்பிரித்து அவனையும் நீச்சனுக்கடிமையாகச் செய்து அவன்கைவாளினாலேஅவன் மனைவியாகிய சந்திரவதிதலையை வெட்டும்படி செய்விக்கிறேன் நீங்கள்சற்று மஞ்சாமலென் பின்னேவாருங்களடிபெண்களே.

சந்திரவதிசொல்கட்டளைகலிப்பா,

இ-ம்-புந்நாகவராளி.

எழுந்திருஞ்சுவாமியென்பிராணநாதனே
யென்செய்வோமிஅமுன்செய்ததீவினை
செழுந்திருவளரயோத்தியாபுரி
தேசமெங்கணும்நாசமதாயெரி
கொழுந்திருந்தெழகோசிகமாமுனி
கோபமுமிகக்கொண்டுவந்தாரினி
தொழுந்திருவடிபோற்றியக்கோபத்தைத்
தோத்திரங்கள்செய்தார்த்திடுவோம்வாரீர்,

வசனம்

ஆ சுவாமியென் பிராணநாதா யெழுந்திருஞ் சுவாமி இதென்ன ஆச்சரியம் நம்மிட நாடு நகரமெல்லா மதோகதியாய க்கினிச்சுவாலையாயெரியும்படிவிஸ்வாமித்திரரிஷி அதிககோபங்கொண்டு நம்மிடத்திற்கு வருகின்றாரேஇனிநாம் பயபக்தியுடனே அவர்பாதத்தைப்பிடித்துக்கொண்டு கோபத்தை யாற்றுவோம் வாருஞ்சுவாமி.

இராசன்சொல்-தரு-இ-ம்-எமுனாகல்யாணி-ஏகதாளம்.

பல்லவி.

பதமும்நொந்ததா என்மேல் தப்
பிதமும் வந்ததா வந்த

அநுபல்லவி.

விரூபாக்ஷியோ விஸ்வாமித்திர
விசையஞ்செய்தபயங் கரவிச்சித்திராப் (பத)

சரணங்கள்.

கடல்கடினென்றுமே ஊழிக்
காற்றும் மின்றுமே அந்த
வடவனலின் வனத்தைச்சுட்டதா
வருத்தக்கல்லும ஒருத்தரோட்டதா

பதமும்

என்னக்கோபமோ ஆடி
மெய்யாகப் பாவமோ இனி
அன்னக்கொடியர்கண்ணே சாத்தியுறுமைய
அப்புவியில்வீழ்ந்தே னுய்யவிடுவதுஞ்செய்ய

பதமும்

தானத்திற்றுறைவா போனீர்
ஈசானத்தில் மறைவா உயர்
வானத்திற்சுவர்க்கல் லாந்தேசந்திரதாரம்
வைத்திருக்கிறதோர் னுமேசெய்வீரைய

பதமும்

இராசன்சொல்விருத்தம்.

இ-ம்-நவரோசு-

செஞ்சடைமுடியோய்போற்றி
திருவெண்பொடியோய்போற்றி
சஞ்சலமறுத்தோய்போற்றி
தானவரையொறுத்தோய்போற்றி
கொஞ்சமாயிருந்த
கோபமதுடனேயிறா
கெஞ்சுமும்விகொண்டேற்ற
வேகமேதணிசெய்வீரே.



வசனம்.

சரணஞ்சரணம் ஜடாமகுடமும் விபூதியும்புனைந்த விஸ்வாமித்திரரே தேவரீர் இந்த நீச்சப்பெண்களை அழைத்துக்கொண்டு அடியேனிடத்திற்கு அதிககோபங்கொண்டு பூமியிலேநடந்து வந்தபாதம் என்னமாய்நொந்துதோ என்பேரில் வந்த தப்பிதமென்னமோ சொல்லுஞ்சுவாமி.

விஸ்வாமித்திரர்சொல் விருத்தம்.

இ - ம் - நாட்டை,

தனங்களைப்படைத்தவுன்றன் றயிரியமாவரிச்சந்த்ராயென்
வனங்களையழித்தாயங்கே வளர்மிர்கங்களையொழித்தாய்
அனங்களைப்போன்றவென்ற னரிவையர்களையடித்துன்
கனங்களைக்கொலைத்தேனென்றன் காலில்வீழ்ந்தழுகின்றாயே

வசனம்.

எதுகாணும் -ஓய்- அரிச்சந்திரா உன்பணக்கொழுப்பா, மனதயிரியமா, என்னிடவனங்களை அழித்ததஞ்செய்து அங்கேவளர்கின்ற மிருகங்களையுங்கொன்று வதைசெய்ததுமல்லாமல் என்பெண்களையும் அடித்தாயல்லவா நல்லதுஇப்போ தென்காலில்வீழ்ந்து வீழ்ந்தழுகின்றாயே விடுங்காணும்விடு பாதத்தைவிடு.

இராசன் சொல் விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

பயிர்பலன்களையழித்த பலமிருகவேட்டையாடி
உயிர்வதைசெய்ததுண்டு உன்வனமழித்ததுண்டு
கயிரவமலர்வாய்நீச்ச கன்னியர்வந்ததுண்டு
தயிரியமாய்சாமபேத தானதண்டமுஞ்செய்வேனே.

வசனம்

தேவரீர் அடியேன்செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டுஞ்சுவாமி என்னிட நாட்டிலுண்டான பயிர்பலன்களை யழித்ததுஞ்செய்த துஷ்டமிருகங்களைக்கொன்றுவதைசெய்யும் பொருட்டாய் வனங்களை அழித்ததுமுண்டு அவடத்தி லிராத்திரிகாலத்தில்இரண்டு நீச்சப்பெண்கள் வந்துவிவாகம் பண்ணிக்கொள்ளச்

அ

சொல்லியும் பூச்சக்கிரக்கொடையைக்கொடுக்கச்சொல்லியும்பலவ
நீதஞ் செய்தபடியிருமேலே அடியேன் சதுர்வித உபாயமுஞ்செய்
து முறைத்து விட்டதுமுண்டு அடியேன்பிழையைப்பொறுத்தருள
வேணுங்கடவுளே.

விஸ்வாமித்திரர்சொல்விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி.

தப்பிழைப்பதிலும்வந்த தையலர்களையடித்தாய்
இப்பிழைபொறுப்பதில்லை யினிமிடிசாபமுமன்றன்
முப்பிழைப்பொறுத்திங்கொன்று மொழிகின்றேனிங்குவந்த
செப்பிழைமுலையிருவரைத் திருமணஞ்செய்குவாயே.

வசனம்.

கேளுங்காணும் ஓய் அரிச்சந்திரா பிழைசெய்வதிலும் ஸ்ரீக
ளை அடித்தாய் மிருகங்களைக்கொன்றாய் வனங்களையழித்தாய் இப்
பிழைகளை நான்பொறுக்கமாட்டேன் மிடிசாபமானால் நீசெய்த
முப் பிழையும் பொறுத்துக் கொள்ளுகிறேன் இந்த யிரண்டு ஸ்ரீ
களையும் விவாகம் பண்ணிக்கொள்ளுங்காணரிச்சந்திரா.

இராசன் சொல் - விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

நீச்சமங்கையரைச்சேர்ந்திந் நிலந்தனிற்கோள்பொய்சொல்லி
கூச்சமிலாமக்களைக் குடிகடன்கொடாதலோபி
பேச்சதைக்காதிற்கேளார் பெரியோரதல்லாக்நாளும்
ஏச்சிப்பழிபாவமுமூ வேந்தலைமுறைவிடாதே

வசனம்,

சிவசிவபாபமிவனை யிதென்னபாவம் நீச்சப்பெண்களைச்
சேர்ந்து கோள் பொய் சொல்லி கொலைகளவுசெய்து இழிவான
கள்ளையுங்குடித்துக்கொடுத்தக் கடனையுங்கொடாமலேலோபி
லிவ்வுலகத்திலன்றோ வென்று தன்னைத்தானே புகழ்ந்துக் கொ
ள்ளுஞ்சண்டாளர் பேச்சைப் பெரியோர்கள் காதிலேயுங் கேட்கப்
பார்களா அது வுமன்றி அந்த பேச்சும் பழிபாவமும் மூவேழு தலை
முறைக்கும் விடாமா இதற்கென்னசெய்வேனையா.



இதுவும் இராசன் சொல் விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி.

நாட்டையுந்தருவேனிந்த நகரையுந்தருவேனென்றன்
வீட்டையுந்தருவேனல்ல விச்சித்திரமணிக்கிரீட
சூட்டையுந்தருவேனின்னஞ் சகமெலாந்தருவேன்செத்த
மாட்டையுந்தின்னுநீச்ச மாதரைவேண்டிலேனே

வசனம்,

கேளுஞ்சுவாமி விஸ்வாமித்திரரே அடியேன் நாடுநகரம் நவ
ரத்தினகிரீடமுதலாகியசகமெலாந்தந்தாலும் தருவேனேயல்லது
செத்தமாட்டைத்தின்னு நீச்சப்பெண்களை மாத்திரம் நான் விவா
கம் பண்ணிக்கொள்ளமாட்டேன் சுவாமி.

விஸ்வாமித்திரர்சொல்விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி.

அன்னதேயன்னதே ஓ யரிச்சந்திரா நீயிப்போது
சொன்னதேபோதுஞ்சந்திர சூரியரிதற்குச்சாட்சி
பின்னதையில்லையென்று பிசகப்போறுயென்கையில்
முன்னதைத்தாரைவாராய் முக்கியமாய்க்கைக்கொள்வேனே.

வசனம்.

அதுவேசரி அதுவேசரி ஓ அரிச்சந்திர மகாராசனே நீயிப்
போது சொன்னவார்த்தைக்குச்சந்திரசூரியரைச்சாட்சிவைத்திரு
க்கின்றேன் பின்னாலேஇல்லையென்று பிசகிப்பேசப்போறாய்இப்
போதே நீசொன்னதை சகலமும் என்கையில் தாரைவாருமப்பா
அரிச்சந்திரா.

இராசன் சொல் விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி.

சூட்சியாய்க்கேட்டுசந்திர சூரியர்களையிதற்குச்
சாட்சியாய்வைத்தீர்சொன்ன சத்தியந்தப்புவேனோ
ஆட்சியாயயோத்திநாடு மரசும்நுந்தனுக்களித்தேன்
காட்சியாமெய்க்கிப்போது காசிக்குச்செலவுதாரீர்

வசனம்

கேளுஞ் சுவாமி விஸ்வாமித்திரரே அடியேன்சொன்ன உலகவ ழக்கச்சொல்லை உறுதியாய்ப்பிடித்துக் கொண்டதற்குச்சந்திரசூரி யாளைசாட்சிவைக்க வேணுமா சொன்னதை இல்லை யென்று சொ ல்லுவேனா. அப்படியேசகலமுந் தாரைவார்க்கின்றேன் கையைப் பிடியுஞ்சுவாமி இனி அடியேங்களுக்குங் காசியாத்திரைக்குச் சில வுதரவேணும் கர்த்தனே.

விஸ்வாமித்திரர் சொல் விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி,

என்னையுமிங்கேயென்ன வெய்க்கப்பார்க்கின்றாய்மன்னா
முன்னையுன் வசத்தில்வைத்த முதலுடன்வட்டிசேர்ந்த
பொன்னையுமுங்கள்வஸ்திர பூஷணங்களையுந்தந்து
பின்னையுநீயும்பெண்டு பிள்ளையும்போய்வாரீர்

வசனம்.

ஓ யரிச்சந்திர மகாராசனே நீ யென்னை யிருடியென்றேய்க் கப்பார்க்கிறாயோ முன்னேயுன் வசத்தில்வைத்திருக்கின்றபொன் னையும்அதற்குச்சேர்ந்தவட்டியையும் உங்கள் வஸ்திராபரணங்களை யும் கொடுத்துவிட்டு சுகமாய்ப் போய்வாருங்கள்

இராசன் சொல் விருத்தம்-இ-ம்- ஆனந்தபைரவி.

கொடுத்தற்கப்பொன்னைக்கேட்கத் தருமமுமல்லவுமக்குக்
கொடுத்தன்றைநீக்கிநாடு கொடாதென்றுதப்பிசையப்பேர்சு
அடுத்தவேர்கெடுவுதந்தூ லினிக்கின்றுமுடையுதாங்க
ளுடுத்தவஸ்திராபரந்தோ முண்மையாய்ச்சிலவுதாரீர்

வசனம்.

கேளுஞ்சுவாமி விஸ்வாமித்திரரே நீரிப்போதென்னைத்தடுத்து பொன்னைக் கேழ்ப்பதுமக்குத் தருமமல்லவே அந்தப்பொன்னை நீக்கிமற்றநாடுநகரத்தைத்தாரைவாராமற் போனதென்றுதப்பிசொ இப்பவுமந்த பொன்னுக்கொரு கெடுவுதந்தாலதையுங் கொடுத்து விடுகிறேன் இதோ நவரத்னகிரீட முதலாகிய ஆபரணங்களுங் கொடுத்துவிட்டோம் இனிதேவரீரடியேங்களுக்குச் சிலவுதரவே ணுஞ்சுவாமி.



விஸ்வாமித்திரர் சொல் - விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி.

வருந்தியமன்னவுன்மெய்மனதுவைத்தனைப்பொன்னை
பொருந்தியநாட்டைவிட்டு போய்மறுதேசஞ்சென்று
திருந்தியநாற்பத்தெட்டு தினத்துக்குள்ளாகக்கொண்டு
சருத்திரவியத்தைநான்கத் தாகன்கைகொடுப்பாயே.

வசனம்.

கேளுங்காணும் அரிச்சந்திரமகாராசனே நீயென்னைமிகவும் வரு ந்திவேண்டிக்கேட்டுக் கொண்டபடியால்நீமறுதேசஞ்சென்றாய் நாற்பத் தெட்டுதினத்துக்குள் அம்முதலுமவ்வட்டியுந்தேடித்தருகு பிராமண னுவசம் கொடுத்தனுப்பி விடுங்கள் இனிசுகமாய் போய்வாருங்கள்.

இராசன் சொல் கட்டளைகலிப்பா

இ-ம்-புந்நாகவராளி.

சந்திரவதியேமைந்தனேதேவ
தாசனேயென்னயோசனைசெய்குவீர்
செந்திருவனர்சொந்தநகரமுந்
தேசமுஞ்சொன்னவாசகம்பொய்யாமல்
மந்திரகன்பிருந்தவிஸ்வாமித்ர
மாமுனிக்களித்தோமினிக்காசிதாம்
சுந்திரங்கொண்டும்யாத்திரைப்போகலாந்
தொடர்ந்தெம்பின்னேதொடர்ந்துவாருவீர்.

வசனம்.

பெண்ணே சந்திரமதி, மகனே தேவதாசா, இன்ன மென்ன யோசனையிருக்கின்றது, நமது நாடுநகரமுதலாகிய துவும் விஸ்வா மித்திரருக்குக் கொடுத்துவிட்டோம், இனியிங்கிருப்பது தருமம ல்லகாசியாத்திரைப்போகவேணுஞ் சந்தோஷமாய்வாருங்கள்.

இராசன்-தரு-இ-ம்-கேதாரகௌளம்-ஆதிதாளம்.

பல்லவி.

போய்வருகிறேன்காணும்-சிலவுதந்தருட்
புரிந்து ரட்சிக்க வேணும்

அநுபல்லவி.

செய்வருகிறானிச்சந் திரவதியுட்நற்பாத்திரை
யாய்வருகிறான்நாங்க ளவ்புடன்காசியாத்திரை
போய்வருகிறோம்

சரணங்கள்

மாதவவிஸ்வாமித்திர மாமுனிமேயசரணம்
யுதல்யாத்திரைசெய்வரும் புண்ணியமிது தருணம்
போய்வருகிறோம்

வேதியர்களமந்திரி ஆதியர்களேவாசிக்கும்
நீதியர்களேநான்கு சாதியர்களேகாசிக்கும்
போய்வருகிறோம்

கோசிகமாமுனியைக் கும்பிட்டிருங்கள்நீங்கள்
தாசிகளேயென்மந்திரி சத்தியகீர்த்தியேநாங்கள்
போய்வருகிறோம்

சத்தியகீர்த்திசொல் விருத்தம்-இ-ம்-முகாரி.

போய்வருகிறேனென்ன பொறுத்திருப்போமனதுமின்ன
செய்வருகின்றான்மன்ன தேவரீருடனேயென்றன்
றாய்வருகின்றாள்நானும் தங்களுக்கூழியஞ்செய்
தாய்வருகின்றனையாத்திரை நால்வரும்நடப்போம்வாரீர்.

வசனம்

சரணஞ்சரண மெய்ஞ்ஞானுடையவனே, தாயேசந்திரமதி, தம்பி தேவதாசா, நீங்கள் மூன்றுபேரும் நாடுநகர முதலாகிய யாவும் விஸ்வாமித்திரருக்குத் தானவார்த்துக்கொடுத்துவிட்டுபரதேசிகளாய் காசியாத்திரை நடக்கும்போது அடியேனுங்களைப் பிரிந்திருக்கமாட்டேன் நானுங்கூடவருகிறேன் நால்வரும் நடப்போம் வாருங்கள்.

இராசன்சொல்-விருத்தம்-இ-ம்-முகாரி.

வாழ்வினிற்கூடவாழ்ந்து வல்வினைக்குரிமையாகித்
தாழ்வினிலெனைப்பானீயுந் தரித்திரமேவடாபூமியாய்
கேழ்வியிலமிருந்தசத்திய கீர்த்திநீயெப்படிமேவிட்டு
ஊழ்வினைதுலைக்குமட்டா முன்னையாத்திரிவோம்வாராய்.



வசனம்.

அப்பா மந்திரி சத்தியகீர்த்தி, நீ யிதுவரைக்கும் எங்களாபத்துசம்பத்துக்குப்பாத்தியமாயிருந்தவன்பிரிந்திருக்கமாட்டாய் சிலகாலம் யாத்திரைதிரிந்து வருவோம் நால் வரும் நடப்போம் வாருங்கள்

இராசன்-தரு-இ-ம்-ஆனந்தபைரவி;- ஆதிதாளம்.

பல்லவி.

காசிநடத்தைப் பாரீர் நால்வருமொருமிப்
பேசிநடப்போம் வாரீர்

அநுபல்லவி

கோசிகமாமுனிக்குக் கொடுக்குங்கடனுற்பார
தேசிகன்போலயாத்திரை திரிந்திங்குடனேவர(காசி)

சரணங்கள்.

நாடுநகரம் விடுத்தோம்-விஸ்வாமித்திரர்க்குத்
தேடும்பொருளுங்கொடுத்தோம்
ஆடுமாபரணமுந் துகிலுங்களைந்துதந்தோம்
காடுமார்க்கமதாகக் கந்தைதரித்துவந்தோம்

காசிநடத்தைப்

கொடுத்தபொன்னதுநீக்கி-கொள்ளாமலென்னைத்
தடுத்தபின்னது பாக்கி
அடுத்தநாற்பத்தெட்டாநா ளளிக்கிறேனென்றுசொன்ன
கெடுதப்பாமற்கொடுக்கக் கெதிநமக்குவேறென்ன

காசிநடத்தைப்

விஸ்வசொரூபங்கொண்டு-வந்துதடுத்து
விஸ்வாமித்திரனைக் கண்டு
விஸ்வாசமாகப்பணி விடைகொண்டதனால்தனி
விஸ்வேசனைப்பணித்தால் வீடுபெறலாமினி

காசிநடத்தைப்

பொது-விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி.

பகரரிச்சந்திரன்பாரியாளுமந்திரிநால்வோரும்
நகர்நீங்கிக்காசியாத்திரை நடக்கர்சுக்கிரமைக்கூவி
மிகரகசியங்கள்விஸ்வா மித்திரருரைக்கக்கேட்டு
புகர்நக்ஷத்திரகனென்னும் பூசுரன்வருகின்றானே

வசனம்.

இவ்விதமாக அரிச்சந்திரமகாராசனுந் தன்பாரியாகியசந்திரமதியும் பாலனாகிய தேவதாசனும் மந்திரியாகியசத்தியகீர்த்தியுங் காசியாத்திரை நடக்கும்போது விஸ்வாமித்திர ரிஷியாயத்திருவேலைக்கிரமாகவாக நக்ஷத்திரனு பிராமணனுகவருகின்ற விதங்காண்க.

தரு-இ-ம்-மத்தியமாவதி-அடதாளம்.

பல்லவி

நட்சத்திரம்போ லொருவன்-நவக்கிரகத்திலொருவன்
நக்ஷத்திரகனும்நானே

அநுபல்லவி.

நக்ஷத்திரகனும் நானிங்குகொய்வெரு
விச்சித்திரஞ்சனும் வேலைநுவுல்விடெரு (நட்சத்)

சரணங்கள்.

லட்சத்துடனெண்பத்து நான்குநூ
றுபிரகிருதிவாதபாக்களை
சிருஷ்டிக்கும்பிரம்மதேவனுக்குப்பதில்
சிருஷ்டிசவுசிகன் சிஷ்யனெனப்பதில் (நட்சத்)

கொள்ளித்தேளைப்போலே கொட்டுவேன்-கோசிகன்பொன்னைக்
கொடாவிட்டாற்காலைக் கட்டுவேன்
தள்ளிக்கழுத்தைப்பிடித்துநெட்டுவேன் - என்றன்கையிருல்
தலையும்பொத்தலாகக் குட்டுவேன் - இதே
அள்ளிவிழுந்தோடையைப்பிடித்து
தள்ளியழுத் தவடையிலடித்து
அள்ளிவாயில்மண்ண தெள்ளிப்போட்டுப்பொன்
உள்ளதெல்லாம்வாங்கிக் கொள்ளுவேன்மின்
நட்சத்ரம்



இட்டிக்கோல்கையினில் மாட்டுவேன்-எனக்குச்சொன்ன
கெடுதப்பிப்போனாற்பின்வாட்டுவேன்
கட்டியுருட்டிக்கனலை மூட்டுவேன்-புரட்டியொட்டைக்
கயிற்றினில்லனாந்தாரிப் பூட்டுவேன்-மூழைக்கால்
முட்டிதோப்பணையிடென்றும்- பஞ்சபோல்
கொட்டிபணங் கொடென்றும்- அறிந்தேயல்
இட்டிமிறட்டியும் கட்டிபன்றேரும்
வட்டியுமுதலும் நட்டிபேசொன்வெரும்
நட்சத்ரம்

கல்லையெடுத்துநெற்றிமேல் வைப்பேன்-விஸ்வாமித்திரன்
கடனைவாங்கிக்கொண்டுபோய் குவிப்பேன்
பல்லைக்கடித்துக்கல்லில் நாருரிப்பேன்-நேக்குத்தாருசம்
பளத்தைக்கொடென்றவனுனத்தையுங் கரைப்பேன்-பொன்
இல்லையென்றவன் சொல்லினும்விடேன்
இல்லென்றுங்கன வில்லங்கத்துடன்
மல்லுங்கொடுத்துப்பொன் வெல்லாம்வாங்கிக்கொண்
டொல்லையிலிவிந்த யெல்லைவருவேன்விண்
நட்சத்ரம்

நக்ஷத்திரகன்சொல் விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

ஆசீர்வாதங்காண்மன்னா ஆனைமேற்பலவானின்று
வீசியகவண்டிக்கல்லை விட்டெறிந்திட்டதூரம்
பேசியபொன்கொடாமல் பிறப்பட்டுவோதிப்போறாய்
கோசிகமுனிவன்பொன்னைக் கொடுத்துவிட்டப்புறம்போங்காண்.

வசனம்.

ஆசீர்வாதந் தீர்க்காயசு ஓ யரிச்சந்திரனீதானா நீ எதாவது அந்தவிஸ்வாமித்திர ரிஷிக்குக்கடன் கொடுக்கவேணுமாநல்லது உயர்ந்தயானையின்மேல் பலவானாள் நின்றெறிந்த கவண்கல் போன உயரத்திரவியமும் நேக்குத் தாருசம்பளமுங் கொடுத்துவிட்டு அப்பாலே போங்காணுங் இரகஸ்தா

இராசன் சொல் விருத்தம்,

இ-ம்-ஆனந்தபைரவி,

சொந்தநாடுதனைவிட்டுத் தூரதேசங்கள்செல்ல
வந்தநானென்னசெய்வேன் வழியினில்மதித்திநாயா
அந்தணன்காசியிற்சென் றுகெட்டுதினத்திற்பொன்னைத்
தந்தனுப்புவிரேனென்னைத் தடுக்கவும்வேண்டாம்வாரீர்.

வசனம்.

சரணஞ்சரணஞ் சுவாமி அடியேனுண்டிருந்த அயோத்தி நாட்டைவிட்டின்ன மனைதாதிகைதூரவழியும் வாவில்லைய இவ டத்திலென்னைத்தடுத்து பொன்னைக்கேட்டாலெங்கிருந்து கொடுப் பேன் காசிதேசம்போய்ச் சேர்ந்தவுடனே நாற்பத்தெட்டு தினத் துக்குள்ளே கொடுத்துவிடுறேன் வாருஞ்சுவாமி.

இராசன்-தரு-இம்-செஞ்சுருட்டி-ஏகதாளம்.

பல்லவி.

அன்னமேநாமென்னமாய்நடப்போ மங்கந்தியுதே-இந்த
அடவியில்மணல்சுடுவெயில் தணலாக்காயுதே (அன்ன)

அநுபல்லவி.

இன்னமேனிங்கிருக்குறீர்கள் கட்
டெறும்புகடிக்குது உடம்புதுடிக்குது (அன்னமே)

சரணங்கள்

கருங்குளவியுந்தேன்களு மிந்தக் காட்டினிற்கொட்டுதே-அதோ
காடைவலியனுமோடவலமாய்க் கருடனுங்கட்டுதே-சற்றே
யிருங்களப்புறம் போகலாமென்று
லெங்குமழலெல்லை-தங்கும்நிழலில்லை (அன்னமே)

எடுத்தடிவைக்குங்காலிற் பூரங்க ளேறிமொய்க்குதே-சற்றே
யிடைத்துவோடாங்கிநடந்தாஸ்முள்ளுக ளிடறினைக்குதே-மோ
யடுத்தசெடிக்குள் கடுத்தசெய்யானும்
அட்டையுமொட்டுது - மட்டையுங்கட்டுது (அன்னமே)



பச்சைமரங்களுமிலைகளெரிந்து [பார்த்துபோச்சுதே-இந்தப்
பாரினிலொடித்தங்கணிவனைக்கானலைப்பார்க்கலாச்சுதே-இனி
நச்சரவங்கள் நாடவொட்டாது
நன்மெதெறுக்காயைக்-கண்டுபொறுக்காயே (அன்னமே)

சந்திரவதி சொல் - கலிப்பா

இ-ம்- புந்நாகவராளி.

உத்தமனேயிந்நேர மோயாமல்காய்ந்தகதி
ரத்தமிச்சுதிருள்வேளையாச்சுதிந்தவடவியிலே
புத்தமுதமுஞ்சோறும் பூசுரர்க்குமைந்தனுக்குஞ்
சித்தமகிழ்ந்தளித்துபசி தீர்ப்பதற்கென்செய்வேனே.

வசனம்

கேளு மென்பிராண நாதா - இன்னேரம் ரவுத்ராகாரமாய் காய்ந்தசூரியபகவானும்அஸ்தமானமாச்சுதுஇனி யிருட்டுகாலமா யிற்று இந்த நச்சுத்தரயருந் தேவதாசனும் பசித்திருக்கமாட்டார்க ளே இதற்கென்ன செய்வோஞ் சுவாமி.

இராசன்சொல் கலிப்பா-இம்-புந்நாகவராளி.

மாதரசேசந்த்ரவதி மன்னுபுகழ்காசிவிஸ்வ
நாதர்செயலெப்படியோ நாமறியமாட்டோமே
சோதாசத்திய கீர்த்தி தொண்டுடனேகொண்டுவந்த
கீதரசகாய்கனிகள் தின்றுபசிதீர்வோமே

வசனம்.

கேளாய் சந்திரவதி காசிவிஸ்வநாத சுவாமியார்திருவுளச் செய லெப்படியோ நாமறியமாட்டோமேதம்பிட தம்பிசத்திய கீர்த்தி கொண்டுவந்தகாய்கனி கிழங்குகளைப்பொசித்து இந்த ஆற்றின் கரை மணலிலே நித்திரைசெய் திளப்பாறிப் போகலாம் நில்லுங்கள்.

நச்சுத்திரகன் சொல் வெண்பா

இ-ம் - சங்கராபரணம்.

பசிக்குதரிச்சந்த்ரா பால்மோர்தயிர்பருப்பு
ருசிக்கும்பசுவின்னெய் புழுக்குடனும்-பொசிக்கும்

வாய்க்கினியசோறுகொண்டு வாராய்நேக்குருங்கள்.
காய்க்கனிகளாகாதுகாண்.

வசனம்.

ஓஹோ காணும் மோயரிச்சந்திரா இன்றையதினம் பகல் முழுவதும் அன்னமாகாரமில்லாமல் வெய்யிலில் நடந்து இளைத்துக் களைத்து மூர்ச்சைவருகிறது மன்றியில் மெத்தவும் பசிக்கிறது நான் பொறுக்கமாட்டேன். நெய்யுடியென்றும் நல்லசம்பா அரிசியும் பசுவின் பால் தயிர் மோர் நெய்யும் பலவித பதார்த்தங்களும் இல்லாதிட மாய்க் கொண்டுவந்து கொடுத்தால் நான் சாப்பிடுவேன், வெட்டி கிழங்கு காய் கனி இவைகளை நான் புசிக்கமாட்டேன் முதல் முதல் பிராமணனைப் பட்டினி போட்டு எப்படிப் பொசிக்கின்றையோ பார்ப்போம்.

சந்திரமதிசொல் பாடிக் கட்டளைகலிப்பா

இ-ம்-புந்நாகவராளி.

சொட்செந்திரமல்ல சோறுசமைத்தன்னை
பிட்சையேர்க்கப் பிறப்பட்டவேளையோ
நக்ஷத்திரகரே நற்கனிகாய்களைப்
பட்சித்திப்போது பசிதீருமையரே.

வசனம்.

ஐயா நக்ஷத்திரகரே, இதுவோ ஆரணியமானகாடு இங்கே சோறு கேட்டால் எங்கிருந்து கொடுப்போம் எங்கேயாவது போய் இரந்துக்கொண்டு வருவோமென்றால் இருட்டு காலமாச்சுது இது வேளையல்ல இந்நேரமிருந்தகாய் கனிகிழங்குகளைப்பட்சணமாக இன்றிரவு இவைகளை இரட்சிக்க வேணுஞ் சுவாமி.

நக்ஷத்திரகர்சொல் விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

இவ்விலந்தன்னில் மன்று யிருவருடன் மனைவியுங்காத்து
மின்னலுமிடியுஞ்சப்த மேகமும்பெய்யுதென் றன்
முன்னிலை விசுவாமித்திர முனிக்கன் றுகொடுப்பேனென்ற
பொன்னிலையென்று சொல்லும் போறதுமிழைக்கலாமோ



வசனம்.

ஓஹோ காணும் ஓ அரிச்சந்திரமகாராசனே இதோபாருமிந்த இராத்திரிகாலத்தில் சண்டமாருதமும் அண்டாண்டபகிரண்டமதிர மாண்ட தவகண்டமிக்க இடிமின்னுருமேபடியாய் மின்னலிடியுடனே சம் தமேகங்களும் ஒருமுகமாய்ப் பெய்யுதே இனியிந்த ஆரணியமிருக்குமா இந்தமழையிலிந்த காற்றிலிந்த இரவிலெங்கே போகக் கொண்டு நீங்கள் சாகிறதுமல்லாமல் நானும் சாகத்தக்கதிலே முந்தோ நீயென்மேல் கடனில் விசுவாமித்திரருக்குக் கொடுக்க வேண்டிய பொன்னிலையென்றொரு வார்த்தைச்சொன்னால் போதுதிரும்புங்களேன் அயோத்திக்குப்போகலாம்.

இராசன்சொல் விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

சத்தியமறையோயென்றன் றலைமீதிலே விதிக்கொள்ளுஞ்
சத்தியகீர்த்திதேவதாசனைபெறுத்துக்கொள்ளும்
சத்தியமுருவாய்வந்த சந்திரமதியென்றேன்மேல்
சத்தியந்தனையென்றேனும் தாண்டமாட்டேன்றானே.

வசனம்.

வாருஞ்சுவாமி நக்ஷத்திரகரே, இந்த மழைக்குங் காற்றுக்கும் பயந்து நான்சத்தியந் தப்பிப்போக மாட்டேன் இனிமேல் பிழைப்பிருக்கு மிவ்விடத்திலிருந்தால் நாளையதினம் இந்த ஆரணியத்திலிருந்துவிட மாட்டாது, இப்போதே அக்கரை போய்ச்சேர வேணும் தேவரீர் அடியேன் பின்னிடமே சேருகின்றீரும், நீர் சத்தியகீர்த்தி நீ இந்த தேவதாசனை யெடுத்துக்கொள்ளும், பெண்ணே சந்திரமதி நீ என் புஜத்தின்மேலேறிக்கொள்ளு, நமக்குச் சத்தியமே துணை ஆற்றைக்கடந்து அக்கரை போகலாம் சுருக்காய் வாருங்கள்.

சந்திரமதிசொல் விருத்தம்.

இ-ம் ஆனந்தபைரவி.

ஆழியப்புறையிற்செங்கோ லரசியோறைபுருளவிக்கும்
நாழியப்புவிதனிலின்பமில்லையெல்லாந்தங்கும்
பாழியர்கடந்தேராண்டீரன்னையாயுமக்கேற்றா னு
ஆழியத்தேசெய்துபிழைத்தின்று வென்னருளென்னை நாதா

வசனம்.

கேளும் என்பிராணநாதா, ஆக்கினைச்சக்கரம் - பொறை-துணி-வில்-செங்கோல்-தருமம்-பொறுமை-கிருபை-சர்வசெனங்களுக்கும் படியளந்து இரட்சிக்கும் நாழி சத்தியம் இராச்சியபாரம்-இவைகளை யெப்போதுந்தாங்கிக்கொண்டிருக்கும் உமது புஜத்தின் பேரில் நாயினுங்கடையாளாய் ஊழியஞ்செய்யும் அடியாளோதூக்கிக்கொண்டுவர தெய்வத்துக்கொப்புமோ சுவாமி.

தேவதாசன் சொல்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

ஐயனேயெனைப்பயந்த அன்னைபேதாருவந்த
ஐயரோதீங்களிந்த அடவியில்வெயர்வுசிந்த
வெய்யலில்விடாய்த்ததல்லால் வெள்ளத்தினடக்கச்சின்னப்
பையல்தான்மந்திரியிது பாரம்வைத்தேறொண்ணுமே.

வசனம்

என்னையனே சரணம், தாயேசரணம், தாங்கள் விஸ்வாமித்திரரிஷிக்குக் கொடுக்கவேண்டிய கடனுக்காக எங்கள்பின்னே தகுவந்த நச்சத்திரகையரோ சரணம், நீங்களிவ்வளவுதூரம் வெய்யலில் வழிநடந்து வியர்த்து விடாய்த்ததுமன்றி இப்போதிந்த ராத்திரிகாலத்தில் பெருங்காற்று மழையில் தண்ணீர்புரண்டு காடுமேடெல்லாம் புரண்டு கரைகாணாமல்வருகின்ற ஆற்றின் வெள்ளத்தைத் தாண்டி பிரயாசையாய் நடக்கும்போது அடியேனிந்த மந்திரி தோள்மேலேறிக்கொண்டுவர மனதொப்புமோ சுவாமி.

இராசன்-தரு-இ-ம்-அசாவேரி-அட்டதாளம்.

பல்லவி.

இந்தமழையில் காற்றிலிடியில் மின்னலிலாற்றி
லிழிந்தெப்படிநடப்போம் நம்பி-மழை
பொழிந்தப்படியிருக்குதே நம்பி-மந்திரி

அனுபல்லவி.

சுந்தரவதியேபெண்ணே-அந்தணரேயென்கண்ணே
தனையனே-அட-தேவதாசனே மனதில்
நினையுங்களிதுநல்லயோசனை-காசி
வாசனைவிஸ்வேசனை (இந்தமழை)



சரணங்கள்

காரிருளால்வழி-காணேனென்மேற்பழி
காரணம்வினைவதற் காக-வழி
பூரணவெள்ளப்பிரவாக-ஆற்றி
னீரினிலாழங்கள்-பாரினில்வேழங்கள்
நின்றாலும் நிலையாதபள்ள- மப்பால்
சென்றாலுமலைமோதும்வெள்ள
முனிவனுள்ளம் - நினைவுகள்ளம் (இந்தமழை)

காலால்வழிநடவி-கல்லில்முள்ளிலடவி
கட்டைமுளை யிடறிவிழுந்து-பாம்பை
முட்டைகளைமிதித்தெழுந்து-கை
கோலால்முன்னூன்றிக்கண்குருடர்போல்தவித்தாலின்
கொடிமின்னல்விளக்கத்தைக்கண்டு-மென்ன
அடியின்மேலடிவைத்துக்கொண்டு
பின்னைபெண்டு-வுள்ளலண்டு. (இந்தமழை)

நச்சத்திரகன் சொல்-விருத்தம் இ ம்-ஆனந்தபைரவி.

துயிரியமாகவாற்றைத்தாண்டிமீர்களுக்கும்
எயிரினிப்பேய்பூதத்துக்கிரையாகவந்தோமிங்கே
உயிரிருந்தாலும்நீங்களுப்புக்கல்மாறியுண்டு
வயிரிலிவளர்க்கலாம்பொய்வார்த்தையொன்றுரையாய்மன்னா.

வசனம்.

ஓய்ராசனே ஒருகாலுமுதலே முழுகிப்போகவந்ததுமென்ன இக்கரைவந்துசேர்ந்தோம் இனி சற்றே நித்திரைசெய்வோமென்றால்பலவித மிருகங்களும் பேய் பசாசு பூதவேதாள பிரமராட்சசங்களும் வந்து மறித்துக் கொண்டுதே இதற்கென்ன செய்யலாமினி உயிரிருந்தா லுப்புமாறியுண்ணலாம் நீயந்த விஸ்வாமித்திரருக்குக்கொடுக்கவேண்டிய பொன்னில்லையென் றொரு வார்த்தை சொல்லிப்போடு இனியாவது பிழைத்துப் போகலாம்.

இராசன் சொல் விருத்தம்-இ ம் ஆனந்தபைரவி.

முன்னுக்குவந்தகாரியமுழுதும் பாரமற்காலைப்
பின்னுக்குவாங்குவோராண் பிள்ளைகளல்லவென்பார்.

தன்றனக்குமுண்மைதானுந்தலைக்குரு விசுவாமித்ரர்
பொன்றனக்குவகையுஞ்சொல்வேன் பொய்சொல்லமாட்டேனையா

வசனம்.

சுவாமிநக்ஷத்ரரகரே, முன்னேவைத்தகாலைப் பின்னேவாங்கிக்கொள்ளுவதென்ன ஆண்பிள்ளைத்தனமல்லவே, இந்தகரடிபுலி சிங்கங்காட்டானை முதலாகிய துஷ்டமிருகங்களும் தம்மை யொன்றுஞ் செய்யமாட்டாது நீர் பயப்படவேண்டாம் எவ்விதமவது விஸ்வாமித்திரர் பொன்னுக்கு வகைசொல்லுவேனேயல்லது பொய்யைமாத்திரஞ் சொல்லமாட்டேன் சுவாமி.

இராசன் சொல் வெண்பா-இ-ம்-சங்கராபரணம்.

பொய்யினிதாய்ச்சொல்லிப் பூதலத்தில்வாழ்ந்தென்ன
மெய்யிக்கில்லத்திலேதுச்சணங்களே-மெய்யினிரான்
சொல்லுவதலால்வேறோர் துணையில்லையென்னையின்று
கொல்லுவதேநல்ல குணம்.

வசனம்

கேளுங்கள் மிருகங்களே பூதவேதாளங்களே, இனி நான்பொய்யைச் சொல்லி இந்தப் பூமியி லிருந்தாவதென்ன, மேலும் உங்களுடைய வெறித்துச் சண்டைசெய்ய வெல்லையில் வில்லம்பென்ற ஆயுதங்களுமில்லை, சத்தியமேதுணை, என்னைமாத்திரந் தின்றுபோடுங்கள் என் பெண்டு-பிள்ளை-மந்திரி எங்கள்பேரில் தாருவாந்த ஐயாரியர்கள் நால்வரையும் விட்டு விடுங்கள் உங்களுக்குப் புண்ணியமுண்டு பூதகணங்களே.

இராசன்-தரு இ-ம்-தோடி-ஏகதாளம்

பல்லவி.

காசிக்குப்போகலாம்வாநீர் வரு
கங்கைகளைப்பல பாரீர் நன்றாய்

அநுபல்லவி

வாசிக்கும்வேதிய மந்திரிச்சந்திர
வதிமைந்தசெய்ய பதியிற்சுந்திர (காசிக்கு)



சரணங்கள்.

சிங்கமுதல்மிருகங்களுலவுமித்
திங்களையின்மணற் சுண்டல் -மிக்க
செழுமையாய்வளர்ந்தெழுமிச்சோலையிற்
செருதுபார்கருங் கொண்டல்
பங்கமுஞ்சந்தனக் குங்குமக்குழம்பும்
படிந்ததேயிந்த வண்டல்-மலைப்
பாம்புங்கொடிகளுங் காம்புஞ்செடிகளிற்
பற்றியிழுப்புண்டு மண்டல்-வெண்
சங்கமலறியின் றெங்களுங்கொழிக்கும்
தாளங்கங்குலி னிருளையொழிக்கும்
மங்கைநின்றுந்திபோற் கங்கையிற்சுழிக்கும்
மகத்வம்பாரிபுகழ் மிகுத்துசெழிக்கும் (காசிக்கு)

காணநதியின்னம் வேணதுண்டுகங்கை
கண்டுநடந்தோ மெத்தூரம்-இனி
கல்லுங்குன்றும்நில்லு நில்லுமென்றுசொல்லுங்
காடுங்கடந்தோம் விஸ்தாரம்
சோணநதியின்பிரமாண மொருவரால்
சொல்லவரிது சிங்காரம்-முனி
சொன்னபொருளுக்கிங் கெண்மடங்குபொருள்
தோன்றுதுபார் கரையோரம்-உயர்
சேணளவுபொருள் தேடிக்கொடுக்க
திறமதாய்நக்ஷத் தரகர்தடுக்க
சாணளவுவயிர்தள்ளி யுண்டுடுக்க
சைவத்தைபேடேற்றுந் தெய்வத்தையடுக்க (காசிக்கு)

செந்திருவைநிகர் சந்த்ரவதிமைந்த
தேவதாசாயிந்த ஆறு-நல்ல
தீர்த்தமந்திரிசத்ய கீர்த்திநம்பாவத்தைத்
தீர்த்தருள்செய்யும் நற்பேறு
இந்திரதேவர்க்கு முந்தியமூவர்க்கும்
யாவருக்குமகிழ் மீறும்-இந்த

ம

எழுனைமாநதிதனில்மூழ்கிக்கனா
யேறுங்கள்முன்வர லாறு-நல்ல
வித்தையிருந்தகா ருத்திநதிகண்டு
விருடன்சுத் தாகர்க்குத்தொண்டு
சிந்தைமகிழ்ந்தேவல் செய்தனைத்துக்கொண்டு
சிலமுடன்கந்த மூலந்தன்னிருண்டு
காசிக்குப்போகலாம்

நட்சத்திரகர் சொல்-விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி.

வெய்யில்மழைமின்னலிடியிருள்காற்றெங்கும்
வெள்ளமும்பூதமும்மிருகமிருந்தகாட்டில்
தையல்மகனியுமுன்றன்மந்திரியென்னுஞ்
சத்தியகீர்த்தியும்யானுந்தப்பிவந்தோம்
வையமும்வானமுமொன்றாய்வளர்ந்தேயோங்கி
வருமக்கினியாற்றுக்கினிவகைவேறெண்ண
செய்யலாமெடுத்திங்கடிவைக்கொணாது
திரும்புவீருயிருடனேவிரும்புவீரோ.

வசனம்.

ஓய்ராசனே நாமயோத்தியை விட்டுப்புறப்பட்டது முதல் வெய்யலினு மழையிலும் காற்றிலு மின்னலிலும் இடியிலு மிருட்டிலும் கரைபுரண்டவெள்ளத்திலுந் துஷ்ட மிருகங்களிலும்பூதவேதாளங்களிலும் தப்பிப்பிழைத்து வந்தோம்இதோ பார்த்தீரா ஆகாயத்துக்கும்பூமிக்குமாயெரிகிற அக்கினியாற்றைக்கடந்தெப்படிப்போகலாம் அக்கினியிலேவிழுந்தாலுந்தெரியுமாமேலும் ஒருராசனைச்சாப் பிடுகிறேனென்றுவந்திருக்கின்றது, இனிநானொருத்தடிவைக்கமாட்டேன்திரும் புங்கள் அயோத்திக்குப்போகலாம், இது காணுஞ்சுட்டுப்போடுகிறது ஒருவார்த்தை பொய் சொன்னால் ஐந்து சீவன்பிழைத்துப்போறது ஒருமைசொல்லிப்போடு.



சந்திரமதிசொல்விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி,

மன்பதையோர்க்குமூன்றாக்கள் மாநிலந்தன்னிலோர்பொய்
அறையவுமாட்டேமிந்த அக்கினியாற்றைத்தாண்டி
நறையவிழ்பொழிலுடுக்காசி நகர்க்குப்போயுன்றன்பொன்
நிறையவுந்தருவோமினி நீருமப்பின்வருகுவீரே.

வசனம்.

ஐயாமி நட்சத்திரரே, நாங்கள் பொய்வார்த்தையைக் கனவிலும் நினைக்கமாட்டோம், இந்த அக்கினியாற்றைக் கடந்து காசிக்குப்போய்ச்சேர்ந்து கடன்பொன்னையுங் கொடுத்து விடுவோம் இந்த நெருப்பாற்றில் நான் முன்னேயிறந்து நடக்கிறேன் நீங்கள் தவறுபெறும் என்பின்னே வாருங்கள் போகலாம்,

தேவதாசன்சொல் விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

பெயினாற்றுடனேவந்த பிரமாவுடனேவேதாளங்கள்
வாயினால்பேச்சைக்கொண்டு வழிவிட்டுப்போச்சுதென்றனே
ஆயுமூச்சேறுமிந்த அன்னத்தின்திருத்தப்பாதத்து
நாயினிர்கடையேன்முன்னே நடக்கின்றேன்வருகுவீரே,

வசனம்.

கேளுமென்தந்தையே, பேய் பசாச பூதவேதாளங்களுங் கதி ரவன் மகிழ்ந்து கொண்டன, ஏறு வாய்ப்பேச்சைக்கொண்டு மறைந்து போயின இப்படியிந்த அக்கினியாற்றில் குதித்தபோ தும் முன்னே நடக்கிறேனீங்களென்பின்னே வாருங்கள் என்றார் தையே சத்தியகீர்த்தி நட்சத்திரரே,

சந்திரமதிசொல் கட்டளைக்கலிப்பா.

இ-ம்-புந்நாகவராளி.

மதிகுலமன்னனாமரிச்சந்திரன்
மனைவியாய்த்தேவதாசனைமைந்தனும்
கதிகுருக்குலத்துநைக்கிதிப்பாரிடை
ஏழுந்திசத்தியகீர்த்தியுமந்திரியாய்

பதிதனைவிஸ்வாமித்திரர்க்களித்திந்தப்
பாரில்யாத்திரைப்போறதுமெய்யென்றால்
கொதித்துருமக்கினியாறுசுடாமலே
குளிர்பன்னீர்த்துளிர்போலிருக்கவே,

வசனம்.

அரகாசி விசாலாட்சித்தாயே, நானுபதிதயமகாராசனுகுமாரத்தியாய் இந்த அரிச்சந்திரமகாராசனுக்கு மனைவியாய், தேவதாசனென்பிள்ளையாய், சத்தியகீர்த்தியுமந்திரியாய் எங்கள்குலக் குருவும் வசிஷ்டராய் நாங்கள் விஸ்வாமித்திரருக்கு நாடு நகரமுதலாகிய அந்தத்தாரைவார்த்து காசியாத்திரை போகிறது மெய்யென்றால் ஆகாயத்துக்கும் பூமிக்குமாயெரிகின்ற அக்கினியானது விலகிப்போவதுமன்றி குளிர்ந்த தண்ணீர் போலிருக்கவேணுந் தெய்வமே,

சந்திரவதி-தரு-இ-ம்-யமுனாகல்யாணி ஏகதாளம்.

பல்லவி.

அக்கினிதேவமக தேவா - இனி
அருள்செய்மகானுபாவா

அநுபல்லவி.

புக்கிதின்றேமுன்ற னுக்குநடுவாய்
போகவழியெங்கட் - காகவிடுவாய் (அக்கினி)

சரணங்கள்.

முப்புரத்தைச்சிரித் தெரித்த - தனி
முதல்வனுதலித் தரித்த - உனக்
கெதிரொருவருண்டோ வுலகினிற்செய்யும்
ஓமனெய்யுந்தின்ட - சமனையுமுண்ட (அக்கினி)

காணமனமகிழ மாட்சி - மாதர்
கற்பென்பதற்குநீ சாட்சி - பிர
மாணமன்னன்மகள் - மந்திரியந்தனன்
வந்துவிடக்காட்சி - தந்தகடாட்சி (அக்கினி)



காசிநகர்வளம்பார்க்க - முனி
கவுசிகருணந்திரிக்க - நாங்கள்
விசிநடக்கவும் - பேசினதற்கொரு
விக்கினமும்நீசெய்ய - தக்கதில்லையே (அக்கினி)

இராசன்சொல் விருத்தம்,

இ-ம்-ஆனந்தபைரவி.

செங்கையில்மழுமானேந்துஞ் சிவன்செயலாலுயர்ந்த
மங்கையில்லறம்வளர்க்கு மகிமையிருதுமிக்க
சங்கையில்லாமல்வந்த தணலாற்றைக் கடந்தோங்கா
கங்கையில்மூழ்கியந்தக் கடவுளைப்பணிவோம்வாரீர்

வசனம்.

வாராய் மந்திரிசத்தியகீர்த்தி பரமசிவன் திருவருட்செயலினாலேயும் இந்தச்சந்திரவதி பதிவிரதாதருமத்தினாலேயும் பூமிக்குமாகாயத்துக்கும் எரிந்துவந்த அக்கினியாற்றைக்கடந்து காசிமாநகரத்தையுங் கண்டுதரிசித்தோம் இனியிந்தக் கங்காநதியில் ஸ்நானம்பண்ணிகாசிவிஸ்வநாதர் திருக்கோபுரத்தையுந் திருச்சந்நிதியையுந் தரிசிப்போம் வாருங்கள்.

இராசன்-தரு-இ-ம்-தன்யாசி-ஆதிதாளம்.

பல்லவி.

நதியிலுயர்ந்ததென்ன கெங்கை நீராடினோம்நந்
கதியிற்சராவதற்கென்ன சங்கை

அநுபல்லவி,

மதியிலுயர்ந்தமந்திரி-மைந்தா சந்திரவதி
மறைபவமேயிம் மாலதிசெய்கை
அறையவுநம்மா லாகுமோவங்கை (நதியி)

சரணங்கள்.

துங்கபத்திரிகோதாவிரி-நல்லநிர்மதை
ஞாயசரஸ்வதி காவிரி
பொங்கபத்மமகிருஷ்ணை
புனிதமாம் புட்கரணை

புண்யகோட்டிநதி புலவரொருநினை
மெண்யநாட்டிடமா செறிதரும்பழமனை (நதியி)

பஞ்சபாதகமும் போமே-சொல்லுஞ்சகல
பாக்யங்களுமிகவுண்டாமே
சஞ்சமரு விலாசங்
காணுந்தெய்வவிஸ்வாசங்

காமக்கோட்டிதிரு கச்சியிலம்பர
ஏமகுண்டநவ முக்திதரப்பா (நதியி)

கோசிகமுனிவன் பொருளாலே நமதருலக்
குருவசிஷ்டர்தன் னருளாலே
காசிகங்கையைக் கண்டோங்
கர்மமிங்கேயே விண்டோங்

கற்பகவனமெங்கும் கமழ்தருஞ்செய்ய
பொற்பதியோர்களும் புகழுநிதிய (நதியி)

நக்ஷத்ரகன்சொல் விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

முக்காலுந்திரிகாக முழுகியுங்குளித்திட்டாலுங்
கொக்காகுமாகும்பிட்டுக் குளைத்திட்டெண்ணத்தையும்பாய்
இக்காசிதனில்நின்று பொன் னெவருங்கேட்பாரோ
திக்காருமில்லாவிட்டில் திருடித்திப்பதைப்பாரென்று,

வசனம்

ஓய்ராசனே ஒருகாலும் ஒருமைமுழுகிறதும் குளிக்கிறதும் கும்பிடுகிறதும் குளைத்திடுகிறதும் விசேஷம், முக்காலுங்காக முழுகிக், குளித்தாலுங் கொக்காகப்போகாரா, பேய்க்காலும் போய் கும்பிட்டுக்குளைத்திட்டு வந்தோனனைத்தை யிட்டுக்கொண்டுபோமோ யென்ற வார்த்தைப் ப்ரசித்தியாயிருக்கிறது இனி அந்த விஸ்வாமித்திரருக்குக்கொடுக்கவேண்டிய பொன்னைப்பவனுடன் கேட்டாக்கெவான் கொடுக்கப்போறார் அருக்காய்போய் ஒருவருமில்லாதவீட்டாய்ப்பாரு திருடியாவது வயிறுவளர்க்கலாம்போகாம் வாருங்கள் நேக்கு மெத்தபசிக்கிறது,



சந்திரவதிசொல் விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

புலைகொலைகளவுகோன்சொல் பொய்யிவையைந்துமுள்ளோர்
நிலைகுலைந்தலைவரென்ற நீதிசாஸ்திரமும்வேத
கலைகளுந்தேர்நீரொம்மைக் களவுசெய்யென்னைச்சொன்னீர்
தலைகளைவாங்கநல்ல தனையறிந்திலாத்திரிசுவாமி.

வசனம்.

சுவாமி நக்ஷத்ரகரே, புலை-கொலை-களவு-கோள்-பொய் இவ்வைந்தும் பஞ்சமாபாதகமென்றுசொல்லும் நீதிசாஸ்திரங்களையும் வேதவாக்கியங்களையும் நன்றாய்த்தேர்ந்த நீரெங்களைத் திருடித்தின்னச்சொன்ன தேவரீர் தமைபோலும் எங்கள் தலையைவாங்க வாதலைபோனாலும்போகிறது அந்தப்பழிபாதகமெந்தகாலத்திலும் தீர்கும் உமது பொன்னை இனியெங்கேயாவது இரந்துசலிச்செலுத்துகிறேன் சும்மாவாருஞ் சுவாமி,

இராசன்சொல்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

சந்திரவதியேமுன்செய் தவத்தினாற்காசிகண்டோஞ்
சுந்திரமதிலுங்கண்டோஞ் சொர்ணகோபுரமுங்கண்டோம்
இந்திரபதிபோலெங்கு மிலகுமாடங்கள்கண்டோஞ்
செந்திருவதியுங்காசி தேவனைப்பணிவோம்வாராய்.

வசனம்,

வாராய் பெண்ணே சந்திரவதி இதோ காசிவிஸ்வநாதசுவாமி யார் திருக்கோவிலுந் திருமதிலுந் திருச்சந்நிதியு மடமாளிகையுந் தெரியுதபார்த்தையா இனி நாம்சுவாமி தரிசனஞ்செய்துமற்றொருகாரியம் பார்க்கலாம் வாருங்கள்.

இராசன்-தரு-இ-ம்-நீலாம்புரி-அடதாளம்.

மூர்த்தி-பாத
செல்வவிநாயக
தெரிசனஞ்செய்வோமத்திரிசத்யகீர்த்தி

வில்வங்கமழுந் திருக்காசி.தெரு
வீதியைப்பாரீர்நன்வீதியைப்பேசி
சிவகுருநாதசன் முகமே-நாளுந்
சித்திப்போமகனேநாம்நந்திகேசுவரரே
பலகாருஞ்செயுஞ் சபாபதியே-சன்றால்
பாரிவதிதரிசனைப்பாரீசத்தீர்வதியே
கோதிலாருண விசுவேசுரரே-பாரீர்
கொடுக்கும்பொருளுக்கெல்லைத்தடுக்கும்புகாரே
குதிலாவீர பத்திரரே-நாம்
துதிசெய்துப்பணிகுவோம்பதிரேருத்திரரே.

இராசன் சொல் விருத்தம் இ-ம்-நவரோசு.

விடைக்கொடியசையுங்காசி விஸ்வநாதத்தேவாநின்
னடைக்கலமெமக்குவந்த வாயத்தைத்தீர்க்கவேணும்
சடைக்கவுசிகற்குச்சொன்ன தனதெனைத்திரச்சற்றே
கடைக்கண்பார்த்தருளிச்செய்வாய் கடவுளேபோற்றிபோற்றி

சந்திரவதி-சொல்- கலிப்பா
இ-ம்-புத்தாகவாளி.

காட்சிதருமதிதிவ்ய கங்கைமாநதியுமிரு
வாட்சிமருமலம்பகட்பூ வணங்கரூஞ்சூழ்காசிவிசா
லாட்சியெனுந்தாயேநின் னடைக்கலமெங்களுக்கிங்கோர்
தாட்சியுவாராமல் தயைபுரிச்செய்வாயே

சந்தியமூர்த்திசொல்-விருத்தம்.
தேவாரம்.

திங்கள்செஞ்சடையாய்போற்றி திரிபுரமெரித்தாய் போற்றி
சிங்கவெள்விடையாய் போற்றி அலங்குமுக்கண்ணாபோற்றி
மங்கையோர்பாகா போற்றி மாலமழுகரனே போற்றி
கங்கையைதரித்தாய் போற்றி காசிவிஸ்வேசா போற்றி.



தேவதாசன் சொல் விருத்தம்.
இ-ம்-ஆனந்தபைரவி,

நேரனயன்விண்ணோருந் தேடுதற்கரியவிஸ்வ
நாதரன்புற்றகாசி நகர்விநாயகர்பின்வந்த
சோதரனென்னுந்திவ்ய சுப்பிரமணியசுவாமி
யாதரவெனவுன்பாத மண்டினேனருள்செய்வாயே.

இராசன்சொல்-தோத்திரம்-அகவல்.
இ-ம்-எதுகுலகாம்போதி.

அரகரசிவசங் கரதிகம்பரனே
காமதில்மால்மழு கதிக்குந்தற்பரனே
விடைமிசையேறும் விமலமெய்ப்பொருளே
சடையினில்நதியதி சரக்கொன்னறதிகழும்
நாதனேயடியார் நவில்துதிக்கிரங்கும்
போதனேயரவ பூஷணமணிந்த
ஐயனேபுலித்தோ லாடையாயுடுத்துந்
துய்யனேஞானத் தோற்றமாமுதலே
சச்சிதானந்தத் தயாநிதிக்குன்றே
முச்சகம்போற்று-முக்கணனவனே
தத்துவச்சுடரே தனியிலாநிறைவே
அத்துவிதக்கதி யாகவேயொளிரும்
ஆனந்தமோனத் தமர்ந்தமாமணியே
ஞானவாரிதியே நான்மறைமுடிவில்
நடஞ்செய்தற்பரனே நவமணிக்குன்றே
கடல்சூழ்புவிதுதி காசிவிஸ்வேசா
அஞ்சுகமொழியை அடர்விசாலாட்சி
கொஞ்சிடப்பாகங் கொடுத்தநாயகனே
தொண்டனேன்பட்ட துயர்தனைக்கேட்பாய்
அண்டர்கள்புகழும் அயோத்திமாநகரின்
சிருந்சிறப்புஞ் செல்வமுஞ்செங்கோல்
ஊருப்பதியும் ஓங்குமென்னரசும்

இழந்தடல்யாளும் எந்திழைதனும்
பழங்கந்தையுடுத்திப் பரதேசியாய்நாங்கள்
வரும்வழிதனிலே மழையிடிகாற்றும்
பெருவிஷப்பாம்பு பெருத்தவெம்புலிகள்
கட்டெறும்பரணை கருங்குளவிகளும்
மட்டிலாத்தேளும் வரும்பலசெந்துவும்
கொட்டிடக்கடிக்கக் கொதித்துத்தள்ளாடி
கட்டுமேனிசோர்ந்து மெய்வெதும்பி
பூதப்பசாசின் போர்தனிலன்று
சேதப்படாமல் செத்தும்பிழைத்து
காயிலையருந்தி கருகிநெஞ்சமன்று
ஓய்விலாத்துயர முள்ளிருந்தலைக்க
மகன்முகநோக்கி மங்கைநானழவும்
மகிழ்சுகமாதென் மலர்முகநோக்கத்
துக்கமேலிட்டுத் தோகைதன்முகத்தை
நெக்குவிட்டுருகி நின்றுநான்பார்க்கக்
கதறிமூவர்களுங் கலங்கிநின்றழுதே
பதறுதல்கண்டும் பக்ஷமில்லாமல்
கடன்தரச்சொல்லிக் கடிந்திடுமிவர்க்கோ
ருடன்படிக்கையின்மே லுறுதியொன்றளிக்க
வேறொருவழியு மில்லாமல்மயங்கும்
போதுன்றனெல்லை புக்கியேயுமது
ஆலயம்வந்துன் அடியிணைபணிந்தோம்
மாலயன்பரவு மாவிஸ்வநாதா
மிகுதவவிஸ்வா மித்திரனென்னை
வெருவெருமாறு வித்தைகளின்னம்
எத்தனைசெயினு மேங்காதிருந்து
சத்தியமாய்க்கடனைத் தரும்வகைபுரிவாய்
அந்தனேகாசி யரும்பதிவாழ்வே
சித்தமேயிரங்குந் தேவநாயகனே.



நக்ஷத்திரேயன் சொல் விருத்தம்.
இ-ம்-ஆனந்தபைரவி.

காசிக்குப்போனாலுந்தன் கர்மமுந்தொலையாதென்று
பேசிக்குலகவார்த்தை பிசகில்லையதற்குமேலு
மேசிக்கொள்வதற்கிங்கே யுபசாரலாங்கனைக்குநேர்க்கு
கௌசிகமுனிபொன்றந்திக் கோட்டைவிட்டிப்பால்வாராய்

வசனம்.

ஓய் இராசனே காசிக்குப் போனாலுங் கர்மந்தொலையாதென்ற கதையைக்கேட்டதில்லையா, ஊசு காணுமொருமை குளிக்கிறதுமுழுகிறதுங் கும்பிடுகிறதுங் குழைத்திடுகிறதும் வீண்சம்பம் இத்தக்காசிக்குவந் திரண்டு நாளாய்ப்போச்சுதா யில்லையா காசிப் பட்டணம்போய்ச்சேர்ந்தவுடனேவிஸ்வாமித்திரர்றொக்கத்தைக் கொடுத்து விடுகிறேனென்று சொன்ன வார்த்தையுண்டா யில்லையா, நல்லதிப் போதாவது பொன்னுக்கென்ன வகைநீஓது ஒருலமகொடுக்கிறாயா அவ்வளவு பொன்னு மெங்கிருந்து கொடுப்பாய் பிட்சையெடுத்துக் கொடுக்கப் போறதா, இதற் கேன் ஊசிகொள்ளத்துலாங்கனைக்கு, நல்லதிப்படி நில்லுக்களாச்சாரியார்பேரிலானை யிருக்கிற பொன்னைக்கொடுத்து விட்டந்தக்கோட்டை விட்டிப்புறம் வாருங்காணு மப்படியே நில்லு.

இராசன் தரு-இ-ம்-பைரவி-ஆதிதாளம்.

பல்லவி

ஆணையைவிட்டுவிடுமையா இலங்-- அட்டியில்லாமல்பதறும்
வட்டியுந்தருவேன்மெய்யா (ஆணையை)

அனுபல்லவி.

நாணயமாகக்காசி நகரில்நான்வரும்வரு
நடுத்தெருவினிலென்னை நடுத்திரதல்லால்குரு
ஆணையைவிட்டு

சரணங்கள்

பொசிக்குமன்னமில்லாமல்-இளைவிட்டப்பால்
போய்நிழலில்நில்லாமல்-வயிறு
பசிக்குமெங்கள்முகத்தைப் பாருமையகோசிகர்
பணந்தருகிறேனென்று கூவைத்தனிலேதேசிகர் (ஆணை)

வெய்யல்மிகவுங் காயுதே-விடாய்த்திளைத்து
வியர்த்துடம்பெங்குந்தீயுதே-சின்ன
பைய்ல்சோர்ந்துப்போகுது பன்னிரண்டுசூரியர்
பகலிலுதித்ததுவோ புகலிரொய்ஞாச்சாரியர்
ஆணையைவிட்டு

கடன்கொடுத்துப்பின்வாங்குவார்-இளைத்தவரைக்
கனத்தவர்கள்கை தாங்குவார்-என்ற
ஞான்படிக்கையுமக்கிங் கொவ்வாதிருப்பதேனோ
வுலகிற்கடனுளிநா னொருவனெனப்படுதானோ
ஆணையைவிட்டு.

இராசன் சொல்-விருத்தம்- இ-ம்-முகாரி.

* படியினிலடியேன்பஞ்சு படும்பாடுபட்டுமெந்தன்
முடியினிற்கந்தைபூண்டும் மூவர்கள் துயரமெல்லாம்
கடியினிற்கண்டுற்கண்டுங் காரணுமினமெரவுந்தன்
மடியினிற்பூமேற்பொன்னை வைத்தனுப் புகிறேனென்சுவாமி.

வசனம்.

விச்சித்திரமுள்ள நச்சுத்திரகையரே, அயோத்தியாபுரியை விட்டு இந்தக் காசிப்பட்டணம் வருகிறவரையில், அடியேனும் மனைவியும்-சுதனும், இலவம்பஞ்சானது படும்பாடு பட்டும், செசில் கந்தைவஸ்திரமணிந்தும், அக்கினியாற்றைநீந்தியும், நாங்கள் படும்வருத்தம், தேவரீர் மனதாரவும் கண்ணாரக் கண்டிருந்தும் என்மீதிற் கோபஞ்செய்யலாமா, விஸ்வாமித்திரருக்குக் கொடுக்க வேண்டியபொன்னைக் கெடுவுபிரகாரம் புஷ்பத்தின்மேல் வைத்து தங்கள்மடியில் கட்டியனுப்புகிறேன் ஆணையைவிடுதலைசெய்யுஞ் சுவாமி. *

சந்திரவதி சொல் விருத்தம்-இ-ம்-முகாரி.

அடியாதப்பெண்டீர்மெத்த துயருறுபுருஷனுக்கு
மடியாற்செத்தனமெனத்தவ்வை மலைமொழியருளிச்செய்த
படியாளிங்கிருத்துமென்ன பலனித்தக்காசிதன்னி
லடியாளைவிற்றுப்பொன்னை யந்தணர்க்களித்திடீரே.

* இது- இப்புத்தப்பாரிலவையிட்டவர் கருத்து.



வசனம்.

கேளுமென் பிராணநாதா (அடியாப்பெண்டீர் மடியிற்செருப் பென்று) ஔவையார்திருவுளம்பற்றிய நீதிசாஸ்திரப்படிக்குமது கஷ்டத்தை, கண்ணாற்கண்ட அடியாளிங்கிருந்தாவதென்ன, காசிப் பட்டணத்தில் எவருக்காகிலு மடியாளைவிற்று பொன்னைக் கொடுத்திந்த நச்சுத்திரகனை அனுப்பிவிடுஞ்சுவாமி.

தேவதாசன் விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

தனத்துக்குந்தெருணந்துக்குந்தன் றாய்தந்தைய னுபவிக்குந்
தனதாக்கஞ்சுகமாயத்து காலக்குமுதவாப்பின்னை
யினத்துக்குமாகாதென்பா ரென்றனைவிற்றேயிங்கோர்
தினத்துக்குளிவர்க்குச்சொன் னதிரவியகடன்றீர்ப்பீரே.

வசனம்

கேளுமென் றந்தையே தாய்தந்தைய னுபவிக்குந்தனமே னத்துக்கும், சுகதுக்கத்துக்கும் ஆபத்து காலங்களுக்கும் பாத்தி யப்பட்டு உதவாதென்னை யிருந்தாவதென்ன, என்னையே விற்று பொன்னைக்கொடுத்து இந்தநச்சுத்திரகனை யனுப்பிவிடுஞ்சுவாமி.

சத்தியகீர்த்தி சொல் விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

உண்டானபோதுவந்து வுறவுகொண்டாடிக்கொஞ்சி
தொண்டானவர்கள்செல்வந் தொஞ்சினபோதுதேடி
கண்டாலும்பேசாமற்போங் கடைகஷ்டநாய்கள்போலோர்
கண்டானிருக்கின்றேனென் றனையிங்குவிற்றிடையா

வசனம்.

கேளுமென் னாண்டவனே, மிகுந்த சம்பத்துண்டாயிருக்கின்றபோது தாங்களே வலியவந்து உறவு கொண்டாடிக்கொஞ்சிக் குலாவி அடிமைவேலையுஞ்செய்திருந்தவர்கள் அந்த ஐசுவரியம் போய் ஆபத்து வந்த காலங்களில் தேடியழைத்துக் கண்டாலும் வாய்ப்பேசும் பேசாமல் மனமாகிப்போயிருக்குங் கடைகஷ்ட நாய்க ளைப்போலடியேனும்மது கஷ்டத்தைக்கண்ணாற் கண்டுங்காணாம லிருக்கின்ற சண்டாளனாகிய வென்னைவிற்றுப்பொன்னைக்கொ டுத்து இந்த நச்சுத்திரகு பிராமணனை யனுப்பிவிடுஞ்சுவாமி.

இராசன்சொல் விருத்தம்.இ-ம்-ஆனந்தபைரவி,

மனையாளொடகனைவந்த மந்திரியையமனையினையந்து
வினையாளனுகியிங்கே விற்கவொண்ணுதென்நாடு
தனையாள்விஸ்வாமித்திரர்க்குத் தன்கடன் கொடுத்தாற்போது
மனையாள்பவர்க்குநானே யேவல்செய்திருக்கின்றேனே

வசனம்.

பெண்ணே சந்திரவதி மகனே தேவதாசா மந்திரிசத்தியகீர்த்தி உங்களை நான் விற்கத்தகாது எப்படி யாகிலும் விஸ்வாமித்திரர் கடன் தீர்ந்தாற்போதும்இந்தக்காசிப்பதியிலெவர்க்காகிலும்என்னை விற்றுப்போடுங்கள் அவர்கள் காலாலிட்டவேலையைக்கையால் செய்துக்கொண்டிருக்கிறேன் மனைவியே மகனே மந்திரி.

சந்திரவதிசொல் விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி,

வசனைவர்க்குந்தெய்வ மோர்க்குமோவுலகினிற்பிரா
ணேசனைவிற்கப்பெண்கள் நெஞ்சினில்நினைப்பாருண்டோ
பிசனைட்டதிலெவ்வணியிருடிபொன்[illegible]த்தேவ
தாசனையென்னைவிற்கத் தருமந்தப்படிசெய்[illegible]ரோ.

வசனம்,

கேளுமென் பிராணநாதா, தேவரீரை அடியேங்கள் விற்பவத்துக் கொப்புமா, அடியாளையும் மகனையும்விற்கவுமக்குத்தருமம் இனிப்பலப்பலவாகயோசனை பண்ணுமல் சுருக்கா யெங்களை விற்றுப்போடவேணும் சுவாமி.

நச்சுத்தாகன்சொல்-விருத்தம் இ-ம்-ஆனந்தபைரவி.

சதையைவிற்பவர்க்கோர்போதுஞ் சங்கடந்தொலையாதென்ற
கதையைக்கேட்டிருந்துமிந்தக் காசிமாநகரில்நீயும்
வதையவுன்பெண்பிள்ளை வழங்குபொன்னெக்குவேண்டா
மிதையம்வேறெண்ணுமற்பொன் னில்லையென்றுரைசெய்ராயே

வசனம்;

இராசனே ஒருகாலும் கடைசியிலே சதையை விற்றுலன் சங்கடந் தொலையப்போறது, மேலுமிந்தக்காசிப்பதியிலே நீயதைய



வதைய உன்பெண்டுபிள்ளையை விற்றுபொன்கொடுக்கப்போறாய் அந்தப்பொன்னெக்கு வேண்டாமொறுமை உமக்குப்பொன் கொடுக்கவேண்டியதில்லையென்றொருவார்த்தைச்சொல்லிப்போடு நான் போய்வருகிறேன்,

இராசன் சொல் - விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி,

எல்லியும்பகலுமொன்று மில்லையென்பவர்கள்வீட்டிற்
பல்லியுஞ்சேராதென்ற பழங்கதையறிகிலீரோ
மெல்லியுமகனுமுள்ள மேவிதங்களையேவிற்கச்
சொல்லியுந்தலைமேற்புல்லை சூடினதால்விற்பேனே

வசனம்.

சுவாமி நச்சுத்தாகரே இரவும் பகலும் எப்போது மில்லையென்ற வீட்டில் பல்லியுஞ் சேராதென்ற பழங்கதையை நீர்கேட்டதில்லையா, மேலுமென் பெண்டுபிள்ளை இரண்டு பேருந் தங்களையே விற்கச்சொல்[illegible] சம்மதித்து தலைமேற்புல்லுஞ்சூடிக்கொண்ட படியினுலே இவர்களையே விற்று உமது பொன்னுக்குச் சரிச் சொல்லுகி[illegible]னையா.

இராசன்-சரு-இ-ம்-புந்நாகவராளி-அடதாளம்.

பேராருங்காசியில்-நேராகவேயென்றன்
பெண்டுபிள்ளையைக்கூறி விற்கிறேன் நானுந்
தொண்டுசெய்துதெருவில் நிற்கிறேன் நல்ல

சீரார்மறையோர்முத-லாராகிலுமிங்கே
திரவியம்படைத்தவர் வருகுவீர் வந்து
விரவினிற்கொண்டுபொன்றருகுவீர்

பாராளுமரசர்கள்-காராளர்வைசியர்கள்
பாக்யமிகுந்த வெண்ணுளர்கள் நல்ல
யோக்யந்தகுந்த கண்ணுளர்கள் இன்னம்

தாரணிசமையத் தோராயினுமிந்த
நகர்மேவுந் திரவியமுள்ளவர் விலை
பகருமென்னரிவையைக்கொள்ளுவீர்

தஞ்சமென்றவர்க்கெல்லா-மஞ்சலென்றருள்செய்யுந்
தனமுள்ளசெட்டிகள்சேணியர் நல்ல
கனமுள்ளசெட்டிகள் வாணியர் அந்த

வஞ்சவிஸ்வாமித்திரர்-நெஞ்சறியாமலென்
மனைவியைவிற்கிறேன் வாங்குவீர் தனம்
வினைவியத்தடுக்கிறேன் தாங்குவீர்

தவசிகள்புகழ்தனி கவுசிகமாமுனி
தனக்கொருவராகப்பணத்தாக சொன்ன
தினங்கெடுவதற்பிப்போக பெந்த

அவசரப்படுகிறேன்-சிவசமயாதிப
ராராகிலுந்தன முள்ளவர் வந்து
தோராயென்மனைவியைக் கொள்ளுவீர்

நச்சுத்தரகன்சொல் விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

உழுகிறக்குண்டையா னுஅன்னூரில் விலைப்போகாதா
அழுகிறப்பெண்டையிங்கே யார்வாங்கிக்கொள்ளப்போருர்
தொழுகிறவுனைக்கண்டையோ தோஷமென்றெண்ணமாட்டேன்
கழுகிறகப்பியுன்னை நசிக்கிச்சாரப்புழிவேனுனே.

வசனம்

இராசனே என்னகாணு மொருமை உளாச்சுந்திச்சுற்றமை
யாடிலழுறாய்உழுகிறக்குண்டையானுல்உள்ளூரிலேதானே விலைப்
போகாதா இத்தனைதூரம் வரவேணுமா மேனுங்கொட்டை போ
ந்துக்கம் வந்தாலொழுக்காந்துக் கொண்டழுகிற பெண்டு பிள்ளை
யை இங்கே யெவான்காணும் வாங்கிக் கொள்றவான் வெருமை
தீயைக்கும்படு தும்பிட்டுக் கொண்டிருந்தால் நான் கேட்க்கமா
ட்டே னியா ரழுக்கப்பி அது தேக்கிப்போதாக்குந் தெரியவந்
ந்து உன்னைக்கல மேல் கல்லைவைத்து சதையநசிக்கி இரசத்தைப்
பிழிந்தூறிப்பியை யெறிந்து போடுகிறேன்பார்.

இராசன் சொல் விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி,

வெண்கலமென்றசொல்லி விலைகூறிவிற்கப்போனல்
மண்கலம்ஓட்டையென்றீர் மாதுமோமறையோமிங்கே
புண்கனிந்கோலிட்டாப்போலப்புகலவும்வேண்டாஞ்சற்றே
கண்சலிப்பாகப்பாரீர் கடன்கொடுத்தனுப்புவேனே.



வசனம்.

சுவாமி நச்சுத்தரகரே, வெண்கலம் வெண்கலமென்றுவிலைகூறி
விற்கிற தருணத்தில் மற்றொருவர் அது மண்கல மண்கலம் ஓட்
டைஓட்டையென்று சொன்னால் விலைபோகுமா அதுபோல புண்
ணிற் கோலிட்டாப்போ லொன்றுஞ் சொல்லவேண்டாஞ் சற்றே
பொறுத்துக்கொண்டிரும் உமது பொன்னைக்கொடுத்தனுப்பி வி
டுகிறேன் சுவாமி.

பொறுவிருத்தம்-இ-ம்-தோடி,

தேவியைமகனைக்காசி தேசத்திலரிச்சந்த்ரன்றான்
கூவியேமுறையிடுங்காற் கோசிகன்மாய்கையாலே
ஆவலாயக்னிதேவ னகூணமறையோனாகிக்
காவலனரிச்சந்த்ரன்முன் கடிதினில்வருகின்றானே

கட்டியக்காரன்சொல்-வசனம்

அகோதெப்தடியென்றால், காசிநகர்வீதியில் சந்திரவதியை
யும், தேவதாசனையும், அரிச்சந்திரமகாராசன் விலைகூறிமுறையிடு
ம்போது விஸ்வாமித்திரர் மாய்கையினால் அக்கினிதேவன் பிராம
ணனாக வருகிறவிதங்காண்க.

தரு-இ-ம் சௌராஷ்டிரம்-ஆதிதாளம்.

பல்லவி.

பிராமணசிரோமணிநான் - பிரபலகாசி
பிராமணசிரோமணிநான்

அநுபல்லவி.

சுராசுரர்களெவர்க்கும்-சுபாசுபங்கள்செய்விக்கும்
பிராசுதாரர்களுக்கு - மிக்கவித்தைகள் கற்பிக்கும் (பிரா)

சரணங்கள்

காமதகனனுதற்-கண்ணனடதென்றன்பெயர்
ஓமதிரவியமெல்லா - முன்னுவேன்யானுயர் (பிரா)

மணமும்யாகமுமிர்த-மாநிலந்தனில் மாண்ட
பிணமும்யானல்லால்பேறு-பெறுமோநற்புகழ்பூண்ட (பிரா)

பொருள்விளக்கவும்பொன்னால்-புடம்போடுவதுமென்னால்
இருள்விளக்குவேன்மின்னால்-எவர்க்குந்தெரியுஞ்சொன்னால் (பிரா

௰௨

## பிராமணன்சொல்-பஞ்சாங்கம்-வசனம்.

ஓகோ-ஓகோ ஓகோ ஓகோ ஓகோ ஓகோ ஆர்காணும் ஓய் நீங்களார்காணும் - ஓய்-ஓய்-நீர்-ஆர்காணும் நீறாறப்பிதவிறைன்நாறுய்பனைநாறுய் - தெங்காநாறுய்வீங்காநாறுய்மாங்காநாறுய் நீறுறுய் நாறுறுப் யிந்த காசிபட்டணத்திலவாழும் காலக்கணிடைய்யர் நாமங்கஞ்கேபஞ்சாங்கஞ்சொல்லிவிவனப்படிவிபிரேடிக்கப்பட்ட பாப்பாநார் (அப்படியாசுவாமி) உம்பிடத்திலெல்லிதம்பஞ்சாங்க மிருக்கின்றது அடாய் நோக்கு வென்ன நிசப்பஞ்சாங்கம் வேணுமோ அகலபஞ்சாங்கம் வேணுமோ சொல்லடாய் (சுவாமி யெங்களுக்கு நிசபஞ்சாங்கமே வேண்டியது யெடுத்துச் சொல்லுமையா சுவாமி) அடாய்இதுதான் நிசபஞ்சாங்கம் கொஞ்ச கொஞ்சமாய் சொல்லிக் கொண்டே வருகுறேன் கேட்டுக் கொண்டே வாருமிவனாய் அடாய் இதுதான் பஞ்சாங்கமூலாதாரப்பொருள் அடாய் சமஸ்தசட்டங்க ளாகியபவத்துநித்தியோஷவெபவத்தே க்ஷயா-திதிய நித்தியம்களாம்-லோகாஉசைபஸ்தேபகவான் மங்களாய்தினம் அமா - அற்புதைபாதி ரெவணமாரீத்காண்டமண்டல உஸ்ரயாதி திதியோச்சவ நிதியமங்களசாத்திரமானேன சார்வதிருமசம்வச்சரே - நந்தியேறு சுடிவ வாரம் சஷ்டிட்டி அஸ்டிக்கெம்நாழிகை கேட்டை நக்ஷத்திரம் அறுபதுநாழிகை ஆயிஷ்மனுமயோகம் இருபத்தொன்பதே முக்காலரைக்கால் நாழிகை பவலவாகரணம் இருபத்தேழரையேவிசம் நாழிகைக்கிமேல் பதினொன்னரை நாழிகைக்குள் தியாச்சியம் பூச்சியம் பதினெட்டே முக்கால் நாழிகைக்குமேல் ருதுகாலம்வருகிறது இருபத்திரண்டரை நாழிகையோடே ருதுகாலம்போகுறது அதற்குமேல் இவ்வருஷம் பலருவருஷசெல்லவும் விளையவே விளையாதுமிவியாதகதை யெடுத்து நட்டாலும்கோடிகோடியாய் விளையும்-இவ்வருஷம் எதுவும் பூச்சியம், பூச்சியமே, பூச்சியமானாலும் ராச்சியத்துக்குக் குறைவொன்றும் வராது, அவாளவாளுக்கு நல்லகந்தாயம்கெடைக்கும் மாதம்மாதம் மும்மாரியே பொழியும் ஆண்சாதிகளெல்லாம் பெண்சாதிக்கு உருத்தாய் படுவார்கள்மே



லும் பெண்சாதிகளெல்லாம் ஆண்சாதிகளுக்கு வுருத்தாய்ப்பேசுவார்கள் இவ்வருஷம் தென்கோட்டைராசனை வடகோட்டைராசன்வெல்லுவான் வடகோட்டைராசனை தென்கோட்டைராசன் வெல்லுவான் மேலும் கீழ்க்கோட்டைராசனை மேல்கோட்டைராசன் வெல்லுவான்மேல்கோட்டைராசனைகீழ்க்கோட்டைராசன் வெல்லுவான் மேலும் தாசிகளெல்லாம்வேசிகளாய்ப்போவார்கள்வேசிகளெல்லாம் தாசிகளாவார்கள் மேலும் கைம்பெண்சாதிகளுக்கு ஆம்படையாமார் ஆறுபங்கு கட்டுமுத்திகளுக்கெல்லாம் ஆம்படையாமார்கள் சுண்டுக்காணுமா யிருப்பார்கள்மேலும்இவ்வருஷம் மூட்டுப்பூச்சி முப்பதுபங்கா யிருக்கிறது பெருச்சாளிநூற்பதுபங்கா யிருக்கின்றது மேலும் ஆகாசத்திலெங்கும் நக்ஷத்திரங்க ளிருக்கின்றது அதிலே-ஒரு-பிறதிசமாய் இருவத்தியேழு நக்ஷத்திர மிருக்கின்றது அதிலே விச்சித்திரமான திருக்கின்றது அத்திர யிருக்கின்றது தேனெக்குள் ஒருநக்ஷத்திரம் தருணத்தவிரிவிழுந்தால் யாரும் மருணமாய்ப் போகிறது.

மேஷம் ஆட்டு மந்தையிலே யிருக்கின்றது - ரிஷபம் பசுவின் கொட்டத்திலிருக்கின்றது மிதுனம் பாட்டகன்கையிலிருக்கின்றது சிங்கம்காட்டிலிருக்கின்றது- கன்னி ராஜாகையிலிருக்கின்றது துலாம் வர்த்தகனிடமிருக்கின்றது - விருச்சிகம் வீட்டிலிருக்கின்றது தனுசு வேடன்கையிலிருக்கின்றது கெம் ஏரப்பி லிருக்கின் மகரம் வனத்திலிருக்கின்றது கும்பம் குசவன்வீட்டிலிருக்கின்றது மீனம் தண்ணியிலிருக்கின்றது-மேலும் காய்த்திரிமிதமத்திரி யீனம் தண்ணியிலிருக்கின்றது நற்கந்தம் அர்க்கர்த்தம் நிவர்த்தி நிவர்த்தி கோவர்த்தி சிவர்த்தி நிவர்த்தி நற்பாவஷமாரீசம் ஈசம் நிவர்த்தி தர்ப்பணம் அர்ப்பணம் நிவர்த்தி நற்பாவஷ செய்யும் நிவர்த்தி குதவாது நிவர்த்தி அற்பரவஷ நிவர்த்தி காரியம் அந்தகாரம்சங்காரம் நிவர்த்தி தேவாலயங்காரபொங்காரம் நிவர்த்தி கலசம் நாலுநிஅதர்மம்நாலுநிம் பிரமாஜேரம்புகளியாயிருக்கும் உத்தமம் நாலாங்கந்தாயம் தர்மமிருக்குது பஞ்சாங்கந்தாயம் அதிகமாய்விளங்கும் கன்னி நல்லாயினாகும் பஞ்சாங்கம் பேயாவிருக்கிறது எல்பஞ்சாங்கங்காவே வெண்ணுக்கு பிலயிலாவிருக்கிறது எல்பஞ்சாங்கம் இது பொயாக்கிருத்துவிக்கமாகையால் பஞ்சாங்கம் இது

அப்போனால் ஆடிமாசத்தில் அடிக்கிறபெருங்காற்றில் ஆகாகா ஓ
கோகோவென்று-அடியோடே கிழித்து ஆகாசத்தில்விட்டுவிடுகு
றது அந்நாளானதேதி தொண்ணூற்றொன்பது, நாளைய நல்லயதினம்
தேதிமுப்பத்தி யெட்டு சமஸ்த சட்டங்களாளிபவந்து நிற்காயவஸ்
திரஸ்துநம்மிடபஞ்சாங்கம்கேட்டபேர்கள் நமக்குநகுலைதாம்பூ
லம் கொடுத்தாகிலும் அனுப்பிவைக்கவேண்டியது.

பிராமணன்சொல்-விருத்தம்-இ-ம் ஆனந்தபைரவி.

ஆர்காணுமுந்நாளித்த வதிசயங்காரேயொத்த
ஆர்காணுஞ்சொன்னதின்ன மொருதிரமுனாயிருமன்
பேர்காணுமென்னைப்பெண்டு பிள்ளைவிற்கிறையுமென்ன
நீர்காணுங்கடனேவேண திரவியந்தருகுவமே.

வசனம்

ஆர்காணு நீர் ஓயாசீர்வாதம் நல்ல அதிசயங்காணுந்தன்றுயி
ருக்கிறது நீமொந்தவூர் உம்மிடமேபொண்ண ஓசாபத்தாய் பெண்டு
பிள்ளை இரண்டையும் விற்கவந்தா யிவாளிரண்டு பேருக்கும் விலை
யெவ்வளவுபொன் கொடுக்கவேணும் ஒருவார்த்தை நேக்குந்தெரி
யச் சொல்லுங்காணும் நான்வாங்கிக்கொள்ளுகிறேன்,

இராசன்சொல்விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

செகமதிற்புகழயோத்தி [illegible] மைந்தனியானுமன்
மகமதில்விஸ்வாமித்ர மாமுனிவருக்குச்செம்பொன்
அகமதிற்பியானைமேனின் றுமெறிகவண்கல்லாரம்
முகமதியிவர்கள்போல் முழிவாங்கிக்கொள்ளுவீரே.

வசனம்.

சுவாமி சரணம், அடியேன் அயோத்தியாளும் திரிசங்குமா
கன் அரிச்சந்திரன், நானந்த விஸ்வாமித்திரருக்குக் கொடுக்கவே
ண்டிய கடன் உயர்ந்த யானையின்பேரில் பல்மலை ஆள் நின்றெ
றிந்த கவண்டுகல் போனவுயரந் திரவியம், இதற்காக என்மனைவி
யாகிய சந்திரவதியையும், மகனாகிய லோகிதாசனையுந் தங்களுக்கு
அடிமையாய் விற்கிறைய சாதனமெழுதித்தருகிறேன் இவர்களை
அடிமைக்கொண்டு அடியேனையாதரித்துப் பொன்கொடுக்க நித்தி
த்த நட்சத்திரகனையனுப்பிவிடவேணுங்கடவீரோ.



பிராமணன்சொல் விருத்தம்.
இ-ம்-ஆனந்தபைரவி.

மனைவியைமகனைவிற்க வந்தநீயவனியிலிம்போக்கை
விலைவியன்றேனாவிற்க வெட்கமுமிலையோநாக்கு
சலவிஸ்வாமித்ரர்க்குன்னை தானபத்திரங்களுண்டா
கனவில்லங்கத்துக்கில்லை காணெலுறுப்போய்விடாதோ.

வசனம்.

கேளுங்காணுமோய் ராசனே, சபாசு ஆண்பிள்ளைக்கெட்டு
க்காறனீ காணும் நீபெண்டுபிள்ளையை விற்கிறதெனலைவெட்க
மில்லையா நோக்குமேலு நீசோஷிதோஷிமுன்னக்ஷத்திரிய குலமா
த்தே அன்னுகாணு நீஓதாவது அந்த விஸ்வாமித்திரருக்கிவ்வளவு
பொன் கொடுக்கவேணு மென்று தானபத்திர மெழுதிக்கொடுத்தி
ருக்குறியோ இல்லையே வாய்வார்த்தைதானே அதனாலேன்னவிக்கா
க்காம் இப்போதொருவார்த்தை கொடுக்கவேண்டிய தில்லையென்
றல் போறது இதற்கேகண்காணு பித்தனையவன்த்தைபட்டுறாயீ
போங்காணுங்போம் ஒருமைமயில்லையென்றொரு வார்த்தைச்சொ
ல்லிப் போகச்சொல்காணும்.

இராசன் சொல் விருத்தம்
இ-ம்-ஆனந்தபைரவி.

மாசிலாசந்த்ராதித்தர் வடக்குதெற்குதித்திட்டாலும்
காசிவேதியனேயெங்கள் கனவிலும்பொய்சொல்லோம்நீர்
விசியகாலவிட்ட வேலைக்கையால்செய்வார்
பேசியகடனுக்கென்றன் பெண்டுபிள்ளையுங்கொள்வீரே.

வசனம்

காசிவிஸ்வநாத சுவாமியைப்போல் அடியேங்களை அடிமை
கொண்டாதரிக்கவந்த ஐயரே, இந்த சந்திரசூரியாள் வடக்குதெற்
கா யுதையாஸ்தமானாலும் பொய்வார்த்தையை எங்கள் கனவி
லுமினைக்கமாட்டோம் மேலும் தங்களுக்கடிமையாகத்தக்கபாக்கி
யம் பெற்றோமா, இவர்களிரண்டுபேருந் தங்களுக்கு வேண்டிய தி
ருட்பணி விடையெல்லாஞ்செய்வார்கள் அடிமைக்கொண்டருளிச்
செய்ய வேணுங்ஸ்வாமி

பிராமணன்-சொல்-கவி.

சித்திரவிஸ்வா மித்ரரிச்சியைதந்
சுத்திரகவர்முன் பத்திரமெழுதாய்.

வசனம்.

ஓய்ராசனே, நல்ல தப்படியே யாகட்டும்- அந்தவிஸ்வாமித் திரர் பொன்னுக்காக வுன்னிடத்தில் தாகு வந்த பிராமணனென் கே (அதோ அவர்) நக்ஷத்திரகரா (என் காசிப்புரோகிதரே) அடி யேன் தாசன் தாசன் (நமஸ்காரம் நமஸ்காரம்) வாரும் வாரும் இந் த அரிச்சந்திரன் அந்தவிஸ்வாமித்திரருக்கு அவ்வளவு பொன்னுங் கொடுக்கவேணுமா நீரறிவீரா (அறிவேன் அறிவேன்) நீரிவனிடத்தி லே வந்தது நிசந்தானா (நிசந்தான் நிசந்தான்) சதாஸ்து (ஓய் ராச னே இன்று மிவருக் கிவ்வளவு பொன் கொடுக்கவேண்டியதற் காக இன்றும் இன்றுமின்றுதாஞ் சுத்தக்கிரயப்பந்தவித்தாப்போ ட்டு இன்றைய தினமே பார்த்துக்கொண்டபோதே இவ்வளவெ ன்று மிது இன்னார்முன்னிலையிலும் அடிமைப்பத்திரமெழு தி சுவதவித்துப்போட்டுக் கொண்டுவாரும் பார்ப்போம் சுருக் காயாகட்டும், தேசகாலமாகிறது.

அரிச்சந்திரனெழுதும் அடிமைப்பத்திரம்

ஆசிரியவிருத்தம்-இ-ம்-பூரவி.

காசிபத்தனைநியாயசோபையருக்கயோத்தி
காவலனரிச்சந்திரன்
கௌசிகமுனிக்குப்பொன்னைவசாதியிதயமாய்
கரியின்மேலுமெல்லாமனைவிதோ
விசயகவண்டிக்கல்போருபரமளவுபொருள்
வேறியநட்சத்திரகர்முன்
விற்கிரயபத்ரமெழுதித்தந்தேன்வெளியில்
விரித்துரைத்துப்புண்ணியவிதோ
பேரியச்சந்திரவதிபுத்ரதேவதாசனையும்
பெண்டுபிள்ளையையிரண்டு
பெயரையுந்தமக்கடிமையாயெழுதிநீதநிதி
யிசகிலையதற்குமேலும்
ஆசிரியவிருத்தமுறையெழுதிக்கொடுத்தடிமை
கண்மேவாருமதியபொருளை
அந்தணர்பொன்மேல்தாருவாந்தவரிச்சகவித்தன
னரிச்சந்திரன் கைச்சாத்திடம்.



பிராமணன்-சொல்-கவி.

எழுதும்பத்திரத்தையிப்படி — தாரீர்
பழுதுவாராமல் படித்துத்தீர் — பாரீர்
முழுதும்பார்த்தேனினி முனிருணந்தீர்
பொழுதுபோறது நாம்போகலாம்வாரீர்

வசனம்.

ஓய் ராசனே, இப்படிக்காரும் நீரெழுதியபத்திரத்தைப்பார்ப் போம் (இதோகொடுத்துவிட்டேன் சுவாமி நக்ஷத்திரகரே (என்பு ரோகிதரே (நீர் படித்துக்கொடும்) புரோகிதரே, நீரும் வாசிக்கவா [illegible] வாசிக்கவருமென்று, அடிக்கவருமென்று [illegible] வாசிக்கவருமென்று [illegible] ககளருமன்றுகாணும், நாமும் வாசிக்கவா இடிக்கவரும் [illegible] வாசிக்கவாள்தான்) இந்த அரிச்சந்திரன் கை [illegible] தன்றாய்பார்க்கலே நேக்குக்கொ [illegible] புரோகிதர் தோத்திகன் தெரியாதா [illegible] வலையத்துமே (ஆம்-ஆம்) [illegible] எழுதியிருக்கிற வெழுத்தே யெழுத்து, முத்து [illegible] லக்ஷணமாய்த்தலை ஆத்திரம்போலே நன்றாயிருக் [illegible] நன்றாயிருக்கிறது) நல்லயெழுத் [illegible] நல்லயெழுத்து நன்றாயிருக்கிறது [illegible] விற்கிறது, ஓதோகிடக்கிறது, ஓய்ரா [illegible] விஸ்வாமித்திரர் பொன்னவ்வளவும் [illegible] இந்த நக்ஷத்திரகர்வசம் விஸ்வாமித்திரர் [illegible] கொடுத்தனுப்பிவிடு சுவாமி) கொடுத்தது விடலாமா (அப்படியேகொடுத்தனுப்பிவிடு சுவாமி) இப்படிவாரும் ஓதோ வும்மிட நக்ஷத்திரகரே (என் புரோகிதரே) இப்படிவாரும் ஓதோ வும்மிட [illegible] யும் ஒருவார்த்தை (ஆம் ஆம் சதாஸ்து) நக்ஷத்த [illegible] இந்த அரிச்சந்திரன் அந்த விஸ்வாமித் [illegible] (என் புரோகிதரே) இந்த அரிச்சந்திரன் அந்த விஸ்வாமித் திரருக்கு கொடுக்கவேண்டியபொருள் உம்மிடவசம் வந்துசேர்ந் திருக்கிறது கேட்டுக்கொண்டீரா (கேட்டுக்கொ [illegible]) ஓய்ராசனே கேட்டுக்கொண்டீரா (கேட்டுக்கொ [illegible]) இனியென்ன பொழுதுபோறதே ஓ [illegible] இனியென்ன பொழுது போறதே ஓ [illegible] யையும் கூட்டியனுப்பிவிடுங்காணும் (அதற் கென அவாளிருவரையும் கூட்டியனுப்பிவிடுகிறேன் அழைத்துக்கொண்டு [illegible] அனுப்பிவிடுகிறேன் அழைத்துக்கொண்டு [illegible] சந்திரமதி (சுவாமி) அடா தேவதாசா (சுவாமி) இர போகலாம்) சந்திரமதி (சுவாமி) அடா தேவதாசா (சுவாமி) இர ண்டுபேரும் வாருங்கள் போகலாம்.

தேவதாசன்சொல்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

[illegible] மைந்த [illegible] தேவிருயக்கென்றன்
[illegible] விற்றதுண்டோ
[illegible] வி [illegible]

பொன்னைத்தந்தடிமைகொண்ட பூசுரனெனையடிப்பார்
உன்னையும்பிரிந்தானிவ் வுலகினிற்றரிப்பனையா.

வசனம்.

கேளுமென் றந்தையே, இந்த பிராமணனுக் கென்றனை
விற்றநாமதினில் என்னையுங் கூடவிற்றீரா, இனிதானிந்த பிராம
ணன் பின்னேபோய் வேலைசெய்ய மாட்டே னடியேனு மென்னைப்
பிரிந்திருக்கவு மாட்டேனென்னையா.

இராசன்சொல்-விருத்தம்-இ-ம்-முகாரி.

மைந்தனேதேவதாசா மதிமோசம்வந்ததப்பா
வந்தனைவிற்றதுன்று வுயர்மறையவரனுமதால்
சிந்தனையுனக்குவேண்டாஞ் சிவன்செயற்படிநடக்குந்
சந்தோஷமாகவுமன் றாயிடம்பின்னேகுவாயே

வசனம்.

மகனே தேவதாசா மதியுள்ளசெல்வமே, இந்த பிராமணனுக்கு
உன்றனையு முன்னையும் விற்றேனேயல்லாமல் வேறில்லை நாமிப்
போது பேச்சைப் புரட்டினால் நம்மைப்பொய்யனென்று சொல்
வார்களெப்படியாகிலுமவ்விஸ்வாமித்திரனுணர்ந்திருந்தால்போதும்
நீ வியசனப் படாமலுன்றாயுடனேகூடப்போய் வருவாய்மகனே.

இராசனுக்கும் தேவதாசனுக்கும் வாது-

தரு-இ-ம்-முகாரி-ஆடதாளசாப்பு.

தேவதாசன்-சொல்லல்.

என்றாயுடன்கூட-ஐயா ஐயா
என்னையும்போகச்சொன்னீர்
எப்போதுன்றனைக்காண்பே னையா.

இராசன்-சொல்லல்

உன்றாயுடன்சென்றால்-மகனே மகனே
உனக்குப்பயமென்னடா
உடனேகாணலாமடா மகனே



தேவதாசன்-சொல்லல்.

வேதியர்வீட்டினில்-ஐயா-ஐயா
வேலைசெய்யவும்பட்டேன்
வேண்டாமென்றுசொல்லு மையா

இராசன்-சொல்லல்.

சாதியிலுயர்மறையோர் - மகனே மகனே
தமக்குவேலைசெய்தால்
தாழ்வுண்டோசொல்லாய் மகனே

தேவதாசன்-சொல்லல்.

காட்டும்வேலைகள்தன்னை - ஐயா ஐயா
சடுதிச்செய்யாவிட்டால்
கன்னத்தில்மேலடிப்பா னையா.

இராசன் சொல்லல்.

நாட்டில்வேதியரெல்லாம் - மகனே மகனே
நல்லவமுதளிப்பார்
நடந்துகொள்ளுநெறிவரியென் மகனே.

தேவதாசன்-சொல்லல்.

வீட்டில்வேலையிருக்க - ஐயா ஐயா
விளையாடநான்வந்தால்
விலங்குபூட்டிவிடுவா னையா.

இராசன்-சொல்லல்.

மாட்டேனென் றுசொல்லாதே - மகனே மகனே
மறையோருன்றனைநாளும்
மனமகிழ்ந்தாட்சிப்பார் மகனே.

இராசன்சொல்-விருத்தம் இ-ம்-முகாரி,

விதியையிங்கெவர்களாலும் விலக்கவொண்ணாதென்மைந்தா
பதியைவிட்டகன்றுகாசிப் பட்டணஞ்சேர்ந்துசந்தர்
வதியையுமுனையும்விற்க வந்ததென்செய்வோம்நீங்கள்
மதிமயங்காமலிந்த மறையவர் பின்செல்வீரே.

மே

வசனம்,

அப்பா மகனே தேவதாசா, வாராய் என் பிராணபதமான சந்திரவதி, வெகுநாளாய் நம்மைச் சதிசெய்யக் காத்திருந்தான் பிரமதேவன் இனி நம்மாலாவது தொன்றுமில்லை. நமது சத்தியம் பொய்த்துப் போகாமல் உங்களையடிமை கொண்ட பிராமணனிடத்திலே நீயும் உன் மகனும் போய் அவர்கள் ஏவலாலிட்ட வேலையை நீங்கள் கையால் செய்துக்கொண்டிருங்கள் என் மனைவியே மகனே.

சந்திரவதி-புலம்பல்- தரு-இ-ம்-

பிலஹரி- அடதாளசாப்பு.

பல்லவி.

பிராண பதமே - உன்றனைவிட்டுப் பிரிவதென்விதமே.

அநுபல்லவி,

புராணசாஸ்திரம் புகலுமறையோன் பின்
புத்ரனுநானும் போயெங்கிருப்போமென் (பிராண)

சரணங்கள்.

வேந்தனேயுன்னை விட்டுயிருப்பேனோ
வேதியனிட்ட வேலைகள் செய்வேனோ
காந்தனேயுனைக் காணாமல் நைவேனோ
கட்டளையிட்டக் கஞ்சனைவைவேனோ (பிராண)

மணவனேயுன்னை மருவிப் பிரிவேனோ
மறையவன் வீட்டில் மகிழ்வுபுரிவேனோ
கணவனேயினிக் கலங்கித் திரிவேனோ
கௌசிகமுனி கருத்தைத் தெரிவேனோ (பிராண)

பாங்கிமார்கள் பணிசெய்ய வாழ்ந்தேனே
பார்ப்பான் வீட்டுப் பணிசெய்யத்தாழ்ந்தேனே
ஏங்கியென்னை யிடிந்திங்கு வீழ்ந்தேனே
எப்போதுங்களை யேறுமலாழ்ந்தேனே (பிரா)

சந்திரவதி சொல் பத்தியம்-இ-ம்-

புந்நாகவராளிதோடி.

மருணனேயென் பிராணவல்லபாவுனை விட்டு
மறையவர் வீட்டில் நான் வாழ்வனோ



அகமகிழ்ந்துன்னுட னரசாயிருந்தனே
அடிமைவேலைகள் செய்து மலையலாமோ
வகைமோசம்வந்ததே மன்னவாவுன்முக
வடிவென்றுகாண்பனோ மகிபனேநீ
செகம்புகழுமரிச்சந்த்ரன் றேவியென்பார்களே
சிரழித்திட்டது தெய்வசெயலோ
மகனையுமென்னையு மறையவன் பின்
சுகமுடன் போய்வரச் சொல்லியுன்றன்
அகமகிழ்ந்திந்நேர மனுப்பினால் பின்
புகழ்பெற்றிருக்கலாம் புண்யவானே.

சந்திரவதி சொல்-விருத்தம்-இ-ம்-தோடிபத்து.

* நாதாவுமக்குமாலையிட்ட நாளைத்துவக்கி நாமுமொரு
போதாகிலுமே பிரிந்திலையே போதன் விஸ்வாமித்ரமுனி
சூதாலின்றாய் பிரிந்திட்டோ சொல்லுங்கமலமதின் மேவும்
வேதாவிதித்தவிதிப்பயனோ வினையோகாசிவிஸ்வேசா.

வசனம்.

கேளுமென் பிராணநாதா, அடியாள் உமக்கு மாலையிட்டது முதல் ஒருநாளும் நாம் விட்டுப்பிரிந்த தில்லையே, அப்படியிருக்க இன்றையத்தினம் அடியாளும் மைந்தனாகிய தேவதாசனும் உம்மைவிட்டுப் பிரிந்து பிராமணருக்கு அடிமையாகி அவரிட்ட வேலையைச் செய்யும்படியாக நேர்ந்தது அந்த விஸ்வாமித்திரமுனி செய்த சூதோ, அல்லது தாமரைகமலத்தின்மீது வாழும் பிரமதேவன் விதித்த விதிப்பயனோ, அதுவுமன்றி நமதுமுழ்வினையோ, யாதோ வறியேன் காசிவிஸ்வநாதக் கடவுளே *

இராசன்-தரு,இ-ம்-சௌராஷ்டிரம்-ஆதிதாளம்.

பல்லவி

பெண்ணே சந்த்ரவதியே - உன்னைப்
பிரியவந்ததென்விதியே.

அநுபல்லவி.

கண்ணேயுன்னையிந்தக் காசியிற்பிராமணன்
கையினில்விற்கிறது செய்புமென்பேச்சே
வையகமெங்கணும் வையவு மாச்சே (பெண்)

சரணங்கள்

அர்த்தமான மின்னே - சொந்தமகனே புண்ணே
இந்தநாளிற்போயினை - தந்தபிராமணன்பின்னே
எப்படியென்மன-மொப்பிய தாப்புமோ
அப்படியேபிராமண்-கொற்படிதப்புமோ (பெண்)

திருவுநேடிய மாறு-மருவாவிரும் பேறும்
இருவோருமொருக்காலும் பிரிவுறுமல்லமேல் மேலும்
இருந்திந்நாள்வரைக்கும்-பொருந்தினநேசமு
பிரிந்துபோனதோ - ஈருந்தவன் மோசமு (பெண்)

வாலவயது மொழிந்து சாலைாக மாைாந்து
கோலமகனேகொண்டுமூர்த்தி-போவைாந்தவைப்பெற்று
கொஞ்சியிருந்ததுவஞ்சியே பெண்ணேயா
மிஞ்சிப்போசுதினி-யென்செய்வேனேயா (பெண்)

இராசன்சொல்-பத்தியம்-இ-ம்-புந்நாகவராளிமெட்டு.

அன்னமேநீசொன்ன அறிவெங்கேபோச்சுதோ
அடிமையாகியபின்பு மலையலாச்சே
முன்னமேநான்சொன்ன மொழிப்படிநீசெய்து
முன்னேகொண்டுவாராமல் மோசம்போச்சே
என்னமோவெகுபுத்தி பெண்ணுக்குதானில்லாது
பெங்கிறனிருப்பது மீசாசெயலோ
கன்னமாபுரிவேந்தன் கன்னியேயுனக்கிந்த
காரணமொருமேன்மை காலம்லிமேலானது
இந்நேரமுன்னுள்ளமனை பெங்கியாமல்
பொன்னேநீயிப்போது புகாகன்றான்
பின்னேவல்செய்யவுன் பிள்ளையுடனே
மின்னேநடந்திடாய் மேன்மைபெறுவே

சந்திரமதிசொல் விருத்தம்-இ-ம்-ஆகிரி.

மணமதுசெய்தபின்நாள் வரைக்குமோர்நாளுமிருந்த
தென்னைமதித்தெனையெங்கோ செய்யவேபோகாமல்
பணமதுகொடுத்துவேதபாரகர்க்கடிமையாக
கனவிலுமெண்ணாதபடியிருக்குங் காயமேயிராசநாதா.



வசனம்.

கேளுமென் பிராணநாதா, தேவரீர் அடியாளைத்திருமணஞ் செய்த நாள்முதல் இதுவரைக்கும் ஒருசேவைக்கேனும் பிரியாமலிருந்தாய் விஸ்வாமித்திரரிஷி ருணத்தைத் தீர்க்கவோ பிராமணனுக்கடிமையாய் விற்றுப்போவதனைப்பிரிந்தால் இனியெப்போது காண்பேனென் சுவாமி.

இராசன்சொல்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

தாதவிழ்மலர்ப்பூங்கோதை சந்திரமதியேமுன்செய்
மாதவப்பயனுமிந்த மறையவர்க்கடியாயானீர்
பேதையேயழப்பவேண்டாம் பிள்ளையுநீயுமாக
வேதியரகத்திற்சென்று வேலைசெய்திருந்திடுவீர்.

வசனம்.

வாராய் பெண்ணே சந்திரமதி, மானே தேவதாசா, நீங்களிருவரும் முன்செய்த பூசாபலத்தினாலே பிராமணனுக்கடிமையாகப் பாக்கியம்பெற்றீர், இனி விசனப்படவேண்டாஞ் சுகமாய் வாழ்ந்திருப்பீர்கள் போய்வாருங்க ளென்மனைவியே மகனே.

தேவதாசனும்-சந்திரமதியுஞ் சொல்-தரு.

புலம்பல்- இ-ம்-கெண்டா.

தேவதாசன் சொல்-தரு.

எனதுவிதியைவெல்லமனிதரொருவருண்டோ பெற்றதாயே-நான்
என்னத்தவித்திட பாங்கானதென்னமோ பெற்றதாயே

சந்திரமதிசொல்-தரு.

உனதுவிதியைபெற்றவன்மனதில் நினைந்திட்டால்- தேவதாசா- என்
னுள்ளங்கலங்கிமனந் துள்ளித்துடிக்குதே தேவதாசா

தேவதாசன் சொல்- தரு.

டாப்பெருநிறமையாப்பாவிகையிலொப்பித்தார்-பெற்றதாயே [இந்த
சந்தயமென்னமோ எந்தவிதமுங்காணேன் பெற்றதாயே

சந்திரமதி சொல் தரு.

பாட்பாணுக்கடிமையாய்வாய்ப்போமென்றறிவனோ தேவதாசா
பண்ணுநந்தவந்திலியென்னைநிருமறவாதே தேவதாசா [ன்

தேவதாசன் சொல்-தரு.

உற்றநிதனைச்செய்து பத்தியதாய் என்னைப்பெற்றதாயே எனை
யுன்னுடன்கூட்டிக்கொண்டுபோகவில்லையே பெற்றதாயே

சந்திரவதிசொல்-தரு

கர்த்தனருளினால்வந்துதித்தமகனே அடா தேவதாசா என்
கல்விக்கடலேயெந்தன்செல்வமேயென்செய்வேன் தேவதாசா

தேவதாசன் சொல்-தரு

வையகமீதினில்நான்மெய்யாய்ப்பிறந்தேனே-பெற்றதாயே இந்த
வல்வினைவருமென்று தெரியவில்லையே பெற்றதாயே

சந்திரவதிசொல்-தரு

மெய்யாய்ப்பிறந்தநம்பொய்யாவொழுக்கந்தவறுமோ தேவதாசா இந்த
மெல்லவினையுமோ அல்விதமறியவில்லையே தேவதாசா

தேவதாசன்-சொல்-விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

சத்தியம்வழுவிலாமன்னர் தந்தையுந்தாயுமானீர்
பத்தினியாளெனைப்பெற்ற மாதாவுமுமக்கு அடிமையானாள்
வெற்றியும்பொருளும் நீங்கி வேறு அடிமையானோம்
புத்திமையுங்கற்றிருக்கும் சொல்லையும் பிரியவுஞ்செல்லுவாரோ

வசனம்.

கேளுமென் தந்தையே, நீங்களிதுவரைக்கும் சக்கரவர்த்தி வரரா யுலகத்தையாண்டிருந்தீர்கள் அடியேனும் உங்கள் வயிற்றிலே பிறந்து ... பிராமணனுக்கு அடிமையாய் ... நீங்கள் ஒருவருக்கொருவர் பிரிந்தால் என் தேவனே பிரிந்துவிட்டோம் இனி என்ன செய்வோம், உங்களுக்கு இனிமேலும் பதில் சொல்லி பிராமணர் பின்னே வந்தவிட்டு விட்டுவிட்டேன் நாங்கள் போய்வருகிறோம்.



சத்தியகீர்த்திசொல் விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி.

அறிவினிலுபயோத்தி யரசனே நமதுசத்யம்
நெறிவழுவாதிருந்தாயே நீங்களும்புலம்பவேண்டாம்
பிறிவினைக்காலம்வந்து பிராமணர்க்கடிமையானீர்
சிறுவனும்நீயும்வேலை செய்துவாழ்ந்திருந்திடரோ.

வசனம்.

கேளுமென் னாண்டவனே, தாயே சந்திரவதி, நீங்களிப்படி யாருவருக்கொருவர் வியசனப்பட்டுக்கொண்டிருந்தால் நமது சத்தியத்துக்கழிவாகு மேலும் பிரிவினைக்காலம்வந்தபடியினால் பிராமணர்க்கடிமையாய்ப் போனீர்கள் இப்பவு மிந்தவேதியர் பிறகேபோய் வேலைசெய்துக் கொண்டிருந்தால் சிலகாலந்தன்னு ங்கள்தாயே, தம்பிதேவதாசா போய்வாருங்கள்.

சந்திரவதிசொல்-விருத்தம் இ-ம்-ஆனந்தபைரவி.

சிந்தையிலையமெல்லாந் தெளியுறத்தேர்ந்துரைக்கும்
விந்தையிலுயர்ந்தமந்திரி வேந்தனுநாருங்கட்ட
கந்தையில்லாமல்வந்தோங் காசியிலெனையும்விற்றீர்
நிந்தையில்லாமல்சத்ய நிலைக்கப்பாரீர்போய்வாரோம்.

வசனம்.

அப்பா மந்திரி சத்தியகீர்த்தி, நாமிது வரைக்கும் வாழ்ந்தவாழ் வெல்லாம்போய், கட்டகந்தையில்லாமல்விஸ்வாமித்திரர் கொடுத்து அனுப்பிவிட்ட காவிக்கந்தையுடனே காசிப்பட்டணம் வந்து யிந்த பத்தினியாளையுமென் மகனையும் பிராமணன்கையில் விற்கிறையப் படுத்திப்போட்டு நீங்களும் பிரிந்துப்போனீர்கள் இப்பவு மென் பிராண நாதனுக்குந் தயிரிய வார்த்தையைச் சொல்லி நமது சத்தியத்திலே நிற்கப்பாருமப்பா நானுமகனும்போய் வருகிறோமந்திரீ.

காசிபிராமணன்சொல்-விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி,

தாகமோயிவர்களென்ன தாயும்பிள்ளையுமென்பின்னே
வாகராவாகவார்த்தை வளர்த்திக்கொண்டிருப்பதல்லால்

ஒருவருக்கொருவரின்னை போயாமலமுனர்தாய்போய்
வருகிறேனிருமிங்கே வந்தகாரியத்லதப்பாரீர்

வசனம்.

நக்ஷத்திரகரே (என் புரோகிதரே) இவர்களென்ன காரண மொ
ன்மையென்பெண்ணே வருகிறத்துக் கென்னமோ மாரீசம்பன்
ணிக் கொண்டொருவர் முகத்தையொருவர் பார்த் தோயாமலழ
ரேதக்குதேசகாலமாகிறது இந்த தாய் பிள்ளை இரண்டு பெய
வையுங் கழுத்தைப்பிடித்து தள்ளியிழுத்துக் கொண்டு நாம்போ
ய் வருகிறோம்நீர் வந்தகாரிய மற்றதும் பார்த்துக்கொண்டுபோ
ய் வரும்.

இராசன்சொல்-விருத்தம்-இ ட்-ஆனந்தபைரவி.

சாதியிலுயர்ந்த நக்ஷத்திரகராயெம்பிவந்த
வேதியருமதுகையில் விஸ்வாமித்திரர்பொனனெல்லாம்
நீதியாய்வந்ததாநா லிற்கிறேனீரோயெம்முன்
சேதியையுரைத்ததென்டன் செப்புந்தெண்டனென்போய்வாரீர்.

வசனம்.

சுவாமி நக்ஷத்திரகரரே தேவரீர்வசம் விஸ்வாமித்திரர் பொ
ருளெல்லாம் வந்தது தா இனிநா னிவ்விடத்தில் நிற்கிறேனீர்போய
ந்த விஸ்வாமித்திரருக் கெஞ்சேதியுந் தெண்டனுஞ் சொல்லுஞ்
சுவாமி தெண்டன்போய் வாரும்.

இராசன்-தரு இம்-எதுகுலகாம்போதி ஆதிதாளம்.

தலைவிதிபெலதா லிந்தவிரிக்கவொண்ணுதென்று
சால்திரங்கள்சொல்லுமெய் யாச்சுதோ எந்தனீ
தவப்பலன்கருத்தப்பிப் போச்சுதோ

விலையாகப்பெண்டுபிள்ளை விற்கவும்வந்ததிந்த
விதிவசகாலமோதான் கலிகாலம் அந்த
விஸ்வாமித்திரர்விதிர்த்த அலங்கோலம்

வாங்கினோர்க்குதண்டோவாய்தான் விங்கினோர்க்குண்டோவெட்கம்
மனதையானதொந்தத்தாலே இருமோ மடந்
வழிக்கிவழியாய்வந்து சேருமோ



நான்குவாய்பிள்ளையென்று தளராமலேவளர்த்து
தரணியோர்பலன்காண்பார் நான்பாவி புள்ளைச்
சலியாமல்விற்றேனையோ விலைகூவி

மான்போல்விழியணங்கே மயிலேயின்பக்குயிலே
வலியவுன்னைவிற்க லானேனே உத்தன்
வார்த்தையையுமறந்து போனேனே

தேன்போல்விழியேயுன்னைத் திகைக்கமகனுடனே
தெய்வம்பிரித்ததையோ தரிப்பேனோ இன்னஞ்
சிவனுஞ்செய்யாமல்மனஸ்க் கரிப்பேனோ

மைந்தனலறியழ மனைவிகதறியழ
மரம்போல்நான்பார்த்திருக்க விதித்தாயோ இந்த
வஞ்சனைக்கு தெய்வமேசும் மதித்தாயோ

சந்தப்பிறப்பினி யிவர்களுடனேகூடி
ஏகபோக மாகவாழ்வேன் அணிநாகா இருடை
இதுவோ விசுவேஸ்வரனே புமையாகா

இராஜன் சொல்-விருத்தம்-இ-ம்-எதுகுலகாம்போதி.

பொவாழ்விஸ்வநாதா கடவுளேயுலகத்தோர்கள்
பாசமாய்பெண்டுபிள்ளை படைத்ததிற்பலன்காண்பார்கள்
ஆசைசேர்மனையாள்மைந்தன் அமைந்ததும்பிரிந்துபோக
மோசமோசதியோகால முடிவிதுதானோஐயோ.

வசனம்.

அரகரா காசிவிஸ்வநாதா உலகத்திலேயுள்ளவர்கள் பெண்சா
தியைக்கொண்டு பிள்ளைகளைப்பெற்று அதனாலே யனேக பலன்க
ளை அநுபவிப்பார்கள் எனக்கெல்லாம் அமைத்தும் இப்படிபறி
கொடுத்துப் பரதவிக்கவும் வந்ததாசிவசிவா இதுயார்செய்த மோ
சமோதெய்வந்தானிப்படி சதிசெய்ததோ அல்லது இதுதான்மு
டிந்து போகிற காலமோ ஈஸ்வரா ஈஸ்வரா.

சந்திரமதிசொல்-விருத்தம்-இ-ம்-முகாரி

பெறுவிதியிரிவென்றெண்ணிப் பேதைபோற்கலங்கலாமோ
அறிவினிலுயர்ந்தயெங்க ளையனேபொய்சொல்லாத

நெறிபிசகாமற்சத்யம் நிலைக்கவே நினைக்கவேணுஞ்
செறிதருபெண்டுபிள்ளை ஸ்திரமாமோகாயமெய்யே.

வசனம்.

இப்படியும்விசனப்படு வாருண்டோ மகாராசனே, உம்முடை யசத்தியம் நிலைக்கவேண்டி ஒருபொய்சொல்லமாட்டாமல் பெண் சாதிபிள்ளையை விற்றுக்கொடுத்தீர் அதினாலே சத்தியமுங் கீர்த்தி யும்நிலையாச்சுது காயம் நிலையாமா பெண்சாதி பிள்ளை நிலையாமா மனதைத்திடப்படுத்திக்கொள்ளும் என்றுண்டவனே.

இராசன்சொல் - விருத்தம்-இ-ம்-பந்துவராளி.

தரும்பொருளுரைக்கவல்ல சத்தியகீர்த்திநீ கேள்
புகழுக்கோர்குறைவுமில்லைப் புண்ணியந்தானு ந்திடாது
மகிழ்சந்திரவதியாமென்றன் மனைவியைமகவை யெர்த
யுகந்தனிற்காண்பேன்யாரை யுறவென்பேன் ட விறானே.

வசனம்.

கேளாயென தன்புக்குரிய அறிவுள்ளசத்தியகீர்த்தியெப்படியாகி லுஞ் சத்தியமேபெரிது தருமமே நிலைக்குங் காயநிலையாதல்லவா யே, என்மனதுக்கிசைந்த குணவதியான சந்திரவதியையும் அரு மையான ஜீவரத்தினம் போல்வளர்ந்த தேவதாசனையுமெந்தயுகத் திலே காணப்போகிறேனோ என்னிலும்பாவி யெவருண்டுமந்திரி.

சத்தியகீர்த்தி சொல் வசனம்.

கேளும் மகாராசனே எல்லாந் தெய்வச்செயலல்லாமல் நம் மிடச்செயலொன்றுமில்லை சுவாமி.

நச்சுத்தரகன்சொல்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

முனிவர்க்குச்சொன்னபொன்னை மூக்காலேயழுதுக்கொண்டே
உனையெவர்கொடுக்கச்சொன்னார் ருன்பெண்டுபிள்ளைதன்னை
வினையமாய்விற்றதாலே மிரண்டையோவினைகொண்டாயே
னிதயிருந்தழுகிறாயே சத்யவான்நீதான்மெய்யோ



வசனம்.

ஓய் ஓய் நேக்குத்தெரிந்ததுகாணும் நேக்குத் தெரிந்ததுகாணு ம் நீயேதோ பாசாங்குபோட்டுக்கொண்டு பெண்சாதிபிள்ளையைவி ற்றிரவனைப்போல் நம்மிடரொக்கத்தை விட்டுவிடுவேனென்று வே ஷம்போட்டால் நான்விடுவேனோ இப்போது நீ மூக்காலேயழுகி றதும் பெண்களைப்போல் ஒண்டிக்குரலாயழுகிறதும் பார்த்தால் உன்னைப்போல் சத்தியவானொருவருமில்லை முன்னேதானே இல் லையென்று ஒருபொய்சொன்னால் இந்ததுக்கம் வருமா.

இராசன்-வசனம்.

அதற்காக அழவில்லை சுவாமி இப்படியும் வந்ததா தலைவிதி யென்று விதிக்க நினையல்லது வேறில்லை உம்மிட கடன் தீர்த்த தா நச்சுத்தரகரே.

நச்சுத்த கர்சொல்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

உருக்க ட்டினைங்கிவேண வுபசாரவார்த்தைசொல்லி
பெருக்கமாய்கையைமூடி பேசியுந்தெருக்கடக்க
குரு களைக்கொண்டுபோயின் கும்பிட்டுவழிவிட்டாய்போல்
அருக்குறுதாகுபொன்னேக் கொடுத்தாயிரமுந்தாராய்.

வசனம்

ஓய் ராசனே ஒருசாணுங்கடைசியிலே குருக்களை வழிவிட்டக தையாயிருக்கிறது நேங்கித்தனைநாளாயும்பின்னே திரிந்ததற்குக் கூலி சம்பளம் பதினாயிரமுங் கொடுப்பீரா இல்லையா ஒருவார் த்தை சொல்லிப்போடு நான் போய் வருகிறேன்.

இராசன்வசனம்.

அப்படியே தருகிறேன் சுவாமி நச்சுத்தரகரே.

இராசன் சொல்-விருத்தம்-இ-ம்-தோடி,

வருகிறகர்மமெல்லாம் வழிதனில்நிற்பதுண்டோ
தரகனுமிவற்குக்கூலி சத்யமாய்க்கொடுக்கவேணும்
உருகுபொன்னையில்வேறே யுனைபறியாதுண்டோ
ஒருபதினாயிரம்பொன் னுதவுவாயென்னைவிற்றே.

## வசனம்

கேளாய் சத்தியகீர்த்தி இனியென்னயோசனை வருகிறது சரிமயம் வழியிலே நிற்குமா வந்ததெல்லாம் அனுபவிக்கத்தானேவேணும் இந்த நச்சுத்தாகருக்குள்ள கூலிபதினாயிரம் பொன்கொடுக்கவேணும் அதற்கு நம்மிடகையிலென்ன யிருக்கிறது ஆகையால் என்னை விற்றுக் கொடுத்துவிடும் அப்பா சத்தியகீர்த்தி.

## சத்தியகீர்த்திசொல்-தரு
### இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

இதற்கோநானிந்நாள்மட்டும் உம்மைப்பிரியாமலே
இருந்ததுமையோஐயோ மன்னவனே
இப்படிசர்ப்பனை பொட்புமே தெய்வம்
எப்படிபோமிது யெய்வனை யாமோ
என்னதான்செய்வேனையோ மன்னவனே

நதிக்குநானுதவிபோலே சதிக்குள்ளாகயிருந்து
தவிக்கப்பார்த்திடவோஐயோ மன்னவனே
சத்தியமித்தனை சித்ரவிசித்திரம்
உத்தமமோதெய் வத்தொழிலோயெ
தயங்கச்செய்தாயேஐயோ மன்னவனே

உன்னநானுள்ளமட்டும் உன்னுடைமையுண்டுதானே
உடம்பெடுத்தேனேஐயோ மன்னவனே
ஒட்டியநிவினை தெட்டியிழுத்திட
விட்டிடுமோசனி பட்டொழிவோமினி
உம்மைநான்விலைகூறவோ மன்னவனே

என்னளவுந்தயையில்லாமல் என்னைவிற்கமனம்வராமல்
இப்படியுஞ்சொல்வாருண்டோ மன்னவனே
இச்சகமோயிது மெச்சுவதோசொலும்
அச்சமிலாமலெ னச்சுனுவாய்விள்ளும்
அட்டியொன்றுண்டோஐயோ மன்னவனே

பாவிபோல்நான்பார்த்திருக்கப் பரதேசிபோல்நீரிருந்தப்
பதியில்விலைப்படவோஐயோ மன்னவனே
பாத்திரமானான் தோத்திரஞ்சொல்லயெம்
மாத்திரமித்தகெனை மாத்திரயவில்லும்
பாங்காகாதோஐயோ மன்னவனே



கூலிநானும்மைவிலை கூறவும்வாய்வருமோ
கொடுமைக்காளானேனையோ மன்னவனே
கொத்தடிமைத்தொழில் பெற்றவெனக்கினி
சித்தமிரங்கிவி டத்தகுமோதான்
கூறையாயென்னைவிலை மன்னவனே

மயில்போல்மனைவியையும் மகனையும்விற்றுயென்னை
வாழ்த்துனையென்றுநம்பி மன்னவனே
வஞ்சகமோயிர பஞ்சவிநோதந்
தஞ்சமென்றுன்னையி றைஞ்சிடுநாயேன்
மகிழவேயென்னைவிற்பாய் மன்னவனே

உயிர்போனாலுடலிருந்து உபயோகமுண்டாயென்னை
உறுதியாய்முன்னேவிற்பாய் மன்னவனே
உற்பனமோயிது விற்பனமன்று
நிற்பயமாய்வில் அற்புதமாகும்
உள்ளபடிதானையா மன்னவனே

## நச்சுத்தரகர்சொல்விருத்தம்-இ-ம்-தோடி.

பண்டை[illegible]றுறவாய்வந்து பரிந்தழுமந்திரிநீகேள்
கண்டனார்சத்தியத்தாலே காண்பனோயிவன்றான்மோக்ஷம்
பெண்டுடன்பிள்ளைநாடும் பறச்செய்வேனெனக்குக்கூலி
உண்டென்றவாக்கினோர்பொய்யுரை செய்தால்முழுகிப்போமோ

## வசனம்.

ஓய் சத்தியகீர்த்தி வெகுநாளாய்வுறவென்று பரிந்துபரிந்தழுகிறாயே இராஜனாகிய இந்தப்பயித்தியக்காரன் என்னமோக்ஷங்காணப்போகிறான் இப்போது கொடுத்த பொன்னையாவது எனக்குக்கொடுக்கவேண்டிய கூலியையாவது இல்லையென்று இரகசியமாக ஒரு பொய்மாத்திரஞ் சொன்னால் முழுகிப்போகிறதா இந்தக் கூலியையும் விட்டுவிடுகிறேன், பெண்சாதி பிள்ளை இராச்சியம் யாவற்றும் வாங்கித்தருகிறேன் இது சத்தியவார்த்தை இத்துடனேசரி இதுசமயந்தப்பினால் வராது மோட்சத்தைக் கண்டதார், சத்தியத்தைக் கண்டதார், இதுபயித்தியம் பயித்தியம்வீண்வீண் கண்டதேகாட்சி உண்டதேவுறுதி சொன்னேன் சொன்னேன்.

சத்தியகீர்த்தி வசனம்

என்னாண்டவன் வளர்த்த நாய்க்குட்டி நானிருக்க அவனை யெப்படிவிற்பேனென்று அழுதேனே யல்லது அவர்சொன்ன சத்தியத்துக்கொரு குறைவுண்டா அவனையே விற்றுத்தருகிறேன் சுவாமி நக்ஷத்திரகரே.

நக்ஷத்திரகன் வசனம்

நேக்கென்னகொட்டறது மகளேவல்லாண்மைஎன் பதுபோல் நேக்குள்ளகூலியைக்கொடும்கொடும் ஒரோருப்பலாகக்கோட்டும்

இராசன்சொல்-வேறு-கவி-இ ம்-ஆனந்தபைரவி,

தாருபொன்பதினா - யிரமுதாங்மெய்யாய்
தருகிறேனதற்கோர் திருகில்லையையா.

வசனம்.

சுவாமி நக்ஷத்திரகரே, தேவரீருக்குத் தாருசம்பளம்பொன் பதினாயிரமுந் தருகிறேன் அதற்கெவ்வளவுந் திருகில்லை சுவாமி,

இராசன்சொல் வேறு கவி,

இ-ம்-ஆனந்தபைரவி,

சந்தாயினுங்காண் தயையேயிலையோ
எந்தாயிவர்தா கெனைக்கேற்கிறதாம்
பந்தாயிரமாம் பசும்பொன்னெனை நீ
விற்றாயொழிந்து விடுமேமந்திரீ.

வசனம்

அப்பா மந்திரி சத்தியகீர்த்தி நாயிவடம்வந்து பெண்பிள்ளையும் விற்றுமெத்தவு மவஸ்தைப் பட்டிருப்பதை இவர்நேராய் கண்ணாரக் கண்டிருந்துங் கொஞ்சமாவது தயைதாக்ஷிண்ய மென்னாமல் தனக்குத் தாருசம்பளப்பொன் பதினாயிரங் கேட்கிறதை யோசித்தால் இனி யென்னையும் விற்றுலொழிய நமக்குத்தகாதாவிடமாட்டாது சுறுக்கா யென்னை விற்று இவர்கேட்ட பொன்னைக்கொடுத்து போய்வரச்சொல்லப்பா மந்திரி.



மந்திரி சொல்புலம்பல்-தரு-இ-ம் முகாரி-அடதாளம்.

பல்லவி.

அரகாவிஸ்வ நாதா - அமைச்சனானேனுன்விசாலாக்ஷியம்மைசமேதா

அநுபல்லவி.

தாருசம்பளத்துக்குத் தருமோயிவனை விற்க
தனியனானொருவனும் பனைமரம்போலேநிற்க (அரகர)

சரணங்கள்

கொண்டபெண்பிள்ளை-கூலிக்கடில்வளர்த்த கிள்ளை
தொண்டடிமையைச்சள்ளை தோற்கலாயிதென்னகொள்ளை (அரக)

ஆடிருக்கவுங்கோனாய்-ஆயனையேன் இன்னும்
நாடிகற்கென்னைவிற்று லிவருக்காகாதோபொன்னும் (அரகர)

பஞ்சுபறந்தாற்கூட பறக்குமோபாரமலை
மிஞ்சும்புலியையெலி-குஞ்சுகூறுமோவிலை (அரகர)

சத்தியகீர்த்திசொல் வேறு-கவி.

இ-ம்-ஆனந்தபைரவி.

மின்றனையனையும் விற்றதுமல்லால்
உன்றனையும்விற்க வொண்ணாதென்னையா
என்றனைவிற்றிங் கிவர்தரகென்னும்
பொன்றனையளித்துப் போய்வரச்சொல்வீர்.

வசனம்.

கேளுமென்னாண்டவனே உன் பெண்பிள்ளையை விற்றதல்லாலுன்னையும் விற்கத்தகுமா அடியேனை விற்றிந்த நக்ஷத்திரகருக்குப் பதினாயிரம் பொன்னுங் கொடுத்துப் போய்வரச்சொல்லுஞ் சுவாமி

இராசன் சொல் - வேறு கவி.

இ-ம்-ஆனந்தபைரவி.

போய்வரச்சொல்ல வாய்வராதென்னை
காய்வரவிற்றினிதீ யியியர்பொன்னை.

வசனம்.

அப்பா மந்திரி சத்தியகீர்த்தி, உன்னைவிற்றப்பொன்னைக்கொடுத்திவனைப்போய் வரச்சொல்ல வெனக்கு வாயும்வர மாட்டாது, நானடிமையாக இருக்கிறவளைக்கும் விஸ்வாமித்திரர் விலங்கம் விடுகிறதில்லை இதைநன்று யோசித்து என்தலையிலொருஅரும்மை வைத்து என்னையே விற்றுபொன்னைக்கொடுத்து நச்சுத்தரரு கூடவாமியை அனுப்பிவிடுவாய்மந்திரி.

சத்தியகீர்த்திசொல்-வசனம்.

அப்படியே செய்கிறேன் விடைவசம் விடுமோ சுவாமி.

சத்தியகீர்த்தி-இராசனை விற்கிற-தரு-எல்ச்சித்து.

இ-ம்-புந்நாகவராளி-ஏகதாளம்.

சரணங்கள்

எலார வேலார - இங்கே
இவனைவிலைக்கூறிவா
வேலாயுதனுக்குமூத்த - மத
வேழமுகனடியிணைபோற்றி,
மேலோரேநீர் வருவீரோ - இவனை
விலைகொண்டுபொன்தருவீரோ
காலாரநீங்களிடும் வேலை-கண்ணுற்
கண்டுசெய்வாரிவர்கையாலே
காசியெனப்புகழ்விளங்கும் வீசுமலை கடலில்
கௌசிகமுனிக்கு கடனவசரதடபிடலில்
ஆசெனுநச்சுத்தரகராம்பெருங் காற்றில்
அகப்பட்டுநிலைத்தப்பித்தரிச்சந்த்ரகப்பல்
மாசிலாமீகாம மந்திரியுங் கூவ
மறையோர்கள்முதனுன்று வற்னர்களுந் தேவ
தாசியர்களாலுந் தருணமிது தாவ
தரவேணுந்திரவியமெனுங் கரையையினிமேல (எலார)



காசியெனுமாநகரை-நாளுங்
காப்பவரே-பொன்-சேர்ப்பவரே
மாசில்லாதரசுசெயும்-மகா
மன்னர்களே-சம்-பன்னர்களே
பூசிதமாய்தானதர்மம் நிதம்
புரிபவரே-இங்கு-திரிபவரே
ஏசில்லாதாடையணி-மெய்
போர்ப்பவரே-மணம்-பூர்ப்பவரே
ஆசையிகவேபெருகு மயோத்திவிஸ்வாசன்
அன்பிரக்கமுமுள்ள வரிச்சந்த்ராசன்
தாசனெனவுந்தொண்டு தான்செய்யும்போசன்
தனமீதநாலெட்டு தருமஞ்செய்நேசன்
ஏசின்றியிவனாநான் விலைகூறிநின்றே
னிப்போதுவாங்குவோர்க் கெய்தும்புகழின்றே
பாசமுடன்பொன்னுளோர் பார்க்கவேவாரீர்
பதினாயிரம்பொன்னு பாலித்துக் காரீர் (எலார)

வருமுறையோமுயோவெனக்-கூறி
வருவேனே-இவனைத்-தருவேனே
அருமறையோதையர்களே-புவி
யாளர்களே-வேளாளர்களே
திருமருவும் வைசியரில்-தன
செட்டிகளே-கோ-முட்டிகளே
கருமமெலாங் கண்டோர்க்கு-மந்திரி
கருணிகரோ-சொலும்-புராணிகரோ
தருமநெறியாவுமறுசமைய பரிபாலர்
தாமோதரன்குடிகொ ணேமகோபாலர்
குருமருவுவன்னியர்செங் கூந்தர்கள்குலாலர்
குச்சிலியர்கன்னாளர் மெச்சுகுணசீலர்
மருமருவுசேணியர்கள் வனிகர்பணிசெய்வர்
வண்ணாரமட்டர்திரு வள்ளுவரில்சைவர்
தெருமருவுமிவர்கள்பொன் தருவதிலைதள்வீர்
தீண்டொணுபுலையர்களென்றுண்டவனைக்கொள்வீர் (எலா)

டுமே

12095

## கட்டியக்காரன்சொல்-வசனம்.

அகோதெப்படியென்றால், இப்படிக்கு அயோத்தியாபட்டணம் ஆளும் சத்தியபாஷை அரிச்சந்திர மகாராஜனைத் தன் மந்திரியாகிய சத்தியகீர்த்தி நட்சத்திரகன் தாருபணத்துக்காக காசிப்பட்டணவீதியில் விலைகூறிக் கொண்டிருக்க அப்போது தவத்தில் முக்கியமாயிருக்கின்ற விஸ்வாமித்திரமகாரிஷி தன் ஞானதிருஷ்டியினாலறிந்து சிஷர்களையழைத்துச் சொல்லுகிற விதங்காண்க.

## விஸ்வாமித்திரர்சொல்-வசனம்,

ஆகா அடா அகடவிகட அலங்கிர்த ஆச்சரியசூடாமணி, அடா அதிவிதரணசெயசித்தாமணி, காசிப்பட்டணத்தில் வந்திருக்கிற அரிச்சந்திரமகாராஜனை அவன்மந்திரி சத்தியகீர்த்தி நட்சத்திரகன் தாருபணத்துக்காக காசிப்பட்டணவீதியில் விலைகூறிக்கொண்டிருக்கிறான் அவனைவிலைபற அடிமைகொள்ள நான்காசிப்பட்டணச்சேரியில் சுடலைகாத்துவாழ்ந்திருக்கும்தோட்டி வீரபாகுவையனுப்பி வைத்து அடிமை கொள்ளும்படியாய்ச் செய்யும்வேடிக்கையைப் பாருங்கள் பாருங்கள் சிஷர்களே தொண்டர்களே.

## சிஷர்சொல்-வசனம்.

சுவாமி சுவாமி சுவாமி உமது பணத்தைவாங்கி உமது தொப்பையில் கொட்டிக்கொண்டீரோ இன்னம் அவனைக்கெடுக்கவும் பறையனுக்கவும் மசானங்காக்க வைக்கவும் யோசனையெடுத்தீரோ ஆகிலும் அந்தசத்தியபாஷை அரிச்சந்திர மகாராஜன் பொய்சொல்லாவாசகனுச்சுதே அய்யய்யோ அவனைப்பறையனுக்கிவிடுகிறதா இகில்வரப்பட்ட தோஷம் உம்மைச் சேருகிறதா அந்த பணத்தை வாங்கி யொதிமாட்டமாய் இன்னுங்கொடுக்கிறிகிற நட்சத்திரகனைச் சேருகிறதா எங்களுக்கொன்றும் தெரியவில்லையே சுவாமி விசுவாமித்திரரே இன்னமந்த அரிச்சந்திரனை யென்னென்ன கோலஞ்செய்விக்கவேணுமோ அதையெல்லாஞ் செய்துவிடும் அவனுக்கு ஒருகாலத்திலும் நஷ்டம்வரப் போகிறதில்லை அவனே நல்லமோக்ஷ கெதியடையப் போகிறான் வரோ அந்த எமதருமராஜனைப்பறைவேடமெடுத்து வரச்சொல்லும் கண்ணினால் பார்க்கலாம் சுவாமி.



## விஸ்வாமித்திரன்- எமதருமராஜனை- அழைப்பிக்கும் தரு-இ ம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

## பல்லவி.

தருமராஜனே வாராய் - எம - தருமராஜனே வாராய்

## அநுபல்லவி.

அருமையான மசானங்காக்க
அமைந்தவேடமதாகயெடுத்துநீ (தருமராஜனேவாராய்)

## சரணங்கள்.

கம்பிளியறையில்காணவுமாக
நம்முன்னேவருகநாடியே நினைந்தேன் (தருமராஜனே)

பறைமேளத்துடன் தடியுங்கொண்டு
பறையன்வேடமாய் துரிதமாகவே (தருமராஜனே)

தேவர்மூவர்கண்டு அதிசயப்பட
திரிச்சங்குமைந்தன் தன்னையுங்கொண்டிட (தருமராஜ)

## எமதருமராஜன்பறைவேடமாய் வருகிற தெம்மாங்குகண்ணி.

அடி-செல்விபுளிச்சக்கண்ணி - நல்ல - சிங்காரமானதோர் தொ
ள்ளைக்கண்ணி - அடி பல்லே யிளிச்சக்கண்ணி எந்தன் பசுந்தாங்
காணதோர் பூனைக்கண்ணி (தெந்தினானே- தென்னானே சில்லு கிட
தாம்-ஆங்கடிசில்லாய்-சில்லாம்-சிலலாம்-சிரு-சிகு-சில்லாம்)

அடி - குறுமூலைச்சியோ-நல்ல- குண்டுமிகுத்த தலைச்சியோ-
அடி-சிறுநாச்சியோ-எந்தன்-சித்தத்துக்கானகளச்சியோ (தெந்)

அடி கோடுவடிந்தவாயி-உந்தன் -கொங்கையிரண்டும்-பெரிதாகி
தேடுகிறப்போயிகம்மாயிருக்காதே-நீவாப்பெருவாயி (தெந்தி)

அடி சொட்டைவிழுந்தமூக்கி உந்தன் தோளுக்கிசைந்ததைப்பெ
ரிதாக்கி-கொட்டுமேளமாக்கி- எங்கும்கூச்சலிடுகிறாய்வரப்போக்கி

அடி-வில்லாப்விட்டுக்கழுதே-எல்லை வஞ்சனைசெய்தவும்பிழுதே-வின்னுணம்விட்டழுதே-என்னை-விட்டுப்போவதுனல்போ இப்பொழுதே (தெந்திருனே தென்னுனே-சின்னுகிடதாம்)

அடி-பொக்கரக்கலாண்டி - உந்தன்-புருஷனைக்கேவிட்டுபோளுண்டி-பக்குவமிதுதாண்டி-உன்னைப்-பார்த்துப்போயவன்போட்டாண்டி (தெந்திருனே தென்னுனே)

அடி ஆஞ்சாதுடப்பக்கட்டே- நல்ல - அழகாகவந்த வொதியங்கட்டே-புஞ்சு புடிந்தகட்டே- உனக்கும்- பொங்காரமேடிதுக்கோநாறக்கட்டே (தெந்திருனே தென்னுனே)

அடி வெயிலோரம் நின்னுக்கொண்டு - அடி-வெட்டயிலேமஞ்சானேபூசிக்கொண்டு - பையலோடேபோனவளே உந்தன் பந்துமுலேரெண்டும் சொந்தமடி (தெந்திருனே தென்னுனே)

அடி அரிசிஅரிச்சக்கண்ணி நல்ல-ஆவாரம் பூபோலேபுத்தகன்னணி - குருவிகொடைந்தகண்ணி - உனக்கு - கோபங்களேதடிறொள்ளக்கண்ணி (தெந்திருனே தென்னுனே)

அடி-மாற்காங்குதிரைமேலே-மக்கச்சாறுயப்பானதலைமேலே நானுங்குதிரைமேலே அடி நய்யாடி நய்யாடிசமமானே (தெந்

எமதர்ம்மராசன்-வீரபாகு வேடமாய்வந்தது.

விஸ்வாமித்திரரைக்கண்டு சொல்-கவி.

கோசிகமுனிவோரம்மைக் கோபியேயழைத்தனென்ன
பாசமாயுரைக்கவேணும் பருத்தவமுனிவல்லோனே

விஸ்வாமித்திரர்சொல் விருத்தம்-இ-ம்-தோடி.

தருமனேபறைவேடமதாய் நானழைத்ததைநீர்கேளீர்
வருமையாய்க்காசிவந்த மன்னரிச்சந்திரன்நல்லை
தாரகுனர்பொன்னுக்காகத் தானிவிலைகூறிவாரான்
பொருமைசேர்விலையாய்வாங்கிப் போகுடன்சுடலைசேர்ப்பீர்

வசனம்.

கேளும் நம்மிடபேரில் தயவாய்ப்பறவேடங்கொண்டு பறைமேளத்தோடுங்கூடவந்த எமதருமராசனே உய்யம நானழைத்த



சேதி சொல்லுகிறேன் கேளும் அயோத்திநாடன் திரிசங்குமகாராசன் பிள்ளைசத்தியபாஷ அரிச்சந்திர மகாராசன் நமக்கு ஆனையின்பேரில் ஒருபலவந்துவின்று கவுண்டுகல்லெறிந்தவுயரம் பொன்கடன் கொடுக்க வேண்டியதாய் நம்மிடத்தில்வந் தகப்பட்டுக்கொண்டான் அப்போர்க்கொத்தவனை அவனுக்குகுருவாகிய வசிஷ்டன் அவனைப் பொய்சொல்லாத அரசனென்று தேவேந்திரன்சபையில் கொண்டாட அதினாலே வசிஷ்டனுக்கும் எனக்கும் வெகுதூரம் தக்கமாய் அவன் நாவில்நான் அகத்தியப்பொய் தருவிக்கிறே னென்றுசொல்லி தேவேந்திரனைச்சாட்சியாகவைத்து வந்திருக்கின்றேன் இப்போதந்த அரிச்சந்திரனை நமது பொன்னுக்காயமடக்கிநாற்பந்தி வெட்டுநாள் கெடுவுகொடுத்து காசியாத்திரை யனுப்பிவிட்டேன் அந்தப்பொன்னைமறுபடியும் கெடுவுபடிக்கி வாங்கிவர அவன்பேரில் தாட்சாய் சுக்கிரபகவானை யழைத்து நட்சத்திரகுபாப்பாகும் அனுப்பிவைத்திருக்கிறேன் அவன்போய் அவனைப்படுத்தின இம்சையிலே அவன்பெண்டுபிள்ளையை காசிபட்டணம் காலகண்டையராகிய அக்கினி பகவானுக்கு விற்றுநம்மிட பொன்னைகுடுத்தனுப்பி விட்டான் கொடுத்தவன் பொன்னுக்குப்பொன்சரியாய்தருகொடுக்கவேண்டியதற்காக தரகரையிலகப்பட்டுக்கொண்டு தான்யாருக்காகிலும்அடிமைப்பட்டு கொடுக்க தன்மந்திரியாலே தன்னைவிலை கூறச்சொல்லி யாருக்காகிலும் அடிமைப்படவிருக்கிறான் ஆகையால் நீர் நம்மிடபேரில் தயவாய்ப்போய்முன்னம் நட்சத்திரகளைக்கண்டு உள்ளபடியானபேச்சுகளை நீங்களிருவரும் பேசிக்கொண்டு அந்த அரிச்சந்திரனை விலைபறவாங்கி காசிப்பட்டணச்சேரியில் சேர்ந்தசுடலை காவல்காரனாக வைத்து நமக்குவந்து சேதிசொல்லவேணும் எமதருமராசனே போய் வாரும்.

வீரபாகுசொல் கவி.

கொப்பனவரசனைக் கொடுபோய்மசானத்
திப்போதேவைத்து சேதிசொல்வேனே

வசனம்.

அடோ அய்யோ விசுவாமித்திரச்சாமியே நானிந்தபாமேலத்துடனேபோய் அந்த அரிச்சந்திரனைக்கண்டு விலைபறவாங்கி என்மசானத்தடலைகாக்க அடிமைப் படகாய்வைத்து உமக்குவந்து சேதிசொல்றேன் நீர் தவசில்சாமனே யிரும் அய்யனே.

பொருவிருத்தம்-இ-ம்-சாவேரி.

முன்பதினையச்சொடுத்ததும் பெண்டுபிள்ளைவிற்று
முனிவிஸ்வாமித்திரர்கடன் தீர்த்தபின்னர்
பொன்பதினாயிரத்தாகிய விதமாய்க்கேட்க்கும்
பூசாரனுக்கில்லையெனவோர் பொய்சொல்லாமல்
அன்பதினால்தலையுள்வில்ல யாகக்கூறு
மரிச்சந்த்ரபூபதியை யடிமைக்கொள்ள
தென்பதியைவிட்டியமன் புலைபருகிச்
செல்லுவான்வில்லையென்னெனச் சொல்லுவானே.

கட்டியக்காரன் சொல் வசனம்.

இவ்விதமாகவிஸ்வாமித்திரருக்கு நாடு நகரமுதலான நந்தா னாவார்த்துக் கொடுத்து விட்டு மறுபடியு மேகொடுக்க வேண்டியக டனுக்காக காசிபாதிரிநா வந்து பெண்டுபிள்ளையும் விற்றுபெரு ங்கடனையுந்தீர்த்தபின்பு தச்சுத்தாகர்தமக்குதந்தாரு சப்பளப்பதி னாயிரம்பொன்கேட்க்க அதையுங்கொடுக்கிறே னென்றுமதீரியைய தன்னை விலைகூறிவிற்கச் சொன்ன அரிச்சந்திர மகாராசனை யடி மைக்கொள்ள தென்திசைக்கதிபதியாகிய எமதருமராசன் வீரவா குவென்று நீச்சத்தோட்டியாய் வருகிற விதங்காண்க.

தரு-இ-ம்-புந்நாகவராளி-அடதாளம்,

தில்லானா தில்லானா திரிதில்லானா திரிதில்லானா-தந்திரி நாதிரி த்தில்லானாதிரி தகதகதக திகிதிகிதிகி தாதிகிதகததிங் கணதோம் தி ல்லாத் திரிகுடுதில்லாந் திரிகுடுதில்லாந்தில்லாந் திரிகுடுதில்லாந்தி ரிகுடு தில்லாந்திரி குடுதில்லாம்

எல்லாஞ்சிவமயமே யென்றெண்ணி யிருப்பதுவுஞ்செயமே,
அல்லாமலோர்பயமே யில்லை யறுமுகமுதியா யிருதயமே

தில்லாந்

மாரிபொழியுங்கா ருண்ட மலைமேனி சேரிவழியுநாகான்
னரிமிழியுங்கான் மெய்ப்பெரியாயி லேபிச்சழியுநாயான்

தில்லாந்



சிரிமெள்ளமுறிக்கித் தள்ளு வெள்ளச்சிக்கென்னடைக்கொண்டா
பரிவறல்பொறிக்கி யென்றன்பக்கத்தில்வாடிபறச்சிறிக்கி[சுறிக்கி

தில்லாந்

செல்லிவிரிதலைச்சி யடி சேல்க்கென்னடைகண்ணிசெப்புமுலைச்சி
பல்லிபழங்கலச்சி யென்றன் பக்கத்தில்வாடிபரும் புலைச்சி

தில்லாந்

செக்கச்சிவந்தவளே.நல்ல தேனிதழ்வாய்முத்தந்தந்தவளே-வந்து
பக்கம்படுத்தவளே முலைப் பற்றையென்கையில் கொடுத்தவளே

தில்லாந்

சந்தனச்சோலையிலே யிளஞ் சாலையிலேமதிகாலையிலே
பந்துவிளையாடையிலே வந்து பட்டுதெடியென்றவடையிலே

தில்லாந்

வீரபாகுசொல்-விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

ஆரயாவிலையைக்கூறி அரசனைவிற்கவந்த
தாரயாவுனக்குவந்த ஆபத்தைச்சொல்வாயிங்கே
பாரயாயென்பேர்வீர பாகுநான்கொளலாமென்றால்
தீரயாகடனையாள்மேல் சீட்டெய்திதருகுவாயே.

வசனம்.

ஆரயா ஐயா யெந்துராயா நீயேயா வீறே விக்குறே ஏனக் கென்று ஆபத்தை செலயா எம்பேர் வீரவாகு பறையயா நான் கூட வாங்கலாமென்று இந்த ஆள்மேலே சீட்டெய்தி ருடையா நான் பணங்குடுக்கிறேன் என்னயா செலயா நான் போகணும்.

இராசன்சொல் விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

ஆபத்தாயிரப்போர்க்கன்ன மளிப்பவரன்னைதந்தை
ஆபத்தாராலென்ன ஆதரிப்பவரோதெய்வம்
ஆபத்தாய்காசிவந்த அரிச்சந்த்ரனென்பேரிங்கே
ஆபத்தாயுனையடுத்தே னடிமைகொண்டருள்செய்வீரே.

வசனம்

ஐயா வீரவாகுவே ஆபத்தாயிருப்பவர்க்கு அன்னையளிப்பவரே தாய் தந்தை, அடுத்தவர்களை ஆதரிப்பவர்களே தெய்வம், நான் அயோத்தி திரிசங்குமகன் அரிச்சந்திரன், விஸ்வாமித்திரருக்குக் கொடுக்கவேண்டிய கடனுபத்தாயிரம் பணத்தேன் என்னை யடிமைக்கொண்டு இந்தநக்ஷத்ரகருக்குத்தரகு சம்பளம்பொன் பதினாயிரமுங் கொடுத்து அனுப்பிவிடவேணுமையா.

தோட்டிசொல்-விருத்தம்-இ-ம்-காம்போதி.

விடவேணுமென்றசெய்ய வேந்தவேயிணங்களெல்லாஞ்
சுடவேணுஞ்செத்தமாட்டை தோலுரித்துத்தயங்கும்
இடவேணுங்காவடிப்போட்டெடுத் தெடுத்தோயாமற்
படவேணுஞ்சட்டதித்தால் பணமுந்தருவேனே.

வசனம்

என்னையா ஐயா நீசெய்றதிதே பாத்தாபரிதாவமாயிக்குது அதுக்கு பாத்தானிருப்பெனெனக்குமிந்து உன்னைக்கொண்டாமென்றுவேலைசெய்வாயா நீ பொய்யாவெடிஞ்சாபொய்யாபோகுசுடுகாட்லே இடந்து பிணஞ்சுடணுஞ் செத்தமாடனுத்துப் பங்கிடனுங் கழிகாவடியெடுக்கனும் இவ்வளம் எல்லாப்பாடுபடனும், இதுக்குசம்மதின்னு வெலைச்செல்லி அடிமை சீட்டெய்திபோடயா யிப்படி.

இராசன்சொல்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

மாண்டவர்களை நீறுக்க வல்லீரவாகுவென்னும்
ஆண்டவனினொரு அடிமைநானுமக்குத்தொண்டு
பூண்டவனிங்கள்சொல்லும்படித்தொழிலெல்லாஞ்செய்வே
னீண்டவன்கடனைகாரிப்பே ளிதரவேணுமையா

வசனம்

கேளுமென்னை அடிமைக்கொள்ளவந்த வீரவாகுவே, நானுமக்கு அடிமையானபோதே நீங்களிட்ட வேலையெல்லாஞ்செய்வேன், கடலையுங்காப்பேன், பிணங்களுஞ் சுடுவேன், செத்தமாட்டுத்தப்பங்கிட்டெடுத்துவந்தும் சேர்ப்பேன், எப்படியாகிலும் பொன்னைக்கொடுத்து இந்த நக்ஷத்தரகனை அனுப்பிவிட்டால் போதுமையா.



வீரவாகு-வசனம்.

அப்படியானால் முறிச்சீட்டெழுதுமையா.

சத்தியகீர்த்தி- வசனம்.

அரிகரி அரிகரி இப்படியுமிருந்ததா தெய்வமெத்தனம் ஈஸ்பரா ஈஸ்வரா.

இராசன்-வசனம்.

விசனப்படவேண்டாம் என்தலையிலேயிருக்கிற தாருமையெடுத்து அவன்கையிலேகொடுத்து அச்சாரந்தட்டிக் கொள்ளும் அப்பா மந்திரி.

வீரவாகு - வசனம்,

ஆண்டே ஆண்டே இந்தப்பிணங்கள்ரொம்பவந்திருக்குது சுடுகாட்டுக்குநான் துறைசாய்ப் போகவேணுஞ் சீட்டெழுதும் ஆண்டே.

சத்தியகீர்த்தி எழுதுகிற சீட்டு.

ஆசிரிய விருத்தம் - இ - ம் - தோடி.

சீர்கொண்டவயோத்திநாடாண்டிருந்தவன்
திரிசங்குமகன் குமாரன்
திகழரிச்சந்த்ரனுன் புகழ்புரிக்காசிபுலைச்
சேரியிற்குடியிருக்கும்
வீரவாகுக்கடிமையானது வென்னெனில்
விஸ்வாமித்திரபொருளுக்கென்
மேல்தருவந்ததச் சுத்தரகுளவாயிக்கு
மெய்பொன் பதினாயிரமவர்
நேரவாகொண்டுகேழ்க் கவுமென்றனவசர
நிமித்தியமதாகப்பற்றி
நிலையாகவென்றனை விலைகூறிவத்தமனு
நெறிசத்யகீர்த்தியறிய
ஆரவாரங்களையிரு காசிதெருவீதியி
லனைவோருமறியபொன்னை
அந்தணர்க்களித்துமேற்கண்டவர்க்கடிமையா
மரிச்சந்த்ரன்சுவஸ்தலிகிதம்.

மக

சத்தியகீர்த்தி-வசனம்.

இந்தச் சீட்டைப் பறையன் கையில் மனதொப்பி யெப்படிக் கொடுப்பேன் சுவாமி.

இராஜன்-வசனம்.

அரிகரி அரிகரி இப்படியுஞ் சொல்லலாமா சத்தியபங்கமாமே உடனே அவன்கையிற் கொடுத்துவிடும் மந்திரி.

சத்தியகீர்த்தி-வசனம்.

இந்தாவப்பா வீரவாகு பொன்னைக்கொடுத்து சீட்டைவாங்கிக்கொள்ளப்பா.

வீரவாகு-வசனம்,

பொன்னை யார்கையில் கொடுக்கவேணும் ஆண்டே.

சத்தியகீர்த்தி-வசனம்.

இந்தப்புண்ணியவான்கையிற் கொடுத்துவிடும் அப்பா

வீரவாகு-வசனம்,

இந்தாசாமி பார்ப்பார ஆண்டே-கொள்ளிக்காசு-குடக்காசு-வாய்க்கரிசி-நோம்பிச்சோறு-துண்டம்விற்றகாசு எல்லாமிதிலே யிருக்கு எண்ணத்தீண்டாதே தாரப்போம் சுவாமிபாப்பார ஆண்டே.

நச்சுத்திரகன்-வசனம்.

அடாய் அறுதலித் தேவடியாபிள்ளாய் பொன்னுக்குத் தீட்டுண்டா நாய்விற்றகாசு கொலைக்கிறதா தொடாமல் வையடா எடுத்துக்கொள்ளுகிறேன்,

தோட்டிசொல்-விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

இப்படிக்காட்டு வெட்டியவுஞ்சீட்
டெங்கய்யிலிக்கட்டிநந்தையன்
ஒப்பிடக்கேட்டுமுன் னூன்விட்டான்சாக்சி
யொருவனேபோதுநீயுதிரக்



கப்படிமாட்டுக் கறிகளைத்தோலில்
கட்டுங்காவடியையெந்தடியில்
இப்படிபோட்டு யெடுசெவஞ்சுடுகாட்
டேவலுஞ்செய்திருப்பாயே.

வசனம்.

இப்படி காட்டயா அந்தசீட்டே நல்லதிக்கட்டு எதொந்தையன் ஐயயுன் ஒனக்குத்தாறு இவர் தாருசம்பளம் பதினாயிரம்பொன் குடுக்கறும், இப்படி எட்டவாயா தாறேன், இந்தையனுக்குடைய்வந்தா கேளயா கேட்டுக்குறு இந்தடியிலே இந்த காவடியே மாட்டி யெடுத்துக்கயா.

இராசன்சொல்-விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி,

காரிருளென்ன வேத சோதிட நூல்களாய்த்து
நாரிருவாகவந்த நச்சுத்திரோகையானுன்றன்
நாகுருவாகவந்து நாசுவாமிமுனிவிஸ்வாமித்
திரகுருபாதத்துக்குத் தெண்டனிட்டேன்போய்வாரீர்.

வசனம்.

தெண்டன் சுவாமி நச்சுத்தரகரே, நானுமக்கு கொடுக்கவேண்டிய தாருசம்பளம் பதினாயிரம் பொன்னு மிந்த வீரவாகுகையில் பற்றிக்கொண்டீரா, இனியந்த விஸ்வாமித்திரருக்கு முமக்குமனந்தம் தெண்டனிட்டேன் போய்வாருஞ் சுவாமி.

நச்சுத்தரகர்சொல்-விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

வண்மையிற்சொற்னாட்வழங்கவுங்கேட்டு
வருவிஸ்வாமித்திரர்கடனுவ்
பெண்மையில்பெண்டுபிள்ளையைவிற்றாய்
பின்பெரும்புலையனுக்காளாய்
தன்மையில்நேச்சுத்தரகுசம்பளமுந்
தந்துவிட்டாயரிச்சந்திரா
உண்மையிலுனக்குநிகரிலையிம்மு
வுலகினிற்போய்வருவேனே.

வசனம்.

ஆசீர்வாதஞ் சத்தியபாஷரிச்சந்திர மகாராசனே, தருமமென்று இன்னுந்தே தருமம், சத்தியமென்று இன்றுந்தே சத்தியம், தயிரியமென்று இன்னுந்தே தயிரியம், உண்மையென்று இன்றுந்தே யுண்மை, உமக்கு நிகரானவர்கள் திரிலோகங்களிலு மில்லை, உம்மையேமெச்சினேன், எனக்குந்தராகுசம்பளமும் வந்தது, இனி நான்போய்வருகிறேன் ஆசீர்வாதம் மகாராசனே.

இராசன் புலம்பல்-தரு-இ-ம்-புந்நாகவராளி-ஏகதாளம்.

வலையமுமதிதயல்மகள்மனை மாலையிட்டபுனை தோளில்-இந்த
மாமிசக்காவடியெடுக்கவும்விதி வந்ததோ. யிந்நாளில்

சிலையுமம்புறைதூணியும்புனை திணிதடந்தோள் மேலே. இன்று
செத்தமாட்டுக்கறியெடுக்கின்றேனுந்தீண்டாதவன்போலே

மலையினும்பெருத்துயர்ந்துவளரு மணிமுடியுறைப்புசத்தில் }
செத்த }
மாட்டுக்கறிகாவடியெடுக்கவும் வந்ததேவிதி வசத்தில்

புலையனுக்காளாகித்தந்த பொருளோயு மீட்டாமல்-மனம்
பொருந்திமாமிசமெடுக்கின்றேனோ பொய்சொல்லமாட்டாமல்

இராசன்சொல் விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி,

விதியினில்வந்தவிஸ்வா மித்திரருணத்தைத்தீர்த்தோம்
மதியினில்மிகுந்தநம்பி மந்திரிநீயிக்காசி
பதியினிலிருப்பாய்வீர பாகுபின்னேகியென்றன்
கதியனுபவித்துக்கொஞ்ச காலமுங்கழிக்கின்றேனே,

வசனம்.

அப்பாமந்திரி சத்தியகீர்த்தி-நமக்கு வந்தவிதிதானேயனுபவிக்கவேணும் விஸ்வாமித்திர ருணத்தையுந் தீர்த்துப்போட்டோம்நானே வாத்திகானு, இந்தக்காசிப்பட்டணத்தி லெவனையாகிலுமடுத்திருந்து வாழ்வாய், நானிவர்பின்னேபோ யிவரிட்ட வேலையைச்செய்துக்கொண்டு சிலகாலமுஞ் சரித்திரப்படுகிறேனப்பா.



சத்தியகீர்த்தி - புலம்பல் - தரு.
இ-ம்-எமுனாகலியாணி - ஏகதாளம்.

பல்லவி.

மனமும்வந்ததா - விதி-வசமுமிதையந்தா அய்யா

அனுபல்லவி.

இனமுமுன்றனைப் பிரியாவென்னிட
இனியையோதடுத் தெருவினில் விட (மனமும்)

சரணங்கள்

சேவடி பணிந்துப் - பணி
செய்யுமெனைவிடுத்து - புலைக்
காவடியெடுத்துக் கடிகிறான் செல்வ
கட்டளையும்மனை விட்டேனென்றுசொல்ல (மனமும்)

நகரமுந் தனமும் - நவ
ரதனசிங்காதனமும் - இன்னும்
சகலமும்அருந் தவமுனிக் கொள்ள
தந்திரதற்குமேல் மந்திரியையுந்தள்ள (மனமும்)

பெண்டு பிள்ளையை - உடன்
பெரியசன்னையை - நானுந்
தொண்டுசெய்பெலிலையுந் தொலைத்துநீஅய்ய
தோட்டிவீரவாகு வீட்டில்வேலை செய்ய (மனமும்)

இராசன் சொல்-விருத்தம்
இ-ம்-ஆனந்தபைரவி.

அமைச்சனேசத்தியகீர்த்தி யப்பனேயென்றனக்கு
அமைச்சதுபுலையற்காளா யலையக்காவடியுந்தோள்மேல்
சுமைசவஞ்சுடவுமானேன் சுடலைவாய்க்கரிசிபெற்றேன்
சமைச்சமுதல்வனேன்காசி தலத்திருந்தெனைக்காண்பாயே

வசனம்.

அப்பாசத்தியகீர்த்தி நீயழவேண்டாம், அவரவர்களுக்கு அமைந்த தலைவிதியில் வெற்றென் றல்லாமா, எனக்கமைந்தது தான், நீவி

னப்பட வேண்டாம் நீ யிந்தக் காசிப்பட்டணத்தி லிருக்கிறயத்தி
னம் போயிருந்தால் மறுபடியு மென்னைவந்து காணலாம் நான்
போய்வருகிறேன் சும்மா யிருடப்பா.

பொதுவிருத்தம் - இ-ம்-சங்கராபரணம்.

மந்திரியிவ்வாறுரைத்துதளர்ந்துகாசி
வளநகரினடுத்தெருவில்மறுகிநிற்க
விந்தைபெறுதோட்டியெனும்வீரவாகு
விளங்குமரிச்சந்திரனைவிலையாய்க்கொண்டு
தந்திரமாய்க்குடியிருக்குஞ் சேரிநோக்கிச்
சடசடெனத்தானடந்துபோமவ்வேளை
வந்தனங்களறியாத அந்தத்தோட்டி
மனைவியெனுந்தோட்டிச்சிவருகின்றாளே,

கட்டியக்காரன் வசனம்.

அகோதெப்படியென்றால், இந்தவிதமாக அடிமைப்பட்ட அரி
ச்சந்திரமகாராசனைத் தோட்டி அழைத்துக்கொண்டு பறைச்சேரி
க்கு வருகிறபோது தோட்டிச்சி வருகிறவிதங்காண்க.

தோட்டிச்சிவருகிற ஓரடிதரு
இ-ம்-புந்நாகவராளி - ஆதிதாளம்.

பல்லவி.

நானேதோட்டிச்சி ஆண்டைமாரே நான்தானே தோட்டிச்சி.

அநுபல்லவி.

வானோர்புகழ்ந்தகாசியிலேகாணிபட்சி
மாறுதிருக்கிறசொந்தம் அறப்பெருக்கமகிழ்ந்த (நானே)

சரணம்.

எருமைத்தோலாயிரம் பொன்-வருஷத்தில்
எருதுத்தோலாயிரம் பொன்
எருமைக்கொம்பாயிரம்பொன்-வருஷத்தில்
எலும்புகளாயிரம் பொன்
வருப்பிணஞ்சுட்டகட்டை-மீந்த



வருஷத்திலாயிரம் பொன்
தரும்பணங்காலுண்டு - பிணத்துக்கிரு
சாண்சீலையுமுண்டு
அருமையோபவுனந் தாசு - சக்களத்தி
அவளுக்குப்பாதிப்போச்சு
நிரம்பிச்சுவீடெங்குந்-தோட்டிக்கி
நினைவுண்டோகுறித்தங்கு
கரும்புபோனாலும்விட்டேன்
தோட்டியைவிட்டேப்படேன்
கரும்புபோலென்தோட்டிவந்தாரோ
கண்டதுண்டோ ஆண்டைமாரோ (நானே)

(தோட்டிச்சி சொல்- விருத்தம் இ-ம்-ஆனந்தபைரவி.)

பாப்பான்வீட்டெருமைக்கன்னும்பட்டன்வீட்டெருதும்செத்து
சாப்பாடில்லாமலூரார் தவிக்கிறாரென்றழைத்த
கூப்பாடுகேக்கப்போன கூலிதானெங்கேகேட்டால்
தோப்பாளமேண்டாதோட்டி நுழைந்ததெங்கேசொல்வாயே.

வசனம்.

போடாதோட்டி யெம்புருசாடா எங்கூட்டுக்காருடாசாமி யுன்
னைக்காணுறே ஓட்டிலிருக்கிறாப்போல இக்கிறு வாசலிலே இக்கி
றாப்போலேயிக்கிறுசட்டிமேலே இக்கிதாபானைமேலே இக்கிதா
பிள்ளைமேலே இக்கிதாயென்மனசு.

தோட்டி-வசனம்.

டீ இவளே டீ இவளே டீ தோட்டிச்சி இதறி இதறி யெம்பெ
ஞ்சாறி டீ பெஞ்சாறி,

தோட்டிச்சி-வசனம்

டானல்லது இக்கட்டு பாப்பான்வீட்டிலேசெத்ததும்அந்த
ப்பட்டன்வீட்டிலே செத்ததும் அதுக்கு நீபோனதும்அதைவெ
ட்டுப்போட்டபின்புஅவுங்கசாப்படத்தானேகூப்பிட்டாங்கோ.

தோட்டி-வசனம்

பாப்பான் வீட்டிலேயும்பட்டன்வீட்டிலேயும் ஒருத்தருஞ்
சாவில்லை ஒருகன்னும் ஒரு எருதுமல்லோ செத்துது,

## தோட்டிச்சி-வசனம்

அடா இருக்கட்டுமடா உனக்கு நோப்பாளம் வாங்காதேவாறது உன்னைப்போலே ஒட்டிலேயா வெயிலிலே படிச்சேன் அத்தக்கூலி பெங்கே, அந்தத் தோலெங்கே, கன்னுக்குட்டிக் காலெங்கே, எருதுவாலெங்கே இப்படிசாக்குறு சென்னப்பறைச்சி வீட்டுக்கு ப்போருயோ.

## தோட்டி வசனம்,

டீ தோட்டிச்சி அதுவெல்லாம் வொன்றுமல்லடி உனக்கும் எனக்கும் அடிமைவேலைசெய்ய இவனை விலைக்கிவாங்கிக்கிறு வந்தேண்டி.

## தோட்டிச்சி-வசனம்.

என்னுக்கு உடித்தோல் வித்தகாசைக்கொடுத்தாட்டையா இவன் எவ்வளவிலேடா எம்புருசா.

## தோட்டி வசனம்,

டீயே அதெல்லாம் அல்லடி பத்தாயிரம் பொன்னுமடி ஆண்டைமார்சொன்னுங்களே.

## தோட்டிச்சி விருத்தம்-இ-ம் ஆனந்தபைரவி.

இவனமக்குதவுவானே யினிக்கரமல்வேலைசெய்து
சவஞ்சுடுகாட்டிலேகாத்துச் சதியமாயிருப்பானோதான்
இவனையும்கேட்டுப்போமென்று பொன்னுமல்வாங்கிப்போட்டாய்
கவலையோவுனக்கிருக்காக கருத்தறியோகணக்கிதாமே.

## வசனம்.

இவ்வளவும்பட்டகடனு பவிசுகெட்டவனே இவனுக்குப் பத்தாயிரம் பொன்கொடுத்தாயே தோலையுரிப்பானுமாட்டையிலே ப்பானு பிணஞ்சுடுவானு தோட்டிவுடமையைத்திருடாமலிருப்பானு இவனென்னவேலை செய்வானென்று கொண்டாபோடா பவிசுகெட்டவனே.

## இராஜன் சொல் விருத்தம்-இ-ம்-காம்போதி,

என்னாளவானிலும்நீசொன்னபடிதோளையமாக
உன்வாத்திலேயென்னவேண்டா முறுதியாயேவல்செய்வேன்
என்னாமுகங்கடுமையேன்னன் கருத்தையுங்காணலாகும்
உன்னவேலைகளைத்தேதோ வுனாசெய்தாந்தலையாற்செய்வேன்



## வசனம்

ஐயா வீரபாகுவே என்பேரிலெவ்வளவுஞ் சந்தேகம் நினைக்க வேண்டியதில்லை கள்ளங்கபடு என்னிடத்தில்வராது என்னவேலையிடுகுறீரோ இடுந்தலையாற்செய்கிறேன் உம்முடைய மனதுக்கே தெரியவரும்

## தோட்டிச்சி-வசனம்.

டாயெஞ்சாமி இவனைநீதானே வேலைவாங்கவேணும் இவனைப்பார்த்தாக்கா எனக்குபயமாயிக்கிது

## தோட்டி-வசனம்.

டீ இவளே நீசும்மாயிரடீ இப்போபுதுகா அவன்கையிலேவேலை வாங்கிறேண்டி

## தோட்டிச்சி-வசனம்

டாசாமி தோட்டிசாமி உம்பாடு அவம்பாடு

## தோட்டிசொல்-வசனம்,

அடியோ தோஞ்சாமகளே நம்மிட அடிமைப் பறையனுக்கு நீ என்னவேலையிடுவையோ அந்தவேலைகளைச்சொல்லி அவன்வருடம் பத்தாயிரம் பத்தங் கூடியுவாத்தது வளத்துக்கொண்டுவாடீ எம்பெயத்துக்கு இம்பத்தங் கூடியுவாத்து வளத்துக்கொண்டுவாடீ எம்பெஞ்சாதி தோஞ்சாமகளே.

## தோட்டிச்சி சொல்-வசனம்.

அடோஎம்புருசா நீ வீடுவிட்டுபோனதே பசுவுங் கன்னும் மெத்தபசியோடே கூவி கூவி அயுதுச்ச முன்னே அந்தராசனை ப்போய் பில்லறுத்துவந்து போடச்சொல்லடா எம்புருசா.

## வீரபாகு சொல்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி,

பிடித்தசொல்விடாதமன்று பேதயில்லாமல்சொல்வேன்
தொடுத்துநீவாடாவேலை சொல்லுவேன்கயனிக்கேகி
அடுத்தருவாள்கைக்கொண்டு அளவில்லாப்பில்லறுத்து
எடுத்துவந்தேதான்பசுவுக்கெல்லாம்நீபோட்டுவாராய்.

டன

வசனம்.

அடோ அனிச்சா எம்பெருசாதி வுணியும் வுன்னரபகையும் பாத்ததே அவனுக்குமெத்த சந்தோசமாயிருக்குது அவன் சொன்னபடிக்கே நீஇந்த அருவாளைக்கையிலே யெடுத்துக் கொண்டு நமதுசேரிக்கிபக்கத்திலிருக்கிற கயனிக்கிப்போய்பில்லுகளையறுத்துபெரிய செமையாய்கட்டி யெடுத்துவந்து வீட்டிலுண்டான பசுவுக்கும் பசுவுங்கன்னுக்கும் எருமைக்கும் எருமைக்கன்னுக்கும் குறைவில்லாமல்போட்டுவாடா இன்னம் வேலைசெல்றேன் அனிச்சோ.

இராசன்பில்லறுக்கிற-தரு இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்

வீரபாகுவின்வீட்டுக்கடிமையாகி
வெட்டுப்பில்லறுத்திடலானனே-நான்வெட்டுப்பில்லறுத்திடலான
தாரைக்கொத்துநான் - தரித்திரவேடம்பூண்டு
தனித்துப்பில்லறுத்திடலானனே- நான்தனித்துப்பில்லறுத்திடலா
ஓரியானனேஊரார்கண்டுநகைக்க
ஒட்டுப்பில்லறுத்திடலானனேநான்ஒட்டுப்பில்லறுத்திடலானனே
பாரியாள்தன்னைப்பாதவிக்கவேவிட்டு
பச்சைப்பில்லறுத்திடலானனே நான் பச்சைப்பில்லறுத்திடலான
சீருற்றசெல்வனைத்தெருவில்தவிக்கவிட்டு
க்ஷணத்திற்பில்லறுத்திடலானனேநான்க்ஷணத்திற்பில்லறுதிடலான
சூரியன்படவேதோள்கள்நொண்டும்வலிக்க [லான
தொடுத்துப்பில்லறுத்திடலானனேநான் தொடுத்துப்பில்லறுத்திட
மீரியகரமும்மெய்யுஞ்சோர்ந்திடவேநான்
வீசிப்பில்லறுத்திடலானனே-நான்-வீசிப்பில்லறுத்திட லானனே
வாரிவாரிநான்மாமிகட்டாகக்கட்டி
வனத்திற்பில்லறுத்திடலானனேநான் வனத்திற்பில்லறுத்திடலான
வீரபாகுவின்வீட்டுக்கடிமையாகி
வெட்டுப்பில்லறுத்திடலானனே



இராசன் சொல் வசனம்.

கேளும்வீரபாகுவே தேவரீர் சொன்னபடிக்கு அடியேன்வேண்டிய பில்லுகளையறுத்துவந்து தொழுத்திலுண்டான பசுவுகன்களுக்கெல்லாம் போட்டுவந்தேனையாவீரபாகுவே.

வீரபாகு-சொல்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

பில்லுகளறுத்துவந்துபெரியமாய்பசுவின்கன்னுக்
கெல்லாம்நீபோட்டுவந்துஎதிர்மொழியுரைத்தமன்று
நில்லாமற்கத்திகொண்டுநியிஷத்திற்பசுவின்கன்னை
மல்லியேசமுத்தறுத்துமாங்கிஷம்வேர்செய்வாயே.

வசனம்.

அடோ அனிச்சா நீ பில்லுகளறுத்து வந்ததிக்கட்டும் அந்த பசுவின்கன்களிலே ஒரு கொழுத்தகன்னை பிடித்துவந்து இந்த பொன்னின் கத்தியினாலேசயுத்தை யறுத்து சேயதன்னிதோலையுரித்துதலைவேறு வுடல்வேறு மற்றசகலமும்துண்டுதுண்டாய் கிழித்துவைத்துவந்துசொல்லடா அனிச்சோ அப்படிக்கேசெய்து வருகிறேனையா வீரபாகுவே,

இராசன்·கன்னறுக்கிற - தரு - இ-ம்-கெண்டா-அடதாளம்.

கனமாயிருந்தயென்னை - தெய்வமே - பசுவின் தெய்வமே
கன்னையறுக்கலாச்சே
தோனிபோல்பிரதாபம்பெற்றேன்-தெய்வமேபசுவின்கன் தெய்வமே
தோலையுரிக்கலாச்சே
மனதொன்றுசேயயிப்போ - தெய்வமே - பசுவின்கன் தெய்வமே
மாமைப்பிளக்கலாச்சே
எனதுவிதியினாலே - தெய்வமே - பசுவின்கன் தெய்வமே
யீறல்பிடுங்கலாச்சே
சோதிசுரூபம்பெற்ற - தெய்வமே - பசுவின்கன் தெய்வமே
தோளைவெட்டிடலாச்சே
காதிலைமந்தனாலிப்போ - தெய்வமே - பசுவின்கன் தெய்வமே
காலைத்துணிக்கலாச்சே

ஆதிமூலப்பொருளே - தெய்வமே - பசுவின்கண்
ணறுத்துக்கூரிடலாச்சே தெய்வமே

பேதமில்லாமலிப்போ - தெய்வமே - பசுவின்கண்
பிடித்துக்கொல்லவுமாச்சே தெய்வமே

இராசன் சொல்-வசனம்

ஐயா வீரபாகுவே தேவரீர் சொன்னபடிக்கே கொழுத்தபசு வின்கண்ணைப்பிடித்து கழுத்தையறுத்து தோலையுரித்து தோலையும் வெட்டி மாரையும்பிளந்து காலையுந்துணித்துயிரல் முதலானதும் சேர்த்துக்கொண்டு வந்தேனையா வீரபாகுவே.

வீரபாகுசொல்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி,

கண்ணுகளறுத்துவந்துகபடில்லாதுரைத்தமன்று
வன்னமாயின்னம்வேலைவழங்குவேன்கேளாயிப்போ
மன்னுமோராரியவேதான்மசானமேநடக்கவேணும்
இன்னுகாவடியாய்தோள்மேலெடுத்துப்பின்வருகுவாயே.

வசனம்.

அடோ அனிச்சோ இந்த கண்ணறுத்தயெச்சியெல்லாம் குறைவில்லாமல் எடுத்துகாவடியாய் போட்டு உன் தோளின்மீதில் வைத்துக்கொண்டு யென்னுடனே சுடமசானத்துக்கு நடந்துவாடா அனிச்சா (அப்படியேவருகிறேனையா)

இராஜன்சொல்-தரு-

இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

இகழுஞ்சூரியகுலத் திரிசங்குவயிற்றினிற் பிறந்தேனே-நல்ல
செல்வஅயோத்தியைச்செங்கோல்செலுத்தியேசிறந்தேனே

சுகரதியாஞ்சந்திரமதியைமனைவியாகப் படைத்தேனே-எந்தன்
சுகிர்தத்தாலே தேவதாசன்மகனுகக் கிடைத்தானே

சதுரங்கசேனைகள்-சூழக்கொலுவிருந்து வாழ்ந்தேனே-அந்தத்
தவமுனிமாயத்தால்தாழ்ந்தவம்கெல்லாநான் தாழ்ந்தேனே



பதியைப்பிறந்துபின்பு பத்தினிதன்னையு மிழந்தேனே-அந்தப்
பத்தினிதன்னுடன்சேர்பாலனையுமிழந்து குழைந்தேனே

மறையவர்க்கவர்களை விற்றப்பாதேகிபோ லானேனே-என்னை
மாயத்தோட்டிவீரவாகுவுக்கடிமையா யானேனே

பறையற்கடிமையாகப்படைத்தானேபிரமாவெனும்பாவிஅந்தப்
பறையன்சுடலைகாக்கப்போவென்றுரைத்தானே-என்னைக்கூலி

தருமோவுனக்கிது சிவசிவாகாசி விஸ்வநாதா-எங்கள்
தாயார்விசாலாட்சி மேவியனுதினம் வாழ்சமேதா

இதுவோகாசிபுரி ஒருக்கடுத்ததோர் சுடுகாடு-எனக்
கெழுதிதுவோபினஞ் சுடவுமடைந்தது தலைப்பாடு

வசனம்.

சிவசிவாகாசிபுரிவிஸ்வநாதா அடியேன்வாழ்வெல்லாம்போய் பெண்சாதியின்னையுந்துறந்து நாலொருபறையனுக்கடிமையாகி இந்த சுடுகாட்டிற்காத்திருந்து பிணஞ்சுடவும்விதிவந்ததா இந்தயடிமைக்குந்தேவரீர் திருவுள்ளம் பூர்த்தியாச்சுதா சுவாமி

பொது விருத்தம்-இ-ம்-தோடி,

பாரியைமகனையந்தப் பார்ப்பானுக்கடிமையாக்கி
வீரவாகுவுக்குத்தானும் விலைப்பட்டுப்போடைக்கோய்யால்
தாரவோர்பந்தலிட்டுச் சுடுகாடுகாத்திருக்குந்
திரனைச்சத்தியகீர்த்தித் தேடியேவருகின்றானே.

கட்டியக்காரன் வசனம்.

சுடுகாட்டிலே இராஜனுனவன் அங்குள்ளபாடைக்கொம் புகளாலே பாலைகட்டிக்கொண்டு அதின்பேரிலே அந்தச்சுடலைகாத்திருக்கிறபோது முன்னே பிரிந்துபோன சத்தியகீர்த்தியானவன் அரிச்சந்திர மகாராசனைத்தேடி யழுதுக்கொண்டுவருகிறவிதங்காண்க.

சத்தியகீர்த்திசொல்-தரு-இ-ம்-கன்டா-ஆதிதாளம்.

தீருவுமென்னைப்போலே
திருப்ப விதானுண்டோ தெய்வமே

நானோதான்கொடும்பாவி
நாட்டினிலில்லைமுன்னடோ — தெய்வமே

தாயுந்தந்தையுமவர்
தாமெமந்திருந்தேனையோ — தெய்வமே

ஆயுஞ்சுற்றமுதலா
யனைத்துமவமரால்திருந்தேன் — தெய்வமே

நாடிழந்தநகரிழந்து
நல்வளமுந்தானிழந்தார் — தெய்வமே

பாடுபட்டுக்கசிவந்து
பத்தினிதனையும்விற்றார் — தெய்வமே

அத்துடன்விட்டதோசனி
அருமைமகனையும்விற்றார் — தெய்வமே

பித்தனைப்போலேவிந்து
பேதைபோர்கலங்கினேன் — தெய்வமே

பாவப்பெரிதாகினாலும்
பறையனுக்கடிமையானார் — தெய்வமே

கூவினவரைவிற்றுக்
கொடும்பாவியானேனையோ — தெய்வமே

ஊனாச்சுற்றிச்சேரியென்று
முடன்றுதேடினேனையோ — தெய்வமே

யானைக்கேட்டாலுங்காணே
மெங்கிறீதென்னையுமே — தெய்வமே

தோட்டிசொல்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

சித்திராவுனக்கு பேச்சுவன்னமின்னம்
பெரியவேலைகளெலாமிருக்க
செத்தமாடறுக்க காலதலைதோலுஞ்
சேதமில்லாமல்பங்கிடவும்
சத்தமாயிசமும் நாற்றமும்பொறுக்காய்
றுத்திரியகல்சுடுகாட்டில்
சுத்தமாயிருந்து காத்துவாய்க்கரிசி
சேரவாய்த்தேசமைந்திருப்பாயே,



வசனம்

அடபா ஐயாவென்றையா யின்னமுப்பதுநாயும்பேச்சு வுனக்கு பயிற்றிப்பமாபிடிச்சுது நடந்துவாயாயேய வீட்டுக்குறு யின்னோமெத்தனைமாடு செத்து கிடக்குதோ அத்தையெய்த்துப்போட்டறுத்து காலதலைதோலு மெலும்புஞ்வேறாய்பங்கிடனு மந்தறத்தமாயிசநாத்தத்திலே நீயிருக்கமாட்டா யித்தகடி காவடியேயெரக்கிப்போட்டு யிப்படியே சுடுகாட்டுக்குப்போய் கொண்டு வரப்பட்டபிண மொவ்வொனுக்கு காப்பணமு முழத்துண்டும் வாங்கி யெனக்கு கொடுத்து விட்டு வாய்க்கரிசியை நீபடியாக வைச்சிக்கினு சுத்தமா சோறுக்கிதின்னுக்குறு பத்திரமாகாத்துக்குனு யினையா.

இராசன்சொல்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

பவஞ்செயுமடியேன்பாக்கியமுன்னோர்
பகருமுப்பத்திரண்டறத்தில்
சவஞ்சுடுவதுவோர்தருமமென்றுரைப்பார்
சாதியிற்புலையனானாலும்
அவஞ்செயாவுறக்கோடையும்பொருளு
மளித்துவாய்க்கரிசியைப்பற்றி
சிவஞ்செயவிதையுஞ்சிந்தைகொண்டினமுஞ்
செப்புநின்பணியெலாஞ்செய்வேன்

வசனம்

கேளு மடியேனை யடிமைக்கொண்டாதரித்த வீரவாகுவே, முன்னோர்கள் சொல்லியிருக்கிற முப்பத்திரண்டு தருமங்களில் பிணங்களைச்சுடுவதுமொருதருமமென்று பெரியோர்கள் பேசியிருக்கிற படியாலடியே னீச்சருக்கடிமையாகியும் வீண்சீவனஞ்செய்யாமலிந்தவலுவல்நேரிட்டதே பெல்பாக்கியமப்படியே நீரிட்டகட்டளைப்படிக்குகொள்ளியாடையும்பொருளுமுமக்குக்கொடுத்துவிட்டு வாய்க்கரிசியை மாத்திரம்நான் பற்றிக்கொண்டிந்த மயானத்தைநான் பத்திரமாய் காத்துக்கொண்டிருக்கிறேனையா.

பொது-விருத்தம்-இ-ம்-சாவேரி,

இந்தவிதந்தோட்டியெனுமியமன்சொல்லால்
அகங்காரித்தரிச்சந்திரனிருந்தானிப்பால்

அந்தவிதமன்றுதங்கியபின் மச்சலவந்தா
னரிசிபருக்களித்துராசனைத்தருமாறந்தான்
வந்தவிசுவாமித்திரமுனிவரநேக்காசி
வாழ்மொழியேயானபடியடிமைகொளவார்த்தைப்பேசி
சீர்த்தவதிக்குந்தவையத்தனக்குப்பேலே
தருகின்றான்பிராமணஸ்ரீவருகின்றாளே.

வசனம்.

அக்காதேப்படியென்றால், இவ்விதமாகத் தோட்டியாயடிமை கொள்ளவந்த மதகருமாராசனிட்ட கட்டளைப்படிக்கு அரிச்சந்திரமகாராசன் மயானங் காத்துக்கொண்டிருக்க, மறுநாள் மந்திரியாகிய சத்தியகீர்த்தியும் அவடம்வந்து சேர்ந்து வைத்திருந்த வஸ்திரங்களைப் புல்லுகளுடனே பசுக்களுக்குக்கொடுத்து அதின் சாணங் கோமயத்துடனே வீழ்ந்து அரிசினோச் சுத்தஜலத்திலலம்பிக் கொத்திசைகத் தன்னடிருந்தார்கள். இப்பால் சந்திரவதியையுந் தேவதாசனையு மடிமைக்கொண்ட பிராமணருமுடையாளான பிராமணஸ்திரீ வருகின்ற விதங்காண்க.

காலகண்டிவருகிற-தரு.

இ-ம்-பந்துவராளி - ஆதிதாளம்.

எங்காணும்பட்டுகெட்டபானீரெங்கே — போனீரோ
என்னைவிட்டுவெளாத்துக்குப்போகவெண்ணை — மானீரோ

குந்தாம்வாதங்கத்துக்கொண்டிரோபட்டுக் — கிடந்தீரோ-நான்
சோபனம்பாடப்போனதுகண்டு எட்டி — நடந்தீரோ

அன்னடையாத்துக்குமசலாத்துக்குப்போகலானீரோநேக்குநோக்
கு-மாகவெட்டாமர்பன்னுவான்வார்த்தையைக் கேட்கலானீரோ

அன்னடைவீட்டுச்சேஷையங்காரைப்பகைத்துக்கொண்டீரோநேக்கு
அவராலவருத்தம்போச்சுதென்னபலனைக் — கண்டீரோ

மாட்டையுங்கண்ணையும்பார்த்தாலதெல்லாமறந்துபோகாதோ இ
வரைவிட்டால்கண்ணைவிட்டுப்பால்கறந்தாலகாதோ — [ஷடையன்

வாமுரபென்னுக்குவரிசைவேறுநோக்கென்ன — போச்சு-ஜூரார்
லைசசொல்வாரோபுருஷன்றானைப் நேக்கல்லோ — வாச்சு



செப்பிப்பியென்றநெல்லுக்குத்திமுட்டை — தட்டியே-காட்டில்
திரிந்தங்குள்ளவிலைகள்பறித்துவிறகுங் — கட்டியே

தப்பிலிகோமுட்டிக்கடையில்விற்றுரொக்க — மாக்கியே-நோக்குத்
தளிகைசாதித்தால்சாப்பிட்டுத்திரிகிறீர்காலம்போக்கியே

காலகண்டகன்-வசனம்-அடிசேஷி அடிசேஷி,

காலகண்டகி-வசனம்.

உன்குடியெடுத்தாயே பட்டுகெட்டபன்.

காலகண்டகன்-வசனம்,

ஏதடிசேஷி நேக்கு ஒருக்ஷணப்போதாகிலும் உன்னைவிட்டிருக்கிறதற்கு மனசுவாறதில்லை என்னைக்காணுமலிருந்தால்நோக்கும்அப்படிதானே இருக்கிறது,

காலகண்டகி-வசனம்.

ஆம் அதுதானே நினைத்துக்கொண்டு நேக்குஅடிவயிற்றிலேபக்குபக்கென்றுயிருந்தது அன்னடைவீட்டு சேஷையங்கார் வந்தார்அவரைவைத்துக்கொண்டு சோபனம்பாடிக்கொண்டிருந்தேன்.

காலகண்டகன்-வசனம்.

நேக்கு மெத்தசந்தோஷம் அந்தசோபனஞ் சத்தேபாடிஇப்பநான்கேழ்க்கட்டும்.

காலகண்டகிவசனம்

வேறேயாரோ புருஷனிருக்கிறானே நேக்குநாணமாகயிருக்கிறதே.

காலகண்டகன்-வசனம்

நாமம் ஒதுக்கடி நீயறியாதபுருஷனுண்டா,

காலகண்டகி-வசனம்

உம்மையறியாமல் நேக்கு ஆரிருக்கிறார்கள்,

காலகண்டகன்-வசனம்.

ஓதடிசேஷி காலகண்டகி குப்பனையங்காரோ.

காலகண்டகி-வசனம். ஆம் ஆம் அவர்தான் வேறேயார்.

காலகண்டகன்-வசனம், சுப்பாசாஸ்திரியோ

காலகண்டகி வசனம், ஆம் ஆம் அவர்தானென்னு

காலகண்டகன்-வசனம், அப்பனையங்காரோ.

காலகண்டகி - வசனம்.

ஆம் ஆம் அவரையல்லாமல் வேறேயாரிருக்கிறது இதையெல்லாம் புருஷான் சொல்லுவாளா.

காலகண்டகன்-வசனம்.

இருக்கட்டுமேடிசேஷிகாலகண்டகி சற்றே சோபனப்பாட்டு பாடடிகேழ்ப்போம்,

காலகண்டகி சோபன-தரு-இ-ம்-சாவேரி-அடதாளம்.

சோபனஞ்சுபசோபனநித்ய
சோபனஞ்சுபசோபனம்பத்ம
நாபனுமம்மைலட்சுமியுமம்மை
ரட்சிப்பார்தாளும்அக்ஷயமாக

சத்யபாஷாஅரிச்சந்திரனுக்குஞ்
சந்த்ரமதிக்குந்தனயனுக்கும்
நித்யசோபனஞ்சோபனமனு
நீதிமந்திரிகட்குஞ்சோபனமே

சீராயோத்தியாபுரியாளுந்
திரிச்சங்குமைந்தனரிச்சந்திரன்
பேரான்சோபனம்பாடவுமையருள்
பிள்ளைகணபதிகாப்பாமே.



தாரார்கற்பகதருவினீழலில்
தங்கும்புரந்தரன்சமுகத்தில்
வாரார்சடைவசிஷ்டர்விஸ்வாமித்ரர்
வாதுசபதங்களோதியபின்

பாராளுமரிச்சந்திரன்றனம்
பண்ணுமுறைசொலிவினையறிய
தாராளமாகவந்தவர்க்குச்சொர்ண
தானங்கொடுப்பதுதானறிந்து

விஸ்வாமித்திரமாமுனிவந்து
வேள்விசெய்யப்பொருள்வேணுமென்ன
விஸ்வாசமுடன்வந்தவர்க்குச்சொர்ணம்
வேணமட்டுந்தந்துவிட்டார்காண்

தந்தபொன்னையவன்றன்வசத்தில்வைத்து
தந்திரங்களேதோமந்திரங்கள்
சிந்தையிலெண்ணி யனந்தமிருகங்களைச்
சிருஷ்டித்தனுப்பிவிட்டார்காண்

அந்தவயோத்திநாட்டிற்பயிர்களை
யழிக்குவிலங்கையொழிக்கவே
விந்தையதாகவேட்டைக்குப்போன
வேந்தன்மேற்பன்றியைவிட்டார்காண்

ஆச்சரியமாகவந்தபன்றியும்
அம்புதைத்தபையமென்றுவிழ
மூச்செறிந்துமுனிவிஸ்வாமித்திரர்
மோகனப்பெண்களையேவினபின்

நீச்சப்பெண்களிரண்டுபேர்கள்வந்து
நின்றார்மணஞ்செயென்றார்காண்
புச்சக்ரக்கொடைக்கேட்டுந்தங்களைப்
புணர்ந்திடென்றதுமுணர்ந்துபின்

சிச்சியப்புறப்போங்களென்றுமன்னன்
திட்டியதட்டித்துரத்திவிட
கூச்சலிட்டந்தநீச்சப்பெண்களுங்
கோசிகாஅபையமென்னிடவே

மாச்சல்யத்துடன்வந்துறைக்கமன்னன்
மணிமகுடமுமண்ணினில்விழ
லச்சையில்லாமல்மன்னவனம்முனி
யிணையடியினிற்பணியவாய்

பேச்சைக்கொண்டவன்றுச்சிட்டமுப்பெற்ற
பிள்ளையுமுன்வைத்தபொன்னையுநீ
மூச்சைப்பிடித்துக்கொடுத்துவிடென்று
முனிவிஸ்வாமித்ராவிதமாய்

காசியாத்திரைப்போங்களென்றுகாவி
கந்தையுந்தந்துவிந்தைபதாய்
ஆசியந்தனைநச்சுத்ரகனா
யனுப்பினாவரிதொனிப்பினால்

மாசிலாமன்னனுமந்திரியுஞ்சந்திர
வதியுமைந்தனுமந்தணனும்
பேசிநடக்கவழியில்மிருகங்களும்
பேயும்பூதமும்வேதாளமும்

வீசியடிக்குங்காற்றுமழையு
மின்னலுமிடியுந்தென்னலும்
கோசிகமாமுனியக்கினியாற்றைக்
கொண்டுவிடமன்னன்பெண்டுபிள்ளை

யோசிக்குமந்திரிசத்தியகீர்த்தியு
முண்மைபெறுந்தங்கள்வன்மையினால்
தேசிகனொன்றும்வசிட்டர்பாதத்தையுந்
தெண்டனிட்டுகாசிகண்டுபோ



தேசிகனாய்மன்னன்பெண்டுபிள்ளையைத்
தெருவினில்விலைக்கூறியே
பூசாரிக்குவிற்றுத்தானுந்தாருக்காய்
புலையர்க்கடிமையாகியே

கௌசிகர்கடனுங்கொடுத்துசுடு
காடுகாற்குங்கலைதயிறுகாண்
சிவசிவவெனச்சந்திரவதியுஞ்
சேயனும்வேலைசெயவந்தார்

இவன்செயலினியேதோசத்யமே
செயமல்லாலொருபயமில்லை
தவஞ்செய்வசிட்டர்தன்னருளாலினி
தாழ்வுவாராமல்வாழ்வார்காண்.

காலகண்டகன்-வசனம்.

அந்தாடிசேடி காலகண்டகி நேக்கு திருப்தியாச்சுதா அதிருக்கட்டும் இவனைக்கண்டாயோ.

காலகண்டகி - வசனம்.

நீர் பட்டுகிடந்திரோ அந்தசகானும் மாடுங்கண்ணுமாகஇருந்துவந்தீர்,

காலகண்டகன்-வசனம்,

அந்தாடிசோறிகலகண்டகி நேக்கிவனும் நோக்கந்தப்பயனுமின்றே வேலைசெய்வதற்குக்கொண்டுவந்தேன்,

காலகண்டகி-வசனம்

நேக்கேனக்கு இந்த அரியாதப்பயல் நோக்கேறக்கிவன் எது காணும் விசித்திரம்பேசுகிறீர் இவான்வெறுமைக்கிடைத்தார்கோவா

காலகண்டகன்-வசனம்.

வெறுமையன்னாடி வெறுமைஅன்று இவன்நாலுகாசும் இந்தப்பயல் இரண்டுகாசும்;

காலகண்டகிசொல்-விருத்தம்,

இ-ம்-ஆனந்தபைரவி.

ஊரினில்மாட்டின்பின்னே யுழன்றுநாள்திரிந்துசாணம்
வாரியேமுட்டைதட்டி மாறுமல்விற்றகாசு
சேருதென்றறிந்தேகாசைச் செலவழித்திடநினைத்தீர்
ஆரிதைக்கொடுப்பாரிந்த வனியாயமுன்னேபோச்சு.

வசனம்.

நேக்கு அடிவயித்றைப்பத்தியெரிகிறதேநானும்பெண்டும்ஆறு காகதெருவில் வெறுமைகிடக்கிறதா மந்தைமாட்டின் பின்னாலே திரிந்துசாணமெடுத்து முட்டைதட்டி விற்றகாசு என்கையிலிருக்கிறதைஇப்படி அனியாயமாகச் செலவழிக்கலாமா நேக்கு வயித்றைக்கலக்கிறதேஷுஷு அடப்பட்டு கிடப்பன் இப்படி செய்யலாமாஷுஷு.

காலகண்டகன்சொல்-விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி.

சாணமெடுப்பள்முட்டை தட்டுவள்வேலைசெல்லாங்
கோணலில்லாமல்நெல்லுங் குத்துவள்கால்பிடிப்பள்
வீணல்லபயனுங்கொண்டேன் மறுகுடன்சமித்தையெல்லாம்
வேணகுபயப்படனேவல் விவரமாய்விதித்திடாயே.

வசனம்.

அந்தாடிசேதிகாலகண்டகி நோக்கப்படிநஷ்டம்வரச்செய்வேனோஅவளோ சாணந்தட்டி முட்டையாக்குவள்நெல்லுங்குத்துவள் காலும்பிடிப்பள்சகலவேலையுஞ்செய்வள்இந்நட்டமோகொண்டருக்கும்விறகுசமித்தை இலைதருப்பைமுதலாகியதெல்லாங் காட்டிலேயுந்திராமல்நம்மிட வீட்டிலலாக்காட்டாக்குவள் ஆகையால்நோக்கிஷ்டமானபடி வேலையிடலாம் வயித்றுக்குமாத்திரம் எதுவாகிலும் மிஞ்சவொட்டாமல் விசாரித்துக்கொள்ளடிசேஷி.

பிராமணஸ்ரீசொல்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி,

எதுகாண்பிராமணுநீ யெத்தனைநேரமாச்சு
போதுகண்போச்சுதெங்கே போயிருந்திங்குவந்தீர்



மாதுகாலிவளரிந்த மைந்தனுநேக்குநோக்கும்
வாதுகாண்பதற்குவந்த வாறடிங்குரைசெய்வீரே.

வசனம்.

எதுகாணும் பிராமணு வொறுமை யித்தனைபோதெங்கே போயிருந்தீர் ஓதுமக்குசமுசாரமேவிட்டுபோச்சுதின்றையத்தினை மூன்றுபேராய்வந்தீர்களே இந்த ஸ்ரீயார் பிள்ளையார் நேக்குநோக்குஞ் சண்டைக்கிடங்கொண்டு வந்தாப்போல்காணுதே சொல்லும் பிராமணு பிராமணு என்னொறுமையிருக்குநீர்.

பிராமணன்சொல்-விருத்தம்.

இ-ம்- ஆனந்தபைரவி.

மந்திரவிஸ்வாமித்ரமாமுனிக்கடனுக்காசி
வந்தரிச்சந்த்ரன்விற்கடனைவிலையமகனைக்கொண்டேன்
சந்திரவதியாந்தேவதாசனுமிவர்பேர்நல்ல
சுந்திரம்பார்த்துவேலைசுறுக்காகச்செயச்சொல்வாயே,

வசனம்.

அடியென்னடி வொறுமை கோபிச்சுக்கொள்ளு யின்றையதினமிவாளைகடைத்தெருவிலே விலைக்கூறிக் கொண்டிருந்தார்கள் மெத்தவும் விலைலெகுவாய் வந்துதுவாங்கிப் போட்டேனுக்கும் வேலைசெய்யத்தள்ளாதேநம்மிட ஆத்துவேலைக்குமாள் வேணுமேயிருக்கட்டுமிவாளோ அயோத்தியா புரியாண்டிருந்த அரிச்சந்திரமகராசனும் அவாள் விஸ்வாமித்திரருக்கேதோகொட்ண போதங்கடன்கொடுக்கவேண்டியதாம்அதெவ்வளவென்னுலுயர்ந்த ஆனையின்மேல் பெலவானின் றெறிந்தகவண்கல்லுயரம்பொன்னுங்கொண்மேல் நீயிவாளுஞ்சகாரியமதற்காக இவாளை விற்று போட்டார்களடி நீ யிவாளுக்கை நன்னாய்பார்க்கலையே போடிசொத்தைகன்னுமூண்டா யிவாளை வெண்டுமேருக்குஞ் சுறுக்காய் வேலையிடடி வொறுமை யிராதே, விரண்டுபேருக்குஞ் சுறுக்காய் வேலையிட்டு.

பிராமணஸ்ரீசொல்வெண்பா.

இ-ம் - சங்கராபரணம்,

பார்வதிபோலட்சுமியோ பாலசரஸ்வதியோ
சாதியோயிந்த்ராணியென் பவளோ-சீர்வதியும்
மன்மதனோசுப்ரமணியனோபுத்திரனுங்
கன்மனதோவிற்றவர்க்குசால்.

வசனம்.

பிராமணா பிராமணா நாலிவாளை முன்னே தன்னைப்பார்க்க யி
லிலே யென்னா ஆத்துவேலை அவசரத்தில் பார்த்தகும்பாராயும்போ
யிருந்து விட்டேனிவாள் வார்த்தையைமாத்திரங்கேட்டேன் ஆ ஆ
இவளந்த பார்வதிதேவியோ, மகாலட்சுமியோ, சரஸ்வதியோ, ரதி
தேவியோ, இந்திராணியோ, ஆ ஆ ஆ இவளழகென்ன சொட்டறது,
இந்தபிள்ளை மன்மதனோ சுப்பிரமணியனோ என்னஅழகு இவாளை
பெட்பெரிட்டட்ட கன்யனதா யிருக்கிறவர்கள் விக்க வேணும்
பிராமணா பிராமணா இவாளைக் கொண்டென்ன செயறது பூசை
பண்ணறதா பூமுடிக்கிறதா கொண்டை போடறதாகும் பிடறதா
தண்டையிடறதா சதங்கையிடறதா ஆடையுடுக்கிறதா அன்னமூட்ட
றதா என்னசெயறது பட்டிக்கிடப்பன் தட்டிதட்டிமுட்டைவிற்ற
காசெல்லாங்கொட்டிக்கொடுத்துவந்திரோ வோறுமை சோமாலவ
த்துக்கொண்டிருப்பிடும் நேக்கென்ன போறது

சந்திரவதிசொல் வெண்பா-இ-ம்-சங்கராபரணம்.

காசிவிஸ்வநாதனோ வெளரிவிசாலாட்சியென
ஆசிவிஸ்வாசங்களுடனுரைப்பு-பேசிவிஸ்வா
மித்ரனுக்குப்பொன்கொடுத்தீர்மெய்யடிமைவேலையினி
புத்ரனுக்குமெனக்குமருள் புரி-

வசனம்.

காசிவிஸ்வநாதசுவாமி, விசாலாட்சியம்மனைப்போலவும் வந்
து எங்களை யடிமைக்கொண்டு ஆதரிக்குமையரே சரணம், அம்ம
ணி சரணம், அடியாளுக்குந் தங்களடிமைபிள்ளைக்குமென்னவே
லை கட்டளையிடுகிறீர் சொல்லுங்கள் தாயே சுவாமியே,

தேவதாசன் சொல்- வெண்பா,

இ-ம் - சங்கராபரணம்.

விருத்தக்கிழவுருவெடுத்த வேலவரும்வள்ளியும்போல்
இருவருமகிழ்ந்திங்கேயெழுந்தருளி-வருதலையால்
தாய்க்கிட்டவேலையெல்லாந்தான்செய்வாளுந்யிட்டு
தாய்க்குட்டிபைப்போல்செய்வேனும்,



வசனம்.

விருத்தக்கிழவராய் வள்ளியம்மனை மணம்புரியவந்த வேலா
யுத சுவாமியைப் போலவும், தெய்வயானை யம்மனைப்போலவும்,
இருவரு மகிழ்ந்தெழுந்தருளிவந்துஅடியேங்களை யடிமைக்கொ
ண்டாதரிக்குமையரே சரணம், அம்மணி சரணம், அடியேன் கு
மாரர்க் கென்னவேலை கட்டளையிடுகிறீர் எனக் கென்ன கட்டளை
சொல்லுங்கள்,

பிராமணஸ்ரீ சொல் விருத்தம்

இ-ம்- ஆனந்தபைரவி.

அன்னடிசந்திமாப்பா ராத்தினிலுள்ளவேலை
யென்னடியிருக்குதிங்கே யிருபதிங்கலநெற்குத்தி
கன்றுகுட்டிகளைமேய்த்துக் கட்டிப்புல்லறுத்துப்போட்டு
பின்னுள்ளவேலையெல்லாம் பிள்ளையைசெயச்சொல்வாமே

வசனம்

அடிசந்தி சந்தி அன்னடி பிராமணாளாத்திலென்ன வேலையி
ருக்கிறதடி நீசெய்யவு முன்பிள்ளைசெயவு மிந்த பிராமணன் செ
ய்யவு நான்செயவுஞ் சூத்திராளைப்போலே பயிர்வேலையிருக்கிறதா
படியாளிருக்கிறதா என்னவேலை யிருக்கிறது, போயும் வந்தும்
நாலுநாலக்கிடைக் கொட்டாய் அதை சாணமெடுத்துத் தட்டிப்
பெருக்கி தொட்டிகளுக் காயிரங் கொடஞ் சலங்கொண்டுவந்து
கொட்டவேணும் நாங்களென்ன ஸ்ரீ புருஷா ளிரண்டுபே ரெம்மா
த்திர மமுதாரிபிடிக்கப்போறது நாளொன்றுக்கு பதிங்கல நெற்
குத்திப்புடைத்துக் கொழித்து கல்லில்லாம லாய்ந்து கொடுத்தா
ல்போதும் பின்னை யென்னவேலை யிருக்கிறது, கொட்ணபோதங்
கறியமுது தோட்டம் பத்துகாணியிருக்கிறது அதைபக்குவமாய்
களைகொய்து மூன்றுநாளைக் கொருதண்ணீ ரிறைக்கவேணும், கன்
றுகளுக்குங் கறவல் மாட்டுக்கும் நித்தியம் பத்துசுமைபுல்லறுத்
துக் கொண்டுவந்து போடவேணும், இம்மாத்திரந்தான் மற்றவே
லையுண்டறத்தை யுண்டுப்போட்டு வுறைபோலொழக்காந்துக்கொ
ண்டிருக்கிற வேலைதா னல்லதிந்த நெல்லைகுத்துப் பார்ப்போம்.

சந்திரமதிசொல் நெற்குத்துகின்ற-தரு.

இ-ம்-எமுனாகலியாணி ஆதிதாளம்.

வலக்கைபிடித்தமன்னன்றேன்மேல்-மகிழ்ந்துமண
மாலைசூட்டினக் கைகளாலே-வைரயிருப்பு.

வலக்கைபிடித்துநெற்குத்த நானே வந்தேனென் கையில்
உதிரஞ்சொரியுதென்னசெய்வேனே-நல்லமல்லிகை

புஷ்பச்செண்டாதிஞ்செங் கரங்கள்-உலக்கையெடுத்துப்
போடப்பெருகுதுவுதிரங்கள்- அனிச்சமலரின்

புஷ்பமென்றுங்கரத்தால் நானே பதிங்கலநெல்
குறுங்குத்திக்கொழிப்பதேனே-மாந்தளிர்விரற்

காந்தள்மலர்க்கைக ளெருகுது-கவர்ந்திறிக்கக்
காணுமிடுப்புமிற்றுப்போகுது-சந்தனக்கந்த

சாந்தணிந்தமார்பு மூலைக்க-தண்ணீர்தாகத்தைச்
சகிக்கமாட்டாமல்நான்கலைக்க நெற்குத்துவதால்

அங்கமெங்கும்வேர்வைபொழிய-அழுதுகண்ணீர்
ஆறுப்பெருகியும் வழிய தவுடுபொடி

பங்கங்களாகுதென் செய்வேனே-என்னைச்சிருஷ்டித்த
பாவிபிரமாவையும்வைவேனே.

பிராமணஸ்ரீசொல்-விருத்தம்.

இ-ம்- ஆனந்தபைரவி.

அழுதவோய்த்தேய்ந்துப்போரா யாரடியடிமைசந்தி
தொழுதுவாய்மூடிக்கொள்ளு தொடப்பகட்டாய்நீகெட்டாய்
பழுதுபோகாமலிந்த பதிங்கலநெல்லுங்குத்தி
பொழுதுபோமுன்முறத்தால்புடைத்தெடுத்துப்போர்ப்போயே

வசனம்.

அடி சந்தி சந்தி, என்னடி நீயிந்த நெற்குத்த இப்படி யழுருய், வாயைமூடடி தொடப்பக்கெட்டா யடிக்கவேணுமோ, பதிங்கலநெல்லுங் குத்தியாச்சுதா, பொழுதெல்லாம் போச்சுதே, இனி



அரிசி-உமி-நொய்-தவுடு-இதுகளை வேறுவேறாய் இந்த முறத்தை யெடுத்துப் புடைத்துக்கொழித்து ஆய்ந்தெடடி சந்தியென்னடி யுனக்கிந்தனை திமாக்கு குட்டிச்சுவரே.

சந்திரமதி - வசனம்.

அப்படியே செய்கிறேன் தாயே.

சந்திரமதி முறம்பிடித்து புடைக்கும்-தரு.

இ-ம்-நீலாம்புரி- சம்பை.

புடைக்குந்தொழிலாளியெனும் பாவிபிரமா வேனோ
புடைக்குமுறம்பிடிக்கவிதி போட்டுமிருந் தானோ

இடைக்கிமெத்தவருத்தமா யிருக்குதிவட் காற்றுயால்
முடைக்கிமுறம்பிடிக்கவகை முன்பின்னறி யாதால்

செங்கனகதம்பபொடி நியிர்ந்துபரிமளிக்கு மென்றன்
அங்கமெங்குந்தவும்பொடி யழுந்தியிருக் கின்றேன்

மங்களகல்யாணகுண மருணன்பதத்தொடைக்கு மென்றன்
தங்கவளைகைகளால் தவுடுபுடைக் கின்றேன்

ஐயரேயம்மையேயுங்க ளடிமைதவுடுபி ரிதிய
நொய்யரிசிவேறுபட நோம்புவகை யறிய

வையகத்திலென்னைப்போல வாழ்ந்துளைப்பெண்க டலில்
கையில்முறம்பிடித்தவளைக் காணேன்கல்க டனில்

அரம்பையர்களாலவட்ட மசையவீற்றிருந்த நான்
கரம்பிடித்துப்புடைக்குமுறக் காற்றசைய வானேன்

சுரம்படிக்குஞ்சங்கீத தொனிகளுரைக்கின்ற நான்
பிரம்படிக்குப்பயந்துமுறம் பிடித்துப்புடைக் கின்றேன்

பிராமணஸ்ரீசொல்விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

புடைத்ததுபோதும்போதும் போயிரண்டியாமமாச்சு
படைத்தகூழ்வாங்கியுண்டு டையாதுநீயுமிந்த
நடைக்கசலக்கடையில்தூங்கி நல்லிருள்விடியாமுன்னம்
குடைத்தலைவாசல்சாணங் கரைத்தள்ளித்தெளித்திடாயே.

வசனம்.

அடி சந்தி சந்தி, என்னடி வொருமை சப்பறப்போ லொழு கொந்துகொண்டு புடைக்கிறாய் போதுமிந்த பதங்கலதெல்லு குத்தி கொழிக்க மந்தனைபோது இரண்டுசாமமாச்சுதே, ஓதோ கிடக்கிறது இங்கேவாடி. சந்தி, இந்தக்கூழை கையில் வாங்கிக்கொண்டு அந்தப் பையனுக்குங்கொடுத்து நீயுந் தின்னுப்போட்டு தலைவாயில்வீழ்ந்துகிடந்து வெடியசாமமெல்லாச்சே கொட்டாய்மாடு விட்டோட்டுகிறதுக்குமுன்னே முற்றத்துக்குச் சாணந் தெளியடிசந்தி.

சந்திரவதி-வசனம்.

அப்படியே தடையில்லாமற்செய்கிறேன் தாயே.

சந்திரவதி-சாணந் தெளிக்கிற-தரு-
இ-ம்-பந்துவராளி-ஏகதாளம்,

என்றலையினிலந்தநாள் நூகனே-அன்றெழுதிவைத்தக்கூ
பிராந்தவண்ணமனம் பொருந்தினேன்மகனே

உன்றலையெழுத்தன்ப தெய்விதமோ- இந்தப்பிராமணன்வீட்டு
ஆளாக்கூழ்ப்பசி வேலைக் கழுதமோ

அந்தணனொருகை கூழளிக்கவே-அதைதாயுண்டுதூங்கி
அள்ளிசாணந்தெள்ளிதெளிக்கவே

சந்தனங்குழைத்தளிக்க நொந்ததே-இங்கெனக்குக்கைகள்
சாணங்குழைத்துத்தெளிக்கவந்ததே

மஞ்சள்குங்குமங்குழைக்குமென் கைபால்இந்தவேதியன்வீட்டில்
மாட்டுசாணங்குழைக்கின்றேன்மெய்யாய்

கஞ்சமலர்களஞ்சும் விரல்களால்-பத்துகூடைசாணமுங்
கரைத்துத்தெளியென் றுரைதந்தவர்களால்

அஞ்சிமகனென்னைக் கெஞ்சிதூங்கிவிழுந்தான்-தன்னையடிமை
கொண்டவர்}

அடிக்குப்பயந்தோர் நொடிக்குள்ளேயெழுந்தான்

நெஞ்சிலினைந்தகளிப்புப்போச்சுதே- இந்தபொழுதுவெடிய
நேரஞ்சாணந்தெளிக்க வாய்ச்சுதே



பிராமணஸ்ரீ - சொல் -கவி இ-ம்-நாட்டை.

சாணங்கரைத்துத்தெளித்தாச்சு
சந்தியுனக்கென்னடிபேச்சு
வீணங்கவர்கைப்பொருள்போச்சு
விளக்கிப்பெருக்கிங்கெனக்கேச்சு.

வசனம்.

அடிசந்தி சந்தி என்னடி செய்றாய் சாணந்தான் சட்டியிந்தகுழைந்ததுங் குழையாது முற்றத்திற்பட்டதும்படாதுமாய்த்தெளித்ததே சொட்டதேடிழகு நீ கெட்டாய்போடி தொடப்பகட்டையுன்னைக்கொண்டிந்தபிராமணன் கையிலிருந்த பொருளும் போச்சுது முற்றத்தையும் வாசலையுமிந்த தொடப்பத்தை யெடுத்துக்கொண்டு பெருக்கடி சந்தி பெருக்குசுறுக்கா, பெருக்கு.

சந்திரவதி பெருக்குகிற - தரு.
இ-ம்-பைரவி அடதாளம்.

பல்லவி.

முற்றம்பெருக்கிறே னம்மா-ஒருசுணநேரஞ்
சித்தம்பொறுத்திருஞ்சுமா

அநுபல்லவி.

குற்றங்குறைவென்றன்மேல்கூறவனர்ந்த மூண்டு
சுத்தமாகவெங்கனுந் துலக்குந்தொடப்பங்கொண்டு (முற்றம்)

சரணங்கள்

தேசவிஸ்தாரமுந் திரவியங்களும் விட்டு
மோசவிஸ்வாமித்ர முனிகடனுக்குட்பட்டு (முற்றம்)

கோசலநகராண்ட கொழுநனெனனை விற்றதால்
வாசலும்பெருக்கிமூ வாய்முள்ளுந்தொடப்பத்தால் (முற்றம்)

செப்பவயர்வார்த்தைக்குத் திருகொன்றுவ்போதட்டி
குப்பையிற்கூடையுங் கொண்டுவாரிக் கொட்டி (முற்றம்)

பிராமணஸ்ரீ கவி-இ-ம்-நாட்டை,

இருக்கும்வேலை யாச்சடிமைப்
பெண்மேசந்தி கொட்டாயில்
இருக்குஞ்சாண பிறித்தருட்டி
யெடுத்துவாட்டிதட்டாமே.

வசனம்.

அடி சந்தி சந்தி பெருக்கிக் கெட்டாய் போடி தொட்டிக்
ட்டாய் மாட்டுக் கொட்டாயி லிருக்கிற பதினாயிரங் கூடைசா
ணமு மெடுத்து சந்தனம் போல பழமாழுக்க மிதித்து மாங்காயத்
தனை பருமனுருட்டி சல்லடையத்தனை யகலமாய்த் தட்டடிதட்டு
குட்டிச்சுவரோ,

சந்திரவதி சாணந்தட்டுகிற-தரு.
இ-ம்- காம்போதி - திரிபுடைதாளம்.

பல்லவி.

சாணமுருட்டிவாட்டி தட்டவிதியாமேட்டி
தலையிலெழுதிவிட்டதோ.

அநுபல்லவி.

பிராணநாதனைவிட்டுப் பிரிந்துடல்பழுத்த
பிராமணன்றன்கொட்டாயில பெரும்புழுகுபுழுத்த (சாண)

சரணங்கள்.

நந்தனாந்தவா விந்தமலரை யுந்த
பந்தசிவந்தகையா லிந்தமிருந்தருந்கந்த (சாணமுருட்டி)

ஒளிக்குங்கஸ்தூரிமஞ்சள் குளிக்கும்பாரி மணிக்குங்
ஜொளிக்கும்பொற்கிண்ணவழு தனிக்குங்கையாற்புழுநெளிக்கும்

(சாணமுருட்டி)

வண்டுமொய்க்குமென்மலர்ச் செண்டுவிளையாடிக்கொண்டு
பண்டுவீற்றிருந்தகை விண்டுநொந்து கூழுண்டு

(சாணமுருட்டி)



பிராமணன் விருத்தம்-இ-ம்-நாட்டை,

தட்டிக்காய்சாமுட்டையெல்லாந்தரையிற் றிருப்பிச்சந்தியினி
தொட்டிக்காயிரகுடந்தண்ணீர் தூக்கிக்கொட்டுஞ்சுட்டுகின்று
குட்டிக்காயிருக்கைபுல் லுங் கொண்டுமேய்த்துவாச்சொலிந்த
மட்டிக்காயிரந்தரஞ்சொல்ல மாட்டோங்கூழ்காட்டோமே.

வசனம்.

அடியாரடி அடிமைச்சந்தியன்னுடி யெத்தனைநேரந் தட்
டுயடி அந்தமுட்டையை, போடி தொடப்பக்கட்டாய் முட்டை
யென்னச்சே நீயென்னச்சே தட்டறதைப்பார்த்தால் அழகுசொட்
டுதே, நீகெட்டாய் ஒதுரி கொட்டுறதானே தேன், கொட்டாமல்
போனால் பிள்ளைப்பூச்சிதான் நல்லதாகட்டும், இந்தத்தொட்டிக்கா
யிர கொடசலங் கொண்டுவந்து கொட்டு உங்கவேயமைத்து நம்
மிட மாட்டுக்கொட்டகத்திலுண்டான பசுவின்கன்றுகளையெல்லா
மவிழ்த்து பத்திரமாய் புல்லுகளுண்டான காட்டுக்கு ஓட்டிக்
கொண்டுபோய் வயிறுநிறையமேய்த்துக்கொண்டுவந்து அந்திக்கு
முன்னமே எப்போதும்போலே மாட்டுக்கொட்டகத்தில் சேர்த்
துவிடச்சொல்லடி சந்தி.

சந்திரவதி வசனம்.

அப்படியே செய்கிறேம் சுவாமி.

சந்திரவதி தரு-இ-ம்-சௌராஷ்டிரம். ரூபகதாளம்,

தண்ணீர்க்குடமெடுக்க - தலையில்
தளும்பவுடல்நடுக்க - அழுது
கண்ணீர்கனை விடுக்க - காவி
கந்தைத்துணி யுடுக்க
பண்ணீர்பிரம்ம தேவா - பிதாம்
பாரவென்னை விருதாவா - நாறும்
தெண்ணீரணி மூவா - முதல்
தேவாமாறு பாவா

விளையுட்பயிர் கழனி - விளை
விளைக்கவு மேருழனி - அதிற்
களையும்பறித் தழனி - ஐயர்
காலில்வீழ்ந்துதொழனி

விடியுமுன்ன மெழுந்தே - நித்ரை
விழியாமற்கீழ்விழுந்தே - பிரம்
படியாற்பயந் தழுந்தே - வதா
லசயாகுலக்கொழுந்தே

தேவதாசன்-தரு-இ ம்,சௌராஷ்டிரம்-ரூபகதாளம்.

அம்மாவென்ன செயலாம் - எல்லா
மாதிவென் செயலாம் - இனி
நம்மாலென்ன செயலாம் - ஐயர்
தவிலும்வேலைசெயலாம்

தாயேநீயு மழுது - மனத்
தயங்காதேயிப்பொழுது - கையால்
வாயேமூடித் தொழுது - சொல்லேன்
வாராதொரு பொழுது

அன்றாலன்றந் தொழுதும் - எழுந்
தலையாதொரு பொழுதும் - விதிப்
பயனாலிங்கே குழுவும் - கன்றாந்
பார்ப்போமின்னமுழுதும்

கண்ணுன்கண் காட்சி - திரு
காசிவிசா லாட்சி - இந்த
மண்மீதில் வானுஞ்சாட்சி - என்றும்
வாராதொரு தாட்சி

தேவதாசன் சொல்-கவி. இ-ம்-நாட்டை.

அன்னையாகியவிசா லாட்சியினருளும்
அன்னுமுன்றனக்குச் சா...



சந்திரவதி சொல் விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி.

என்னுயிர்கண்ணேயென்னை யிழுக்குசாணந்தலைத்து
இன்னமில்லாமல்தட்டி சீக்கிரமாய்வரவேசொன்னார்
உன்னையுமழைத்துக்கன்றை ஓட்டிப்போய்மேய்த்துஅந்தி
முன்னமேவரவேசொன்னார் மொழிதப்பாமற்செய்வாயே.

வசனம்.

அப்பா மகனே தேவதாசா, நம்முடைய காலகண்டையர் என்னை தன் வீட்டிலுள்ள மாட்டுக்கொட்டகத்து சாணமெல்லாமெடுத்து முட்டதட்டிவரச்சொன்னார், உனக்கிட்ட வேலையென்னவென்றால் தன்மாட்டு கொட்டகத்தி லுண்டான பசுவின் கன்றுகளையும் எருமைக்கன்றுகளையும் காட்டுக்கு ஓட்டிக்கொண்டுபோய் பில்லுகளுண்டான விடத்தில் மேய்த்து ஜலமுண்டான விடத்தில் வயிறு நிறைய குடிக்கும் படியாய்விட்டு பொழுது போகாமுன்னமே ஓட்டிவந்து மாட்டுகொட்டகத்தில் சேர்க்கச்சொன்னார் அப்படிக்கு நீசெய்துவருவையா அப்பாதேவதாசா,

தேவதாசன் சொல் விருத்தம்.
இ-ம்- மத்தியமாவதி.

செய்யாமற்போனேமானால் திருவுளத்திறுக்கொப்பாமோ
வையகமதிக்குமோதான் மதியுள்ளதாயேகேளாய்
ஐயர்வீட்டுள்ளவேலை யம்மாநீசெய்திருப்பாய்
பையவேபசுவின்கன்றைப் பாரினில்மேய்த்துவாறேன்.

வசனம்

கேளாயென் னம்மணி நாம் ஒருவருக் கடிமையானபோதே அவர்கள்காலாயிட்டவேலை யென்னம்மா அந்தவேலைகளைசெய்யாவிட்டால் தெய்வம்பொருக்குமா, நம்மைவையகமதிக்குமா, உனக்கிட்டவேலைகளை நீசெய்துக் கொண்டிரு எனக்கிட்ட வேலையின்படியே நானும் பசுவின்கன்றுகளையும் எருமைக்கன்றுகளையும் காட்டுக்கும்கொண்டுபோய் அதனின் வயிறுநிறைய பில்லுகளை மேய்த்து தண்ணீர்குடிப்பாட்டி அந்திக்கி முன்னமே கொண்டுவந்து மாட்டு கொட்டகத்தில் சேர்க்கிறேன் எனக்குச் செலவுதாரும்மா.
(ஆனால் அப்படிக்கே போய்வருவாயப்பா தேவதாசா.)

தேவதாசன்-பசுவின் கன்றுகளை யழைக்கிற-விருத்தம்

இ-ம்-மத்தியமாவதி.

அய்யர்தன்வீட்டுவேலை அம்மனிசெய்யலானேன்
வையகமாளவந்த மைந்தனுஞ்சிறிவசத்தால்
செய்யாதவேலைதன்னைச் செய்யவுமானேனைந்தன்
கையிற்கோலெடுத்தேன்பசுவின் கன்களேவருகுவீரே

வசனம்.

வாருங்கள் வாருங்கள் மாட்டுத்தொழுத்திலுண்டான பசுவின் கன்களே, எருமைக்கன்களே, என்னைப்பெற்ற தாயார் வேதியர் வீட்டில் சேர்ந்திட்டலானும் நான்கையில் கோலேந்தினேன் உங்களைக் காட்டுக்கழைத்துப்போய் மேய்த்துக்கொண்டு வருகிறே னிங்களெல்லாங் குப்பலாய் பில்லுகளுண்டான காட்டுக்கு நடவுங் கள் நடவுங்கள் கன்றுகளே.

தேவதாசன்- கன்றுகுட்டிகளை மேய்க்கின்ற-தரு

இ-ம்-புந்நாகவராளி- ஏகதாளம்.

தாயில்லாதபிள்ளையைப்போல் அலைகிறீர்குட்டி. கூடிநின்று
பாயில்லாமற்படுக்கச்சொன்ன பாப்பானுக்குப் பயந்து

வாயில்லாதபூச்சியென்று மாட்டுக்கன்றுக்குட்டிகளை நான்
டேயிலாராடேயோவென்று மேயவிட லானேன்

தாயுந்தந்தையுமிருக்க மதி தயனெனாய்பாட்டனு மிருக்க
மேயுங்கன்றுகுட்டிகட்கு மன மேவினேன் புல்லறுக்க

காயும்வெய்யலில்மழையில் குளிர் காற்றில்நிற்மணத்துடல்குலவி
தாயுமங்கம்வளர்க்கவில்லையோ நடுத்தெருவெங்கு முலவி

வாயும்வயிறும்வளர்த்தாலு மானம்வளர்ப்பதொரு மலையே
தோயுமெனக்குக்காவிக் கற்தை அணியலால் வேதிலேயே

பேயுமிரங்குமனமிரங்கா பிராமணனென்னைக்கிட்டிப்பிடிப்பான்
தீயுங்கண்களிற்பொறிபறக்க இட்டிக்குட்டி. யடிப்பான்

நாயினுங்கடன்பட்ட கடைகடைசீட நாயாயடிமையாய் நானே
டேயிலாராவெனக் கன்றுகளை மேயவிடு வேனே

சேயிலாதபிராமணன்றன் தெருவினிற்கூடிவாங்கி நின்று
டேயிலாராவெனக்கன்றுகளை மேயவிடுவே



இதுவும் தேவதாசன்சொல்-தரு- இ-ம்-கும்மி.

மன்னர்குலத்திற்பிறந்துவளர்ந்திந்த
மருவுமையோத்தியையாளாமல்.
மன்னியவேதியர்வீட்டினிலுள்ள
மாடுகள்மேய்க்கவுமானேனே

தேசாதிதேசத்தோர்வந்துபணிந்திட
செல்வத்துடனே நான்வாழ்ந்தேனே
வாசநிகாசிவேதியர்வீட்டினில்
மாடுகள்மேய்க்கவுமானேனே

முன்னாளிற்செய்தவினைப்பயனோநான்
முடிதரிக்காமலிப்படியானேன்
நன்னயவேதியர்வேலைக்கடிமையாய்
நான்மாடுமேய்க்கவுமானேனே

சத்தியரிச்சந்திரன்புத்திரனென்னவே
சகலமன்னரும்போற்ற வாழ்ந்தேனே
நித்தியிரந்துண்ணும்வேதியர்வீட்டில்
நான்மாடுமேய்க்கவுமானேனே.

தேவதாசன்சொல்-விருத்தம்-இ-ம்-முகாரி.

※ தொல்லுலகயோத்தியாளச் சோதிகளமைந்தரத்நக்
கல்லுகளிழைத்தகிரீடங் கனமுடிக்கொவ்வாதென்றோ
புல்லுகட்டெடுக்கமேலே புனலொழுகவுமிப்போது
செல்லுதலடியேனுக்குஞ் செயலோவிஸ்வேசநாதா,

வசனம்.

அயோத்தியாபுரியை அரசுசெய்ய நவரத்தினங்களிழைத்த கிரீடம் அணியும்படியாகிய சிரசின்மேல் புல்லுச்சுமை யெடுக்க அந்தப்புல்லுகளிலிருந்து ஜலமானதொழுகவும் தேகமுழுதும் அடியேன் சுமந்துக்கொண்டு மாடுவும் இந்தக் காசிநகர்வீதியில் கன்றுகள் ஓட்டிக்கொண்டு எனைப்படிமைகொண்ட பிராமணர்வீட்டுக்குப்போகும்படியாய்நேர்ந்தது உம்முடையசெயலோஹரா ஹரா காசிவிஸ்வநாதக்கடவுளே. ※

தேவதாசன் - சொல் கவி,

செம்மையாய்க்கன்றுகளைச் சிறப்புடன்கொடுபோய்
அம்மணிபசிதீர்த் தழைத்திதோவந்தேன்

வசனம்.

கேளாயென் னம்மணி பசுவின் கன்றுகளையும் எருமைக் கன்றுகளையும் பில்லுகளுள்ளவிடமானகாட்டுக்கழைத்துக் கொண்டுபோய்ப் பசிதீரமேய்த்து அந்திக்குமுன்னமேகொண்டுவந்து மாட்டுக்கொட்டகத்தில் சேர்த்துவிட்டேனம்மா,

காசி பிராமணப்பிள்ளைகள் வருகின்ற பொதுவிருத்தம்
இ - ம் - தோடி,

விதிவசத்தாலேவந்த வேதியன்வீட்டிற்சந்திர
மதியுந்தன்மகனுமித்த வாறுள்ளவேலைசெய்யுங்
கதியதுடைத்திருக்கக் காசியந்தணர்தம் மைந்தர்
சதிருடன்வனத்துக்கேகி சமித்தையொடித்திடவந்தாரே,

கட்டியக்காரன்-வசனம்,

அகோதெப்படியென்றால், இவ்விதமாகச் சந்திரமதியுந் தேவதாசனும் தங்களையடிமைக்கொண்ட பிராமணன் வீட்டில் பணிவிடைசெய்துக்கொண்டிருக்க அந்தக் காசிப்பட்டணத்து அசலாத்துப்பிள்ளைகள் அடவிக்குப்போய் சமித்தை யொடிக்க வருகின்ற விதங்காண்க,

பிராமணப்பிள்ளைகள்-வருகிற-தரு.

இ-ம்-கல்யாணி-ஏகதாம்.

தாய்தகசெணு தாதிமிதக தகணதச்செணு தகதிட தகதகண தச்செணு ததிமிதகிடதக தகதக திகிதிகி திகிதக் திகிதக ததிங்கண தோம்.

பல்லவி.

பிர்ம்மச்சாரியர்வந்தார் - இதோ
பிர்ம்மச்சாரியர்வந்தார்.



அநுபல்லவி.

பிர்ம்மகுலந்தனிர்பிறந்து இரண்டு
பிராமணராயினியர்பல நூலு
தர்ம்மார்த்தகாமிய்ச்சிரம விமோக்ஷ
சரிதைக்கிரியையோகஞான வயேக்ஷ (பிர்ம்மச்)

சரணங்கள்

மின் னும்பட்டக்குசவேஷ்டிசட்டமா புத்தி வியாகரணத்தின்
விரிவெல்லாந்தங்கள்மனதினில்வசப்படுத்தி மிக
தன்னயமாகவும் ஞானமாரிமில்
தன்றாய்த்திருத்தியொன்றாய்ப்பொருத்தி (பிர்ம்மச்)

மின்குடுமிகள்தட்டிமுடித்து நலங்க அலங்காரத்தின்
பிரணவப்பொருளாநாவிலுச்சரித்திலங்க - நல்ல
அல்புடனிதமோதும் புத்தகம்
அங்கையிலெடுத்துச் சங்கையைவிடுத்து (பிர்மச்சாரியர்)

அரிநாராயணகோவிந்தாவெனத் துதித்து-சமித்தைகள்கொய்ய
அடவிக்குப்போய்வர அனைவருங்குதித்து - திவ்ய
திருநாமங்க ணெற்றியிலணிந்து
செயமதாக நயமிங்க (பிர்ம்மசாரியர்)

சுப்பாசாஸ்திரிசொல்விருத்தம்.
இ-ம்-ஆனந்தபைரவி.

வாறயோசேஷாநீதான் வரமாட்டேனென்கிறானோதான்
வாறயோவரதாநீதான் வழிதெரியாதோநேக்கு
வாறயோகுப்பாநீதான் வந்தானேக்கென்னதாராய்
வாறயோநாணாநீதான் வருவானேக்குள்ளபேர்கள்.

இதுவும் சுப்பாசாஸ்திரி சொல்-விருத்தம்
இ-ம் - சங்கராபரணம்.

வழிதெரியாதேநேக்கு வரட்டோபிப்பிள்ளாளேக்கு
படிவெவழிபோயின்னும் பாத்துறேனிவாளுப்நீயும்
நுழைநரிபோலேகாட்டில் நுழைந்தலைந்திடப்போறார்கள்
மழைமழைத்திருக்கு மரங்களைக்காட்டுவேளே.

## வசனம்.

அன்னுடா அடாசேஷாய் இவாளெல்லாங் கூட வரமாட்டோ மென்னுறாளே யிவாளோடேகூட நீயும்வரமாட்டோ மென்னுறாயே நோக்கிந்தகாடெழக்கமோ வழிதலூயதிவையோ மறாமறெ ன்று பளபளப்பா இலைவிருக்கிறதே அந்தமரங்களைக் காட்டுவே னூ நோக்குங் காட்டமாட்டேன்.

### சேஷையர் வசனம்.

அடா குப்பாய்-வரதாய்-சுப்பாய்-நாணாய்-நம்மிடபுரோகித நாத்திலே எவாளாகிலுங் காட்டுக்கு வாறதில்லையோடா.

### சுப்பாசாஸ்திரி வசனம்.

ஆம் ஆம் அந்தமுறட்டுத்தேவடியாள்பிள்ளை அமுடையாளி ருக்குறுவே காலகண்டங் அவள்தான் காட்டுக்கு வாறது.

### சேஷையர்-வசனம்.

ஆறு லழைத்துப்பார்ப்போமா ஓய் ஆர்காணுமாந்திலே (என்ன டா தறதலை தாயோழி பிள்ளைகளா) காட்டுக்கு நீர்வாறீரோ உம்மி ட அமுடையாளை எங்களுடன் கூட்டிவிடுகிறீரோ.

### பிராமணன் வசனம்.

இதடா தாஷ்டத்தேவடியாள் பிள்ளைகளா நம்மிட அமுடை யாளுக்கு வேலைவைத்துப் போட்டீர்களா அடா பிள்ளைகளா நம் மிட அடிமைப் பையலை நானுப்புகுறேன் கூட அழைத்துக்கொ ண்டுபோங்கள்.

### அசலாத்துப்பிள்ளைகள்-வசனம்.

அவனார்காணும் அவனார்காணும் அவனெவனோபார்க்கட்டும் அனுப்பும்.

### பிராமணன் சொல்விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

அன்னடிசந்திமதிந்த அசலாத்துச்சிறுவரோடே
கன்றுகள்மேய்க்கப்போன கட்டையாம்பயலைக்கூட்டி
பன்னுநல்லெரிகருப்பு பரிவுள்ளயிலைகள்தெற்பை
இன்னும்போய்காட்டில்வாரி யெடுத்துவந்திடச்செய்வாயே



## வசனம்,

அன்னுடிசந்தி, நம்முடைய கன்றுகுட்டிகளை மேய்க்கின்ற அடிமைப்பையலை அசலாத்துப்பிள்ளைகளுடனேகூடி காட்டுக்கு ப்போய் கொஞ்சமாய்தானே் கட்டைச்சுமையாயொருசுமைவி றகும்தெற்பை-மாவெலை-முன்னை-முஷ்டை-தாமரை-நவச மிதைகளு மூனுசுமை யிலையும் வாரி யெடுத்துக்கொண்டு குடு டென்னு ஓடிவரச்சொல்லடி சந்தி,

### சந்திரவதி சொல் விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

வாயினில்முலைப்பாலின்ன மாறவுமில்லையையா
பேய்நரிபூதம்யாளி பெரும்புலிநிறைந்தக்காட்டில்
போயிலைவிறகுதெற்பை புனிதமாய்க்கொடுவாவென்று
சேயனையனுப்பலாமோ திருவுளமகிழுஞ்சுவாமி.

## வசனம்.

ஐயையோ யின்னம் வாயில் முலைப்பால்வாசனை மாறவில்லை யே, கரடி-புலி-சிங்கம்-யாளி-பேய்-பூதம் இதுகள் நிறைந்த காட் டுக்குப்போய் இலை-விறகு-தெற்பை கொண்டுவரச் சொல்லுகிறீ ரோ உமக்குக் கொஞ்சமாவது மனதிரக்கமில்லையா சுவாமி.

### பிராமணன் சொல் விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

நோக்கென்னப்பொன்னைக்கொட்டி நோயாளிபயலைக்கொண்ட
நேக்கன்றோநஷ்டமுன்னை நீதியார்சொல்லச்சொன்னார்
பாக்யவான்மகனென்றாலும் படைத்தவர்க்கடிமையன்றோ
சாக்கிரிசெயுமவர்க்குத் தடையுண்டோவனுப்புவாயே.

## வசனம்.

அன்னுடி சந்தி அந்தப்பையல் நித்தியம் கெச்சைக்காயத்த னை கூழ் தின்னுறத்தையுந் தின்னுப்போட்டு இப்படி நோய்கொ ண்டவனைப்போலிருந்தால் பொன்னைக்கொட்டி வாங்கின நேக்க ன்றோ நஷ்டம், நோக்கென்னடி ஞாயஞ்சொல்லவந்தாய் குபே ரனுடைய பிள்ளையானாலும் அடிமைபடைத்தவாளுக்கென்னபிர மாண்டமோ அசலாத்துப் பிள்ளைகளுடனே அனுப்படிசந்தி ய னுப்பு.

சந்திரமதி சொல்-வசனம்.

தேவரீர் சித்தத்தில் கோபம்வேண்டாம் வந்தவிதியெல்லாம் அநுபவிக்கக்காத்திருக்கிறோம், உன்னபடியாகின்றது அப்படியே யநுப்புகிறேன் சுவாமி.

பிராமணஸ்ரீ சொல் வசனம்,

அடி சந்திரமதி, இந்தப்பட்டு டேப்பன் குடிமையநுப்பான் மூட்டைவிற்ற காசெல்லாங் கொட்டிக் கொடுத்து உங்களைக் கொண்டு பூசைபண்ணவோ அநுப்படி யநுப்பு.

சந்திரமதிசொல்விருத்தம்.
இ-ம்-ஆனந்தபைரவி.

பூதலம்புகழுமந்த புரவலன்ராவுத்தால்வந்த
காதல்சேர்மகனேயென்றன் கண்மணியேநீவாடா
பாதகப்பிரமதேவன் பரிந்துநீ றெழுதிவிட்ட
சாதகப்படியேகாட்டில் சமித்தைகட்டிவாப்போடா,

வசனம்.

அப்பாமகனே தேவதாசா என்கண்மணியே அந்தப்பாவியான பிரமதேவ னெழுதியப்படியே யநுபவிக்கவேணும் மித்தயின் கோணுமுடனே நீபுறப்பட்டுநிற்கப்போ புண்ணுமேல சக்கியமுள்ள மாட்டுக்குஞ் சமித்தை நூலே விறகு-இவைகளைச் சேகரப்பண்ணிக்கொண்டு வருவாயப்பா,

தேவதாசன்சொல்-விருத்தம்,
இ-ம்-ஆனந்தபைரவி.

அந்திவிளிக்கிருந்திருந்த மகிழ்ந்திளையதிலைச்சலமோ
குந்திமனையெழில்தாண்டோ ஆயாத்தைத் தீர்ப்பாய்நாயே
மெந்திவிசெய்ப்புப் யமாகும் பேரியார்க்கடியையாகுன்
சாந்திவில்லையிவர்கள்பின்னே தயிரியமாயநுப்புவாயே.

வசனம்.

கேளுமென்னை பெற்றதாயே விதியானையும் விடமாட்டாது பிரமனுமாக்கு என்னைக் கூலியத்து செய்தாலும் யாகத்துக்குச்செய்தபுண்ணியந் திந்திக்கும் நீ விசனப்படவேண்டாம் தயிரியமாகவே சிலுவு கொடுத்தநுப்பும் தாயே.



சந்திரமதி-தரு-இ-ம்-மோகனம்-ஆதிதாளம்.

பல்லவி.

கேளடாமகனே-நான்சொல்லும்புத்தி கேளடாமகனே.

அநுபல்லவி.

நாளடாதாயினி தலித்துவாடவும்பொல்லா
தடுக்கங்கொண்டிட தெய்வம்
கெடுக்குமோவென்னசெய்வம் (கேளடாமகனே)

சரணங்கள்.

நடக்கும்வழியிலேந்த அசலாத்துப்பிள்ளைகள்
நடக்கும்வழியைவிட்டு நடவாதே - அப்பா
நடக்கும்வழியிலொரு வேலையிவர்களிட்டால்
நான்செய்யமாட்டேனென்று கடவாதே - அப்பா
தடுக்கும்இனவழிகள் குறுக்கேயநேகம்வரும்
தப்பிப்போய்பின்னேவழி நடவாதே - அப்பா
சமுத்தம்பேசுவார்நீயுங் கூடப்பேசினுலுந்தன்
சாமார்த்தயமொன்றுமங்கே நடவாதே - அப்பா
தொடுத்துநடந்துகாட்டிச் சுமையிவர்கட்டிப்போது
சுறுக்காய்சுமைகட்டாமல் சோர்ந்துநிற்கத் தகாது
அடுத்துச்செய்யாதேயிந்த அந்தணருடன்வாது
ஐயர்சொல்லைக்கடக்கலாமோ விதிபொல்லாது (கேளடா)

பழங்களிருக்குதிந்த மரத்திலென்றுசொல்லிப்
பறிக்கப்பதைத்துமிஞ்சி யேறாதே - அப்பா
பறிப்பாயோநீயென்று பத்தியம்பேசுவார்கள்
பதட்டமாய்ப்பத்தியங்கள் கூறாதே - அப்பா
முழங்குமோசையிதென்ன பார்ப்போமென்றுநுழைவார்
முந்திபுதருக்குள்ளே நுறாதே - அப்பா
மோசமென்னக்ஷத்திரியர்க்கு ரோஷமில்லையோவென்று
முகங்கடுத்திவர்களைச் சீறாதே - அப்பா
வழங்கும்பேரிகைபோலச் சீறுங்கரடிபுலி
வாக்கண்டாலெவருக்கும் பிடிக்குமேபிராணகிலி
கிழங்குங்காயுங்கனியும் விழுங்கும்வேடுவர் பெலி
கேட்ப்பார்கட்படாமல் திர்ப்பாயென்பிள்ளைகலி (கேளடா)

புத்தகனிப்புதரில் ஏற்றிநிற்கின்றதெற்பைப்
புள்ளுக்கனே நீதாவிப் பதியாதே - அப்பா
பொழுதுபோகுதென்று தனிமையிலேயிறகு
பொதாதென்று பறிக்க குதியாதே - அப்பா
செத்துக்கிடப்பதுபோற் படுக்கும் மிருகங்களைத்
தெரியாமற்கல்லுக்கள் லெறியாதே - அப்பா
நிமிர்ந்தெழுந்திருந்து கடிக்கு மிருகங்களங்கே
செறிப்பாய்வளர் குருத்தை முறியாதே - அப்பா
பித்துப்பிடித்தாற்போல் நாலுதிபார்த்து வேசார
பிசகொன்றுஞ்செய்யாமல் நீ வருவாயென்னிரு
பத்துமாதஞ்சுமந்து பெற்றவென்றன் சிங்கார
பாலனேயென்னுயிரே பசைக்காமற் கனிவா (கேனடா)

தேவதாசன்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

இவைகளாலேவேறு நியக்கங்கள் நினைக்கவேண்டாம்
இவர்களின்வனத்துக்கேகியிவையுடன்விறகுதெற்பை
தவறுதலையில்லாமையாய்க்கட்டி நான்கொண்டுவருவேனம்மாநீ
கவலைகள் நினைக்கவேண்டாங்களிப்புடனிருப்பாயம்மா

வசனம்,

கேளும் என்னைப்பெற்றதாயே சாம்பசிவ மூர்த்தியாருடைய கிருபையினாலே ஒரு குறைவும் வாராது நீ விசனப்படாமலிரு இந்தப் பிராமணப்பிள்ளைகளுடனே கூட நாம்போய் தருப்பை சமித்துகள் கொண்டுவருகிறேனம்மா.

பிராமணப் பிள்ளைகள் வசனம்.

வாடாதோழா இவனென் சம்பிரமத்திலே போதுபோறது நீ வாறாயோ வரமாட்டாயோ - சேஷா - குப்பா - சுப்பா - தாமு,

சந்திரமதிசொல்-விருத்தம்-இ-ம்-கண்டா.

போவென்று சொல்லநெஞ்சம் புழுங்குதெங்ஙன்செய்வேனப்பா
நீவருஞ்செப்புவிந்தச் சிறுவர்களுடனே போய்மீண்டு
நீவரும்வழியைப்பார்த்து நிற்குமென்றனக்கு நீதியில்
காவலாதெய்வமல்லா தொன்னேனாலொன்னு செய்வேன்,



வசனம்.

அப்பாமகனே தேவதாசா இந்தச் சிறுவர்களுடனே வனத்துக்குப்போய் வருகிறபரியந்தம் வழிபார்த்து வழிபார்த்துப்பரதவித்துக் கொண்டேயிருப்பேன் இந்தப் பிராமணப்பிள்ளைகளை இடைவிடாமல் கூடவேவந்து சேரப்பா உனக்குத் துணை தெய்வமேயல்லது நானென்ன செய்வேனடாமகனே.

சந்திரமதிசொல்-விருத்தம்-இ-ம்-மோகனம்,

என்பிள்ளையல்லவப்பா விவனுங்கள்பிள்ளை சொன்னேன்,
என்வயிற்றினில்நெருப்பை யிடாமலேபதனமாகப்
பின்வரச்செய்துகாட்டிப் பிரியமாய்விறகுதெற்பை
தன்மையாய்க்கொண்டுவந்து நான்காணச்செய்குவீரே.

வசனம்.

அப்பா அசலாத்துப் பிள்ளைகளே இந்தக் குழந்தையை பதனமாக அழைத்துக் கொண்டுபோய் உங்களோடொப்பந்தம் இலை [illegible] விறகுதருப்பை சமித்துமுதலானதுஞ் சேர்த்துக் கொண்டியாதொரு சிந்தையும் வாராமல் உங்கள்பிள்ளையாகப் பாவித்துமறுபடியுமெங்கண்ணிற்கொண்டுவந்துகாட்டுங்களப்பா,

சுப்பாசாஸ்திரி வசனம்

அடாய் சேஷாய் இவளழறத்தைப்பார்த்தால் நேக்கு விசனமாயிருக்கிறது.

குப்பையர் வசனம்,

ஆம்-ஆம்-நேக்குமப்படித்தான்

வரதையர்-வசனம்

ஆம் நேக்குமப்படித்தான்.

சுப்பாசாஸ்திரி வசனம்.

அடாய்குத்திரப்பிள்ளாய் நீ கூடவாரையோடா.

தேவதாசன்வசனம்.

ஆம் சுவாமி கூடவருகிறேன்.

பிராமணன் - வசனம்.

அந்தாடா சத்தி அந்தப்பயல் காட்டுக்குப்போய் விறகுகொண்டு வந்தாரு

சந்திரவதி வசனம்,

இதோ அனுப்பிவிட்டேன் சுவாமி (என்னசெய்வேனடா அப்பாமகனே உன்னைவிட்டு யெப்படியிருப்பேன் மகனே.

சந்திரவதிசொல்-கொச்சகம்,

இ-ம்- புந்நாகவராளி.

அந்தணர்தன்பாலகரே அழகுபெறுமென்சுதனே
இந்தவடர்வனத்தி லெதிர்வருகுஞ்சகுனமலது
மைந்தர்களேநீர்பாரும் வலியன்முதற்கட்டுதிதோ
யெந்தசகுனங்களுக்கு மிச்சகுனம்பொல்லாதே.

வசனம்.

வாருங்களப்பா அந்தணப்பாலகரே, அப்பாமகனே தேவ தாசா, நாம்வந்தவழியில் நடந்தவிந்தையைப்பார்த்தீர்களா நமக் கெதிரே வந்தசகுனத்தைப்பார்த்தீர்களா, முதல் முதல் வலியன் குருக்கிடலாகாது நான் கண்டேன் கண்டேன் எந்த சகுனங்களுக் கும் இந்தசகுனம் பொல்லாதென்று சொல்லுவார்கள் வலியன் குருக்கிடலாகாது உள்ளபடியேயாகுது இன்னம்பார்ப்போம் ந டவுங்களப்பா மைந்தர்களே.

சந்திரவதி சொல் சகுனதரு.

இ-ம் - கௌளிபந்து - ஆதிதாளம்.

வேதமுறையறிந்த வேதியர்மைந்தரே    ஐயமாரே-இந்த
வீணனசகுனத்தைவிலக்குவதெப்படி    ஐயமாரே

ஜோதிமுடிதரித்தசொல்வழுவாமைந்தா    தேவதாசா-இதோ
அஷ்டவலியனும் அன்பமாய்க்கட்டுதே    தேவதாசா

காகம்இடமாச்சே கருஞ்சாரைகட்டுதே    தேவதாசா-வருங்
காரணமென்னமோ கடவுளானறிகிலேன்    தேவதாசா

நாகமுஞ்சாரையும் நம்மைத்தடுக்குதே    தேவதாசா-இது
நன்மையோதுன்மையோ நாமேதறிகிலோம்    தேவதாசா



கட்டுதேவிச்சுளி காடைவலமாகுதே    தேவதாசா-ஒரு
காட்டுக்குள்பூராதே காடிதுறத்திடுந்    தேவதாசா

வட்டமாய்க்கருடனும் வலமாகவருகுதே    தேவதாசா-ஒரு
மரத்தின்மேலேறுதேமரமொடிந்தால்மோசந்தேவதாசா

பூனைகுறுக்காச்சே புள்ளிமான்கட்டுதே    தேவதாசா-ஒரு
புதருக்குள்பூராதே புலிகள்துறத்திடுந்    தேவதாசா

மானுடன்வேடுவர் வருகிறார்திராக    தேவதாசா-ஒரு
மலைகள்மீதேறாதே மலைப்பாம்புதுறத்திடுந்    தேவதாசா

அன்னைபிதாவுரு அண்ணமாரிவர்களோ    தேவதாசா-உன்னை
அன்புடன்காத்து அழைத்துவருவார்கள்    தேவதாசா

இந்நகர்காசியி லீசனைத்துதிசெய்த    தேவதாசா-உனக்
கென்னையிடர்வரினு மேற்றிக்கொள்வாரடா    தேவதாசா

இதுவும் சந்திரவதிசொல்சகுன-தரு.

இ-ம்-கெண்டா-அடதாளம்.

பல்லவி.

என்னமாகுமோ-இந்தசகுனம்- ஏதாயிருமோ,

அநுபல்லவி.

இன்னமென்னமா யிருக்குமோசகுனங்கள்
எந்தன்பாலனே அந்தணர்மைந்தரே    (என்னமாகு)

சரணங்கள்.

இடமதாகுதே கருடன்வட்ட-மிடுவதாகுதே
நடவும்பார்க்கலாம் வேதியர்மைந்தரே
நாடுதேபுலி யோடுதேகாட்டுக்குள்    (என்னமாகுமோ)

அடர்ந்துமீறுதே-நம்மைக்கண்டு-ஆந்தைகீறுதே
அடர்ந்துவாருங்கள் நரிகள்கூவுதே
அடருதேகரி-அடருதேயினி    (என்னமாகுமோ)

கூடத்தாவுதே-காட்டிலிருக்கும்-கோட்டான்கூவுதே
தேடக்கிடையாத செல்வமனையறிகிலோம்
சிந்தைநோயுதே-அந்தணமாயினி    (என்னமாகுமோ)

மெய்க்குமெய்யரோ-மகனைக்கூட விட்டேனையோ
கைக்குள்வைத்துக்கொண்டாடியழைத்துப்போய்
காட்டில்நில்லாமல்-வீட்டில்வாருங்கள் (என்னமாருமோ)

அசலாத்துப்பிள்ளைகள் சொல்விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

அவசகுனங்களென்றுன் அகத்தினில்வெருப்பவேண்டாம்
சிவன்செயலல்லால்வேறு தீவினைவாராதம்மா
பயமொன்றுமில்லையிந்தப் பகலினிற்பயமேதம்மா
ஆயமானமிலாதுன்சேயை யழைத்துவந்தொப்பிப்போமே

வசனம்.

கேளாய் சந்திரவதித்தாயே. வழியில் சகுனங்கள் பழுதாய்க் காணலாச்சுதென்று நீவிசனப்படாதே, ஆகிலும் பரமசிவனுடைய சித்தப்படியே நடக்குமேயல்லது வேறொன்றும் வராது, உன்பிள்ளையை நாங்கள் கொண்டுவந்து உன்கையி லொப்பிவைக்கிறோம்- நேக்குள்ளவிறகில் பாதிதருகிறேன் ஆம் ஆம் நேக்குள்ள யிலையி ற்பாதி தருகிறேன் நேக்குமப்படியே.

சந்திரவதி-வசனம்.

போய்வருகிறையா என்னப்பா கண்மணியே,

தேவதாசன் சொல் விருத்தம்.

இ-ம்-வசந்தபைரவி.

தஞ்சமுன்பாதத்துக்குச் சந்ததஞ்சரணமம்மா
கொஞ்சியபாலரோடு கூடவேசென்றுயானும்
இஞ்சிதசமுத்துதெற்பை இன்னியேயிறகுங்கொண்டு
சஞ்சலந்திரவாரேன் தாயேநீவிடுதிசெல்வாய்,

வசனம்.

கேளாயென்னம்மணி இந்நேரமெனக்குச் சொல்லிக்கொண்டுவந்த புத்தியைக் கேட்டறிந்தேன், உன்குருவின் ஆசீர்வாதத்தினால் நல்ல புத்தியைக்கொண்டு இந்தஅசலாத்துப்பிள்ளைகளுடன்கூடப்போய் சமுத்துதெற்பை- பறித்துக்கொண்டு பொழுது போகாமுன்னம்வருகிறேன் நீ விசனப்படவேண்டாம் வீடுபோய் சேர்வாய் தாயே.

பிராமணஸ்ரீ வசனம்.

அடிசந்தி நோக்கேதுக்கடி அசலாத்துப் பிள்ளைகளுடனே யார்த்தை இந்தசாணத்தையெடுத்து முந்தத்திற்கொட்டடி,

சந்திரவதி வசனம்-இதோ செய்கிறேனம்மா.

அசலாத்துப்பிள்ளைகள் -விருத்தம்-இ ம்-மோகனம்,

ஏதடாவுன்னைப்பார்க்கிலிராஜராசேந்திரன்போற்
சோதியுமழகுங்காட்டித்துலங்கிறயுன்னைப்பெற்ற
மாதுமோர்மன்னர்மன்னன்மகள்போலிருக்கிறானே
ஓதுமுன்னூரும்பேரும்முபத்ரம்வந்ததுஞ்சொல்வாயே.

வசனம்.

அடாய்சிறுபிள்ளாய்உன்னைப்பார்த்தால்இராசகுமாரனைப்போலிருக்கும் உன்தாயைப்பார்த்தால் இராச குமாரத்தியைப் போலிருக்கின்றீர்களே உங்கள்பேரும் ஊரும் உங்களுக்கு வந்தவிபத்தைத் தெரியச்சொல்லிக் கொண்டு நடவும் பிள்ளாய் நமக்கு வழியுந்தூரடவேணுமே,

தேவதாசன்-தரு-கண்ணி-இ ம்-முகாரி ஆதிதாளம்,

என்னென்றுசொல்லுவேனெங்கள்தலைவிதியை ஐயமாரே-என்னை
என்னைபெற்றவரரிச்சந்திரராசனென்றுரைப்பார்கள் ஐயமாரே
தன்மையாலென்னைப்பெற்றதாய்சந்திரவதியென்பாரையமாரே நாங்கள்
சத்தியந்தவறாமல்தரணியையாண்டிருந்தோம் ஐயமாரே [கள்
வஞ்சகவிஸ்வாமித்ரமாமுனியவர்வந்தா ரையமாரே- நல்ல
மகத்வயாகஞ்செய்யயிருந்தபொன்னைக்கேட்டாரையமாரே
நெஞ்சமென்றவர்களுப்பொன் றந்ரதங்கையேவைத்தாரையமாரே [நாங்கள்
அறிந்தாற்பின்னைதவறாதுயெடுத்துப்போரோமென்றுரையமாரே

மடியமிருகங்களால்வனத்திலிழுத்துவிட்டாளையமாரே- அங்கே
மலைபோல்வந்தபன்றியைக்கொலத்துணிந்தோமென்றனையமாரே

கொடியநீச்சப்பெண்களைக்கூடிமருவச்சொன்னாளையமாரே அது
கூடாதென்றேயயோத்தி நாடும்வாங்கிக்கொண்டாளையமாரே

வாங்கிக்கொண்டதல்லால்முன் வைத்தபொன்னையங்கேகேட்டாளை
[யமாரே-காசி
மன்றயோர்க்கடிமையாகி மாமுனிகடன்தீர்த்தோமையமாரே

வஞ்சிவந்தியென்றந்தைபெண்டையேபோய்விட்டாளையமாரே சற்
மிரக்கமில்லாமல்வேலையெங்களைசெய்யச்சொன்னாளையமாரே [று

காயுமறையோனென்னைகண்டமேய்க்கச்சொன்னாளையமாரே- இ
காட்டுக்குங்களுடன்கூட்டியனுப்பிவிட்டாளையமாரே [ன்று

தாயும்நீங்களேயென்றந்தையும்நீங்களென் னையமாரே-பிரமன்
தலையிலெழுதினதப்புமோயாவர்க்கு மையமாரே

அசலாத்துப்பிள்ளைகள்சொல்-விருத்தம்

இ-ம் ஆனந்தபைரவி.

விறகிறென்பிந்தக்காட்டில் விடாமலேயனேகதூரம்
தேறதேறென்றேடிவந்தோம் நில்லுங்களிங்குண்டான
விறகுகள்சமிதைதல்ல விஸ்தாரமிலைகளுண்டு
பதியுங்கள்நமக்குமிந்தப் பயலுக்குங்கூடத்தானே.

வசனம்.

அடாய் சேஷாய் சுப்பாய்-குப்பாய் நாணாய் நாமானால்வெகுதூரங்காட்டுக்குள்ளே வந்து விட்டோம் இங்கேநன்றாய் விறகுகவிருக்கிறது சமிதைகளிருக்கின்றது சட்டவட்டமாயறுத்துக்கட்டுங்கள் இந்தப்பிள்ளையைப்பார்த்தால் நேக்குப்பரிதாபமாயிருக்கின்றது இவனுக்கு அவாளவாள் கொஞ்சங் கொஞ்சங் கொடுப்போம்,

பிராமணப்பிள்ளைகள்-வசனம்,

ஆம் ஆம் அப்படியேசெய்வோம்நேக்குஞ்சந்தோஷம்நேக்குஞ்சந்தோஷந்தான்,



தேவதாசன்சொல்-விருத்தம்.

இ-ம் ஆனந்தபைரவி

தினமாந்தயாளருள்ள செழுமறையோரேநீங்கள்
தானமாய்விறகுகட்டுந் தலைச்சுமையிலையுந்தந்தீர்
ஞானவேதியற்குத்தெற்பை நான்கொய்வேனிதுபோதாது
வானுயர்புற்றின்மீது வளர்ந்திடுஞ்செழிப்பைப்பாரீர்.

வசனம்,

கேளுங்கள்சுவாமிகளே நீங்கள்கொடுத்த இலையும் விறகும்தேவிஷ்டமாச்சுது எங்களையருக்கு தருப்பை போதாது அதோபுற்றின்மேலே செழிப்பாய்த் தருப்பைவளர்ந்திருக்கின்றதே அதை ஒருக்ஷணப்போதிலே அறுத்துக்கொண்டுவருகிறேன் சற்றே நில்லுங்கள் சுவாமிகளே.

பிராமணப்பிள்ளைகள்-வசனம்,

அடாய் பிள்ளாய் இதுபோதுமென்றாலுங் கேட்கமாட்டோமென்றாய் எங்களுக்கானால் போதும்போறது இனியிங்கே யிருக்குங்களுடைய வுபத்திரவமுண்டு சிக்கிரம்வாடா,

தேவதாசன்-வசனம்

இதோ க்ஷணத்திலே வருகிறேன்சுவாமி,

தேவதாசன்-தெற்பை பரிக்கிற-தரு.

இ-ம்-சாவேரி-சாபுதாளம்.

கொய்திடுமென்றசொல்முன்னமே இதோ
கொய்புனக்காரையறிந்தனன்
ஐயனேயென்னிடஅதிஷ்டந்தான் இதோ
யானுமே ஞாபகமித்தனன்
காட்டுக்குள்மெள்ளப்புகுந்துமே இதோ
கள்ளிமுளையான்பறித்தனன்

காசிமடைப்புரிற்புகுந்துமே இதோ
சம்பிரமாய்க்கோலையடித்தனன்

தழைத்தமரத்தினிலேறியே இதோ
தான்கனிவெட்டியிலைபறித்தனன்

செழித்தமரத்தினிலேறியே இதோ
சின்ன அம்மனைந்தான்பறித்தனன்

வெய்யலிற்காடெலாந்திரிந்துமே இதோ
வேணசமுத்துப்பறித்தனன்

பையரவம்வாழும்புற்றின்மேல் இதோ
பச்சையாய்த்தெற்பையைப்பறித்தனன்

அரகராசங்கா அரிசர்வேசா
அரவமேவிசி அடிந்துநேகாசி

பொது-விருத்தம்-இ-ம்-தோடி,

இத்தகைமறையோர்மைந்த ரியம்பும்வார்த்தையைக்கேளாமல்
புத்தின்மீதேறித்தெர்ப்பைப் புல்தேவதாசன்கொய்ய
சித்துசெய்விஸ்வாமித்திரர் செய்கையால்விளைந்தசர்ப்பம்
பற்றியேகடிக்கக்கூவி பாலன்மண்மேல்விழுந்தானே,

கட்டியக்காரன் வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரமாகக்காட்டுக்குவந்ததேவதாசன் வீட்டுக்குவருகிற தருணத்தில் தருப்பையை அறுக்கப்போகையில் அங்கே விஸ்வாமித்திரர் மாய்கையிலுலே வந்திருந்த சர்ப்பங்கடித்திட தேவதாசன் பிராமணப்பிள்ளைகளைக்கூவி அழுகிறவிதங்காண்க,

தேவதாசன் சொல் விருத்தம்.

இ-ம்- மத்தியமாவதி

என்குலதெய்வம்போலு மென்னுடன் கூடவந்த
பொன்புரிநூல்விளங்கும் புனிதவந்தணரேகேளீர்
என்விதிமுடிந்து இங்கே யிருந்தொருகாலசர்ப்பம்
என்கையிற்கடித்துதையோ யேறுதேவிஷமென்செய்வேன்.



வசனம்.

எனக்குத் துணையாய்வந்த ஐயமார்களே. கேளுங்களித்தபுற்றின்மேலிருந்த தெர்ப்பையைக் கொய்ய வந்தேனே அதிலிருந்து காலசர்ப்பங் கையிற்கடித்ததே ஐயையோ விஷமேறுதே, என் விதி இன்றுமுடிந்ததேயோச்சுது சுவாமிகளே,

அசலாத்துப்பிள்ளைகள்-வசனம்.

வெளியிலேயிருந்த பசுவைத்தூக்கிக்கிணத்திலே தள்ளியது போலாச்சுதே இந்தப்பாவத்துக் கென்னசெய்வோம் அரிகரி.

தேவதாசன்சொல்-விருத்தம்,

இ-ம்-ஆனந்தபைரவி.

கடித்ததுவிஷமென்மார்பிற் கருக்கெனவடைத்ததுகால்
ஒடித்ததுபோலேசோர்ந்தே னுயிர்நிலைகலங்குதையோ
வடித்தகண்ணீராலென்றன் மாதாவுக்கிதைப்போய்சொல்வீர்
பிடித்தனன்ஈசன்பாதம் பிறவிநோய்தொலைந்ததையா.

வசனம்.

அரி அரி அரி விஷந் சாசமொன்றேறுதே, மார்பிலடைக்குது பிராணன் துடிக்குது பேசப் பிரயாசையாயிருக்குது, என்னைப் பிறப்பித்த ஈஸ்வரன்பாதத்திற் போய்ச்சேருகிறேன் இந்தச் சேதியைமாத்திரம் என்னைப்பெற்ற தாய்க்குப்போய் சொல்லுங்கள் ஐயமார்களே.

அசலாத்துப் பிள்ளைகள்சொல்- விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

எங்களைத்துணையாய்ப்பற்றி யிக்காட்டுக்குள் நீவந்தாய்
வங்கையோபாம்புக்குன்மேல் மலரயன்விதியோவப்பா
தங்கியவிஷத்தாக்கேத்த தகைமருந்தறியோம்நாங்கள்
எங்கேயென்மகனென்பாளே யென்சொல்வோமுனதன்னைக்கே

வசனம்

அப்பா தேவதாசா, அந்தப்பாம்புக்கு உன்மேலேதானும் பகையுண்டோ. அல்லது உன்றலைவிதியோ, இந்த விஷத்துக்குத் தீருந்த மருந்து மறியோமே, உன்றாய்க்கு என்னசொல்வோம் அப்பா.

சேவகையர்-வசனம்.

அடாய் சுப்பா யேதடாய் இந்நேரமட்டுக்குஞ் சுவாமியை நினைந்தழுதானே இப்போது சுவாசமிருந்ததே அட யென்னடா அதையுங்காணோமே அரகரா அரகரா.

அசலாத்துப்பிள்ளைகள் - தரு-இ-ம்-கெண்டா.

ஆதிதாளம்.

பார்த்திருக்கும்போதேபிராணன்
பறந்துபோச்சுதேஅப்பா தேவதாசா
ஆர்த்தயெமன்போலேபாம்பு
கார்த்திருந்ததோஅப்பா தேவதாசா
பேயுமிரங்குமேநீ
பேசும்வார்த்தைகேட்டாலப்பா தேவதாசா
மாயமோயெவர்கள்செய்த
வஞ்சகமோஐயோஅப்பா தேவதாசா
முத்துமுத்தாய்வார்த்தைசொல்லும்
முகமுங்கறுத்ததையோ தேவதாசா
சற்றுமசைவில்லாமல்
சரீரமுமாத்துதையோ தேவதாசா
உயிர்த்தோழனென்றுசொல்லி
உடன்கூட்டிவந்தோமப்பா தேவதாசா
வயிறெரியவுன்றாய்க்கிந்த
வார்த்தையெப்படிசொல்வோம்தேவதாசா



அசலாத்துப்பிள்ளைகள்சொல்விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

எங்கிருந்தெழுந்தா விஷனிவிழைப்பதுண்டோ
தாங்கியின்றெடுத்துப்போகச் சடமாச்சுதுயிருமில்லை
ஙங்கினிபொழுதுபோறு விளைகொள்ளுமிருகங்கண்டால்
ஓங்கியேயிவன்றாய்க்கித்தை யுரைப்பதேகருமம்வாரீர்.

வசனம்,

அடா சேஷா-குப்பா-சுப்பா-நாறு-நேக்கு வயிற்றைப் பத்திப்பற்றி யெரியுறதடா, இவனைப்பெற்ற தாயார் கேட்டால் அவளெப்படி அழமாட்டாள்.

சேஷையர் வசனம்.

அடா நேக்கும் வயிற்றை மெத்த பத்திப்பற்றி யெரியுறதடா இவனை மெள்ள யெடுத்துக்கொண்டு போகலாமென்றுபார்த்தால் காட்டிலிறந்த சவத்தை வீட்டுக் கெடுத்துக்கொண்டு போகலாகா தென்பார்களே, போதுபோறதே இனிநாமிங்கிருந்தால் மிருகங்கள் நம்மையுந் தின்றுப்போடுஞ் சுறுக்காய்ப்போய் இவன்றாயுடனே சொல்லுவோம் வாருங்களடா.

அசலாத்துப்பிள்ளைகள்சொல்-விருத்தம்

இ-ம்-கெண்டா.

உருக்கியசெம்பொன்மேனி யுற்றதோர்தேவதாசன்
கருக்கிருள்மேகமென்ன கருத்தது தேகமெல்லாம்
முருக்கின்பூவனையபாம்பு முற்றிலுந்தழைகூட்டாக்கி
பெருக்கமாய்வளர்த்துக்கொள்நாம் பெரும்பழிக்காளதானோம்

வசனம்

வாருங்கள் தம்பிமாரே, தேவதாசனை பாம்பு கடித்த படியினாலே அவன் தேகமெல்லாம் ன்னமாய் கறுத்துப்போச்சுது பாருங்கள், இவன் இராஜவடி வெங்கேபோச்சுதோ, இவனுடைய பல்லொளி வெங்கேபோச்சுதோ, இவனை யிங்கே பத்திரப்பண்ணி இவன் தாயாராகிய சந்திரவதிக்குப் போய்ச் சொல்ல வேணும்,

மேலும் நாய் நரிகள் பேய் பிசாசுகள் மிருகசாதிகள் கழுக்கூட்டமுண்டான காடுகளிது ஆகையால் இந்த ஆலமரத்தடியில்தானே புத்தினருகில் கொஞ்சித்தழைகளை யொடித்துவந்து நாய்நரி நுழையாதிருக்க முருக்கம் பூவேலியிறுமேலே கூடுகட்டி அதற்குள்ளே யெடுத்து வளர்த்தி பத்திரஞ்செய்து நாம் போகவேணும் எதோ யெடுத்துபத்திரமாய் வளர்த்துங்க ளண்ணைமாரே, மேலும் இந்த கொஞ்சித்தழைகளை யொடித்து அவாளவாள் கையில்பிடித்து நாம்போகிறவழியிலே போட்டுக்கொண்டேபோய் அந்த அம்மாள் சந்திரவதிக்குச்சொல்லேனுமானால்தழைபோட்டவழியே அடையாளம் பார்த்துக்கொண்டுவந்து தன்மகனைக்கண்டெடுத்து கருஞ்செய்து வெளியர்க்கிடுத்து சேர்வாள் தழையொடித்துக்கையிலே பிடித்துக்கொண்டுவாருங்கள் தம்பிமார்களே.

அசலாத்துப்பிள்ளைகள் - சொல் - புலம்பல்,

தரு-இ-ம்-நஜாவந்தி ஆதிதாளம்.

பல்லவி.

எப்படிமனந் தேறுவோம் - சந்திரவதிக்கு
யெத்தவகையாய்க்கூறுவோம்

அநுபல்லவி.

தப்பிதம்வாராம லொப்பிப்போமென்றுவந்தோம்
இப்போல்தேவதாசனைநாம் சர்ப்பத்துக்கொப்பித்தோம் (எப்ப)

சரணங்கள்,

மைந்தன்வருவானென்று வழிபார்த்துமிருப்பாளே
வாயில்போவதெல்லாம் வைத்துக்காத்திருப்பாளே
சந்தோஷமாயிவ்வேளை மகிழ்ந்திருப்பாள்நல்ல
சர்ப்பமுன்மைந்தனைக் கடித்ததென்று சொல்ல (எப்படி)

விளையாடிக்கொண்டுதாம் சமர்த்தாய்கூட்டிவந்தோம்
விளையும்விதிவசந்தனை யறியாமலே மறந்தோம்
இளவாழைக்கன்றுபோலே பாம்புக்கிரைகொடுத்து
மாதுதனைப்போலே காட்டிற்பிள்ளையைவிட்டு (எப்படி)

கனிந்துக்கனிந்துகண்ணீர் முத்துமுத்தாய்ச்சிந்த
காட்டிற்பிள்ளையைவிட்டு சாமெறாமல்பிரிந்து
பனிமலர்வனத்தழை போட்டுவந்தோமென்ன
பாலருக்குறிப்புகளைப்பாலகனுக்குச்சொல்லமுன்னம் (எப்படி)



பொது-விருத்தம்.

காட்டினிலிறந்துபோன காதலன்சேதியெல்லாம்
கோட்டியர்மறையோர்வந்து சொல்லுவதற்குமுன்னே
நீட்டமாய்ப்போனபாலன் நேரமும்வில்லையேயென்று
வாட்டமாய்நினைந்துசந்த்ர வதிபிரலாபிக்கின்றாளே.

கட்டியக்காரன்-வசனம்,

அகோரெப்படியென்றால், இந்தப்பிரகாரமாகக் காட்டிலிறந்துபோன தேவதாசன் சமாச்சாரம் பிராமணப்பிள்ளைகள் வந்துசொல்லுதற்குமுன்னமே இன்னம் தன்பிள்ளைவந்து சேரவில்லையென்று சந்திரவதியம்மனுனவள் பரதவிக்கிறவிதங்காண்க,

சந்திரவதி-தரு-இ-ம் செஞ்சுருட்டி-ரூபகதாளம்,

பல்லவி.

இன்னம்வரக்காணகிலேனென்ன மாயம்
என்கண்மணியையென் னருமைமகனை
இன்னம்வரக்காணகிலேனென்ன மாயம்

அநுபல்லவி.

சின்னவயதுள்ளசிறுகுழந்தை பிதாச்சே - அந்த
தெய்வத்துக்குமெங்கள்மேலேதயைதப்பிப் போச்சே (இன்னம்)

சரணங்கள்.

வஞ்சகமுனிவென்னமே நிலையாமோ-விதி
வசந்தானின்னம்வாரா மலையாமோ
நெஞ்சமுமொருவகையாய் மயங்கி
நெறிதள்ளாடுதே அறிவும்வாடுதே (இன்னம்)

பொழுதுபோய்வெகுநேரமாச்சென்னபயம்- குடல்
புழுங்கித்துடிக்குதிதென்னவதி தாபம்
அழுதாலந்தப்பிராமணன்சகியா
மடிலமறாங்களானநின்றலே (இன்னம்)

அம்மாஅம்மாவென்றடிக்கடிமகன்வருவான் - எந்த
னைசுத்தியரிராமலர்வாய்முத்தந்தருவான்
இம்மைமறுமையானவிகபர
மிருபயன்களைத்தருமகன்றனை (இன்னம்)

சந்திரவதிசொல் விருத்தம்.இ-ம்-செண்டா.

* கூண்டிலிற்கிளிபோல்விட்டுத் தழந்தைக்குமுப்போதன்னம்
வேண்டியபடியேயூட்டும் விருத்தவிர்த்திநாட்பிசைகூ
பாண்டியபோதிகளைத்தகூழுள்ள டதிகாலைசென்றமைந்தன்
ஈண்டியபொழுதுபோயுமின்னமும்வரக்காணேனே.

வசனம்.

விசித்திரமாகிய, கூண்டில் கொஞ்சத்தக்க பஞ்சவர்ணக்கி
ளிச்சமானமான அழகியபாலனை வீட்டில்வைத்துக்கொண்டு நா
ளும் என் பிராணதாயகரும், தளராமல்மூன்றுபொழுதும் முப்
பழமும் பாலன்னமுங் கொடுத்துவளர்த்த என்னிரு கண்மணியா
கிய தேவதாசச்செல்வன், இந்தப்பிராமணவுத்தமி களைத்து வார்க்
குங் கூழுமுதைச்சாப்பிட்டு அதிகாலையிற் காட்டுக்குச் சென்றபா
லன் பொழுதுபோயும் இன்னமுங்காணேனே? என்னசெய்வேன்
ஆசார காசிவிஸ்வநாதக்கடவுளே. *

சந்திரவதி-தரு-இ-ய-செஞ்சுருட்டி-ஏகதாளம்.

பல்லவி.

மகன்வரக்காணேன்-மதி-மயங்குதெனன்பிராணன்

அநுபல்லவி.

செகந்தனிலிருந் தென்னப்பாவியான
தேகஞ்சுமைதைக்காகப் போன (மகன்வரக்)

சரணங்கள்,

கூடப்போனமாக்கள் - உபரி
குலப்பிராமணர்க்கள் - விளை
யாடப்போவோம்வா வென்றழைத்துக்காட்டில்
அந்தமாய்விட்டு வந்தாரோவீட்டில் (மகன்வரக்)



இலைப்பூண்டுமெதித்து - வழி
தெரியாமல் மதித்து - ஒரு
வகைபூண்டிப்புறம் வாராமலங்கே
வலைந்துஙார்கூண்டு யிளைத்ததாலின்று (மகன்வரக்)

பொழுதும்போச்சுது - நான்
புலம்ப லாச்சுது - போ
யழுதுச்சொன்னாலு மந்தணன்கேளான்
அடிமைவேலை கொடுமையாலே (மகன்வரக்)

சந்திரவதிசொல் விருத்தம்-இ-ம்-தோடி,

தகைபெறுமறையோனேவல் தாழ்வின்றிச்செய்யவேணும்
புகழ்தலமறையோர்வீட்டுப் புத்ரர்களுடனேபோன
மகனைநான்வரக்காணேனென் வயிறுதான்றுடிக்குதையோ
பகையுளதெய்வஞ்செய்யும் படரிவினையறிகிலேனே.

வசனம்.

என்னசெய்வேன் என்னசெய்வேன் அடிமைகொண்டபிரா
மணன் வீட்டுவேலையுந் தவறாமற்செய்யவேணும் சிலதூரம் நடந்
து போய்ப்பார்ப்போமென்றாலுஞ் சமயமில்லை இத்தலத்துப்பி
ராமணப்பிள்ளைகளுடனே கூடக்காட்டுக்குப்போனமகன் இன்னம்
வரக்காணேமே என்பலையாளியாகியதெய்வம் என்னபாடுபடுத்து
மோதெரியவராதே ஈஸ்வரா ஈஸ்வரா.

பொது-கொச்சகம்-இ-ம்-புந்நாகவராளி,

மகனைநினைந்துசந்த்ர வதியுருகிவழிபார்த்து
மிகமெலியுந்தருணமதில் விறகுகொண்டுவரப்போன
தருமறையோர்புதல்வரெல்லாந் தமதுசுமைதனையெடுத்தே
இகலினால்வரக்கண்டே யெதிர்கேட்கத்தொடங்கினளே,

கட்டியக்காரன் வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரமாகக் காட்டுக்குப்
போனமகன் வரக்காணோமென்று வழிபார்த்திருக்குஞ் சந்திரவதி

யம்பட்டனவள் அஸ்தமித்தபின் வருகிற பிராமணப்பிள்ளைகளைக்கண்டு கேட்கிறவிதங்காண்க,

சந்திரவதிசொல்விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

பொழுதுபோயிருட்டாகப்போமட்டுமென்னசெய்தீர்
வழியிலமக்களேயென் பாலனையெங்கேகாணேன்
தொழுதுகைகூப்பிச்சொன்ன துதியையுமறந்துகாட்டில்
அழுதுளந்தயங்கவெங்கே யலையவிட்டீர்களையா.

வசனம்.

ஆ என்கண்மணியான மக்களா, இப்படி பொழுதுபோயிருட்டாகிறவரைக்கும் ஒருவருக்கொருவர் சண்டைசெய்தீர்களோ-விளையாடினீர்களோ என்மகனெங்கே காணேன் உங்களுக்குபசாரஞ்சொல்லி யனுப்பிவைத்ததை மறந்து என்கண்மணியை யெந்தக்காட்டிலலையவிட்டீர்கள் சொல்லுங்கள் பிள்ளைகளே.

அசலாத்துப்பிள்ளைகள் சொல்விருத்தம்.

இ-ம்- ஆனந்தபைரவி.

தேம்பிநீயழுதாலென்ன செய்குவோம்மாதிவ்ய
பூம்பசுமேனியாய்நின் புத்திரனையழைத்துப்போனோம்
காம்பிலைவிறகுதெற்பை கட்டியோர்சுமையுந்தந்தோம்
பாம்பினுக்கிரையாய்மாண்டான்பார்த்தழுதேங்கிவந்தோம்.

வசனம்.

கேளுமம்மா சந்திரமதி, இனி தேம்பித்தேம்பி யழுதால்நாங்களென்னசெய்வோம் உன்மகனை அடவிக் கழைத்துக்கொண்டுபோய் எங்களோடொப்பந்தம் எடுக்கத்தக்கின சுமையுங் கட்டிக்கொடுத்தோம். அதுபோதாதென்று புற்றின்மேல் செழிப்பாய் வளர்ந்திருந்த தெற்பையை அவன் சுதாவில் கொய்யப்போனான் அவடத்தில் பாம்புகடித்திறந்துபோனான் தாயே.



சந்திரவதி சொல் விருத்தம்-இ-ம்-கெண்டா.

இறந்தையோமகனேபாம்பா லென்னையுந்தெருவில்விட்டு
மறந்தையோவெனக்குச்சொல்லு மனதிடவுறுதியெல்லாம்
பறந்தையோவெனைப்பூமிக்கே பாரமாயிருக்கவைத்துத்
திறந்தையோதாய்மேலன்பு அடித்தழக்கைவிட்டயோ

வசனம்.

ஐயையோமகனே என்னை இந்தப்பூமிக்குப் பாரமாகவைத்துப் பரதேசிபோலத் தெருவிலே விட்டு யெனக்குச்சொன்ன வைதிகத்தையும் மறந்து நீமாத்திரம் இறந்தையா அப்பாதேவதாசா.

சந்திரவதி புலம்பல் தரு.

இ-ம்-செஞ்சுருட்டி- ஏகதாளம்.

ஆ-ஆ-ஆ-மகனே அரவங் கடித்ததோ உயிர்
அம்மா அம்மா.அம்மாவென் றலறிதுடித்ததோ

ஓ-ஓ-ஓ-சிறுவர்வந்துரைத்தது பொய்யோ மக
னொருவனென்வரக்காண்கிலேனிதுவுண்மை ஐயையோ

பாம்புக்கிரையாகவேமுலைப் பாலுண்டு வளர்ந்தாய் காசி
பாய்பானுக்கடிமையாகியெம் பசியினால்தளர்ந்தாய்

விம்புக்குநம்மைவிலைப்படுத்தினவின்வர மித்திரனே-பொல்லா
விடவரவத்தைக்கொடுவந்துன்மேல்விட்டான்புத்திரனே

எத்தனைவிட்டுப்பிரிந்துப்போய்நீ யெங்கிறந்தாயோ-முன்னம்
எனக்குத்தெரியமுரைத்துப்போனதையேன்மறந்தாயோ

மைந்தனேவிஷமேறியுன்மணிமார்பி லடைத்ததோ காசி
மாநகர்க்குவந்திருந்தபடவிமன்னனுக்கிடைத்ததோ

புத்தின்மீதிலேறித்தெருப்பைபுல்லைக் கொய்தாயோ உன்னைப்
புயங்கங்கடிக்கமயங்கியென்னைப் போகவைத்தாயோ

பதினாறாதமுஞ்சுமந்தவயிறு பத்தி வேகாதோ உன்னைப்
பார்த்துப்பதங்கிக்கிதிக்கடித்தப்பாம்புசாகாதோ

* புயங்கம்- பாம்பு.

எந்தைக்குமுன்றந்தைக்குமன தெண்ணி துடிக்குமே-பார்வை
யேவினயிரம்மாவுக்கென்வயிற் றெரிச்சலிடிக்குமே

சந்தைக்குவந்தவர்களெல்லாந் தனையர்க்குத்துணையோ-காட்டில்
தள்ளிவிட்டுவந்தபிள்ளைகள்மேலென்ன தப்பிதமோபிணையோ

வாழைக்குக்கீழ்கன்றுநீயென்று மனமகிழ்ந்திருந்தேன் - பெற்ற
வயிறெரியுதென்றுயிரைவைத்தினிவாழ்வினிபொருந்தேன்

ஏழையர்க்கிரங்காமலுலகி லிலகுந் தெய்வமே என்ற
னிறைபோனும்யானுமிங்கேயிருந்தென்செய்வமே

நாட்டினிற்புகழ்பெறுமயோத்தி நகரா யாளாமல் வழி
நடந்துவெம்பிசியடைந்தவந்திங்கெ ளுருமீளாமல்

வீட்டிலடிமைவேலைசெய்யென்று வேதிய னடிக்க உன்னை
விலைப்படுத்தினதந்தைதாயை விடுத்துடல்துடிக்க

காட்டினிற்போய்மாளப்புத்தினிற் கையைவைத்தாயோ -பாம்பு
கடிக்கவும்-எமன்பிடிக்கவுமணங்கலங்கி செத்தாயோ

பாட்டிலென்றனைப்போலெவர்க்குண்டுபாலன்சோகமே-உன்றன்
பரிதாபத்தைப்பாராமற்போச்சுதே பாழு நாகமே

சந்திரவதிசொல்-விருத்தம்-இ ம்-ஜுட்டி,

துக்கத்தையுரைக்கவுள்ளந் துணிந்தீரென்மகனிறந்த
பக்கத்தையுரையீர்நான்போய் பாலனைத்தேடிப்பேணப்பா
ரொக்கத்தைக்கொடுத்துக்கொண்ட ரோஷத்தோஷையருக்குந்
திக்கற்றபிணத்தின்சேதி தெரியாதென்செய்வேனே.

வசனம்.

ஆ-மக்களா அசலாத்துப்பிள்ளைகளா என் செல்வமகனிறந்த இட மிவ்விடமென்று சொல்வீர்களானால் எங்களை யடிமைக்கொண்ட ஐயருக்கு இந்தச்சேதியைச்சொல்லி சிலவுபெற்றுக்கொண்டு ஒருவழியாய் சள்ளையில்லாமல் பிள்ளையுடனே நானு மிறந்து போகலா மையமார்களே.



பிராமணப்பிள்ளைகள் சொல்-வெண்பா

இ-ம் - சங்கராபரணம்.

பாலனிருக்குமிடம் பாராயிவ்வழியிலுயர்
ஆலவிருக்ஷமங்கேயடையாளம் - சால
நெற்பைவளர்வாவிக்குத் தெற்கேயருந்ததியில்
கற்பையவளர்க்குத்தாய்நீ காண்.

வசனம்.

கேளுந்தாயே யிப்போது நாங்கள் வந்தவழியைப்பிடித்துக் கொண்டு கொஞ்சதூரம்போனு லைடத்தில் பிரமாண்டமான ஆலவிருக்ஷ மிருக்கிறது அதற்கடுத்த வடக்கே சமுத்திரம்போல ஒரு தடாகமிருக்கிறது அந்த தடாகக்கரையில் செழிப்பாய் நெல் ஏற்றங்கள்வளர்ந்திருக்கிறது அதற்கு தெற்கே சமீபத்திலுன் பிள்ளை பாம்பு கடித்திறந்து கிடக்கிறான்போய் பார்த்துவாரும் தாயே நாங்கள்போய் வருகிறோம்.

சேவைஷயர்-வசனம்.

அடாய்குப்பாய் நோக்குத் தெரிகிறதா அந்த அடையாளம் அர்த்தமாகுக்குத்தெரிய வேண்டாமா.

குப்பையர்-வசனம்.

நோக்குத் தெரிந்ததைத்தான் சொல்லிக் கொடுத்தேன்டா போதுபோறது,

சந்திரவதி - வசனம்.

ஆராகிலுந் தெரிந்தவர்கள்சற்றே விவரமாய்த்தெரியச்சொல் லுங்களப்பா.

அசலாத்துப்பிள்ளைகள்-விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

பாலன்மேலாசைகொள்ளும் பாவையேசொல்வோம்கேளாய்
பாலனைக்காக்கவென்று பகர்கொஞ்சித்தழைகூடாக்கி
பாலனைப்பதலஞ்செய்து பாதையில்நழைதான்போட்டு
பாலன்சொற்கொண்டுவந்தோம்பரிவித்போய்காணுவாயே,

வசனம்.

கேளம்மா சந்திரவதித்தாயே உன்பாலகனைபாம்புகடித்து யிறந்த விடத்தில் பிரமாண்டமான ஆலமர மொன்றிருக்குது- அந்த ஆலமரத்தி னருகில் புத்தின்மேடை யொன் றிருக்குது- அந்தபுத்தின்மேடைமீதில் தெற்பைசமுத்து முண்டாயிருக்குது அனைச்சுற்றி கொளுஞ்சித் தழைகளு முண்டாயிருக்குது அந்தகொளுஞ்சித்தழைகளை யொடித்து நாய்நரிதொலையாத கூடாகக்கட்டி அதற்குள்ளே உன்மகனை யெடுத்துவளர்த்தி பத்திரஞ்செய்து அந்த கொளுஞ்சித்தழை களைத்தானே கையிலெடுத்துக்கொண்டு நாங்கள் வருகிறவழியில்போட்டுக்கொண்டேவந்தோம் நீயும் அந்தத்தழைபோட்டவழியே பார்த்துக் கொண்டேபோய்அந்த ஆலமரத்தடியில் புத்தினருகில் அந்தகொளுஞ்சித்தழை கூடைக்கண்டு அதற்குள்ளே வளர்த்தியிருக்கிற உன்மகனையுங்கண்டெடுத்து தகனஞ்செய்து வருவாயம்மா நாங்கள்போய்வருகிறோம்.

சுப்பாசாஸ்திரி வசனம்.

அடாய்சேஷா அடாய்நாணு அடாய்குப்பாய் நேக்கும் போதுபோறது நடவுங்கள் ஆம் ஆம்.

சந்திரவதி - தரு - கண்ணி - இ-ம் - பைரவி - தாளம்.

நோன்புமற்றவஞ்செய்து வயிற்றிலிடங்கொடுத்து
மகிழ்ச்சியாய்ப்பெற்றேனடா மகனே மகனே மகனே

ஆறுதேயிந்தத்துயரம் ஆராலினிமேற்தீரும்
ஐயோநானென்னசெய்வேன் மகனே மகனே மகனே

தேற்றுவாரில்லையையோ ஆற்றுவாரில்லையினி
தெய்வஞ்சதிசெய்ததோ மகனே மகனே மகனே

தேற்றிக்கொண்டாலுமனந் தேறுமோபடுபாவி
தெய்வத்துக்கென்னசெய்தேன் மகனே மகனே மகனே

வயிறுதளரவுண்டால் வளரானேமகனென்று
வளர்த்தேனிதற்கோஅப்பா மகனே மகனே மகனே

பயனல்லோகாண்பாரிந்தப் பாரினிற்பிள்ளைபெற்றோர்நான்
பாம்புக்கிரைகொடுத்தேன் மகனே மகனே மகனே



நிறைபமெழுகியுண்டு தவஞ்செய்துபெற்றபாலன்
தரணியிலாருக்குண்டென்போல் மகனே மகனே மகனே

குறையென்னசெய்தேனையோ கொடும்பாவிபிரம்மதேவன்
கோவிலிடியொருதோ மகனே மகனே மகனே

வயிறுஅடிக்குதெந்தன் மணிக்குடல்பதறுதே
மதியுமயங்குதையோ மகனே மகனே மகனே

பயமில்லையென்றிருந்த பாவியென்னெண்ணமெல்லாம்
பாழாச்சேவிதியாலே மகனே மகனே மகனே

நீண்டவுலகையாள நீமணிமுடிசூட
நிலைக்குமென்றிருந்தேனே மகனே மகனே மகனே

மாண்டாயென்றுபேர்சொல்லிமறையோர்கள்வந்துரைக்கும்
வார்த்தைநான்கேட்டேனப்பா மகனே மகனே மகனே

கூலியழுகாலையர்கோபஞ்செய்வாரேஐயோ
குலைவதென்னெஞ்சமப்பா மகனே மகனே மகனே

பாவியவர்மனையாள் பழிபாவமெண்ணுவளோ
பதைத்துப்புழுங்கிறேனே மகனே மகனே மகனே

உன்றுயிர்போனசேதியுனைத்தவர்சொல்லுமுன்னே
உயிர்விட்டாலல்லோநான்றாய் மகனே மகனே மகனே

என்றுயிர்பெரிதல்லவிழுந்தாலும்லாபமென்ன
இதோநான்வருவேனடா மகனே மகனே மகனே

சந்திரவதி-விருத்தம்-இ-ம்-பைரவி.

இவ்விதிவருமென்றென்ன மெள்ளளவறிந்தாலுன்னை
ஒவ்விதானனுப்புவேனோ வுறுதியாய்வனத்துக்கப்பா
எவ்விஷமோவிஷமாட்பாம்பு கடித்ததுமாண்டாயென்னும்
சவ்வையாஞ்சேதிகேட்கக் காத்திருந்தேனோஐயோ

வசனம்

ஐயையோமகனே இந்த விதியுனக்குவருமென்று எள்ளளவு மறியேன் அறிந்தாலுன்னைக்காட்டுக் கனுப்புவேனா இந்தத்துன்பமான சேதிகேட்கவா ஒருவிலேதானேகாத்திருந்தேன் பாம்புகடித்தா யிறந்தாய்மகனே,

சந்திரவதி புலம்பல்-தரு.

இ-ம் - மோகனம் - அடதாளம்.

பல்லவி.

ஐயவென் வயிற்றிற்பிறந்தான் - இந்த
அடவியிற்போயிறந்தான்

அநுபல்லவி.

பொய்யல்லவிதி வசந்தான்
புத்திரர்சொல்வது நிசந்தான் (ஐயவென்)

சரணங்கள்.

பாம்புகடித்ததாமே படத்தாலடித்ததாமே
விம்புமுடித்ததாமே விடத்தால்மடித்ததாமே
ஐயவென்

செழும்பாம்புத்தின்மீதேறி தெற்பையைக்கொய்யவுஞ்சீறி
கழும்பாம்புத்தின்ன மீறி யெங்கணும்விஷங்க ளேறி
ஐயவென்

மண்ணில்வீழவுங் காகம் வந்ததுமே யனேகம்
கண்ணில்லன்புத்ரசோகம் எய்தச்செய்ததேநாகம்
ஐயவென்

பிராமணன் கவி.

விளைநலமெல்லாம் விறைகப்போச்சு
களைபறியாமல் கட்டிக்கொண்டெங்கே
வளையநீபுலவி வருகிறாய்சந்தி
தளையையுன்காலில் தரித்தடிப்பெனே.

வசனம்.

அடிசந்தி யென்னடி யுன்பிள்ளையைக் காட்டுக்கனுப்பினது
முதலித் தேசகலவகைக்கு முண்டகத்தை யுலவுபோட்டுள்ளும்
புறருமாயுலவி வளையவாறு யந்தகட்டிலையே களைபறிக்கப்போகா



தகல் இலுக்குப் புல்லறுத்துக் கொண்டு வரப்போகாதா, தொட்டி
க்குச் சலங்கொண்டுவந்து கொட்டப்போகாதா, நெல்லைக்குத்தப்
போகாதா, முத்தம் பெருக்கப்போகாதா, போதெல்லாம்போச்சு
தே திருவிளக்கேற்றப் போகாதா, என்னடி வொருமை வாசலில்
போறபுருஷாளை வாறபுருஷாளை பார்க்கவோடி யோடிப் போரு
புன்காலில் விலங்குமாட்ட வேணுமா அடிக்க வேணுமா தொடப்
பக்கட்டாய் நீ கெட்டாய்,

சந்திரவதி சொல் விருத்தம்-இ-ம்-ஆகிரி.

அடிக்கவும்வேண்டாமையா அடவியில்மகனைப்பாம்பு
கடிக்கவுமிறந்தானந்த காரணஞ்சொட்டுவந்தேன்
படிக்குள்வீழ்ந்தவனையோடி பார்த்தெடுத்தடக்கியிங்கோர்
நொடிக்குள்நான்வருவேன்சிந்தை நோகாமல்சிலவுதாரீர்

வசனம்.

சுவாமிதேவரீ ரென்னையடிக்கவேண்டா மென்பிள்ளை காட்டு
க்குப்போன விடத்தில் பாம்புகடித் திறந்துபோனானு மதுசங்கதி
கூடப்போன அசலாத்துப் பிள்ளைகள் வந்துசொன்னார்களாந்தவ
யித்தெரிச்சலை சகிக்கப்போ யிருந்தேனிப்பவு மடியாளுக்கொ
ரு நொடிப்போது சிலவுகொடுத்தால் திக்கற்றப்பிணத்தைப் போ
ய் தேடிப்பார்த்தெடுத் தொருவகைப்படுத்திப்போட்டு வருகிறே
னையரே அம்மணி,

பிராமணஸ்ரீ சொல் விருத்தம்.

இ-ம் ஆனந்தபைரவி

செனைப்பஞ்சியெனக்கூடெல்லாந் தின்னிங்கே கொழுத்தும்பிள் [ளை
தனைப்போகவிட்டுப்பின்னீ தயிரியமாவோடிப்போக
திணைப்புக்கொண்டேனோர்காலில் நின்றுநீயழறாய்நீலி
உனைப்போகவனுப்பவாத்தி யுவவேலைசெய்திடாயே,

வசனம்.

அடிசந்தி யென்னடி வொருமை ஆத்திலுள்ள கூழெல்லா
ந் தின்னுக்கொழுத்து செனைப்பஞ்சியைப்போல் தெருவில் வளை

யவருமெதுமின்றியி துன் பிள்ளையை முன்னேபோகவிட்டு பின்னேயோடிப்போகப்பார்க்கிறயோ உங்கள் தாத்தாவாத்து வேலையார் செய்வாளடி அனுப்பமாட்டோம் வேலையைச்செய்யடி செய் குட்டிச்சுவரே.

சந்திரவதி சொல் விருத்தம்-இ-ம்-ஆகிரி.

ஆலையில்கரும்பாய்நைந்திங்கலைந்திரண்டியாமமட்டும்
மாலையில்பணியுஞ்செய்வேன்மகனைக்கண்டெடுத்தடக்கி
வேலையில்பிசகில்லாமல் வெடியவோர்யாமமென்னுங்
காலையில்வந்தாரிய கட்டளைபணிசெய்வேனே,

வசனம்.

கேளுமையரோ அம்மணி தங்கள் திருமாளிகைவேலைக் கற்பந்தராயில்லாமல் போதுபோயிரண்டு சாமவரைக்குஞ் செய்கிறேனடுவே ஒரு சாமநேரஞ் சிலவுகொடுத்தா லக்ஷணமே போய் என்மகனைத் தேடிப்பார்த்தெடுத்தடக்கிப்போட்டுவெடியசாமத்துக்குமுன்னேவந்து நித்திய கட்டளைப்படிக்கு திருப்பணிவேலையெல்லாஞ் செய்கிறேன் சித்தமிரங்கி சிலவுதரவேணுந்தாயே.

பிராமண ஸ்ரீ-கவி-இ-ம்-கேதாரகௌளம்.

புத்திக்கெட்டாத்துப் புருஷன்தன்சொல்லை
சத்திக்கேனெக்கு தாக்ஷண்ய மில்லை
அத்திக்கூழ்நோக்கிக் களிப்பதாரி மல்லை
குந்திக்கொண்டிராமல் குத்தடி நெல்லை.

வசனம்.

அடிசந்தி சந்தி நோக்கென்னடி அறிவுகெட்டுப் போச்சுதா நீ ஒருத்திக்கடி யெத்தேசகாலமு மெங்காளத்து புருஷனோடேவராத்தையாடிக் கொண்டிருக்கிறாய் ராத்திரிக்கு வொருமல்லைக் கூடம் நோக்கெவாளடி கொடுப்பா ளிந்தநெல்லை குத்தடி-குத்தா குட்டிச்சுவரே யென்னடி வொறுமையிருக்கிற படிக்கவேணுமோ.

சந்திரவதி-நெல்லுகுத்துகிற-த-ரு.

இ-ம்-புந்நாகவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

மகனுஞ்சதிசெய்து மடிந்தானே-தேடியெடுத்து
தகனஞ்செய்வாரில்லாமல் தரையினிற்படிந்தானே



அனுபல்லவி.

சுகனுஞ்செய்தானவன்மேலே
கொடுமை யடிமையாலே (மகனுஞ்)

சரணங்கள்.

பெற்றபிள்ளைமுகத்தில் விழிக்க - ஒட்டாமல்நெல்லைக்
குத்தபுடைக்கநோம்பக் கொழிக்க - தலையிலெழுதி
வைத்தபடிநம்பிள்ளை யழிக்க - இப்போதெழுந்தை
சுத்தப்படுத்திறன்றாய் சுழிக்க - கூடுமோகாட்டில்
செத்தபிள்ளையோடுபிணமொழிக்க-என்னுடையன்முன்
சித்தப்படுத்தியத்தைக் கிழிக்க ஒன்றுமென்றனை
வித்தப்பிராமணனென் பழிக்க-ஒப்பாதவர்க்கு
மெத்தப்பிரயாசையினிமேலிந்தக்கடனைக்கழிக்க (மகனுஞ்)

நித்தம்பனிநீரினிற் குளிக்க குளித்துநல்ல
புத்தமுதஞ்சோறு மளிக்க-அம்மாவென்னைமைந்தா
முத்தத்தருவாளன்மனங்களிக்க-உலகெங்கனும்
உத்தமமென்னைபரி மளிக்க-இருந்தாலிப்போது
பித்தம்பிடித்தாற்போல்கூடுமிளிக்க-உன்னைவுநெல்லைக்
குத்தமலர்க்கையுங்கொப் பளிக்க-கொப்பளித்ததில்
ரத்தம்பெருகவெயர்வை துளிக்க-பாப்புக்கிளை
தத்தம்பண்ணிப்போட்டுடல்தனித்திங்குதத்தளிக்க (மகனுஞ்)

மாலையில்யாமமே ரிரண்டு-மட்டுங்கட்டளை
வேலையெல்லாஞ்செய்துக்கூழுண்டு-பொழுதுவிடிய
காலையில்களைபறிக்குந் தொண்டு செய்யடாவென்று
கோலைகயிலெடுத்துக் கொண்டு-கொல்லுநமனைப்
போலையர்கேமயும் வெகுண்டு-அடிக்கப்பயந்து
சிலையில்காவிக்கந்தைத் துண்டு-ஒன்றல்லாலதின்
மேலையிலையென்பதுங் கண்டு-பாம்பின்வாயென்னும்
ஆலையில்கரும்புபோலாரண்யம்போலெனைவிண்டு (மகனுஞ்)

பிராமணன்சொல் கவி.

இ-ம்-ஆனந்தபைரவி.

அடியிலிசந்திப்படவியி லோடி.
செடியினிற்புகுந்துன் சேயனைத்தேடி
படியினிற்பிணத்தையள்ளத்தில் மூடி
விடியுமுன்செய்வேலைக்கு வாடி.

வசனம்,

அடிசந்தி ஆத்து வேலையைச்செய்யடியென்றால் நோக்கோ டிக்கடி திக்கந் தெறுத்துத் திறந்துக்கொண்டுவாறது நல்லதிருக் கட்டுஞ் சுருக்கா போடியுன் பிள்ளையைத்தேடி யெடுத்து பூமியில் புதைத்துப் போட்டு விடிய சாமத்துக்கு முன்னே யோட்டமா யோடிவாடிசந்தி.

பொது-கவி-இ-ம்-தோடி.

போய்வாவெனச்சொல்
வாய்வார்த்தையின்முன்
சேய்போனவழி
தாய்போயழுவாள்

கட்டியக்காரன் சொல்வசனம்

இவ்விதமாகச் சந்திரவதியம்மனைப் போய்வாவென்று சொன்ன பிராமணன் வாய்வார்த்தைக்குமுன்னமே கண்டுபின்னோ போன வழியைப்பார்த்து ஓடிதேடி யழுகின்ற விதங்காண்க.

சந்திரவதிதரு-இ-ம்-அசாவேரி: திரிபுடைதாளம்.

பல்லவி.

ஐயையோபாதகா தெய்வமே-என்னையித்த
அவதிப்படச்செய்தாயோ தெய்வமே

அநுபல்லவி.

வையம்புகழுமன்னர் மன்னனரிச்சந்திரன்பெற்ற
மகனைப்பாம்புகடிக்கவயிற்றெரிச்சலுண்டுடிக்க (ஐயையோ)

சரணங்கள்.

கொடுமைசெய்தவர்களில் நான்றானேமுதற் பாதகம்
குருதேவுன்ற னுக்குகண்ணில்லையோவென்ன பேதம்
தொடுவழக்கிட்டவிஸ்வாமித்திரர்செய் விகாதம்
தொலைந்ததென்றிருந்தேனிதென்ன விநோதம் (ஐயையோ)

கொள்ளிவாய்ப்பேய்கள்வந்து குறுக்கேமறித்தென் றுவி
குலைநடுங்கக்கூவுதுகோட்டானுமெதிர் தாவி
அள்ளிமணலைத்தூவி யதட்டுதோரிபேயை யேவி
அடிதெரியாதவழி யதிலேவேனோநான் பாவி (ஐயையோ)



எங்கெங்குங்கறுகறுத்திருக்குதேயிந்தக் காடு
இதுவோஆலமர மிதுவோபுற்றின் மேடு
தங்குமாலமரத்தைதடத்தைக்காணுமற் றேடு
தயிலேயல்றவிப்பதிது தானென்னகாலக் கேடு (ஐயையோ)

சந்திரவதி-விருத்தம் -இ-ம்-ஆகிரி.

வழியினுக்கருகேயால மரமென்றும்வடக்கேயென்றுஞ்
செழியிருட்புதற்புற்றென்று தெற்கினிலிருக்குமென்றுங்
வழியதுபிசகோவென்ன மாயமோநான்முன்செய்த
பழியிதுதானோவென்றன் பாலனைக்காண்கிலேனே.

வசனம்.

ஐயையோதெய்வமே இதென்னபாவம் அந்தப்பிராமணப்பிள் ளைகள் சொன்னதிந்த வழியிலேயொரு ஆலமர மிருக்குதென்று மதற்குவடக்கே தெற்பைவளர்ந்த தடாகக்கரையில் புற்றிருக்கு தென்று மதற்குத்தெற்கேயுன்மகனைக் காண்பாயென்றுஞ் சொன் னார்களே அந்தவழிதப்பிப் போச்சுதோ அவைகளொன்றுங் கா ணாமல் நின்று தவிக்கின்றேனே யீஸ்வரா.

சந்திரவதி-புலம்பல் தரு-இ-ம்-நவரோஸ்,

தாளம்- திரிபுடை.

என்னைப்போல்பெண்ஜென்ம மெடுத்தவர்களுண்டோ ஐயோ தெய்வமே
இதென்னகாரணந் ஐயோ
இன்னமுமென்னென்னபாடுபடிக்குமோ ஐயோ
வழியுங்காணாமலென்மனமுந்தயங்குதே ஐயோ
பழிபாவஞ்செய்திருந்தப் பாரிற்பிறந்தேனோ ஐயோ
காலுமயர்ந்ததென் கைகளுஞ்சோருதே ஐயோ
கால்வைக்குமிடமெல்லாம் கனமுள்ளாயிருக்குதே ஐயோ
தடவிவழிநடக்கத் தடமொன்றுங்காணேனே ஐயோ
அடருமிருட்டிற்பொல்லா அடவிக்குளானேனே ஐயோ
பாழும்நரிகளென்னைப் பற்றிப்பிடுங்காதோ ஐயோ
குழும்புலிகளென்னைத்தடிக்காய்கொன்றுபோடாதோ ஐயோ
காலாகுளாமுள்ளின் காடாயிருக்குதே

தூரப்பார்த்தால்நல்ல வழிபோலுங்காணுதே — ஐயோ
கிட்டிநடந்தால்வழி தட்டிப்போவதென்ன — ஐயோ
கட்டிப்பிடிப்பதுபோற் பேய்கள்பயங்காட்டுதே — ஐயோ
ஆசைக்கரும்பாமென்னப்பனைக்காணேனே — ஐயோ
பாசமாவளர்த்தசெல்வபாலனைக்காணேனே — ஐயோ
ஐயையோ ஐயோதெய்வமே — ஐயோ

பொதுவிருத்தம்-இ-ம்-தோடி.

* அந்தணன்சொல்வேலையெலாஞ் செய்துப்பின்னு
மவன்மனைவியிடும்வேலை யாவையுஞ்செய்து
சுந்தரச்சந்திரவதியுஞ் சிந்தைநைந்து
துணைக்கணவன்பிரிந்தபெருஞ் சோகத்தோடு
மைந்தனைத்தக்கானகத்தி லிழந்தசேதி
மறையவராற்கேள்வியுற்று வனத்தின்மேவி
அந்தரத்திற்செலும்பறவை யதனைநோக்கி
அலம்புவாள் சந்த்ரவதி புலம்புவாளே.

கட்டியக்காரன் சொல்-வசனம்.

அகோ தெப்படியென்றால், சந்திரவதியம்மனானவள் பிராமணன் இடும் வேலைகளையும் அவன் மனைவி இடும்வேலைகளையுஞ் செய்து தன்பிராணநாயகராகிய அரிச்சந்திரமகாராஜன் பிரிந்த சோகத்தாலும், புத்திரனிறந்த வியசனத்தாலும் அவனைத்தேடிக்கொண்டுவரும்வழியில் கானகத்தில் பறக்கின்ற பக்ஷிகளைப்பார்த்துச் சந்திரவதியம்மனானவள் புலம்புகிறவிதங்காண்க.

சந்திரவதி பக்ஷிகளைப் பார்த்துச் சொல்-தரு.

இ-ம்-முகாரி- அடதாளம்.

பாடுங்கிளிப்பிள்ளைகாள் - என்செல்வப்
பாலனைக்காணீரோ

ஆடுமயிலினங்காள் - என்பிள்ளை
யானவனைக்காணீரோ

கூவுங்குயிலினமே - யான்பெற்றக்
குழந்தையைக்கண்டீரோ



மேவும்புறாவினமே - சுதன்சென்ற
விடந்தனைக்கண்டீரோ

காடைகௌதாரிகளே - என்மகக்
காளையைப்பார்த்தீரோ

ஓடும்வானம்பாடியே - என்தன்சுத
னுறும்விடம்பார்த்தீரோ

மஞ்சட்குருவிகளே - எந்தன்செல்வ
மைந்தனைக்கண்டீரோ

கொஞ்சுங்கொண்டலாத்தி - நான்கொஞ்சுங்
குழந்தையைக்கண்டீரோ

பேசுமைநாப்புள்ளே - நான்பெற்ற
பிள்ளையைக்கண்டீரோ

மாசில்வலியன்களே - எந்தன்குல
மகனையுங்கண்டீரோ

அசையுமன்னங்களே - அயோத்திவேந்
தனித்தசேய்காணீரோ

இசைமிகுஞ்சிட்டுகளா - எந்தனிட
இளவலைக்காணீரோ

கீதங்கள்பாடளியே - புத்ரபாக்
கியனைநீர்காண்கிலையோ

சாதகத்தும்பிகளே - புத்ரதேவ
தாசனைக்காண்கிலையோ

கோட்டானுட்டுந்தையே - எந்தனிட்
குமாரனைக்காணீரோ

காட்டிற்போன்டங்களே - அரிதாமென்
காளையைக்காணீரோ

இதுவும் சந்திரவதி சொல் தரு.

இ-ம்-காம்போதி- ஆதிதாளம்.

பெருத்தாடவைகளாகவிருக்கின்ற நீர்களேதான்
பெற்றமகனைக்கண்டீர் காணீர்களா

வருத்தமுயிர்களோ கொடும்பாவிபுலிகளா
மகனைக்காட்டில் நீங்கள் காணீர்களா

அருமையாய்நான்பெற்றமகனிறந்தானேயிந்த
அடவிநரிகாள் நீங்கள் காணீர்களா

ஒருமையாய்பிள்ளைக்குட்டியுடன்வாழு மான்களே
யுரிமைமகனைக்கண்டீர் காணீர்களா

நாடுங்காட்டானைகளே யடவிதனிலிறந்த
தமதுதேவதாசனைக் காணீர்களா

குயிற்காடிலேயுங்களைக்கும்பிடுகிறேன்
குகோவென்மகனைக்கண்டீர் காணீர்களா

தீர்வுங்கடம்பைகாட் பெருமைகாளென்றனிட
துணையனிறந்திடத்தைக் காணீர்களா

பாவிநான்சுமந்துபெற்ற பாலனுடலதனைப்
படரும்வனத்திற்கண்டீர் காணீர்களா.

சந்திரவதி சொல் விருத்தம்.

இ-ம்-கெண்டா.

வைத்தனே தேவதாசா மகனேயிந்நேரமட்டாய்
சுத்தமடிமைகொண்ட தவமறையோன்றன்வீட்டில்
அந்தமாம்வேலையாக்கி அர்த்தராத்திரியுமாச்சு
சுத்தடவியில்நானுன்னை யெங்கென்றுகாண்பேன்மைந்தா

வசனம்.

ஐயையோ மகனே தேவதாசா, வேதியர்வீட்டில் வேலைசெ
ய்துவிட இந்நேரமாச்சுதா, அவர் செலவுகொடுக்கவும் இந்நேரம
ச்சுது இனி யிந்த அர்த்தராத்திரிகாலத்தில் நானெந்தவனத்தில்
வந்து உந்தனைக்கண்டெடுப்பேனைய்யா தேவதாசா.



சந்திரவதிபுலம்பல்-தரு-இ-ம்-கெவுளிபந்து.

எந்தவனத்திலுந்தனைக்காண்பனடா தேவதாசா பாம்பு
யெங்கேயுனக்கென்று தங்கியிருந்ததோ தேவதாசா

அந்தணர்தன்னிடவிந்தையோவறியேன் தேவதாசா எந்த
அடவிதன்னிலேமடியலாகிறாய் தேவதாசா

ஜெகம்புகழுமென்மகனேமகனே தேவதாசா உன்னைத்
தேடவென்றாலே கூடுமோஅட தேவதாசா

இகபரத்திரு மகனென்றிருந்தேன் தேவதாசா உன்னை
யெப்படிகாண்பனடாஅப்பனேமகனே தேவதாசா

ஐயையோவேலைசெய்யநேரமாச்சே தேவதாசா மகனே
அர்த்தராத்திரியில் சுத்தயென்றுலாமோதேவதாசா

செய்வத்துக்குமென்மேலையிருந்ததோ தேவதாசா நான்
திக்கில்லாப்பாவிபோற்சொக்கிவிழுந்தேன்டாதேவதாசா

பாம்புகடித்திடதேம்பியழுதாயோ தேவதாசா அங்கே
பதபதைத்துநீ வுதைத்துக்கொண்டாயோதேவதாசா

விம்புடையழுணிநேம்பலாய்க்கொன்றோ தேவதாசா உன்
வீரக்குலைந்துநீ கூடியழுதாயோ தேவதாசா

பெற்றவயிறிதோபற்றியெரியுதே தேவதாசா அந்த
பிரமதேவனுமற்பமவைத்தானோடா தேவதாசா

இத்தினங்காட்டினிலுற்றதுணைகாணேன் தேவதாசா என்
னிங்கிதமகனே யெங்கென்றுகாண்பனடா தேவதாசா

இவ்விடவிஷங்கொண்டுமடிந்தாயோ தேவதாசா நான்
எங்கைக்கல்போலான தொல்லையறியாயோ தேவதாசா

அன்னைமடியில்வந்தெனைக்கண்டுபோகாயோடாதேவதாசா நான்
அலைந்திறதொருநிலையறியாயோதேவதாசா (எந்தவனத்தி)

சந்திரவதிசொல் விருத்தம்-இ-ம்-கெண்டா,

எங்களுக்கென்றேகால மிசைந்ததோவிதிசத்தால்
இங்கொருமாமுன்னடைன்று ஒதியொருபுத்திரன்னெடன்றுர்
உடு

அங்கவர்சொல்லிப்போன அடையாளமொன்றுங்காணேனே
சங்கடந்தீர்க்கொணாதோ தயாபராவிஸ்வநாதா.

வசனம்.

அரகரா காசிவிஸ்வேசா நானிவ்வனத்தில் இந்த அர்த்தராத்திரிகாலத்தில் இவ்வளவுதூரம் தேடிவந்தும் என்மகனைக் காணேனே அசலாத்துப் பிள்ளைகள் வந்துசொன்ன அடையாளமுங் காணேனே யெங்களுக்கென்ற காலம் இப்படியிருக்க வேணுமா வென்சங்கடந்தீர வென்மகனை யெனக்கண்ணிற்காட்டப்போகாதா வீஸ்வரா காசிவிஸ்வநாதா சிவசாம்பவமூர்த்தி,

சந்திரவதி-புலம்பல்-ஞ-ரு-இ-ம் நீலாம்புரி-ஆதிதாளம்.

சிவசாம்பவ - சிவசாம்பவ - சிவசாம்பவ - சிவமே - சுவாமி
சிவசாம்பவ - சிவசாம்பவ - சிவசாம்பவ - சிவமே.

அவனிதனிலடியாள்செய்த தவமோ பிழை பவமோ-என்
அருமைமகன்பாம்பால்மாண்டதையையோவறிகிலேனே
நடமோகொஞ்சித்தழைக்குள்மாண்ட தப்பனேதேவதாசா எந்த
யிடமோநீயிருக்கும்வழி யேதுந்தெரிகிலேனே
போடுந்தழைபார்ப்பேன்வழி போகுதென்றுநான்வந்தேன் மிக
வாடும்பயிர்போலேயின்றுமயங்கித்தளர்வேனே
அழுவேன்விழுவேனோ னகத்தில்துடிதுடிக்க ஒரு
பழுதாய்விதியமைத்தாயென்று விழுவேன்தனைதனிலே
கண்ணேயுனைவளர்த்தேயிந்த காட்டில்பலிகொடுத்தேன் நான்
நின்னையென்னையுமேவிட்டு நீயெங்கேயொளித்தாய்
ஐயோவுந்தன்தந்தையிதையறிந்தாலுயிர்மடிவார் ஒளி
வையப்புகழயோத்தியாள வந்தபெற்றன்மகனே
மெய்யனேவிஸ்வநாதனேயுன்றன்வினைதவிதிவசமோ பொய்யி
லையரவத்தாலேபாலன் பாரில்விழலாச்சே



சந்திரவதிசொல் விருத்தம்-இ-ம்-தோடி.

கிள்ளையைவளர்த்துப்பூனைக்கிட்டவேகொடுத்தாற்போலே
பிள்ளையைப்பெற்றுப்பாம்புப்பிடுங்கத்தந்திருண்டகாட்டில்
கள்ளியைப்போற்புகுந்தேன் கழுகுகுழ்ந்திருப்பதென்ன
கொள்ளையையோவெங்காலில் குழந்தைதட்டியும்விழுந்தேனே

வசனம்.

ஐயையோ கிளியைவளர்த்துப் பூனைக்கிட்டக் கொடுத்தது போலே பிள்ளையைப்பெற்று பாம்புக் கிரைகொடுத்ததுமன்றியில் இருண்ட காட்டில் நான்குருத்தியுந் திருடியைப்போலே நுழைந்து தேடிப்பார்க்கும்படித்து வனத்தக்கள்ளிகள் சூழ்ந்திருக்குதே இதென்ன கொள்ளை யிதோ குழந்தையு மென்கால்தட்ட இடறிவிழுந்தேனே யீஸ்வரா.

சந்திரவதி பிள்ளையைக்கண்டு-புலம்பல்-ஞ-ரு.
இ-ம்-புந்நாகவராளி-ஏகதாளம்.

பாம்பினுக்கிரைகொடுத்தானென் னுயிரைப் பறித்தானே பழி
பாவிநீமடிவதுஞ்சரியன்றோ மகனே
தேம்பிநீயழுதேங்கிக்காட்டில்திகைத்தாயோ பாட்டன்
திருச்சங்குமகனிருக்குமிடத்தைத்தேடிச்சென்றாயோ
படமெடுத்தகொடியபாம்புன்னைப்பல்லாலகடித்ததோ விஷம்
படுக்கென்றுமாரிலடக்கப்பிராணன்பதறித்துடித்ததோ
திடமனதிலென்விஸ்வாமித்திரனந்நரித்ததோ வெஞ்சந்
திக்கில்லாபாவிகளென்றுநடைப்பார்த்துதெய்வஞ்சிரித்ததோ
பஞ்சணையின்மலர்ப்பாயிநலதிற் படுக்கமாட்டாயே இங்கே
பருத்தகல்லுகளுருத்தவுடலைப் பாரிற்போட்டாயே
மஞ்சனமாட்டிப்பொன்னூஞ்சலில்வளர்த்தவாராவாரோக்கிய மங்க
மண்ணுறக்காட்டினில்கண்ணுறங்குவதுமகனேயென் பாக்யம்
ஆலத்திப்பெண்களோராயிரம்பேர்கள்தாராட்டவுந்தூங்கா-உன்ற
வாண்டையில்நாம்நிற்கவென்றமைந்திருக்கையமர்ந்ததோபாங்கா
கோலத்திருமணிகொத்துவிளக்குகுலோப்புகழ்பிரகாச இங்கே
கொள்ளிவாய்ப்பேய்சூழப்பள்ளிக்கொண்டாயடா குழந்தை தேவதாச

காவியக்-கவி-இ-ம்-நவரோசு,

பனியாலனைந்து வெயிலாலுலர்ந்து பசியாலலைந்து முலவா
அனியாயவெங்க ணரவாலிறந்த வடிபாவமென் கொலறியேன்
தனியேகிடந்துவிடநோய்செறிந்துதனாமீதுருண்டமகனை
யினியாரைநம்பியுயிர்வாழ்வமென்றனிறையோனுமயானுமவமே

நிறையோசைபெற்றபறையோசையன்றுநிலையாய்நிறைந்தகழு
சிறையோசையுற்றசெழுநூடிறக்கவிறியாரிலைழந்தசெயமேலா [யின்
மறையோனிரக்கவளநாடளித்தும் வழுவாதளித்தவடிவேல்
இறையோனளித்தமகனேயுனக்கு மிதுவோவிதித்தவிதியே.

சந்திரமதி-புலம்பல்-த-ரு.

இ ம் - நவரோசு - ரூபகதாளம்.

விதியேவிஸ்வாமித்ரமாமுனிசதியேசுது ......... முகனே
மதியேன்மயக்கியிங்குன்றனைமாய்த்தானென்றன் மகனே

மகனேயுனக்கிணையாரசதமகனேரிவர்ரா புதனே
குகனேயலால்வேறேயொருத்துங்கூட்டமெனன்றன் சுதனே

சுதனேயின்னமினையாரிசொல்லச்சுதனே பவித்ர
மதனேயவ்வியிலிவேறொன்றைமதியனென்றன் மைந்த

மைந்தாவென்னமௌனமென்கவிமலிவாய்பேச்சு மிழந்தா
யிந்தாமொழியுன்னுகவிழித்தெனைப்பாரடா கொழுந்தா

கொழுந்தாய்நிந்தைக்கொள்ளுப்போதுன்னைக் கூப்பிட்டதெவ்ற
[ன்மேல்தப்பா
பழந்தாய்கொண்டுவந்தேனுன்பெரும்பாவியென்று கப்பாமோ

அப்பாவென்றுன்னை அழைக்கு முன்னம் நீ அம்மா வென்பதும்
[பொய்யா
யெப்பாவமுனைக்கூப்பிட்டாலும்பேசா திருப்பதென்னடாஐயா

ஐயாவென்னைப்பிரிந்தோடிவந்தசனுவுமித்ர காலா
கையார்தெற்வைகொய்ததுபாய்பாகடித்ததடா பாலா

பாலாவுனைப்படைத்தோன்பசுபதியாபாவ நாச
மாலாமலர்மகளுவென்றன்மகனே தேவதாச



சந்திரமதி-விருத்தம்-இ-ம்-நவரோசு,

கடலைக்கண்டிழவுங்கப்பல் கரைகண்டதிலையென்றப்போ
அடலைக்கண்டழுதேனல்லா துமிரைக்காணேனேயுமறவா
குடலைகண்டழுதுக்குத்தக் கூவிகாத்திருக்குதப்பா
சுடலைக்கண்டனைக்கிங்கியாருஞ்சொல்லுவாரிலையென்செய்வேன்

வசனம்.

அப்பாமகனே சமுத்திரத்தின் மத்தியிலே போடியபுவன்றதி
யுங் கப்பலானதொருபோதுங் கரைகாண்ப திலையென்ற சொல்
வதுபோ லுன்றுடலைக் கண்டழுகின்றேனையல்லது உயிரைக்கா
ணப்போறேரு மேடிவுமுன்குடலை குத்திப்பிடுங்கித்தின்ன கூவிக
ளுங் காத்துக்கொண்டிருக்குதே யுன்னையெடுத்து தகனஞ்செய்
வோமென்றால் சுடுகாடெங்கேயோகாணேனே இவடத்திலிருக்கு
தென்று சொல்வாரு மில்லையே யீஸ்வரா.

சந்திரமதி மகனையெடுத்துக்கொண்டுமசானத்துக்குப்

போகிற-தரு-இ-ம்-புந்நாகவராளி- ஆதிதாளம்.

பல்லவி.

சுடுகாடு வெந்திக மகனேயெனக்குச்
சொல்லுவாரில்லையேயிங்கே

அநுபல்லவி.

இடுகாடகவெங்கு மிருக்குதப்பு மகனம்
எடுக்கவோயாமலுன்னைக்கொடுக்கச்சொல் அறுபினுஞ் (சுடுகா)

சரணங்கள்,

இடியுமின்னலு மழையும் பெருங்காற்றுடனே
யிருட்டுமொன்றேடொன்றிலடியுஞ்
செடியும்புதரும் நரையும் வழிகளெங்கும்
தெரியாமலுடைந்த தலையும்
கொடியுங்காலெனிற்குத்தி கொள்ளுதென்ன விகாதம்
விடியுமுன்போகாவிட்டால்வேதியனடிப்பானேம்மாதரு (சுடு)

கூளிகள்வந் — தடிக்குது — மகனேயுன்றனைக்
குதித்திதின்ன — பிடிக்குது
யாளிகளுந் — அடிக்குது — மரங்களைமது
யானைகள்முறித் தொடிக்குது
தோளிலுன்னையெடுக்க லைந்தேனென்றன்பாவங்கள்
சூளில்லாமலிலையலர்சுவைதையையோ — சவங்கள் (குமோ)

நாயுநரியுங் — கூவுது — குலையுங்குலுங்கியும்
நடுங்கப்புலியுஞ்சீவுது
பேயும்பூதமுந் — தாவுது — மகனேயுன்றனைப்
பிடுங்கித்தின்னவுலாவுது
வாயும்பல்லுந்திறந்து வருகுதென்னகோஷ்டந்
தாயும்பிள்ளையைச்சுட தரும்மாவேனுமேகாஷ்டஞ் (குமோ)

## சந்திரவதிசொல்விருத்தம்-இ-ம்-முகாரி.

எரியமுஞ்வெளிச்சமேதிங் கிதுகோடோவென்ன
நரியுமபேய்களாட நாய்களுங்குலைக்கச்செந்தீ
பொரிவெழவுடல்வெடிக்க புகைநாற்றங்கப்புகொன்றந்
தெரியவுமிலையுனக்குத் தெய்வந்தான்காவலப்பா.

### வசனம்.

அப்பாமகனே தேவராசா இந்தயிருண்டகாட்டிலே ஏதோ யெரிச்சென்று வெளிச்சமுந் தோன்றுது, நரிகளும் நாய்களுங் கூட்டமிட்டு பேய் பைசாச பூதகணங்களும் கூத்தாடுது பிணங்கள் வேகும்போது மண்டையினின்று உடல் வெடித்து நெருப்புபொரிகளும் பறக்குது புகைநாற்றங்களுங் கப்புது ஒன்றுந் தெரியவில்லை இதுவேசுடலை யிங்கேயிருடாமகனே உனக்குத் தெய்வங்கள் தான் காவலினி கட்டை மூட்டை சேர்க்கவேணுமே இதற்கென்ன செய்வேன் ஈஸ்வரா,



## சந்திரவதி-தரு-இ-ம் நிலாம்புரி-சம்பை.

சந்தனக்கட்டைகளடுக்கிதகனமெனைச் செய்யுமுனக்கு
வெந்தனைக்கட்டைகளெடுக்கவேணுமடா — மகனே

பென்றனைக்கட்டையில்வைக்கவு மெரிநெருப் பிடவுமிருந்த
வுன்றனைக்கட்டையில்லைக்கவு மொண்ணுமோ மகனே

குங்குமக்கட்டையிலெனக்கு கொள்ளிவைக்குமுனக்கிங்கு
துங்குமிக்கட்டைகளெடுக்கதகுமோ வென் — மகனே

எங்குமகிற்புகைவாசமெய்தவெனைச்சுடுமுனக்கு
பொங்குமிச்சுடலைப்புகைகள் பொருந்துமோ — மகனே

வீட்டுமுட்டையடுக்கியென்னைவேகச்செய்யுமுனக்குச்சுடு
காட்டுமுட்டைநான்பொறுக்க கடனோவென் — மகனே

கோஷ்டமுடனெனையெடுத்துக் கொண்டுவருமுன்னை யிந்த
காஷ்டமதில்வளர்த்துகிறேன் கண்வளரு — மகனே

பொன்னுலேவாய்க்கரிசிபோட்டுப் பொரியிறைக்குமுனக்
கென்னுலேமணலையள்ளி யிடுவேனென் — மகனே

உன்னுலேசரிகைவஸ்திரமுடுத்தலாமென்றிருந்த — மகனே
வென்னுலேமுழத்துண்டு மில்லையடா

வெள்ளியால்கிவட்டிபிடிக்க வேடிக்கையாயெடுக்குமுன்னை — மகனே
கொள்ளிவாய்ப்பேய்சூழ கொண்டுவந்தேன்

பள்ளிவைத்துபடிக்குமுன்னை பாம்புக்கிரைகொடுத்துவிட்டு
கொள்ளிவைத்துதலைமாட்டிற்குடமுமுடைத் — தேனே

எண்ணீர்விட்டிறைத்துக் கடனெனக்குகழியாவுனக்கு — தேனே
கண்ணீர்விட்டழுதிங்கு கடனுங்கழித்

தண்ணீருங்காணேனே தலையைமுழுகுவோமென்றால் — மகனே.
உண்ணீரும்வறண்டுதா வுலறுதடா

அரிச்சந்திர தோட்டிவிருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

ஆரடியிந்நேரத்தி லடவியிற்சுடலை தேடி
ஆரடியென்சொல்லைத்தி யகிமோர்பிணத்தைமூடி
ஆரடிமகனையென்று அழுகிங்கேவைத்தாய்கொள்ளி
ஆரடிசுடவொட்டேனி யப்புறம்போடிக் கள்ளி

வசனம்,

அடிசேயாரடி யிந்த நடுநேரத்தி லென்னுத்திரவில்லாமலி ங்கே வந்தது, நீயார் என் காவலுக்குள்ளாயிருக்கின்ற காசி டுகளை யெடுத்தடுக்கி நெருப்பையு மூட்டினபடியினாலே அந்த கட்டைமுட்டைகளையும் பிணத்தையு மிதோ வுதைத்துத்தள்ளிவி ட்டேனினி சுடக்கூடாது அப்புறம்போடி மயானக்கள்ளி.

சந்திரமதி-சொல் - விருத்தம்.இ-ம்-ஆனந்தபைரவி.

கள்ளியுமல்லப்பாம்புக் கடித்திறந்தவென்பிள்ளை
அள்ளிவாய்க்கரிசிபோட ஆருமில்லாதபாவி
கொள்ளியுங்கட்டைமுட்டைக் கூட்டிவைத்தேனதைத்தத்
தள்ளிவிட்டாலென்செய்வேன் தயைபுரிந்தருள்செய்வீரே

வசனம்.

கேளுமையா கடுகாடு காக்குந்தோட்டியாரே, நான் கள்ளிய ல்லவென் பிள்ளை காலவிருப்பிலே செத்துப்போனதைக் கொருபோதுந் தெரிய மாட்டாது மேலு மெனக்கு மனிஷியாயிருந்தால் காட்டிலேபா ம்பு கடித்திறந்தபிள்ளையை அர்த்தராத்திரியி லொருத்தியுந் தோள் மேலெடுத்து சுமந்துக்கொண்டு வருவேனா நான் அருமற்றபாவி யென்றறிவீர் இரங்கிலோ ஐயா.

அரிச்சந்திர தோட்டி-சொல்விருத்தம்,

இ-ம் ஆனந்தபைரவி.

திக்கிலையென்றுசொல்லுந் திண்டிவாய்க்கரிசிமாய்த்து
வைக்கல்லையென்றுமெய்ம்மை காவலுக்குநீர்மேவத்து



புத்தினவுன்றன்குற்றம் பொறுத்துக்கொண்டேன்கொடுக்க
தக்கதெல்லாந்தந்தால் தகனஞ்செய்திடச்சொல்வேனே

வசனம்.

ஆனாலொன்றுசொல்லுகிறேன் கேள் நீயிக்கில்லாதயேழை யென்றுசொல்லுகிற படியினாலே செய்தகுற்றம் பொறுத்தேன் இனியுன் பிள்ளையைத் தகனஞ்செய்ய வேண்டியதற்கு வாய்க்கரி சியு முழச்சீலையுங் காற்பணமுங்கொடுத்தால் சிலவுகொடுக்கிறேன் இல்லாவிட்டா லுன்பிள்ளையை யெடுத்துக்கொண்டப்புறம்நட.

சந்திரமதிசொல் விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

பணமிருந்தால்பல்லாக்கு பலமேளதாளத்தோடு
பிணமெடுத்திங்கனந்தம் பேர்கள்வாராரோநான்பாவி
மணக்றனக்கடிமையிந்த மயானசம்பளத்துக்கென்னால்
குணமொன்றுமில்லையென்றன்குழந்தைக்கோர்வகைசொல்வீரே

வசனம்.

கேளுமையா தோட்டியாரே காற்பணத்துக்கு முழச்சீலைக் கும் வாய்க்கரிசிக்கும் வகையிருந்தால் செத்தபிணத்தைவைத்தெ டுக்க பல்லாக்கும் பத்துப்பேர் மனிஷியாளும் பலவிதமேளதாள மும் அதற்குள்ள சம்பத்துடனே வந்து தகனஞ்செய்யமாட்டே னு நான்மெத்தவுமேழை என்கையி லொருகாசுக்கும் வழியில்லை, இனி யிந்த குழந்தையைக் கொளுத்த சித்த மிதங்கி சிலவுதரவே ணு முன்மை சேவிக்கிறேனையா,

அரிச்சந்திர தோட்டிசொல்விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி.

அடிமிசைவீழ்ந்ததாலென் னரிசியையுனக்களிப்பேன்
படிமிசைதோட்டிவீர பாகுவாம்பறையனுக்கென்
முடிமிசைக்கொள்ளிக்காசுமுழத்துண்டுஞ்செலுத்தவுன்றன்
கடிமங்கிலியங்கழுத்திற் காணுதேவிற்கொணுதே,

வசனம்.

ஆ-ஆ-ஆ ஸ்திரீசாதிகளிலுன்னைப்போல் தந்திர யிந்திர மகேந்திரசாலசாமார்த்தியங் கற்றவர்களோ நானிதுவரையில் கண்டதில்லையேதோ வுலகம் பலவிதமிப்பவும் வரையென் றெல்கசலிஸ்வீழ்ந்தழுகிறபடியிரு லெனக்குண்டாகியவாய்க்கரிசியை யுனக்குக்கொடுத்து விட்டேன் மேலுமெனக் கெசமானாகியவீரபாகுபெரியதோட்டியிருக்கிறா ரவருக்கடிமை நானவருக்குச்சேரவேண்டிய காற்பணமுமுழச்சீலையும் நீ கொடுத்துவிடவேண்டியதுதானதற்கும் வழியில்லையாயிதோவுன் கழுத்தி லிருக்கிற தாலிக்கயிற்றிலே கங்காளுமீடா விலையிடக்கூடுமா அதைவித்து காற்பணத்தைக்கொடுத்துவிட்டு மற்றபணத்தை யெங்கே வைக்கிறதென் றோசிக்கிறாயோ அதிலெனுக்கனைப்பிட்டு விற்றால்போதாதா போபோ மோசக்காரிபோ.

சந்திரவதி புலம்பல்-தரு.

இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

சூரியகுலத்தினில் துரையரிச்சந்திரன்கண்ட தாலி இந்த
சுடலைப்புலையன்விலையிடலாச்சுதிதுவென்ன கேலி

ஆரியமறையோரும்புகழுமாட்டாரிதின் சோலி இந்த
அடவிப்புலையன்விலையிடவிதியோவில்வ மாலி

ஆதிசிவனேநீ யனுக்கிரகஞ்செய்தளித்த தாலி தோட்டிக்
கடிமைப்புலையன்காண ஆரோசெய்தார்களதைகேலி

நீதிநெறிமன்னர்கள் நிசமாயறியாரிதின் சோலி இந்த
நீச்சன்கண்ணினிற்காணவாச்சுதென்னமோதிரி சூலி

மன்னுமரிச்சந்த்ரமகாராசன்கண்கண்ட தாலி செத்த
மாடுதின்னும்புலையன்மதித்தான்விலையிதென்ன கேலி

பொன்னுலகினில்யாரும்புகலவறியாரிதின் சோலி இந்த
புலையன்கண்ணூர்கண்டுவிலையுஞ்சொன்னதென்ன கபாலி

மதிதயமகாராசன் மாதவத்தால்வந்த தாலி தெருவில்
வலியமாடுதின்னும்புலையனுஞ்செய்தானே கேலி

பதியினிலெவர்களும்பார்த்தறியாரிதின் சோலி இந்த
பறையன்கண்ணினிற்காணும் படிக்கிக்குவந்தேன்பெண்ணிலி



பொது-விருத்தம்-இ-ம்-தோடி,

சந்திரவதிதான்சொல்லித் தயங்கியேயழுததெல்லாஞ்
சுந்தரவரிச்சந்த்ரன்றான் றுலங்கவேமுழுதுங்கேட்டு
ன்மைந்தன்றானிறந்தானென்று மனைவியினழுகைகேட்டு
வந்திடும்விதியென்னென்று மண்ணில்வீழ்ந்தழுகின்றானே.

கட்டியக்காரன் வசனம்.

அகோதெப்படியென்றால், இந்தப்பிரகாரமாக சந்திரவதியம்மாளவள் அழுகின்றவார்த்தையைக்கேட்டு அரிச்சந்திரமகாராஜனானவன் இறந்தது தன்பிள்ளையென்றும் அழுகின்றவள் தன்பெண்சாதி யென்றுந் தெரிந்து பிரலாபிக்கிற விதங்காண்க.

அரிச்சந்திர தோட்டி-சொல்-விருத்தம்,

இ-ம்-ஆனந்தபைரவி

மகனுஞ்சாவிறக்கநானிம் மயானமுங்காக்கநீயுந்
தகனஞ்செய்திடவிக்காட்டில் தனித்துவந்தழவும்பிள்ளை
ககனஞ்சேர்ந்திடவுமங்கங் காணதைப்படவுந்தீயம்
பகன்செயலோமுன்செய்த பழிவிதுதானோபெண்ணே.

வசனம்

ஆ-ஆ-ஆ இதென்ன வாச்சரியமகன்விஷந்தீண்டியிறந்துபோகவும் நானிந்தமயானங் காக்கவும் நீயிந்தகாட்டிலொருத்தியும் பிள்ளையையெடுத்துக்கொண்டுவந்து கட்டைமுட்டைசேர்த்து கொள்ளிவைக்கவும் தானதைச் சுடக் கூடாதென்று காலாலுதைத்துத் தள்ளவுமிப்படிக்கெல்லா மிருந்ததல்லவாயீஸ்வரசெயல் இதென்ன முன்செய்தபழியோ பாவமோ நானென்னசெய்வேன் அப்பாமகனே யென்கண்ணே கண்மணியே.

அரிச்சந்திரதோட்டி-புலம்பல்-த-ரு.

இ-ம்-ஆகிரி- அடதாளசாப்பு,

பல்லவி.

மகனே மகனே மகனே செத்தா
மனையலர்மலர்முகனே

அநுபல்லவி.

அகம்நொந்துனைப்பெற்ற அன்னைமனதுமொப்ப
அடவியிலுனைநானுஞ்சுடவியைந்தேனேயப்பா (மகனே)

சரணங்கள்.

சதென்னவேழை மதி மகனேயுன்னை
யீன்றவள்சந்த்ரவதி
யாதென்னுடன்செய்ய வைத்தாளுனக்குக் கொள்ளி
வந்துதைத்தேனுன்னுடல் நொந்துவிழுந்தாயோதுள்ளி (மக)

வெள்ளத்தில்முன்னடந்தாய் இன்னவும்வந்த
வேதாளங்களைக் கடந்தாய்
உள்ளத்தில்மகிழ்கொண்டு வுலவுஞ்சிங்கக்குட்டி
புலகமெங்கனும்புக ழில்குந்தங்கக் கட்டி (மகனே)

அக்கினியாற்றில் முன்னை குதித்தையதன்றி
அருந்தவமுனிவன்பொன்னை
திக்கினியான்று தீர்த்தாயடிமை யாகி
தினகரன்குலத்தினி லுனைப்போலுண்டோவிவேகி (மகனே)

சந்திரவதி சொல் விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

தினகரன்குலத்துவேந்தன் திலகமேவிஸ்வாமித்ரர்
தனகடன்கொடுக்கவென்னை தனையனைவிற்றும்பின்னை
கனகடனெனமயானங் காற்கின்றொன்செய்வோமுன்
மனகடன்வாய்மையொன்றை மாத்ரங்காப்பாற்றுமையா.

வசனம்.

சூரியகுல திலகமாகிய சுவாமி தேவரீ ரடியாளையு மகனையும் பிராமணனிடத்தில் விக்கிரையப்படுத்திநச்சுத்தாரகர்வசம் விஸ்வாமித்திரருக்குக் கொடுத்தகடன்பொன்னையன்றி மற்றெந்தகடனுக்காக நீச்சனிடத்தி லடிமையானதுமன்றியில் மயானமுங்காற்கின்றீர் அவ்வாரொத்தனமப்படிக் கிருந்தபோது மிந்தகாயம் நிலையில்ல மனக்கிலே சத்தையடையாமல் சத்தியமொன்றை மாத்திரம் நிலைநிறுத்தவேண்டு மென் பிராணநாதா,



அரிச்சந்திர நோட்டி சொல் விருத்தம்,

இ-ம்-ஆனந்தபைரவி,

மதிதயன்மகளேயுன்னை மகனைவிற்றளித்தபொன்னை
கதிதவமுனிக்குச்சொன்ன கடன்முதலென்றும்பின்னை
நிதிதாகவருங்கேழ்க்க நீச்சனுக்கடிமையானேன்
கொதிதணல்சுடலைக்கூலி கொடுத்திடவேணும்நீயே.

வசனம்,

மதிதயன் மகளாகிய சந்திரவதியே உன்னையுமகனையும் பிராமணனிடத்தில் விக்கிறையப்படுத்திகொடுத்தப்பொன்னை விஸ்வாமித்திரருக்கு கொடுக்க வேண்டியகடன் முதலென்றுந் தனக்குந் தரகுசம்பளம் பதினாயிரம்பொன் கொடுக்கவேணுமென்றும் நச்சுத்தரகர் மறுபடியு மென்னைத்தடுத்த படியினாலே நான் பறையனுக்கடிமையாகி பதினாயிரம் பொன்னுங் கொடுத்தனுப்பிவிட்டு சுடுகாடுகாத்துகொண்டிருக்கிறேன் எனக்கிசமானுமிபபெரிய நோட்டிவீரபாகுவுக்குச் சேரவேண்டிய காற்பணமுந்துண்டுங் கொடுத்துவிடவேண்டியதுதா னுன்னையடிமைக் கொண்ட பிராமணனிடத்துக்குப்போய் சீக்கிரமாயதைவாங்கிக்கொண்டு வரவேணும் பெண்ணே.

சந்திரவதி-தரு-இ-ம்-சங்கராபர்ணம் அடதாளம்.

தாரைமக்கள்நவரத்ந முடிபட்டிடப்பணிந்த பாதம் இந்தச்
சுடலையெலும்புகள்பட்டிடவந்ததென்னவி நோதம்

சுரிகைப்பட்டடையஞ்சமுதாடுசெங்கோல்கொண்ட பாணி இந்தச்
சுடலைக்கரையிற்பிணஞ்சுடவந்ததோமனம் நாணி

அரசர்பந்திபந்தியாய்ச்சூழக்கொலுவிருந்த வீரா - இந்த
அடிமைப்படவும்விதி யமைந்ததோராஜகெம் பீரா

இரத்நபுஜகிருதிபெற்றிலகியராஜ தீரா-இந்தச்
செத்தப்பிணங்களிடையுற்றிருப்பாயோ வஜீரா

பூச்சக்ரக்குடையின்கீழ் பூமியையாண்டவுல் லாசா-இந்தப்
புகைகுழிப்பிணநாற்றம் பொறுத்திருப்பாயோ மகராசா.

நீசத்யவானென்று நெஞ்சமிரங்காதோ    தெய்வம் இந்த
நீச்சசுடலைக்காக்க வாச்சுதினியென்ன    செய்வம்

பத்தியெரியுதைந்தன் பாழ்நெஞ்சுருகிப்புண்ணு  ஐயையோ-இந்தப்
பாடுதலையுமென்று நம்பநமக்குச்சத்ய  மெய்யோ

பாதேசிப்போலநீர் பாதவித்தழுவதைக்  கண்டு இந்தப்
பாழும்பிராணன்விடாமலிருப் பேனோவெதைநம்பிக்கொண்டு

சந்திரமதி-சொல்-பத்தியம்-இ-ம்-புந்நாவராளி,

கடல்சூழுலகையோர் குடைநீழல்காப்பவா
சுடலைகாப்பதுமெவர்கள்சொன்னமதியோ
வாய்க்கரிசிவேண்டு நிதிசெய் வாய்க்கரிச்சந்த்ர நீ
வாய்க்கரிசியுணவுங்கவசிகன்  சதியோ
படிகொண்டசெங்கோலின் பிடிகொண்டமலர்க்கையால்
தடிகொண்டுபிணஞ்சுட தலையில்விதியோ
சிலம்பொலித்ததிவினிலம்பரலசாம்பது
மெலும்புருந்தியதின்னமென்னகெதியோ
மன்னவா நீரிம்மயானங்காப்ப
தன்னவாகனமைப்பன்றிவருமோ
சொன்னவாய்மைப்படிசுருக்கில்வருவேன்
என்னவாமகனைகாத்திருந்திடமோ

வசனம்.

ஆ யென் பிராணநாதா இந்த பூலோகமெல்லாம் ஏகசக்கிராதிபராயிருந்து காக்கின்ற உமக்கும் நீச்சனிடத்தி லடிமையாயிப் போகவுஞ் சுடலைகாக்கவும் வாய்க்கரிசியுண்ணவும் பிணங்களைச்சுடவுந் திருவடிகளி லெலும்புஞ் சாம்பலு முருத்தவு மிப்படிக் கெல்லாம் பிரமதேவனெழுதி யிருந்தானல்லவா இப்பவும் நமது சத்தியந்தப்பப்போகாது அடியாளை அடிமைகொண்ட பிராமணவீட்டுக்குப்போய் காற்பணமுந் துண்டமும் வாங்கிக்கொண்டு வருகிறேன் அவரைக்குமகனை காப்பற்றவேண்டுஞ் சுவாமி போய் வருகிறேன்.



சந்திரமதி-தரு-இ-ம்-முகாரி-அடதாளம்.

பல்லவி.

என்னமோ  காரணம் - பிராமணனுக்கந்த
கேதுசொல்வேனுதாரணம்

அநுபல்லவி.

முன்னமோர்கௌசிக-முனிவன்செய்த அடத்தில்
மோசம்வந்துதேயர - தேசம்வந்தவிடத்தில்  (என்னமோ)

சரணங்கள்,

வழியின்று  தெரியாதே  மகனைவிட்டேன்
மனதெந்தந் தரியாதே
விழியிங்கிந்நேரமட்டும் வெளிச்சத்தைக்  கண்டதோ
வெருள்காடெங்கணுமெத்த யிருள்மூடிக்கொண்டதோ (என்ன)

ஆலமர  மெங்கெயோ  அதனைக்கண்டா
லப்பாற்போய்வரச்சங்கையோ
நாலம்பரவுங்காசி-நகருக்குள்  விடுவாரோ
நடுத்தெருவினிலென்னை-தடுத்திருந்திடுவாரோ  (என்னமோ)

காசுங்  கொடுப்பானோ  பிராமணனென்னைக்
கண்டால்தடுப்பானோ
தூசுங்கேழ்க்கப்போறத்தை-தொட்டென்னைநம்பானோ
துயிலிலெழுப்பினுல்தன்-கையிலில்லையென்பானோ (என்ன)

பொதுவிருத்தம்.இ-ம்-தோடி.

பேசியச்சந்திரமதியுங் கடிமைகொண்ட
பிராமணன்பாற்பணமாடைபெறப்போம்போது
காசிநகராளுமன்னன் மகனைக்கொன்று
கள்ளர்கொடுவந்துதெரு கடக்கப்போட
கோசிகமாமுனியேவ வழியிலந்தக்
குழந்தையுங்காலினிற்றட்டக் குனிந்துபார்த்தான்
ருசிக்கின்றிருடர்க்கெமதூதுக்காவற்கா
ரர்கள்வந்தார் பாளையக்காரர்கள்வந்தாரே.

### வசனம்.

இவ்விதமாக சந்திரமதி யம்மாளானவள் மயானத்தில் தன்மகனைவனத்திற் போட்டு தன்னை யடிமைக்கொண்ட பிராமண வீட்டுக்குப்போ யாடையும்பணமும்வாங்கிக்கொண்டுவர அதிகசீக்கிரமாய் நடக்கும்போது விஸ்வாமித்திரன் மாயத்தால்காசிமகாராஜன் பிள்ளையைக்கள்ள ரெடுத்துவந்துகொன்று தெருவிலேபோட்டுக்கடக்க அக்குழந்தையைத் தன் குழந்தையென்று குனிந்துபார்க்க அதும்வேளையில் அந்நகர் காவற்காரராகிய பாளையக்காரர்வருகின்ற விதங்காண்க.

### பாளையக்காரர் வருகிற-தரு.

இ-ம் - பந்துவராளி-ஏகதாளம்.

பல்லவி.

காவற்பாளையக்காரர்நாங்களே இந்தகாசிநகரிக்
காவற்பாளையக்காரர் நாங்களே

அநுபல்லவி.

மாவலடன்னர்மன்னவர் ரோதத்தில்
வந்தாலலையாளந்தந்தார வாரத்தில்
பாவலரைக்கண்டால் பணிவோதாரத்தில்
பார்வைவையெங்கள்போலாரதிகாரத்தில் (காவற்)

சரணங்கள்.

தண்ணீரில்மரத்தில்கல்லில்புல்லில்வைக்குந்
தாளடிகள் பிடிப்போம் மெள்ள
நவழ்ந்தாக்கள்ளரைப்பிடித்துத்தொழுவில்
கவழ்ந்திட அடிப்போம்
உண்ணீர்வறண்டுநாவுலர்ந்தழுதாலும்
ஊட்டியைக்கடிப்போம் காலால்
உதைத்துமிதித்துசதைத்து வதைத்து
வுயிரத்தைக் குடிப்போம் உயர்
விண்ணிற்பறந்தாலும் விடோமண்ணிற் குழி
வெட்டிப்புதைப்போமெங்கள்மேலென்னப்பழி
கண்ணில்லாகள்ளர்க்குக் கோல்கொடுத்து வழி
காட்டியிருளைவிட்டோட்டிவிட்டுச் செழிக் (காவற்)



சாளரத்தின்வழிநுழையுந்திருடர்
தலையையும் வெட்டுவோம் அதில்
தாண்டிக்குதித்தோடிப்போருவுங்கால்களைத்
தட்டிப்பஞ்சாய்கொட்டுவோம்
ஆளைக்காசுங்கொடாதவன்வீட்டை
யதம்பண்ண ஒட்டுவோம் நாளும்
அன்னமிட்டோன்வீட்டில்கன்னமிட்டோன்கை
யறுத்துப்பல்லைத் தட்டுவோம் பதி
கோளைதாக்குடன்கூடமூக்குச் செவி
கொய்யுவோங்காக்கைக்குஞ்செய்யுமோ முதவி
வாளரத்தின்மிக்கவச்சிரநற் கவி
வாணரைக்கண்டுவணங்கியுங்கைக் குவி (காவற்)

கன்னமிட்டுன்னுழை கள்ளவழிசாடை
கண்டுகிட்டிப்பார்ப்போம் இந்தக்
காசியைச்சூழ்கின்றகிராமங்களுமெங்கள்
காணிக்கட்டிக் காப்போம்
அன்னமிட்டுண்ணுதபுல்லர்புதையலை
ஆழவெட்டிப்பேர்ப்போம் தெய்வ
ஆலயங்களுக்காதாகாதென்றுசெய்யும்
அதர்மத்திற்சேர்ப்போம் வந்து
சொன்னமட்டன்றியுஞ்சொத்துகளைப் பரி
சோதனையாற்கனஞ்சொல்ப்பமென்றுந் தெரி
இன்னமட்டென்றுமில்லாமலுயர் கிரி
யேறியுளம்கிழ் மீறியெங்குந் திரி (காவற்)

### தளபதி-சொல்-விருத்தம்- இ-ம்-ஆனந்தபைரவி.

அளவுநிகளமாவந்த அழகப்பநாய்க்காயேதோ
களவுகள்நடப்பதைப்போற் களவுகண்டோடிவந்தேன்
உளவுகள்றியவேணு மொண்டியங்கங்கேநின்று
வளவுகளெல்லாஞ்சுத்தி வாருங்களப்பால்பார்ப்போம்.

### வசனம்.

கேளடா அளவுநிகளமுமாய் வளர்ந்து கழுகழுவழுவழுவென்று பேசுமழகப்பநாய்க்கா இன்றையத்தினமேதோநமதுகாவலுக்கு

உள

னே பலமானகளவுநடக்க கனவுகண்டே னந்தவுளவுயெவராலே அசப்படுமோ அறியவேணு மிவிடத்திரமாய் வீடுகள்தோறுஞ் சு த்திப்பார்த்து வாருங்களடா.

அழகப்பநாய்க்கன்-சொல்விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

கடைத்தலைவாசற்காற்றுங் கரியப்பநாய்க்காபொன்னைப்
படைத்தலைவார்கள்வீட்டிற் பழங்கலயங்கள்வீழ்ந்து
வுடைத்தலைசத்தங்கேட்டு ஒட்டமாயோடிவந்தே
னடைத்தலைக்கடைவீட்டுக்குள் ளாவென்றுகத்துதப்பா.

வசனம்.

கேளடா உண்டானத்தைச் சொன்னால் மொண்டாகப் போங் கண்டாரக்கண்ட கரியப்பநாய்க்கா அண்டாத்திரவியங்களை சம்பாதித்து தானுமுண்ணுமலும் நல்ல தானதருமங்களைப் பண்ணுமலும் பழங்கலயத்தி லடிக்கிவைத்துக்கொண் டன்னமோவென்றலைகின்றவர்கள் வீட்டில் பழங்கலப்பானைகள் வீழ்ந்துடைந்த சப்த்தங்கேட்டு ஓட்டமாயோடிவரச்சே நெடுநாளாய் குடித்தனமில்லாம லாரோ செத்துப்போ யடைந்திருந்த வீட்டுக்குள்ளே பசுக்த்தவுங்கண்டே னதைப் பார்ப்போம் வாருங்கள்.

கரியப்பநாய்க்கன் சொல்-விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

பாழ்ப்போனவீட்டிலேது பசுச்சொல்லுவோன்சொன்னாலும்
கேட்ப்போன்றன்மதியுமென்னக் கெட்டுதாகெண்டாநாய்க்கா
வீழ்ப்பானமனைதிறக்க விட்டார்கள்பசுவைவீட்டில்
கூழ்ப்பானைதிருடப்போன குருட்டுநாயுடைத்துதப்பா.

வசனம்.

கேளடா அண்ணை சண்டப்பிரசண்ட கொண்டப்பநாய்க்கா நெடுநாளாய் பாழ்ப்போட் டடைத்திருந்த வீட்டுக்குள் பசுக்கத்துதென்று சொல்லுவோன் சொன்னாலுங் கேட்ப்பவனுக்குமென்ன அறிவுகெட்டுதா அவ்வீடு நாளையதினந் திறந்து குடுத்தினம்வர இன்றையதினம் இராத்திரிபசுவைக்கொண்டுபோய்விட்ட



தாய் தோன்றுது பழங்கலமுடைந்த சப்த்தமென்னதெரியுமா வீடுவீடாய் கூழ்ப்பானைத்திருடுங் குருட்டுநா யுடைத்ததாய் தோன்றுது இம்மாத்திரத்தா லிதுவுங்களுக் கொருத்தருக்குந் தெரியாமற் போச்சுதே.

கொண்டப்பநாய்க்கன்-சொல்விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி

கஸ்தூகள்வரும்போதிந்தக் கடைத்தெருவதற்குள்களர்
சொத்துகளுடனேநிற்கச் சொற்பனங்கண்டேனின்னுஞ்
சித்துகளிருக்குதிங்கே செல்லப்பநாய்க்காஅந்த
சத்துகள்ளர்கள்திருச்சு சந்தேகமில்லைப்பாரீர்.

வசனம்.

கேளடா சொல்லப்பயந்த செல்லப்பநாய்க்கா நாயின்றையதினம் ராத்திரி கஸ்துவரும்போது கடைத்தெருவுக் குள்ளாக பலமான சொத்துங்கையுமாய் திருடர்நிற்கச் சொற்பனங் கண்டேனின்னமோ சித்துநடந்திருக்குது அந்த சத்துதிருடராளைக்கண்டு திருச்சு கொட்டுகிறதுதானே அதற்கென்ன சந்தேகமா சுறுக்காக வாருங்கள்.

செல்லப்பநாய்க்கன்சொல்-விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி,

மன்னவன்மனையிற்சொந்த மகனைக்காணேமென்றோர
சொன்னவன்பேச்சைநல்றாய் சோதித்துப்பார்க்கப்போனே
னின்னவன்றன்னைக்காணே னசரீரிவாக்கியமோவி
தென்னவன்கள்ளரெங்கே யிருக்கின்றார்பார்ப்போம்வாரீர்.

வசனம்.

கேளுங்களடா அண்ணைமார்களே நமக்கிவ்வுறையதின மென்னமோவந்திருக்குது அனர்த்தம் நமதுமகாராச னரண்மனையிலிருந்த பிள்ளையைக்காணேமென் றாரோசொன்னதுபோ லென்காதிற்கேட்டு நந்தவனத் திடுக்கென்றெழுந்தோடிப் பார்க்குமிடத்திலாளையுங்காணேம் அதென்னமோ அசரீரிவாக்கியமாய் தெய்வம் வந்து சொன்னதுபோ லிருக்கின்றது சுறுக்காய் வாருங்கள்.

அனைவருஞ் சொல்விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

கோகோவிதெனவலைவையோ குழந்தைகாளுமற்போனால்
மாகோபங்கொண்டுநம்மை மன்னவன்பிடித்தாத்யோக
மேர்கோப்புசெய்வதல்லால் முடிக்காக்கினவருமேயிங்கே
யேகோபித்தனைவரும்போ யிருப்பிடஞ்சோதிப்போமே.

வசனம்.

